SPT aricles 8 Saivam

# திருமுறை தந்த விநாயகர்.

திருமுறை என்னும் தொடர் தெய்வத்தன்மை வாய்ந்த நூல்களைக் குறிக்கும் . சைவ சமயத்தவர்க்கு வேதம் போல விளங்குவன திருமுறைகளே ஆகும். திருஞான சம்பந்தர் , திருநாவுக்கரசர், சுந்தரர் பாடிய தேவாரப் பாடல்களும், மாணிக்கவாசகர் பாடிய திருவாசகப் பாடல்களும் திருக்கோவையாரும் சேந்தனார் முதலிய ஒன்பது பேர் பாடிய திரு இசைப்பா, திருப்பல்லாண்டுப் பாடல்களும், திருமூலர் இயற்றிய திருமந்திரமும், திருவாலவாயுடையார் முதல் நம்பி ஆண்டார் நம்பி ஈறாகப் பாடிய பாடல்களும் சேக்கிழார் இயற்றிய பெரிய புராணமும் திருமுறைகளாகத் தொகுக்கப்பெற்றன. இவற்றைத் தொகுத்துத் தந்தவர் நம்பி ஆண்டார் நம்பி என்பர். திருமுறைகள் பகுப்பால் பன்னிரண்டு. இயற்றியவர் எண்ணிக்கை இருபத்தேழு. இத்திருமுறைகள் சிவ பெருமானை முழுமுதற் பொருளாகக் கொண்டு பாடப் பெற்றவை. இத்திருமுறை ஆசிரியர்கள் அனைவரும் இறைவனின் திருவருளைப் பெற வழி காட்டியவர்கள். அத்தகைய வழிகாட்டிய அருமறைகளே திருமுறைகள். இவை தமிழில் பக்தி இலக்கியம் தழைக்க வழிவகுத்தன. இத்தகைய திருமுறைகளுக்கும் விநாயகப் பெருமானுக்கும் இருக்கும் தொடர்பினைத் திருமுறை தந்த விநாயகர் என்னும் தலைப்பில் ஆராய்வதே இந்தக் கட்டுரையின் நோக்கம் ஆகும்.

திருமுறை தந்த விநாயகர் என்னும் தலைப்பினை இரண்டு வகையாக நோக்கலாம். திருமுறைகளைத் தந்த விநாயகர் என்பது ஒரு வகை நோக்கு. திருமுறைகள் தந்த விநாயகர் என்பது மற்றொரு வகை நோக்கு. முதல் நோக்கில் திருமுறைகள் வெளிப்பட -உலகுக்குக் கிடைக்கக் காரணமாக இருந்த விநாயகரைப் பற்றி விளக்கப்படும். இரண்டாம் நோக்கில் திருமுறைகள் காட்டும்-விவரிக்கும் விநாயகரைப் பற்றிய செய்திகள் இடம்பெறும்.

திருமுறைகள் எழுதப்பெற்ற ஏட்டுச் சுவடிகள் எவ்வாறு கிடைத்தன? அவை எவ்வாறு தொகுக்கப்பெற்றன? என்பதைத் திருமுறை கண்ட புராணம் என்னும் நூல் தெளிவாக விளக்குகின்றது. அதனை இயற்றியவர் உமாபதி சிவாசாரியார் எனக் கூறுவது மரபு. இதன் வழி விநாயகர் திருமுறைகளை வெளிக்கொணர்வதற்கு எவ்வாறு காரணமாக இருந்தார் என்பதைக் காண்போம். சோழப் பேரரசன் இராசராசன் ஒரு நாள் திருவாரூர் தியாகேசரை வணங்கிக் கொண்டிருந்தபோது சைவ அன்பர் சிலர் தேவாரப் பதிகம் ஒன்றைப் பாடக்கேட்டுக் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி நின்றான். அந்நாள் முதலாகத் தேவாரப் பாடல்களைத் தேடித் தொகுக்க வேண்டும் என்னும் முயற்சியில் ஈடுபட்டான் . அப்போது திருநாரையூரில் உள்ள பொல்லாப் பிள்ளையார் என்னும் விநாயகப் பெருமானுக்குப் பூசை செய்யும் மரபில் தோன்றிய நம்பியாண்டார் நம்பி என்னும் சிறுவனைப் பற்றிக் கேள்விப்பட்டான்.

அச்சிறுவன் தன் தந்தையார் வெளியூர் சென்றிருந்தபோது விநாயகருக்குப் பூசை செய்தான். அப்போது அவன் வைத்த அமுதினை (நிவேத்யத்தை) பொல்லாப் பிள்ளையாராகிய விநாயகப்பெருமான் உண்ணாதிருக்கக் கண்டு வருந்தித் தன் தலையைக் கல்லில் மோதப்போனான். உடனே பொல்லாப் பிள்ளையார் தோன்றித் தடுத்து அமுது உண்டார். அவர் அருளாளல் வேதம் முதல் பல கலைகளைக் கற்றறிந்தான். இந்த அதிசயத்தை அறிந்த சோழப் பெரரசன் இராசராசன் தானும் அளவிலாத பொருள்களையும் அங்கு கொண்டுசென்றான், அவற்றையும் பொல்லாப்பிள்ளையார் அமுது செய்து அருளினார். இந்த அதிசயத்தைப் பார்த்த அரசன் விநாயகரிடம் மூவர் தேவாரப் பாடல்கள் இருக்கும் இடம் கேட்டறிந்து சொல்ல வேண்டும் என நம்பியிடம் வேண்டினான். அதற்கேற்ப நம்பியும் பொல்லாப்பிள்ளையாரை வேண்டி வழிபட்டார்.

நம்பியின் வழிபாட்டுக்கு இரங்கிய பொல்லாப் பிள்ளையார் தேவாரத் திருமுறைப்பாடல்கள் உள்ள ஏட்டுச் சுவடிகள் சிதம்பரத்தில் நடராசப்பெருமான் திருக்கொயிலில் ஒர் அறையில் கைகள் அடையாளமிட்டு வைக்கப்பட்டுள்ளதாக நம்பிக்குக் கூறி அருளினார். மேலும் அவற்றை இயற்றிய அன்பர் பெருமைகளை எடுத்து உரைத்தார். பிறகு நம்பி இவற்றை அரசனுக்கு எடுத்துக் கூற முற்பட்டார். சிவபெருமான் அருளிச் செய்த மந்திரங்களே திருமுறைகள். இப்பாடல்களை ஞான சம்பந்தர், நாவுக்கரசர், சுந்தரர் வாயிலாகத் தேவாரமாக இறைவன் வெளிப்படுத்தினான் என்றும் இவை ஆயிரக் கணக்கான பாடல்கள் என்றும் நம்பி அரசனுக்குக் கூறினார். பிறகு அரசன் இத்தகைய செய்திகளை நம்பிக்கு அருளிச் செய்த பொல்லாப் பிள்ளையாரின் பெருங்கருணைத் திறத்தைக் கண்டு வியந்து நின்றான். பிறகு தில்லைக்கு-சிதம்பரத்துக்குச் சென்று அந்தணர்களிடம் முறையிட்டுத் திருமுறைகள் இருந்த அறையைத் திறந்து பார்த்தான். அங்கே ஏடுகளைக் கரையான் அரித்திருக்கக் கண்டு கவலையுற்றான். எஞ்சிய பாடல்களைக் கொண்ட ஏட்டுச் சுவடிகளை நம்பியிடம் கொடுத்து அவற்றைப் பகுத்து முறையாகத் தொகுக்கச் சொன்னான் . அதற்கெற்ப நம்பியும் "தோடுடைய செவியன்" முதல் தொடங்கிக் "கல்லூர்ப் பெருமணம்" என முடியும் பாடல்கள் வரையுள்ள ஞானசம்பந்தர் பாடல்களை முதல் மூன்று திருமுறைகளாகவும், "கூற்றாயினவாறு' எனத் தொடங்கி "ஒருமானைத்தரிக்கும்" என முடியும் திருநாவுக்கரசர் பாடல்களை அடுத்த மூன்று திருமுறைகளாகவும் சுந்தரர் பாடிய பாடல்களை ஏழாம் திருமுறையாகவும் தொகுத்தருளினார். இவ்வாறே பின்னர் திருவாசகம், திருக்கோவையார் எட்டாம் திருமுறையாகவும் திருவிசைப்பா, திருப்பல்லாண்டு ஒன்பதாம் திருமுறையாகவும், திருமந்திரம் பத்தாம் திருமுறையாகவும், திருவாலவாயுடையார் முதல் நம்பி ஆண்டார் நம்பி முடியப் பதினொருவரின் பாடல்கள் பதினோராம் திருமுறையாகவும், சேக்கிழாரின் பெரியபுராணம் பன்னிரண்டாம் திருமுறையாகவும் தொகுக்கப் பெற்றன. எனவே திருமுறை கண்ட புராணம் கூறும் வரலாற்றின் அடிப்படையில் பார்த்தால் திருமுறைகளை உலகிற்குத் தந்தவர் -அதாவது தில்லையில் பூட்டி வைக்கப்பெற்ற திருமுறைச் சுவடிகளைக்

காட்டி உலகிற்கு வெளிப்படுத்தியவர் பொல்லாப்பிள்ளையார் ஆகிய விநாயகப் பெருமானே என்னும் கருத்துத் தெரியவரும். இன்னும் சிதம்பரம் நடராசப்பெருமான் கோயிலில் மேற்குவாசற் படிக்கட்டுக்கு எதிரில் “திருமுறை காட்டிய விநாயகர்” திருவுருவச்சிலை இருப்பதைப் பார்க்கலாம்.

இனித் திருமுறைகள் விளக்கும் விநாயகப் பெருமானின் சிறப்புகளைப் பார்ப்போம். முதல் ஏழு திருமுறைகளாகிய தேவாரத்தில் விநாயகப் பெருமானுக்குரிய இடம் யாது என்பதை முதலில் காணலாம். தேவாரம் இயற்றிய ஞானசம்பந்தர், நாவுக்கரசர், சுந்தரர் ஆகிய மூவரும் சிவ பெருமானைத் தவிர வேறு தெய்வத்தை வணங்கும் இயல்பினர் அல்லர். எனவே சிவபெருமானோடு தொடர்பு படுத்தியே விநாயகரைப் பற்றி அவர்கள் குறிப்பிடுகின்றனர்.

ஞானசம்பந்தர் பின்வரும் தேவாரப் பாடலில் விநாயகப்பெருமானின் தோற்றத்தைப் பற்றிக் கூறுகின்றார்.

பிடியதன் உருஉமைகொள , மிகு கரியது

வடிகொடு தனது அடி வழிபடும் அவர் இடர்

கடிகணபதி வர அருளினன் மிகுகொடை

வடிவினர் பயில் வலி வலம் உறை இறையே

இப்பாடலில் உமை அம்மையார் பெண் யானை வடிவம் கொள்ளவும் , சிவபெருமான்; ஆண் யானை வடிவம் கொண்டு தன்னை வணங்கும் அடியவர்களின் துன்பத்தைப் போக்க விநாயகப்பெருமானைத் தோற்றுவித்தவர் என்னும் கருத்தை ஞானசம்பந்தர் கூறுகிறார். விநாயகப் பெருமானை இங்கு கணபதி என அழைப்பதால் அவர் தேவகணம், பூதகணம், மனிதகணம் முதலிய எல்லாக் கூட்டத்தினருக்கும் பதி - அதாவது தலைவர் என்னும் செய்தியும் தெரிகிறது. இதே கருத்தை”நீள் கோதைத் தெரியிழை பிடியதுவாய். . . புகர்முக இறையைப் பெற்றிட்டே” என்று கூறி வலியுறுத்துகிறார். மேலும் இப்பாடலில் விநாயகரைச் சிவபெருமான் தோற்றுவித்ததன் நோக்கமே உலகிலுள்ளோர் துயரத்தையும் பிறவி நோயையும் போக்குவதுதான் என்று கூறுகிறார்.

“புகர்முக இறையைப் பெற்றிட்டே” மற்று இப்பார் பெருத்துமிக்க துக்கமும் பேரா நோய்தாம் மேயாமைப் பிரிவு செய்தவன்” என்னும் இப்பாடல் அடி இதனைக் காட்டும் புகர்முக இறை என்னும் தொடர் யானை முகத்தோன் விநாயகன் என்பதைக் கூறும் “கரியின் மாமுகம் உடைய கணபதி” என்னும் ஒரு பாடலில் சம்பந்தர் குறிப்படுகிறார். “ஒற்றைச் சேர் கொம்புடையான்” “முற்றத் கொம்புடையான்” “மருப்புருவன்” என்றெல்லாம் விநாயகப் பெருமானின் தந்தம் பேசப்படுகிறது. அவரின் முக்கண் தடக்கை பற்றிய குறிப்புகளும் உள்ளன. சிவபெருமானைக் “கணபதி தாதை” என்றும் மூ:ன்று பாடல்களில் சம்பந்தர் குறிப்பிடுகின்றார். எனவே

ஞானசம்பந்தர் தேவாரத்தில் விநாயகர் தோற்றம், இடர் களையும் இயல்பு, வேழமுகம், முக்கண் தடக்கை கொண்ட உருவம் ஆகியவை இடம் பெற்றிருக்கக் காணலாம். தமிழ் இலக்கியத்தில் ஞானசம்பந்தர் தேவாரத்தில் தான் விநாயகரைப் பற்றிய குறிப்பு முதல் முதலாக வருகிறது என்பதை மையமாகக் கொண்டு ஞானசம்பந்தர் காலமாகி கி. பி. ஆறாம் நூற்றாண்டுக்குப் பிறகு தான் தமிழ் நாட்டில் விநாயகர் வழிபாடு தோன்றியதாக அறிஞர் கருதுவர்.

திருநாவுக்கரசர் தேவாரத்தில் விநாயகர்"ஆனை முகன்" "கடமா முகத்தினான்" "கணபதி" "வாரணன்" "விக்கின விநாயகன்" "விநாயகன்" வேழமுகத்தவன்" என்னும் திருப்பெயர்களால் குறிக்கப் பெறுகிறார். கடமா என்பதும் யானையைக் குறிக்கும். இடர் கடி கணபதி என்பதையே இவர் விக்கின விநாயகன் என்று கூறுகிறார். வாரணம் என்பதும் யானையைக் குறிக்கும் சொல்லே . விநாயகன் என்னும் திருப்பெயர் சிறப்புமிக்க தலைவன்- தன் ஒப்பார் இல்லாத தலைவன் என்பதை உணர்த்தும். இச்சொல்லைத் தமிழ் இலக்கியத்தில் முதல் முதல் கையாண்டவர் நாவுக்கரசரே மேலும் திருவாய்மூரில் சிவபெருமான் காட்சி தந்தபோது "விநாயகனும் தோன்றக் கண்டேன்" என்று நாவுக்கரசர் விநாயகர் திருக்காட்சியை முதன் முதல் கண்டு நமக்குக் காட்டியவரும் நாவுக்கரசரே என்று கூறலாம். "விநாயகனும் போற்றிசைப்ப" என்று இன்னொரு பாடலிலும் இதனை வலியுறுத்துகிறார். அவர் மேலும், "ஆனை முகற்கு அப்பன்" என்றும் தண்டகடமா முகத்தினாற்குத் தாதை காண்" என்றும் சிவபெருமானை அவர் அழைக்கிறார். "கைவேழ முகத்தவனைப் படைத்தார் போலும் "என்னும் பாடல் அடியின் வாயிலாகச் சிவபெருமான் விநாயகனைப் படைத்துக் கயாசுரனை அழித்த வரலாற்றை நாவுக்கரசர் கூறுகிறார். இது ஒரு புதுச்செய்தி கயாசுரனை விநாயகப் பெருமான் அழித்த கதை தோன்ற இந்த அடிகளே காரணமாக அமைந்தன போலும். இன்னொரு செய்தியும் இது கூறுகிறார். "பலபல காமத்தராகிப் பதைத்து எழுவார் மனத்துள்ளே கலமலக்கிட்டுத் திரியும் கணபதி என்னும் களிறு" என்னும் அடிகளின் வாயிலாக விநாயகப் பெருமான் பக்தர்கள் ஆசைகளை அகற்றித் தெளிவு தரும் ஞானப் பண்பினர், விருப்பங்களை நிறைவேற்றும் ஆற்றலுடையவர் என்பதை அறிய முடிகிறது.

சுந்தரர் தேவாரத்தில் கணபதியைப் பற்றிய குறிப்பு இரண்டு பாடல்களில் இடம்பெறுகிறது."எண்ணிலியுண் பெருவயிறன் கணபதி ஒன்று அறியான்', "கணபதியேல் வயிறு உதாரி" என்று கணபதியின் தொந்தி வயிற்றினைக்கூறிச் சிவ பெருமானுக்கு அழமை செய்யமாட்டெடன் என்று தம் நண்பரிடம் (சிவனிடம்) எள்ளி நகையாடுகிறார் சுந்தரர் எல்லை கடந்த -எண்ணுக்கு அடங்காத (infinity ) - பொருள்களை உள்ளடக்கியவர் விநாயர் என்பதை அவர் பெருவயிறுகாட்டுகிறது. இதனைத் தானே சுந்தரர் தமக்குச் சொல்லாமல் சொல்கிறார்.

எட்டாம் திருமுறையாகிய மாணிக்கவாசகரின் திருவாசகம், திருக்கோவையார் ஆகியவற்றில் விநாயகர் பற்றிய குறிப்பு இல்லை.

ஒன்பதாம் திருமுறையாகிய திருவிசைப்பா, திருப்பல்லாண்டு ஆகியவற்றிலும் விநாயகர் பற்றி செய்திகள் மிகுதியாக இல்லை. திருமாளிகைத் தேவர் பாடிய திருவிசைப்பா ஒன்றில் சிவபெருமானைக் "குமர விநாயக சனக (அதாவது முருகனையும் விநாயகனையும் தோற்றுவித்தவனே! ) என்று அழைக்கும் தொடர் ஒன்று இடம் பெறுகிறது. இவ்வாறே சேந்தனார் பாடிய திருவிடைக்கழித் திருவிசைபாவில் முருகனைக் கணபதி பின் இளங்கிளையே " என்று (விநாயகர் தம்பி முருகன் என்று) அழைப்பதைப் பார்க்கிறோம்.

பத்தாம் திருமுறையாகிய திருமூலரின் திருமந்திரம்

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை

இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை

நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினைப்

புந்தியில் வைத்து அடி போற்றுகின்றேனே

என்னும் கடவுள் வாழ்த்துடன் தொடங்குகிறது. ஐந்து திருக்கைகளை உடையவர், ஆனை முகத்தை உடையவர், சிவபெருமான் மைந்தர், ஞானத்தின் கொழுந்தாக விளங்குபவர் விநாயகர் என்னும் செய்தியை இப்பாடல் உணர்த்துகிறது. இத்தகையவரை என் மனத்தில் வைத்து வணங்குகிறேன் என்று இப்பாடல் கூறுகிறது. எனவே இதனைத் தியானத்திற்குரிய பாடல் எனச் சொல்லலாம். இந்து மத்தில் எந்தக் காரியத்திற்கும்- சடங்குக்கும் முதலில் கூறப்படும் "சுக்லாம் பரதம்" என்னும் வடமொழிப் ப்பாடலுக்குகேற்ற தமிழ்;ப்பாடலாக இதனைக் கூறலாம் இப்பாடல் திருமந்திரத்தில் இடைச்செருகல் எனக் கருதுவாரும் உளளனர்.

பதினோராம் திருமுறையில் தான் விநாயகருக்கும் முருகனுக்கும் தனித்தனியாக நூல்கள் இடம்பெற்றுள்ளன. இத்திருமுறையில் இடம்பெற்ற கபிலதேவ நாயனார் இயற்றிய மூத்தநாயனார் திருவிரட்டை மணிமாலை என்னும் நூலும் அதிரா அடிகள் இயற்றிய மூத்தபிள்ளையார் திருமும்மணிக்கோவை என்னும் நூலும் , நம்பியாண்டார் நம்பி இயற்றிய திருநாரையூர் விநாயகர் திருவிரட்டை மணிமாலை என்னும் நூலும்; , விநாயகப் பெருமானையே முழுமுதற்பொருளாகக் கொண்டு போற்றுகின்றன. விநாயகர் மூத்த பிள்ளையார், மூத்த நாயனார் என அழைக்கப்பெறுவதை இந்நூல் தலைப்புகள் எடுத்துக் கூறுகின்றன.

கபிலதேவ நாயனார் இயற்றிய நூலில்தான் "திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும்" "விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்" ஆகிய புகழ்;மிக்க பாடல்கள் இடம் பெற்றுள்ளன. இவர் விநாயகருக்குத் தனியே நூல் ஒன்று இயற்றி இருந்தாலும் சிவபெருமானுடன் சார்த்தியே விநாயகரைப் பேசுகிறார். சிவபெருமானைப் பற்றி இத்திருமுறையில் இவர் இரண்டு நூல்கள் இயற்றியுள்ளார். இந்த இரட்டை மணிமாலையில் வெண்பா பத்தும், கட்டளைக் கலித்துறை பாடல்கள்

பத்தும் ஆக இருபது பாடல்கள் உள்ளன. சிவபெருமான் விநாயகரைப் படைத்தான் என்றும், விநாயகர் வெவ்வினையை அறுத்து, ஆசையையும் அறுப்பவர் என்றும், விநாயகரை வணங்கியவர்கள் திருமகள் அருள் பெற்றுச் செல்வராய்த் திகழ்வர் என்றும் கபிலதேவ நாயனார் கூறுகிறார் தேவர் வணங்கும் விநாயகர் அப்பம், இடிஅவல், எள்ளுருண்டை, வாழை, பலா, மா ஆகிய முக்கனிகள் விரும்பும் பெரு வயிறன் என்று இந்நூலில் பேசப்படுகிறார். யானை முகத்தான், சிவன் சேய், மால்மருகன், உமையாள் காதற் புதல்வன், ஒரு கோட்டன், இரு செவியன், முக்கண்ணன், செம்மேனியன், என்றெல்லாம் விநாயகர் இங்கே விவரிக்கப்படுகிறார். விநாயகன், கணபதி என்னும் பெயர்களும் இடம் பெறுகின்றன. பெரும்பாலான பாடல்களில் சிவபெருமானின் புதல்வன் என்னும் செய்தியே உள்ளது.

அதிரா அடிகள் இயற்றிய மூத்தபிள்ளையார் திருமும்மணிக்கோவையில் அகவல், வெண்பா. கட்டளைக் கலித்துதறை யாப்பில் அமைந்த முப்பது பாடல்கள் விநாயகரைப் பற்றிப் பேசுகின்றன. இப்போது 23 பாடல்களே இந்நூலில் உள்ளன. எஞ்சிய ஏழு பாடல்கள் கிடைக்க வில்லை. “சேவடி யுகளம் அல்லது யாவையும் இலம் இனி இருநில்த்திடையே” என்றும் “எந்தை அல்லது மற்று யாவுள, சிந்தை செய்யும் தேவதை நமக்கே” என்றும் வரும் இவர் பாடல் அடிகள் இவர் விநாயகரிடம் கொண்டிருந்த பக்தியை விளக்குகின்றன கணபதி, போதகம், வேழக்கன்று, துளைக் கடவுள், கும்பக் குழவி என்ற சொற்களால் விநாயகரை இவர் அழைக்கிறார். கணபதியின் விசுவரூபம் -பேருரு-அடிமுதல் முடிவரை ஒரு பாடலில் அழகாகப் புனையப்படுகிறது(பா. 22) மேலும் கணபதி அரக்கரை வென்றமை, வியாசர் கூறிய பாரதக் கதையை மேரு மலையில் விநாயகர் எழுதிய வரலாறு, சிவபெருமான் திரிபுரம் எரித்தபோது விநாயகர் உதவியது, மாங்கனி பெற முருகன் உலகை வலம் வந்தமை ஆகிய புராணச் செய்திகளைக் கபிலதேவ நாயனார் கூறுவதை இந்நூலில் காண முடிகிறது. மேலும் உமையம்மை ஈன்ற சேயாகிய விநாயகர் நிலம் , மேருமலை, வானம் எல்லாம் நடுங்கச் சப்பாணி (கை) கொட்டிய செய்தி பற்றியும் (2) ஏழுமலைகள், திக்கு யானைகள் பேர்ந்தாடச் செங்கீரை ஆடிய (மழலை பேசிய ) செய்தி பற்றியும் இந்நூல் கூறுகின்றது. முருகன் உலகை வலம் வரத் தந்தையாகிய சிவனை வலம் வந்து மாங்கனி பெற்ற விநாயகர் வரலாற்றை முதல்முதலில் அதிரா அடிகளே கூறுகின்றார். இந்நூலில் இடம் பெற்றுள்ள ஒரு பாடல் வருமாறு

மொழியின் மறைமுதலே முந்நயனத்து ஏறே

கழிய வரு பொருளே கண்ணே-தெழிய

கலாலயனே எங்கள் கணபதியே நின்னை

அலாது ஐயனே சூழாது என் அன்பு

நம்பியாண்டார் நம்பி அருளிய திருநாரையூர் விநாயகர் திரு இரட்டை மணிமாலையில் வெண்பா. கட்டளைக் கலித்துறை யாப்பில ; அமைந்த 20 பாடல்கள்

உள்ளன. இவை அந்தாதி முறையில் அமைந்துள்ளன. ஒவ்வொரு பாடலிலும் நாரையூர் என்னும் சொல்லாட்சி வருகிறது. ஏனைய பாடல ;களில் கணபதி, ஐங்கரத்தான், சிவக்களிறு , ஒரு கொம்பன், கரிவதனன். முக்கண் அரசு , அத்திமருப்பினன் என்று விநாயகர் அழைக்கப்படுகிறார். மேலும் அடுமருப்பினன், பெருச்சாளி ஊர்தி உடையவன், செந்தீ வண்ணன், கையில் மாங்கனி, கொம்பு அண்டம் , பாசம் , மழு உடையவன் என்று விநாயகர் இயல்புகளும் இந்நூலில் கூறப்பட்டுள்ளன. மேலு ம் உமையவள்(உமை) தான் பெற்ற யானை என்றும், நாரையூர் மன்னும் சிவன் மகன் என்றும், குமரற்கு முன்னவன் என்றும் நம்பி விநாயகரைப் பற்றிக் கூறுகிறார். தந்தையை வணங்கி மாங்கனியைப் பெற்றுக் கொண்டவர் விநாயகர் என்னும் கதைச் செய்தி இரண்டு பாடல்களில் வரக்காணலாம் (3, 8) மேலும் விநாயகர் தம் கொம்பொன்றையே படையாகக் கொண்டு கயாமுகாசுரனை(யானை முக அசுரனைக் கொன்ற கதையும் ஒரு பாடலில் வருகிறது'' என்னை நினைந்து அடிமை கொண்டு என் இடர் கெடுத்துத் தன்னை நினையத் தருகின்றான்'' நாரையூர் விநாயகப் பெருமான் என்று இந்நூலை நம்பி தொடங்குகிறார்.

இம்மூன்று நூல்களைத் தவிரப் பதினோராம் திருமுறையில் சேரமான் பெருமாள் நாயனார் இயற்றிய திருக்கைலாய ஞான உலாவில் வேழ முகத்து விநாயகனை உள்ளுறுத்து மங்கையர் சூழ இறைவன் உலா வந்த செய்தி வருகிறது. பட்டினத்தாரின் திருவிடை மருதூ;ர் மும்மணிக் கோவை என்ற நூலில் பவள மால்வரை போல்பவன், பணைக்கையோன் தாழ்ந்த செவி உடையவன் விநாயகர் என்னும் செய்தி இடம் பெறுகிறது. பக்தர்கள் குறைகளைத் தம் தாழ்ந்த காதுகளால் கேட்டு, அவர்கள் கேட்பனவற்றைத் தம் பெரிய கைகளால் வாரி வழங்குபவர் அல்லவா விநாயகர்? இவை தவிரப் பதினோராம் திருமுறையில் விநாயகர் பற்றிய குறிப்பு வேறு இடங்களில் இல்லை.

பன்னிரண்டாம் திருமுறையாகிய சேக்கிழாரின் பெரிய புராணத்தில் விநாயகர் பற்றிய செய்திகள் மிகுதியாக இல்லை. பாயிரத்தில் வாழ்த்துப்பாடல்களில் ஒன்றாக வரும் பாடல் கீழே தரப்பட்டுள்ளது.

எடுக்கும் மாக்கதை இன் தமிழ்ச் செய்யுளாய்

நடக்கும் மேன்மை நமக்கு அருள் செய்திடத்

தடக்கை ஐந்து உடைத் தாழ்செவி நீள்முடிக்

கடக்களிற்றை கருத்துள் இருத்துவாம்

இப்பாடலில் பெரியபுராணம் இன் தமிழ்க்காப்பியமாய் இலங்கிடத் தமக்கு அருள் புரியுமாறு விநாயகரைச் சேக்கிழார் வேண்டுகிறார். ஐந்து பெரிய கைகள் தாழ்ந்த காதுகள், நீண்ட முடி, ஆண்யானை வடிவம் உடையவர் விநாயகர் என்று இப்பாடலில் கூறப்பட்டுள்ளது. பிறகு சிறுத்தொண்ட நாயனார் புராணத்தில் திருச்செங்காட்டங்குடியில் சிறுத்தொண்டர் வழிபட்ட திருக்கோயிலின் பெயர் கணபதீச்சுரம் என்னும் ஒரு செய்தியை மட்டுமே சேக்கிழார் கூறுகிறார். இங்கு கணபதி வழிபட்ட கோயில் என்னும் கருத்து ஒன்றே வெளிப்படுகிறது. இவை தவிரப் பெரிய புராணத்தில் பிற செய்;திகள் விநாயகர் பற்றிக் காண இயலவில்லை. எடுத்த காரியம் இனிது நிறைவேற உதவுபவர் விநாயகர் தானே. சிறுத்தொண்டராகிய பரஞ்சோதியார் நரசிம்மவர்ம பல்ல வனின் (கி. பி. ஆறாம் நூற்றாண்டு ) படைத் தலைவராக இருந்து வாதாபியை வென்று அங்கிருந்து விநாயகர் திருவுருவச் சிலையைத் தமிழ் நாட்டிற்குக் கொண்டு வந்த திருச்செங்காட்டங் குடியில் பிரதிஷ்டை செய்தார் என்றும் அறிஞர் எண்ணுவர்.

விநாயகப் பெருமானே திருமுறைகள் இருக்கும் இடத்தைக் காட்டி உலகிற்குத் தந்தவர் என்பதைப் பற்றியும், திருமுறைகள் காட்டும் விநாயகரின் தோற்றம், உருவம் பெயர், பெருமை , புராணக் கதைக் குறிப்பு ஆகியவை பற்றியும் இக்கட்டுரை வாயிலாக அறிந்துகொண்டோம் எனவே தமிழ் வேதமாகிய திருமுறைகள் தரணியில் பரவ வேராகவும் விழுதாகவும் இருந்த விநாயகப் பெருமானை வணங்கி வழிபடுவோமாக.

39 Thinnappan, 'Lord Ganesa in ThirumuRai ( Devotional Literature)', in *Ganapathy Kalanjiyam,* Singapore, Sri Senpaga Vinayagar Temple 2003, 31-32 (English) 107-110 (Tamil) February 2003

கட்டுரை எண். 18

# திருமுறைகளில் முருகன்

ஆங்கிலம் வணிகத்தின் மொழி என்றால் , பிரெஞ்சு தூதி; மொழி என்றால், இத்தாலியம் காதலின் மொழி என்றால், ஜெர்மனியம் தத்துவத்தின் மொழி என்றால், இலத்தீன் சட்டத்தின் மொழி என்றால், தமிழ் பக்தியின் மொழி என்று பாராட்டினார் தனிநாயக அடிகளார். இவ்வாறு தமிழைப் பக்தியின் மொழியாக்கிய பெருமை சிவனடியார்களாகிய நாயன்மார்களையும் திருமால் அடியார்களாகிய ஆழ்வார்களையுமே சாரும். முழுமுதற்பொருளாகிய சிவபெருமானை உள்ளத்தால் நினைத்து வாயால் துதித்து உடலால் திருத்தொண்டு செய்து உண்மையாக வழிபட்ட நாயன்மார்கள் பாடிய பாடல்களை நம் முன்னோர்கள் திருமுறைகளாகத் தொகுத்தனர். திருமுறை என்னும் சொல்லுக்குக் கேடும் ஆக்கமும் இல்லாத இறைவன் திருவருட் செல்வத்தைவாரி வழங்கும் நூல்கள் எனப் பொருள் உரைக்கலாம். இன்று நமக்குக் கிடைக்கும் சைவத் திருமுறைகள் பன்னிரண்டாகும். இப்பன்னிரண்டு திருமுறைகளைத் திருஞான சம்பந்தமும் , அடு;த்தமூன்று திருமுறைகளைத் திருநாவுக்கரசரும், இயற்றினர்: ஏழாம் திருமுறையைப் பாடியவர் நம்பியாரூரர் எனப்படும் சுந்தரர், இந்த ஏழு திருமுறைகளையும் இன்று பொதுவாகத் தேவாரம் என அழைப்பர் : எட்டாம் திருமுறையாகிய திருவாசகம் , திருக்கோவையார் என்னும் நூல்களை இயற்றியவர் மாணிக்கவாசகர்: ஒன்பதாம் திருமுறை திருவிசைப்பா திருப்பல்லாண்டு என வழங்கப்பெறும் : இதனை ஒன்பது அருளாளர்கள் இயற்றியுள்ளனர்: பத்தாம் திருமுறை திருமந்திரம்: இதன் ஆசிரியர் திருமூலர் : பதினோராம் திருமுறையைப் பாடியவர்கள் திருவாலவாயுடையார் முதல் நம்பி ஆண்டார் நம்பி ஈறாகப் பலர் பாடியுள்ளனர். பன்னிரண்டாம் திருமுறை திருத்தொண்டர் புராணமாகும்: இதனை இயற்றியவர் சேக்கிழார். "முதிவளர் சடைமுடி மன்றுளாரை முன் துதி செயும் நாயன்மார்களின் தூய சொல்மலராகிய" திருமுறைப்பாடல்களில் பழந்தமிழ்க் கடவுளாகிய முருகன் பெறும் இடத்தை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம் ஆகும்.

திருமுறைப்பாடல்களில் முருகனைப் பற்றிய குறிப்புக்கள் ஏறத்தாழ எழுபத்தைந்து இடங்களில் உள்ளன. இவை திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகிய மூவரின் தேவாரப்பாடல்களிலும், மாணிக்கவாசகரின் திருவாசகம் திருக்கோவையாரிலும், திருமாளிகைத் தேவர், சேந்தனார், கருவூர்த் தேவர் ஆகியோரின் திருவிசைப்பாப் பாடல்களிலும், திருமூலரின் திருமந்திரத்திலும், சேரமான் பெருமாள் நாயனார், நக்கீரர், கபிலர், இளம்பெருமான் அடிகள், பட்டினத்துப் பிள்ளையார், நம்பியாண்டார் நம்பி ஆகிய பெருமக்களின் பதினோரம் திருமுறைப் பாடல்களிலும் சேக்கிழாரின் பெரியபுராணத்திலும் இடம் பெற்றுள்ளன.

இவற்றுள் நக்கீரனாரின் திருமுருகாற்றுப்படையும் (பதினோராம் திருமுறை) செந்தனாரின் திருவிடைக்கழி முருகன் மீது பாடிய திருவிசைப் பாடல் பதிகமும்

(ஒன்பதாம் திருமுறை) முருகனையே தலைவனாகக் கொண்டு பாடப் பெற்றவை . திருமுருகாற்றுப்படை என்பது முருகணிடத்து அருள் பெற்ற ஒருவன் அருள் பெறாதவனை நோக்கி அவனிடம் சென்று அருள்பெற வழிகாட்டுவதைக் கருவாகக் கொண்டு பாடிய பாடலாகும். யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்னும் உயர்ந்த நோக்கில் எழுந்த ஒன்றாகும். சங்கத் தமிழ் இலக்கியங்களில் ஒன்றான பத்துப்பாட்டின் முதற்பாடலாகத் திகழும் பெருமையும் இப்பாடலுக்கு உண்டு. இது சங்கத் தமிழ்ப் பிரிவில் புறம் என்னும் வகையைச் சார்ந்த ஒன்று . முருகனின் ஆறுபடை வீட்டிற்குரிய அடிப்படை இந்தப் பாடலில் தான் உள்ளது.

சேந்தனாரின் திருவிசைப்பா பாடல் பதிகம் காதலைப் பாடும் அகம் என்னும் பிரிவில் அமைந்த ஒன்று. திருவிடைக்கழி என்னும் ஊரில் கோயில் கொண்டடெழுந்தருளி இருக்கும் முருகப்பெருமான் மீது தன் உள்ளத்தைப் பறிகொடுத்துக் காதல் கொண்ட ஒரு பெண்ணின் துயரத்தைக் கண்ட அவள் தாயர் வருந்திக் கூறுவதாக அமைந்த பதினொருபாடல்களைக் கொண்டு விளங்குகிறது. இதற்குரிய இசைப்பண், பஞ்சமம் என வகுத்துள்ளனர். சங்கப் புலவர்கள் பாடிய மானிடக் காதலை நாயன்மார்கள் தெய்வக் காதலாக மாற்றிப் பாடத் தொடங்கினர். அந்த வரிசையில் அமைந்தது இந்தப் பதிகம். நால்வர் பாடல்களில் மணிவாசகரின் திருவாசகத்தில் ஓரிரு குறிப்புக்களே முருகனைப் பற்றி உள்ளன. மூவர் தேவாரத்தில் பல இடங்களில் முருகனைப் பற்றிய செய்திகள் வருகின்றன. இவர்கள் சிவபெருமானையே முழுமுதற்பொருளாகக் கொண்டு பாடுபவர்கள். நனவிலும் கனவிலும் அவனையே கடவுளாகக் கருதுபவர்கள். இந்நிலையே நக்கீரர் , சேந்தனார் இருவரைத் தவிர ஏனைய புலவர்களின் பாடல்களிலும் இருக்கின்றது. ஆனால் நக்கீரரும் சேந்தனாரும் முருகனையே தலைவனாகக் கொண்டு பாடல்கள் இயற்றிய பான்மையர் ஆவர்.

## சொல்லும் பொருளும்

முருகன் என்னும் சொல் முருகு என்னும் அடிச்சொல்லுடன் அன் என்னும் ஆண்பால் விகுதி சேர்ந்து உருவான ஒரு நற்றமிழ்ச் சொல்லாகும். இச் சொல் தனித்து முருகன் எனவும், மாமுருகன், முருகவேள் என அடை சேர்க்கப்பெற்றும் திருமுறைப்பாடல்களில் வருகின்றது. முருகு என்னும் சொல்லுக்கு மணம், இளமை, அழகு இறைமை எனப் பொருள் உண்டு எனச் சுட்டிக்காட்டி முருகன் அல்லது அழகு என்னும் ஒரு நூலை விரிவாக யாத்துள்ளார் தமிழ்த் தென்றல் திரு. வி. கல்யாணசுந்தரனார். இப்பொருளை உணர்த்தும் அடிப்படைச் சான்று திருமுருகாற்றுப்படையில் இடம்பெறுகின்றது. "மணங் கமழ் தெய்வத்து இளநலம் காட்டி" (வரி 290) என்னும் வரியில் மணம், தெய்வத்தன்மை, இளமை அழகு ஆகியவற்றை முருகன் காட்டி அருள் புரிகிறான் என்னும் குறிப்பு வருகின்றது. அழியா அழகு , மாறாமணம் , என்றுமுள்ள இளமை, இனிய இறைமைத் தன்மை ஆகிய இவற்றை உடையவனே முருகன் என்னும் கருத்தை உணர்த்துவதில் முந்திநிற்கிறது முருகாற்றுப்படை. பரவையார் என்னும் பெண்ணின் நல்லார்,

திருவாரூர்க் கோயிலில் முதன்முதலாக சுந்தரரைக் கண்டபோது,' முன்னே வந்து எதிர் தோன்றும் முருகனோ பெருகொளியால்" என உள்ளத்தில் எண்ணியதாகச் சேக்கிழார் பெரியபுராணத்தில் பாடுகின்றார். இளமை, அழகு , மணம், இறைமை, இத்துடன் திருவருட்பிரகாசம் என்னும் குறையாத நிறைவாகத் தோன்றும் ஒளி என்னும் பொருளையும் முருகனுக்குச் சேர்க்கிறார் சேக்கிழார். அறியாமையை , ஆணவ இருளை அகற்றுவது திருவருள் ஒளியன்றோ?

**குறிஞ்சிக் கடவுள்**

தமிழில் இன்று கிடைத்துள்ள நூல்களில் தொன்மையானது தொல்காப்பியம். இந்நூலில் "சேயோன் மேய மைவரை உலகம்" என மலைப்பகுதியுடைய குறிஞ்சி நிலக்கடவுளாக முருகன் சுட்டப்பெறுகிறான். சேயோன் என்பது முருகனுக்குரிய பெயர். இது சேய் என்னும் அடிச்சொல்லுடன் ஓன் என்னும் ஆண்பால் விகுதி சேர உருவான ஒரு சொல்லாகும். சேய் என்பதைச் செம்மையுடன் தொடர்புபடுத்திக் கூறுவர் முன்னாளையச் சான்றோர் . முருகப்பெருமான் செம்மை நிறமுடையவன். ஆதலினால் செவ்வேள் என்று அழைக்கப் பெற்ற செய்தியைப் பழந்தமிழ் இலக்கியங்களின் வாயிலாக அறியமுடிகின்றது. ஆனால் சேய் என்பதற்குக் குழவி என்னும் பொருள் உண்டல்லவா? இந்தப் பொருளுடன் இணைத்துச் சிவனாரின் சேய் -புதல்வன் என்னும் கருத்து வலுப்பெற்று வழங்கிய சூழ்நிலையே திருமுறைகளில் மிகுதியான ஆட்சிபெற்றுள்ளது. சேய் என்பது முருகன் என்னும் பொருளில் சம்பந்தரின் தேவாரப் பாடல்களில் இடம்பெற்றுள்ளது. இளஞ்சேய் எனச் சேந்தனாரின் திருவிசைப்பாப் பாடலிலும் முருகன் அழைக்கப்பெறுகிறான்.

மலையுறை மக்களுக்கெல்லாம் தெய்வமாக விளங்கியவன் முருகன். அவன் குன்றுதோறும் ஆடல் புரிபவன் என்பதை முருகாற்றுப்படை முழங்குகிறது. பெரிய புராணத்திலும் கண்ணப்ப நாயனார் புராணத்திலும் காளத்தி வேடர்கள் எவ்வாறு முருகனை வழிபட்டு வணங்குகிறார்கள் என்னும் செய்தி இடம்பெற்றுள்ளது. மணிவாசகரின் திருக்கோவையாரிலும் தலைவனிடம் மனம் பறிகொடுத்த தலைவியின் உடல்மாற்றத்தைப் போக்க விரும்பும் தாயின் முருக வழிபாட்டுத் திறனை விளக்கும் வெறியாட்டு சில பாடல்களில் இடம்பெறுகின்றது. திருஞானசம்பந்தர்"கருகு குழல் மடவார் கடி குறிஞ்சியது பாடி முருகன்னது பெருமைபகர் முதுகுன்று அடைவோமே" என்று குறிஞ்சியோடு இணைந்து முருகனைப் பாடுகிறார்.

**தோற்றம்**

முருகப்பெருமானின் தோற்றம் குறித்துத் திருமுறைகளில் காணக்கிடக்கும் கருத்துக்களைத் தொகுத்துக் காண்போம். திருமூலர் திருமந்திரத்தில்

எம்பெருமான் இறைவா முறையோ என்று

வம்பவிழ் வானோர் அசுரன் வலிசொல்ல

தம்பகை கொல்லென்ற தற்பரன் தானே.

(திருமந்திரம் -503)

என்று வரும் பாடல் தேவர் சிவபெருமானிடம் சென்று அசுரர்களின் ஆற்றலை கூறி அவர்களால் ஏற்படும் கொடுமைகளைக் கூறவே, சிவபெருமான் அறுமுகனாகிய முருகனை அழைத்துத் தேவர் பகை அழிக்கப் பணித்தனன் என்னும் கருத்தினைக் கூறுகின்றது. முருகப்பெருமானுக்கு அறுமுகச் சிவன் என்று ஒரு பெயர் உண்டு. சிவபெருமானுக்கு படைத்தல் , காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய ஐந்தொழிலைச் செய்வதற்குரிய முகங்கள் ஐந்து. சிறப்புத் தொழில் நடத்த மெற்டிகாள்ளும் முகம் ஒன்று. எனவே மொத்தம் ஆறுமுகம் கொண்டு அவன் தோன்றினான். “தற்பரன் தானே” என்னும் தொடரும் ஐம்முக அருளோனாகிய சிவனும் அறுமுகப் பொருமாளாகிய முருகனும் ஒருவரே என்னும் கருத்தை வலியுறுத்தும்.

திருஞானசம்பந்தப் பெருமான் தம் தேவாரத்தில் விநாயகரின் தோற்றத்தை விளம்பியிருக்கின்றார். அதைப் போலவே முருகனின் தொற்றம் பற்றியும் குறிப்பிடுகின்றார் “இளங்குமரன் தன்னைப் பெற்று இமையவர் தம் பகையொழிவித்த இறைவன்’’(209.1)என்றும் சேந்தனை முன் பயந்து உலகில் தேவர்கள் தம் பகை கெடுத்தோன் “210.6) என்றும் “பகைகளையும் வகையில் அறுமுக இறையை மிக அருள” (325.8) என்னும் ஞானசம்பந்தரின் தேவாரப்பாடல்கள் தேவர்களின் பகை நீக்கம் செய்ய முருகனைச் சிவபெருமான் தோற்றுவித்து அருளிய செய்தியைக் கூறுகின்றன. “பெற்றும் உகந்தும் கந்தனையே’’(371.1) என்னும் அவர்தம் தேவாரத்தொடரும் கந்தனைப் பயந்த கடவுள் சிவன் எனச் சொல்கிறது.

சுந்தரர் இக்கருத்துக்களைத் தொகுத்துப் “பொரும் பலமதுடைஅசுரன் தாருகனைப் பொருது பொன்றுவித்த பொருளினை முன் படைத்து உகந்த புனிதன்’’(16.9) என்று கூறுகிறார். இந்த இடத்தில் பொருள் என்பது முருகனைக் குறிக்கினறது. “தாயே ஆறு சமய முதற்பரமும் தாமேவியவாறு தழைக்கின்றார்’’ என்பது சிவபெருமான் திருவந்தாதி.( 52) இங்கேயும் சிவனாரே முருகன் என்னும் செய்தி புலப்படுகின்றது. சிவபெருமானிடமிருந்து தோன்றியவன் ஆதலின் முருகனைச் சிவனார் மைந்தன் எனச் செப்பினர்.

**<u>அரனார் மகன்</u>**

முருகப் பெருமான் முழுமுதற்பொருளான சிவபெருமானின் புதல்வன், இளைய மைந்தன் எனத் திருமுறை பரக்கப்பேசுகின்றது. நால்வர் பாடல்களும் சிவபெருமானை முருகன் தந்தை எனவும் கூறுவதுடன், முருகனை அரனாரின்

அன்புப் புதல்வன் எனவும் அழைக்கின்றன. “மாமுருகன் தந்தையார், குமரன் தந்தை , முருகவேட்குத் தந்தைகாண், சேந்தன் அப்பன், செட்டியப்பன்” என நால்வர் பாடல்கள் சிவபெருமானை முருகனின் தந்தையாக அழைக்கின்றன. “இளங்குமரன் தன்னைப் பெற்று” எனச் சிவபெருமானைக் குறிப்பிடுகிறார் சம்பந்தர். மற்றவர்கள் பாடலிலும் இந்தக் குறிப்புக்கள் உண்டு.

“குமரனையும் மகனாக உடையவர்போலும் “ சேந்தனை மகனாகக் கொண்டார்” முருகவேள் தன்னைப் பயந்தாய் போற்றி” என்பன அப்பர் வாக்கு. “அங்கை வேலோன் குமரன் பிள்ளை என்பார் சுந்தரர்.

“அரன்மதலை மானமர் தடக்கை வள்ளல்தன் பிள்ளை ,பொன்மலை வில்லி தன் புதல்வன்;” என்பன சேந்தனார் பாடல் தொடர்களாக அமைந்துள்ளன.

**<u>மலைமகள் மதலை</u>**

முருகனின் தாய் உமையம்மையார் என்னும் குறிப்பையும் திருமுறைப்பாடல்கள் பேசுகின்றன. “நங்கடம்பனைப் பெற்றவள் பங்கினன்” என்பது நாவுக்கரசர் கூற்று “சேந்தன்தாய் மலைமங்கை “ என்பது சுந்தரர் வாக்கு. “குமரனைப் பயந்த வார்த்தயங்கிய முலைமடமானை “ எனவும் சுந்தரர் உமையம்மையாரை அழைக்கின்றார்.

“மலையரை பொற்பாவைதன் சிறுவன்” என முருகனைச் சுந்தரர் குறிப்பர்” கங்கைதன் சிறுவன்” எனவும் ‘மலைமகள் மதலை எனவும் சேந்தனார் கூறுவர்.

**<u>கணபதிக்குப்பின் இளங்கிளை</u>**

“அறுமுகனோடு ஆனைமுகற்கப்பனை “ என்பது நாவுக்கரசர் கூற்று. இதனால் அறுமுகனும் ஆனைமுகனும் சகோதரர்கள் என்பது போதரும். “கணபதி பின்னிளங்கிளை என்பது சேந்தனார் வாக்கு. இதனால் முருகன் விநாயகரின் தம்பி என்பதையும் உணரமுடிகிறது.

**<u>மால்மருகன்</u>**

முருகன் திருமாலுக்கு மருகன் என்னும் கருத்தைச் சேந்தனாரின் பாடல் வழி அறியமுடிகிறது. “கார்நிறமால் திருமருகன் , மால் திருமருகன்” என்பன சேந்தனார் பாடலில் வரும் தொடர்களாகும்.

**<u>தேவர் தலைவன்</u>**

“அமரர் கோமகன், தேவின் நற்றலைவன், மேலுலாந் தேவர்குல முழுதாளும் குமரவேள்” என்னும் சேந்தனார் பாடல் தொடர்களால் முருகன் தேவர்களின்

தலைவனாகத் திகழும் திறம் தெரிகிறது. “வகைமிகும் அசுரர் மாள வந்து உழிஞை வானமர் விளைத்த தாளாளன்” (சேந்தனார்) என்பதாலும் “பகை களையும் வகையில் அறுமுக இறையை மிக அருள நிகரில் இமையோர் புகவுலகு தபுகர்” எனச் சம்பந்தர் வுறுவதாலும், தேவர் குறை தீர்த்த தலைவன் எனவும்;, அறிய முடிகின்றது. “அமர் சேனைக்கு நாயகன்” என்பர் அப்பார் சுந்தரர்.

**<u>வள்ளி மணளான்</u>**

“முருகொடு புணர்ந்த வள்ளி போல” எனச் சங்க இலக்கியமாகிய நற்றிணையில் முருகனையும் இணைத்துச் சொல்கின்ற மரபு தொடங்குகின்றது. “வள்ளி முலை தோய் குமரன்” (199.6) என்பது சம்பந்தர் வாக்கு. “நஞ்செந்தின் மேய வள்ளி மணளன்” (236.4) “குறவி தோள் மணந்த செல்வக் குமரவேள்” (60.3) என்பன நாவுக்கரசர் கூற்றுக்கள். வள்ளி குறவர் மரபினைச் சார்ந்தவள். “குறவர் மங்கைதன் கேள்வன்(68.7) , குறவனார் தம்மகள் தம்மகனார் மணவாட்டி” (18.6) என்பன சுந்தரர் கூறும் சொற்றொடர்கள் . “குறத்தி திறத்திலும் இறைவன்(7.9) குமரவேள் வள்ளிதன் மணவாளன்(7.1) என்பன சேந்தனாரின் திருவிசைப்பாத் தொடர்கள் “குறவர் மங்கை கேள்வன்” என்பது நம்பியாண்டார் நம்பியின் திருநாரையூர் இரட்டை மணிமாலைத் தொடராகும்.

**<u>தெய்வயானையின் கணவன்</u>**

முருகப் பெருமான் வள்ளி மணாளன் என்னும் கருத்துத் திருமுறைகளில் பல இடங்களில் வருகின்றது. இந்த அளவுக்குத் தெய்வானையின் கணவன் என்னும் செய்தி குறிப்பிடப் பெறவில்லை. சேந்தனாரின் திருவிசைப்பாவில் ஓரிடத்தில் மட்டும் “குவளை மாமலர்க்கண் நங்கை யானைக்கும் குழகன் நல் அழகன்” (7.2) எனத் தெய்வயானை பற்றிய குறிப்பு வருகின்றது.

**<u>திருப்பெயர்கள்</u>**

இறைவன் ஒரு நாமம் ஒருவரும் இல்லாதவன் எனினும் ஆயிரம் திருநாமங்களைக் கொண்டவன். முருகப் பெருமானும் திருமுறைப்பாடல்களில் பலபெயர்களால் குறிப்பிடப் பெறுகிறான். “தொகை மிகுநாமத்தவன் “ என்பார் சேந்தனார். (7.8) அவற்றுள் குமரன் என்னும் பெயர் அதிகமாக இடம்பெறுகிறது. குமரன் , வேற்குமரன், இளங்குமரன், குமரவேள், செல்வக்குமரவேள் என்றெல்லாம் அமைந்திருக்கக் காண்கிறோம். குமரன் என்பதற்கு இளைஞன் , இளமைத்தன்மை உடையவன் என்பதே பொருளாகும . இளங்காளை இளஞ்சேய் என்ற பெயர்களையும் சேந்தனார் தம் பாடல்களில் குறிப்பிடுகிறார்.

கந்தன், சேந்தன், அறுமுகன், வேள், வேலோன் , சுப்பிரமண்ணியன், செட்டி, சாமி, சுவாமி, சரவணத்தான் என்னும் பெயர்கள் முருகன் பெயர்களாகத் திருமுறையில் இடம்பெற்றுள்ளன.

“பன்னிரு நயனத்து அறுமுகத்து அமுது என்பார் சேந்தனார். “அறுமுக இறை, அறுமுகன் , ஆறுகொலாம் அவர்தம் மகனார் முகம்: பன்னிரண்டு கண்ணுடைய பிள்ளை”என்பன தேவாரத் தொடர்கள். ஐந்தொழிலுக்குரிய முகத்துடன் சிறப்புத் தொழிலுக்குரிய முகம் ஒன்றையும் இப்பெருமானுக்குச் சேர்க்க ஆறுமுகம் தோன்றுகிறது. இந்நிலையில் அவன் அறுமுகச் சிவனாக முருகனாகத் தோன்றுகிறான். மேலும் ஆறு சமயமும் ஆறுமுகமாகத் தோன்றுகின்றன. என்னும் கருத்தைக் கபிலர் பாடல் கூறுகின்றது. “ஆறு சமய முதற்பரமும் தாமேவியவாறு தர்க்கின்றார்” என்பது அவர்தம் சிவபெருமான் திருவந்தாதி.

சுவாமி, சுப்பிரமண்ணியன், என்பன சேந்தனார் திருவிசைப்பாவில் மட்டுமே வருகின்றன. “மயிலூரும சுப்பிரமண்ணியன்” என்று சேந்தனார்தான் முதன்முதலில் சுப்பிரமண்ணியன் என்னும் பெயரைத் தமிழிலக்கியத்தில் கையாளுகின்றார். சாமி என்பது சம்பந்தர் தேவாரத்தில் மட்டுமே வருகின்றது. கடம்பன், கடம்பமர்காளை என்பன அப்பர் பாடல்களில் மட்டுமே வரும் தொடர்களாகும். செட்டி என முருகனைச் சுந்தரர் மட்டுமே அழைக்கின்றார்.

முருக நாயானர் என்பவர் முருகன் திருப்பெயர் தாங்கிய நாயன்மார் ஒருவர் ஆவார். இவர் திருப்புகலூரில் ஞானசம்பந்தர் காலத்து இறைவனுக்குரிய பூமாலைகள் கட்டிக்கொடுத்து வழிபட்டவர்

**<u>உறைவிடம்</u>**

திருமுருகாற்றுப்படை முருகனின் அறுபடை வீட்டைப் பற்றிப் பேசும் . திருப்பரங்குன்றம், திருச்செந்தூர் , திருவாவினன்குடி, திருவேரகம், குன்று தோறாடல், பழமுதிர்சோலை என்பன அறுபடைவீடுகளாக விளங்குகின்றன. இவை ஆறுபடை வீடுகளல்ல. முருகனை அடியாரிடம் ஆற்றுப்படுத்தற்கு உரிய முருகன் உறைவிடங்களே என்பாரும் உண்டு.

சேந்தனார் தம் திருவிசைப்பாவில் திருவிடைக்கழி என்;னும் சோணாட்டுத் தலத்தில் உள்ள முருகனைத் தலைவனாகக் கொண்டு ஒரு பதிகம் பாடியுள்ளார். திருவிடைக்கழியில் திருக்குரா நிழற்கீழ் நின்ற முருகனாக அவர் காண்கிறார்.

சம்பந்தர் சேய்ஞலூர், பூம்புகார், முதுகுன்று (விருத்தாசலம்) ஆகிய மூன்றிடங்களையும் முருகத் தலங்களாகக் குறிப்பிடுகிறார். “முருகன்னது பெருமை பகர் முதுகுன்று (1.16.4) சேயடைந்த சேய்ஞலூர் (11.1.1) “பூம்புகாரில் மூசுவண்டறை முருகன் முப்போதும் செய் ( 1.5.2-4) என்பன சம்பந்தர் தேவாரத் தொடர்களாகும்.

“நம் செந்தின் மேய வள்ளி மணாளன்” புள்ளிருக்கும் வேளூரானைப் போற்றாதே ஆற்ற நாள் போக்கினேனே” எனவும் திருநாவுக்கரசர் பாடுவதால் திருச்செந்தூர், வைத்தீஸ்வரன் கோயில் இரண்டும் முருகன் உறைவிடங்கள் என அறியலாம்.

**<u>ஊர்தியும் கொடியும்</u>**

முருகப் பெருமானின் ஊர்தியாக மயிலே திருமுறைகளில் மிகுதியாகக் குறிக்கப் பெற்றுள்ளது. மயிலூர்தி முருகவேள் என்பன மூவர் தேவாரத் தொடர்கள். யானையும முருகனுடைய ஊர்தி எனச் சங்க இலக்கியங்கள் வாயிலாக அறியலாம். சேந்தனாரின் திருவிசைப்பாப் பாடல் “கவளமா கரிமேல் கவரி சூழ் குடைக்கீழ் கனக் குன்றென வரும் கள்வன்(7.2) “ முருகன் எனக் கூறுவதால் முருகனின் ஊர்தி யானை என்பதும் போதருகின்றது.

முருகப் பெருமானின் கொடி கோழிக்கொடியாகும். இதனைத் திருமுறைப்பாடலகளும் தெளிவுறுத்துகின்றன. “கோழிக் கொடியோன்” என நாவுக்கரசர் தேவாரமும் “கோழிவெல் கொடியோன்” எனச் சேந்தனார் பாடலும் முருகனை அழைக்கின்றன.

வேலினை ஆயுதமாகக் கொண்டவன் என்பது வேலோன் என்னும் பெயரால் விளங்கும். “வேலுலாந்தடக்கை வேந்தன்” என்பது சேந்தனார் வாக்கு(7.1)

**<u>அருஞ்செயல்கள்</u>**

**<u>சூரனை வதைத்தது.</u>**

சூரனை வதைப்பதற்காகவே முருகப்பெருமான் தோன்றினான் எனப் பார்த்தோம். “மாயச்சூர் அன்றறுத்த மைந்தன்” (198.1) எனப் பாராட்டுகிறார் சம்பந்தர். “சமர சூரபன்மாவைத் தடிந்த வேற்குமரன்” (177.10) “விரிநீர்ப் பரவைச் சூரட்ட வேலன்” (101.5) என அப்பர் போற்றுகிறார். “கடற்சூர் தடிந்திட்ட சேந்தர்தாதை” (64.6) . “காதலாற் கடற்சூர் தடிந்திட்ட செட்டி (59.10) கருவரிமாக் கடலுட் காய்ந்தவன்’ (83.5) என்பன சுந்தரர் மொழிகள். சூரன் கடலில் மாமரமாக நின்ற நிலையில் பிளந்த செய்தி இங்குப் பேசப்படுகிறது. “பொரும்பலமதுடை அசுரன் தாருகனைப்பொருது பொன்றுவித்த பொருள்’ (16.9) எனச் சுந்தரர் முருகனைப் போற்றும்போது தாருகாசுரனை வென்ற செய்தியையும் நாம் தெரிந்து கொள்ளமுடிகிறது. “தானமர் பொருது வானவர் சேனை மடியச் சூர்; மார்பினைத் தடிந்தோன்” (7. 4) என்பது சேந்தனாரின் திருவிசைப்பாப் பாடற்பகுதி. “வேந்துக்க மாக்கடல் சூரன்முன்னாள் படவென்றிகொள் சேந்தன்” (சிவபெருமான் மும்மணிக்கோவை 18. 1) என்னும் பதினோராம் திருமுறைத் தொடரும் இதனை வலியுறுத்துகிறது. “மாயச்சூர் அன்றறுத்த மைந்தன் “ எனச் சுருக்கமாகக் குறிப்பிடுகிறார் ஞானசம்பந்தர். அமரர் சேனைக்கு நாயகனாகத் தேவ சேனாதிபதியாகத் தோன்றிய திறத்தைச் சுந்தரர் செந்தமிழ் சொல்கிறது.

## 2. மலையைப் பிளந்த மாண்பு

முருகப் பெருமான் கிரவுஞ்ச மலையைப் பிளந்த செய்தியைக் குன்றம் எறிந்த குமரவேள் எனக்கூறும் இறையனார் களவியல் உரை என்னும் பழந்ததமிழ் உரை நூல். இதனைப் பட்டினத்தடிகள் தம் திருவிடைமருதூர் மும்மணிக்கோவை என்னும் நூலில் "முலை துளைபடுத்த கொலைகெழு கூர்வேல் அமரர்த்தாங்கும் குமரன்" (16. 22-23) எனக் குறிப்பிடுகிறார். வேலின் வெற்றி இவ்வாறு பேசப்படுகிறது. "கிரிதனைக் கண்ட ஆண்டகை" (7.6) என்பார் சேந்தனார்.

## 3. உலகை வலம் வந்தது

முருகப் பெருமான் தன் தந்தையார் விருப்பதிற்கேற்ப உலகை வலம் வந்திட மூத்த பிள்ளையாராக இருக்கின்ற விநாயப் பெருமானே தன் தந்தையை வலம் வந்து கனியைப் பெற்ற கதையை அனைவரும் அறிவர். இக்கதையைப் பற்றிய குறிப்பு முதன் முதலாகப் பதினோராம் திருமுறையிலுள்ள மூத்த பிள்ளையார் திருமும்மணிக்கோவை என்னும் நூலில் அதிராவடிகளால் சொல்லப்படுகிறது." சுடர்ப்பிழம்பு தழைத்த அழல் தனி நெடுவேல் சேய் மூவுலகும் வலம் வர" (13.1,2) என்பது அப்பாடல். நம்பியாண்டார் நம்பியின் பாடலிலும் இதற்குரிய சான்று உள்ளது.

## பிணிநீக்கும் பெருமான்

முருகப்பெருமானை வழிபடுவதால் பிணயாக்கை நீங்கிப்பேரின்பம் பெறலாம் என்று கூறுகிறார் திருநாவுக்கரசர் "கணிசெய் வேடத்தர் ஆயவர் காப்பினால், பணிகள்தாம் செய வல்லவர் யாவர்தம் பிணி செய் யாக்கையை நீக்குவர்-பேயரே" (210.24) என்னும் தேவாரத் தொடர் பிணிசெய் யாக்கை நீக்கிப் பேரின்பம் தரும் முருகனின் பேரருளை புலப்படுத்தும் . பிணிசெய் யாக்கை என்பதற்கு நோயுள்ள உடலை நீக்கி நோயற்ற வாழ்வை நல்குவான் என்பது ஒரு பொருள் . பிணித்தலாகிய ஆணவத்தாற் கட்டுண்ட பாசநிலையை நீக்கி வீடுபேறாகிய பேரின்பத்தை அளிப்பான் என்பது இன்னொரு பொருளாகும்.

## பிள்ளைவரம் தரும் பெருவள்ளல்

அன்பின் திருவுருவாக விளங்கிய அடியார் கண்ணப்பர். "கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை" என்று திருவாசகம் கண்ணப்பரின் அன்பின் திறத்தைக் குறிப்பிடுகிறது. இத்தகைய கண்ணப்பர் இம் மண்ணுலகில் திருவவதாரம் செய்வதற்குக் காரணமாக இருந்தது. முருகப் பெருமான் திருவருள் என்பது சேக்கிழார் கருத்தாகும். கண்ணப்பரின் தந்தையார் வேடர் தலைவன் நாகனுக்கும், தாயார் தத்தை என்பாருக்கும் நெடுநாள் மகப்பேறு வாய்க்கவில்லை . இவர்களுக்குப் புதல்வர்ப்பேறு வாய்ப்பது இனி மிக அரிது என்று எல்லாரும் கூறிவிட்டனர். இந்நிலையில்

அவர்கள் வேறுவழி அறியாது முருகவேள் முற்றம் சென்று நாளும் வழிபட்டுப் பராய்க்கடன்(வேண்டுதல்) நெறியில் நின்றனர். சேவல்கள், மயில்கள் முதலியனவற்றை அவன் கோயிலில் விட்டுக் குன்றக்குரவை ஆடல் செய்து பெருவிழா எடுக்கின்றனர். அதன் பின்னர் தத்தை கருவுற்றாள். கண்ணப்பர் தோன்றினார். இதனைப் பெரிய புராணத்தில் சேக்கிழார் "எயிலுடைப் புராங்கள் செற்ற எந்தையார் மைந்தரான மயிலுடைக் கொற்ற ஊர்தி வரையுரங் கிழித்த திண்மை அயிலுடைத் தடக்கை வென்றி அண்ணலார் அருளினாலே" தத்தைபால் கருப்பம் நீடியதாகக் கூறுகிறார். திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுள் மைந்தன், மயிலை ஊர்தியாகக் கொண்டவன், மலையைப் பிளந்த வெற்றிவேல் கொண்ட தலைவன்-முருகன் -பிள்ளைவரம் தரும் பெருவள்ளலாக இருக்கும் இயல்பினைச் சேக்கிழார் வாக்கு செப்புகிறது.

**<u>சிறுத்தொண்டர் கண்ட சிறப்பு</u>**

அறுபத்து மூன்று நாயன்மார்களில் சிறுத்தொண்டர் சிவபெருமானுக்குத் தன் ஊறிலாத தனிப்புதல்வன் தன்னை அரிந்து அங்கு அமுதாக ஊட்டியவர். வாளால் மகவறிந்து ஊட்டவல்லேன் அல்லேன் " எனப் பட்டினத்தடிகள் இவரது பண்பினைப் பாராட்டுகிறார். இவர் தொண்டின் திறங்கண்ட சிவபெருமான் உமையம்மையாரோடும் சரவணத்துத் தனயராகிய முருகப் பெருமானுடனும் காட்சி கொடுத்ததாகச் சேக்கிழார் குறிப்பிடுகிறார். இவர்க்கு மட்டும் முருகப்பெருமானுடனும் காட்சி கொடுக்கக் காரணம் என்ன? சிறுத்தொண்டரின் தொண்டு-பிள்ளைக் கறி சமைத்த பெருஞ்செயல்-அவர் ஒருவரால் மட்டும் நிறைவேறியதன்று. அவர், அவர்மனைவி, சீராளனாகிய அவர் மகன் ஆகிய மூவர்க்கும் காட்சி கொடுக்கும் முகத்தான் மூவரும் கூடிய ஒருவராக அம்மையுடனும் முருகப் பெருமானுடனும் கூடிய நிலையில் சிவனார் காட்சி கொடுத்தருளினார்.

சோமாஸ்கந்த மூர்த்தம் சத் சித் ஆனந்தம் ஆகிய மூன்றையும் காட்டவல்லது. சத் என்பது இறைவன். சித் என்பது சக்தி, உமை: ஆனந்தம் என்பது முருகன். எனவே பேரின்பவாழ்வாக முருகப் பெருமான் இருக்கும் பெற்றியை இஃது எடுத்தியம்புகிறது.

**<u>நாவுக்கரசர் காட்டும் நல்வழி</u>**

திருநாவுக்கரசர் திருத்தொண்டின் நெறிவாழத்தோன்றிய ஞானத் தவமுனிவர் எண்பதாண்டுகள் வாழ்ந்து இறுதி வரை துறவியாகவே இருந்து சைவப்பணியாற்றிய பெருந்தகையார். இவர் இறைவனைத் திருவாய்மூரில் ஞானசம்பந்தப் பெருமான் காட்டக் கண்டகாட்சியில் "விநாயகனும் மெல்லியலும் தோன்றக் கண்டேன்" என்று விநாயகரைக் கண்ட காட்சியைக் குறிப்பிடுகிறார். இவ்வாறே திருப்பூவணத்தில் இறைவனைக் கண்ட காட்சியை வருணிக்கும்போது"பன்னிரண்டு கையுடைய பிள்ளை தோன்றும்" என்று முருகப்பெருமான் ஆறுமுகமும் பன்னிரண்டு கையுமாகக் கோலம்

காட்டியதைக் குறிப்பிடுகிறார்.

தமிழில் தன்மைப் பன்மையாக யாம், நாம் என்னும் இருசொற்கள் உள்ளன. யாம் என்பது முன்னின்றாரை உள்ளடக்காதநிலையிலும்:, நாம் என்பது முன்னின்றாரை உள்ளடக்கியநிலையிலும் நாம் பேசும்போது பயன்படுத்துகிறோம் நம்நாடு சிங்கப்பூர், நம்வீடு இது என்று சொல்லும்போது நாம் உணரும் உரிமைத் தன்மையை எளிதில் அறிய முடிகிறதல்லவா? அதுபோல நாவுக்கரசர் முருகப் பெருமானைச் சைவர்கள் அனைவருக்கும் உரிமையானவனாக்கி " நம் கடம்பனைப் பெற்றவள் பங்கினன்" எனவும் நம் செந்தின் மேய வள்ளி மணளான்" என்னும் நாவுக்கரசரின் தொடர்கள் இந்த உரிமையைச் சுட்டிக்காட்டுகின்றன.

நாவுக்கரசர் அனைவருக்கும் வாழ்க்கையில் குறிக்கோள் வேண்டும்என வலியுறுத்தியவர். "என்கடன் பணிசெய்து கிடப்பதே தன் கடன் அடியேனையும் தாங்குதல்" என்பது அவர் வாழ்க்கையிற் கொண்ட குறிக்கோளாகும். இந்தக் குறிக்கோளை எடுத்துக்கூறும் பாடலில் முருகன் இடம்பெறுகிறான். "நம் கடம்பனைப் பெற்றவள் பங்கினன்" என்றுதான் இந்தப்பாடல் தொடங்குகிறது. இங்கே கடம்பன் என்பது கடம்பமரத்தின் கீழ் அமரும் முருகனைக் குறிப்பது. இவனைப் பெற்ற உமையம்மையாரைப் பாகத்தில் கொண்ட சிவபெருமான் என்னும் கருத்துடைய வரி இஃதாகும்

"கண்டறியாதன கண்டேன் அவர் திருப்பாதம் கண்டேன்" என்று கூறும் நாவுக்கரசர் இறைவனை ஐயாற்றில் கண்ணாற் கண்டார் . கண்டதுடன் நாமும் காணத்தம் பாடல்களால் வழிகாட்டினார். அவ்வாறு வழிகாட்டிய பாடல் ஒன்று வருமாறு

உடம்பெனும் மனையகத்து உள்ளமே தகளியாக

மடம்படும் உணர் நெய்யட்டி உயிரெனும் திரிமயக்கி

இடம்படு ஞானத்தீயால் எரிகொள இருந்து நோக்கில்

கடம்பர் காளைதாதை அழவடி காணலாமே

உடம்பே வீடு: உள்ளமே அகல்: உணர்வு நெய்: உயிர்திரி: ஞானம் சுடர் இவ்வாறு விளக்கேற்றி இறைவனை ஒன்றி இருந்து நோக்கினால் இறைவன் திருவடியைக் காணலாம் என்று இப்பாட:டு எடுத்தியம்புகிறது. இங்கே இறுதிவரியில் கடம்பர் காளை தா:தை கழலடி என்பதற்குக் கடம்ப மரத்தின் கீழ் வீற்றிருக்கும் முருகப்பெருமானின் தந்தையாகிய சிவபெருமானின் திருவடி காணலாம் எனப்பொருள் கொள்கிறோம் திருவருள் பெற வழிகாட்டும் திருநாவுக்கரசரின் பாடலில ; முருகப்பெருமான் இடம் பெற்றுள்ள சிறப்பை நாம் கண்ட போற்றுதல் வேண்டும்.

மேலும் இந்த வரிக்குக் கடம்பமர் காளையாகிய முருகன் கழலடி கணாலாம் என்றும், காளை தாதையாகிய சிவனாரின் கழலடி காணலாம் என்னும் பொருள் கூறுவாரும்உளர். அந்நிலையில் முருகப் பெருமான் திருவடி காண்பதற்கும் மேற்கண்ட வழியே உகந்தது என்றும் கொள்ளவேண்டும். முருகனும் சிவனும் ஒருவர் தாமே என்னும் கருத்தும் நாம் அறிந்துகொள்ளவேண்டும். "ஐயன்காண், குமரன்காண், ஆதிரையான்காண்" என்னும் அப்பரின் திருத்தாண்டகக் கருத்தும் குமரன் என்பதற்கு முருகன் எனப் பொருள்கொள்ளும் நிலையில் இதனை வலியுறுத்துகிறது.

## முடிவுரை

சைவசமயச் சான்றோர்கள் பாடிய தெய்வத் திருமுறை வாயிலாக முருகன் என்னும் சொல்லும் பொருளும் அறிந்து, குறிஞ்சிக் கடவுளின் தோற்றத்தையும் புரிந்துகொண்டு, அவன் அரனார் மகனாக , மலைமகள் மதலையாக , கணபதியின் இளங்கிளையாக , மால்மருகனாக , தேவர் தலைவனாக , வள்ளிமணளனாக , தெய்வயானையின் கணவனாகத் திகழும் தன்மையைத் தெரிந்துகொண்டு, முருகனின் திருப்பெயர்களையும் உறைவிடங்களையும் கேட்டு, அவன் ஊர்தியையும் கொடியையும் தரிசித்துப்பின் அவன் அருஞ் செயலாற்றலைப் போற்றி பரவி, அவனைப் பிணிநீக்கும் பெருமானாக , பிள்ளை வரம் தரும் வள்ளலாகக் கருதி நாடிச் சிறுத்தொண்டர் கண்டது போல நாவுக்கரசர் காட்டிய வழியில் நின்று நாமும் கண்டு, வழிபட்டு அவன் பேரருளைப் பெற்றுப் பெருவாழ்வு வாழ்வோமாக.

26 Thinnappan, SP. Thirumuraikalil Murugan (Murugan in Tamil Devotional songs of Saiva Nayanmars In: 35th Anniversary Souvenir Magazine, Thiruvarul Tavaneri Mandram, Kualalumpur (Malaysia) (1997) pp 25-31 (Tamil)

# முருகன் -சொல்லும் பொருளும் வழிபாடும்

உலகத்தோடும் உயிர்களோடும் ஒன்றாகவும் வேறாகவும் உடனாகவும் இருந்து இயக்குகின்ற முழு முதற்பொருளைப் பரம்பொருளைக் குறிக்கப் பைந்தமிழில் மூன்று சொற்கள் உள்ளன. இறைவன், கடவுள், இயவுள் என்பனவே அந்த மூன்று சொற்கள் ஆகும். இந்த மூன்று சொற்களும் பொருளாழம் உடைய சொற்கள். இவை முழுமுதற் பொருளின் தத்துவத்தை உணர்த்தும் ஆற்றலுடன் விளங்குகின்றன. இறைவன் என்னும் சொல்லுக்கு எல்லாப் பொருள்களிலும் தங்கியிருப்பவன்-நீக்கமற நிறைந்திருப்பவன் என்பது பொருளாகும். இது ஒன்றாக இருக்கும் நிலையை உணர்த்துகிறது. கடவுள் என்னும சொல் கடந்து நிற்பவன் என்னும் சொல் வேறாக இருக்கும் நிலையை வெளிப்படுத்துகிறது இயவுள் என்பதோ.உள்ளத்திலிருந்து இயக்குபவன் என்னும் பொருளுடையது. இது ஒன்றாக இருக்கும் நிலையை உரைக்கிறது.

இறைவனுக்கு ஒரு நாமம் (பெயர்) ஓர் உருவம் என ஒன்றில்லை . ஓர் உருவம் ஒன்றும் இல்லார்க்கு ஆயிரம் திருநாமம் பாடி நாம் தெள;ளெணம் கொட்டாமோ" என்பது திருவாசகம். இறைவன் ஊரிலான் : பேரிலான்: குணமிலான்: குறியிலான்: வேண்டுதல் வேண்டாமை இல்லாதான்." ஏதவன் ஊர் ஏதவன் பேர் யார் உற்றார் யார் அயலார்" எனக் கேட்கிறார் மணிவாசகர். இத்தகைய இறைவனுக்குரிய பெயர்களில் முருகன் என்பது ஒன்று.

முருகன் என்னும்; சொல் முருகு என்னும் சொல்லடிப்படையாகத் தோன்றியது. முருகு உடையவன் முருகன், முருகு என்னும் பழந்தமிழ்ச் சொல்லின் அமைப்பினைப் பார்ப்போம் . முருகு என்னும் சொல் மூன்று எழுத்துக்களால் உருவாகியிருக்கிறது. இயல், இசை நாடகம் என்னும் முத்தமிழைப்போல இந்தச் சொல்லும் மூன்று எழுத்துகளால் அமைந்துள்ளது. முருகு என்னும் மூன்று எழுத்துகளும் உ என்னும் உயிரொலியுடன் கூடிய ஒன்றாகவே உள்ளன . உயிரொலி என்பது -உகர ஒலி இந்த மூன்று எழுத்துக்களுக்கும் அடிநாதமாக அமைந்துள்ளது. முதல் எழுத்து மு அதாவது ம் கூட்டல் உ மெல்லின மெய்யெழுத்துடன் உகரம் கூடி நிற்கிறது. இரண்டாவது எழுத்து ரு அதாவது ர் கூட்டல் உ இடையின மெய்யெழுத்துடன் உகர உயிர் ஏறி நிற்கின்றது. இறுதியிலுள்ள எழுத்து கு. அதாவது க் கூட்டல் உ. வல்லின மெய்யெழுத்துடன் உகர உயிர் ஒன்றாகியிருக்கிறது. தமிழிலுள்ள மெய்யெழுத்துக்ள் 18 யும் வல்லினம், மெல்லினம், இடையினம் என மூன்று வகைப்படுத்துவர். இந்;த மூன்று வகை எழுத்துகளையும் முருகு என்னும் சொல் கொண்டு விளங்குகிறது. உயிர் எழுத்து 12 . இதன் சார்பாக இந்தச் சொல்லில் உ என்பது உள்ளது. தமிழுக்குரிய முதல் எழுத்து உயிரும் மெய்யும் தான் . இவற்றைக்கொண்டு முருகு என்னும் சொல்லின் எழுத்து அமைப்பு இலங்குகிறது. முத்தமிழுக்கும் முதலாக இருப்பவன் முருகன் என்பதை இந்தச் சொல்லின் எழுத்தமைப்பு எடுத்து இயம்புகிறது அல்லவா?

இனி இந்தச் சொல்லின் பொருளைக் காண்போம். முருகு என்னும் சொல்லுக்குத் தேன், மணம், இளமை, அழகு , இறைமைத் தன்மை எனப் பல பொருள் உண்டு. தேன் என்னும் பொருளை வைத்து நோக்கும் போது இறைவன் தேனாக இனிக்கும் இயல்புடையவன் என்பதை நாம் உணர முடியும். தேன் இனிக்கும் சுவையுடையது. இறைவனும் நினைக்குந்தொறும் காணுந்தொறும் பேசுந்தொறும் எப்போதும் அனைத்து எலும்பு உள்நெக ஆனந்தத் தேன் ஆக இருப்பவன் எனத் திருவாசகம் கூறும். இறைவனைத் தேனாகவே கண்டு சுவைக்கிறார்கள் நம் நாயன்மார்கள். தேன் மலத்தைக்கட்டும், மிகுதியாக உண்டால் மலத்தைக் கழிவிக்கும். அதுபோல இறைவன் உயிர்களின் மலத்தை ஆணவம், கன்மம், மாயை ஆகியவற்றை அகற்றும் இயல்பினன். தேன் உடலுக்கு உறுதி கூட்டும். உயிர்கள் உறுதிப்பொருள்களை அறம் பொருள் , இன்பம் , வீடு ஆகியவற்றை அடைய இறைவன் உதவுவான்.

முருகு என்னும் சொல்லுக்கு மணம் என்பது பொருள். இதனை வைத்து நோக்கும் போது இறைவன் மணம் மாறாத மணமுடையவனாக இருக்கிறான். கருப்பூரம் நாறுமோ கமலப்பூ நாறுமோ என அவன் மணம் பற்றிக் கேட்கிறாள் ஆண்டாள். அவன் மணம் என்றும் மாறா நறுமணம்: இயற்கை அறிவு மணம்.

முருகு என்னும் சொல்லுக்கு இளமை என்னும் பொருளும் உண்டு. இறைவனை "என்றும் இளையாய்" என்று அழைக்கிறார் நக்கீரர் . இறைவனின் இளமைக் கோலம் என்றும் இளமையாகவே நின்று நிலவக்கூடியது. எனவே தான் முருகனை பால சுப்ரமணியனாகக் காண்கிறோம்.

முருகு என்னும் சொல்லுக்கு அழகு என்னும் பொருள் உண்டு. அழகு என்னும் அடிப்படையில் ஆண்டவனைக் காணும்போது அழகின் சிகரமாக அவன் காட்சியளிக்கின்றான். நம் அழகு அழியும் அழகு. ஆண்டவனின் அழகோ அழியா அழகு. முருகனின் அழகை அவன் பகைவனான குரபன்மன் போர்க் களத்தில் கண்டு பாராட்டுவதைக் கேளுங்கள். அழகின் தெய்வமாகக் கருதப்படுபவன் மன்மதன் , ஆயிரம் கோடி மன்மதன் அழகு அனைத்தும் திரண்டு ஒன்றாகிச் சேர்ந்தாலும் முருகப்பெருமானின் முழுவடிக்கும் உவமை கூறமுடியுமா என்று அவன் பகைவன் சூரபத்மன் கேட்கிறான். இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தில் கோவலனை அறிமுகப்படுத்தும்போது ""மதி முக மடவார் தம் ஆயத்து கண்டேத்தும் செவ்வேள்" எனக் கூறிச் செல்கிறார் . முருகனைப்போன்று பேரழகு உடையவன் கோவலன் என்பது இதனுடைய கருத்து. சேக்கிழார் சுந்தரரைக் குறிப்பிடும்போது "முன்னே வந்து எதிர்தோன்றும் முருகனோ பெருகொளியால்" எனக் கூறுகிறார். சுந்தரர் அழகு முருகனின் ஒளிமிக்க அழகு போன்று தோன்றியதாம் . எனவே அழகின் எல்லை முருகன்

இறுதியாக இறைமைத் தன்மை என்னும் பொருளும் முருகன் என்னும் சொல்லுக்கு உண்டு. எங்கும் நிறைந்திருக்கும் இயல்பும் , அனைத்து உயிர்களையும் கடந்து

திற்கும் ஆற்றலும், எல்லாவற்றையும் இயக்கும் ஏற்றமும் இறைமைப் பண்புகளாகும். இப்பண்புடைய இயல்பும் இச்சொல்லுக்குப் பொருளாகிறது.

முருகன் என்னும் சொல்லின் அமைப்பு , பொருளாற்றல் பற்றிபார்த்தோம். இச்சொல்லை ஓதுவது நமக்குப் பேரின்பத்தை நல்குவதாகும். இதனால் விளையும் பயனை நக்கீரர்" அஞ்சு 'முகம் தோன்றின் ஆறு முகம் தோன்றும்: வெஞ்சமரில் அஞ்சல் என வேல் தோன்றும்: நெஞ்சில் ஒரு கால் நினைக்கின் இருகாலும் தோன்றும் முருகா என்று ஓதுவார் முன். " எனக்குறிப்பிடுகிறார். முருகா என்று சொல்வது வேறு ஓதுவது வேறு. ஓதுவது என்பது காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்க உரைப்பதாகும். நினைந்து நினைந்து உணர்ந்து உணர்ந்து நெகிழ்ந்து நெகிழ்ந்து அன்பே நிறைந்து நிறைந்து ஊற்றெழும் கண்ணீர் அதனால் உடம்பு நனைந்து நனைந்து முருகா என்று உருகுவதுதான் உண்மையான வழிபாடாகும். இந்த வழிபாட்டுக்குரிய இடங்களாகக் கோயில்கள் இலங்குகின்றன. கோயில்களிலிருக்கும் இறை உருவங்கள் விளங்குகின்றன. இந்த இறை உருவங்களில் இறை அருளை எழுந்தருளச் செய்வதுதான் குடமுழுக்கு விழாஅல்லது புனித நன்னீராட்டுப் பெருவிழா என அழைக்கப்படுகிறது. புண்ணிய நதிகள், தீர்த்தங்களிலுள்ள நீரைக் குடங்களில் கொண்டு வந்து வைத்து ஆகம முறைப்படி யாக பூசை செய்து அவற்றில் இறை அருளை உருவேற்றி வேத மந்திரங்கள் திருமுறைகள் ஓதி வழிபாடு செய்து இறை உருவங்களுக்கு ஒரு நன்னாளில் அபிடேகம் செய்து இறை அருளை எழுந்தருளச் செய்வதுதான் குடமுழுக்கு விழாவின் நோக்கமாகும். இக்குடமுழுக்கு விழா புதிய கோயில்களை எழுப்பும்போதும் பழைய கோயில்களுக்கு பழுதுபார்த்துத் திருப்பணி செய்யும் போதும் செய்யப்படுகிறது.

பொதுவாக 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை செய்வது மரபாகும். இவ்வாறு நம் கோயில்களில் எழுந்தருளியுள்ள இறை அருள் திருமேனிகளில் நம் மனத்தை ஒன்றச் செய்து இறைவன் திருப்பெயரை ஓதி வழிப்பட்ட நிலையில் உள்ளக் கோயிலில் இறைவன் குடிகொண்டிருப்பதை உணரமுடியும். அந்நிலையில் 'உள்ளம் பெருங்கோயில் ஊன் உடம்பு ஆலயம் வள்ளல் பிரானாருக்கு வாய் கோபுரவாசல் தௌ;ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம் கள்ளப் புலன் ஐந்தும் காளா மணிவிளக்கே' என்னும் திருமூலர் கருத்தை நடைமுறையில் கண்டு பேரின்பம் பெறமுடியும்.

எனவே முருகன் என்னும் சொல்லின் அமைப்பையும் பொருளையும் உணர்ந்து ஓதி வழிபட்டு அவன் திருவருளைப் பெற்றுப்பேரின்பப் பெருவாழ்வு அடைவோமாக.

தமிழ்முரசு 23-11-1983 அருள்மிகு தண்டாயுதபாணி கோயில் திருக்குட நன்னீராட்ட பெரு விழா சிறப்புக்கட்டுரை

# தமிழ்க்கடவுள் முருகன்

தமிழ் நூல்களில் காலத்தால் பழைய நூலாகிய தொல்காப்பியம் முருகனைச் சேயோன்- செம்மை நிறைந்தவன் என அழைக்கிறது. மலைப் பகுதியாகிய குறிஞ்சி நிலத்திற்குரிய தெய்வமாக அது குறிப்பிடுகின்றது.

சங்க இலக்கியமாகிய பத்துப்பாட்டில் முதல் பாட்டு திருமுருகாற்றுப்படை இதனை இயற்றியவர் நக்கீரர். இதுதான் முருகனைப் பற்றிய முதல் தமிழ் இலக்கிய நூல் முருகன் அருளைப்பெற்ற அடியார் ஒருவர் அவன் அருளைப்பெற விரும்பும் இன்னொரு அடியார்க்கு வழிகாட்டும் முறையில் இந்நூல் அமைந்துள்ளது. முருகு என்னும் சொல்லுக்கு மாறாத மணம், அழியாத அழகு, என்றும் இருக்கும் இளமை, தெய்வத் தன்மை என்னும் நான்கு பொருளை இந்நூல் கூறுகின்றது.

திருப்பரங்குன்றம், திருச்செந்தூர், திரு ஆவினங்குடி, திருவேரகம்(சுவாமி மலை) , குன்றுதொராடல் முதலிய இடங்களில் முருகன் இருப்பதாக இந்நூல் பேசுகிறது இந்நூல் தவிர அகநானுறு, புறநானுறு , நற்றிணை பரிபாடல் முதலிய சங்க இலக்கியங்களிலும் முருகனைப் பற்றிய செய்திகள் உள்ளன.

நினைத்ததை நிறைவேற்றும் ஆற்றல் பெற்றவன் முருகன், வள்ளியை மணமுடித்த முருகன், தெய்வயானையைத் திருமணம் கொண்டவன் என்றும் அவை குறிப்பிடுகின்றன. சூரனை வென்ற செய்தியும் இந்நூல் மூலம் அறிய முடிகிறது. சிலப்பதிகாரத்திலும் முருகனைப் பற்றிய செய்திகள் உள்ளன இடைக்கால இலக்கியங்களான சில திருமுறைகளிலும் முருகனைப்பற்றிய தகவல்கள் உள்ளன. பிற்காலத்தில் அருணகிரிநாதர் முருகனைப்பற்றிப் பல்லாயிரக் கணக்கான பாடல்களைப் பாடி உள்ளார்.

குமரகுருபரர், வள்ளலாராகிய இராமலிங்க அடிகளார், பாரதியார் முதலிய பல பாவலர்கள் முருகனைப்பாடி உள்ளனர். அன்று முதல் இன்று வரை தமிழ்ப்புலவர்கள் பாடும் தலைமைத் தெய்வமாக முருகன் இருக்கின்றான்.

முருகன் வடிவமே தமிழ் மொழி அமைப்புடன் தொடர்புடையது. முருகப்பெருமானுக்குத் தோள்கள் பன்னிரண்டு. தமிழில் உள்ள உயிர் எழுத்துகள் பன்னிரண்டு.முருகப்பெருமான் முகங்கள் ஆறு. தமிழுள்ள மெய் எழுத்துகள் ஆறு, ஆறாகப்பகுக்கப்பட்டுள்ளன.

தமிழிலுள்ள ஆயுத எழுத்து ஒன்று. அதுபோல முருகனின் ஆய்தமும் ஒன்று. அதுதான் அவன் கைவேல். அந்த வேல் அறிவின் அடையாளம் என்று தமிழர்கள் கண்டனர். ஆழம், அகலம், நுட்பம், என்னும் மூன்று பண்புகளும் வேலுக்கு உண்டு அறிவுக்கும் உண்டு.

“முத்தமிழால் வைதாரையும் வாழ வைப்பவன் முருகன்” என்றும் “ செந்தில்வாழ் செந்தமிழ்ப் பெரியோன்” என்றும் “தண்டமிழ் மிகு நேய முருகா” என்றும் அருணகிரிநாதர் முருகனின் தமிழ் வேட்கையைக் கூறி மகிழ்கிறார்.

“குமரகுருபரர் தமது முத்துக் குமாரசுவாமி பிள்ளைத் தமிழில் “சங்கத் தமிழின் தலைமைப் புலவன்” என்று முருகனை அழைக்கிறார். சிவபெருமானும் முருகனும் சங்கம் இருந்து தமிழினை ஆராய்ந்ததாக இறையனார் களவியல் உரை கூறும் . சிவபெருமானுக்கு ஓம் எனும் மந்திரப்பொருளை முருகன் தமிழிலேயே உபதேசித்ததாகக் குமரகுருபரர் கூறுகிறார் .

தமிழ் நூல்களில் முருகனைப் பற்றிய நூல்களே மிகுதி. தமிழிலக்கணம் கூறும் கற்பு நெறி, களவு நெறி என்ற இருவகை நெறிகளைத் தெய்வயானை, வள்ளி ஆகிய இரு பெண்களை மணந்ததன் மூலம் உலகுக்கு முருகன் உணர்த்தினான் என்பர்.

முருகன் என்பது அறிவு -ஞானத்தைக் குறிக்கும் வள்ளி என்பது இச்சை-விருப்பத்தைக் குறிக்கும் , தெய்வானை என்பது கிரியை -செயலைக் குறிக்கும்.ஒரு காரியத்தைச் செய்ய அது பற்றிய விருப்பம் முதலில் வேண்டும். பிறகு அதனைப் பற்றிய அறிவு தேவை. பிறகு செயலில் இறங்கி நிறைவேற்றும் ஆற்றல் வேண்டும்.இதனை விளக்கும் தத்துவமே முருகன் -வள்ளி-தெய்வானை என்பதை அறி;ந்து முருகனை வணங்கி நிற்போம்.

*(சிங்கப்பூர் இந்து 14:1 ஜனவரி மார்ச்சு 2002 பக் 6-7)

# சேக்கிழார் கண்ட செவ்வேள்

சேக்கிழார் பன்னிரண்டாம் திருமுறையாகிய பெரியபுராணத்தைப் பக்திச் சுவை நனிசொட்டச் சொட்டப் பாடிய அருட்கவிஞர் ஆவார். பெரிய புராணம் அறுதபத்து மூன்று தனி அடியார்கள், ஒன்பது தொகை அடியார்களாகிய திருத்தொண்டர்களின் பெருமையைப் பேசுகிறது. எனினும் அடியார்கள் உள்ளக் கமலத்தில் அகலாது வீற்றிருக்கும் ஆண்டவனாகிய சிவவெருமானின் சிறப்பையும் எடுத்துரைக்க அது தவறவில்லை. அடியார் வழிபாட்டையும் ஆண்வன் வழிபாட்டையும் வலியுறுத்தும் பெரியபுராண ஆசிரியராகிய சேக்கிழார் வழிநின்று செவ்வேளாகிய முருகப்பெருமானின் பெருமையைக் காண்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**<u>சுந்தரர் வரலாற்றில்: முருகன்</u>**

பெரிய புராணம் தோன்றுவதற்குக் காரணமாக இருந்த பெருந்தகையார் நம்பியாருராகிய சுந்தரரே ஆவார். அவர் பாடிய திருத்தொண்டத்தொகையே பெரிய புராணத்திற்கு அடிப்படை நூலாகும் . சுந்தரர் அவதார நோக்கமே "தீதிலாத் திருத்தொண்டத்தொகை தருவதுதான்" என்பது சேக்கிழார் கருத்து.

எனவே சுந்தரரையே தம் காவிய நயாகனாக்கிச் சேக்கிழார் பெரிய புராணத்தின் முதலிலும்(தடுத்தாட்கொண்ட புராணம்) இடையிலும் (ஏயர்கோன் கலிக்காம நாயனானர், சேரமான் பெருமாள் நாயனார் புராணம்) இறுதியிலும் (வெள்ளானைச் சருக்கம்) அவர் வரலாற்றை விரித்துரைக்கின்றார். காவியத் தலைவராகிய சுந்தரர் திருவாரூர் ஆலயத்தில் பரவையாரை "நகை பொதிந்து இலங்கும் செவ்வாயும் பிறபுரை நூதலும் வேற்கண்ணும் கொண்ட நங்கையாரை" கண்டு

"கற்பகத்தின் பூங்கொம்போ? காமன் தன் பெருவாழ்வோ?

பொற்புடையபுண்ணியத்தின் புண்ணியமோ?புயல் சுமந்த

விற்குவளை பவளமலர் மதிபூத்த விரைக்கொடியோ

அற்புதமோ? சிவனருளோ? அறியேன்" என்று அதிசயித்தார்(286)

பரவையாரைக் கண்டு காதலுற்ற சுந்தரரின் உள்ளத்தைப் படம் பிடித்த சேக்கிழார், சுந்தரரைக் கண்டு அவர் அழகில் மயங்கி அன்பு நெஞ்சங்கொண்டு நின்ற பரவையாரின் இதயத்தினையும் ஓவியமாகத் தீட்டுகிறார். பரவையார் சுந்தரைப் பார்த்ததும்

"முன்னே வந்து எதிர்தோன்றும் முருகனோ? பெருகொளியால்:

தன் நேரில் மாரனோ? தார்மார்பின் விஞ்சையனோ?

மின் நேர் செஞ்சடை அண்ணல் மெய்யருள் பெற்றுடையவனோ

என்னே? என் மனம் திரித்த இவன் யாரோ? "

என நினைந்தார்.(290)

பரவையாருக்குச் சுந்தரர் "முன்னே வந்து எதிர்தோன்றும் முருகனாக"க் காட்சி அளிக்கின்றார். முருகன் என்னும் சொல்லுக்கே அழியா அழகுடையவன், , மாறாமணம் உடையவன், வாடா இளமை உடையவன், வணங்கத்தக்க இறைமைத் தன்மை கொண்டவன் என்பது பொருளன்றோ? "மணங்கமழ் தெய்வத்து இளநலம் காட்டி" என்று நக்கீரர் திருமுருகாற்றுப்படையில் இதனை விளக்குகிறார். இத்தகைய இயல்புகளைக் கொண்டவராகச் சுந்தரர் இருக்கின்றார். இதற்கு மேலும் சேக்கிழார் ஒரு படி மேலே சென்று சுந்தரர் முருகனாகத் தோன்றுவதற்குரிய காரணம் ஒன்றையும் குறிப்பிடுகிறார். " பெருகொளியால்" என்பதுதான் அந்தக் காரணம். முருகப் பெருமான் வளர்ந்து வரும் ஒளி வெள்ளமாகத் தோன்றுபவன். இதனைத் திருமுருகாற்றுப்படையின் தொடக்க அடிகளே உணர்த்தும் 'உலகம்; உவப்ப வலனேர்பு திரிதரு பலர் புகழ் ஞாயிறு கடற் கண்டாங்கு ஓவற இமைக்கும் சேண் விளங்கு அவிரொளி" என்பது திருமுருகாற்றுப்படையின் தொடக்க அடிகள். உலகத்துயிர்களை உவகையில் ஆழ்த்தும் உதய சூரியனைப்போல-கடலிலிருந்து எழும் ஞாயிறு போல நீல மயில் மீது நிற்கும் முருகப்பெருமான் இடையறாது தொலை தூரத்துக்கும் எட்டுகின்ற பேரொளியாகத் தோன்றுகிறான் என்பது இந்த அடிகளின் பொருள் . இருளைப்போக்கும் ஞாயிறு போல , மருளைப்போக்கும் ஞான ஒளி அல்லவா முருகன்! அவனைப் போலச் சுந்தரரும் பேரொளி வீசும் பெருந்தகையார் என்பதை முதற்பாட்டில் "கண்கொள்ளாக் கவின் பொழிந்த திருமேனி கதிர்விரிப்ப விண் கொள்ளாப் பேரொளியான்" எதிர்நோக்க மெல்லியலுக்கு வேட்கை - விருப்பம் வந்தது என்று சேக்கிழார் கூறுகிறார். பெரியபுராணத்தில் தொடக்கத்திலேயே சுந்தரரின் பேரொளிப்பெருமை பேசப்படுகின்றது. திருக்கைலை மலையில் "அத்தர் தந்த அருட்பாலுண்டு சித்தமர்ந்து தெவிட்டி வளர்ந்தவராகிய" உபமன்னிய முனிவர் பல முனிவர்கள் யோகிகள் சூழ இருக்கும்போது அங்கு ஓர் ஒளி ஆயிரம் சூரியன் சேர்ந்து வந்;த பேரொளி போன்று வீசத் தோன்றிடக் கண்டு எல்லாரும் வியப்பில் ஆழ்ந்திருந்தனர். உபமன்னிய முனிவர் தென்திசை வந்த நாவலர் கோன் வன்தொண்டன்(சுந்தரர்) எந்தையார் அருளால் இங்கு வருகிறார் என்று கூறி "நம்பி ஆருரன் நாம் தொழும் தன்மையான்" என்று சொல்லி வணங்குகிறார். இதனைக் கேட்ட மற்றவர்களும் வணங்கி "வென்ற பேரொளியார் செய்த விழுத்தவம் நன்று கேட்க விரும்பினோம்" என்று கூற உபமன்னிய முனிவர் ஆலால சுந்தரர் அவதார காரணத்தைப் பற்றிப் பேசத் தொடங்குகிறார். எனவே பெரிய புராணம் தொடங்கும் போதேசுந்தரரின் பேரொளி ஆற்றல் பேசப்படுகின்றது. எனவே சேக்கிழார் தம் காப்பிய நாயகனாகிய சுந்தரருக்கு முருகப்பெருமானை உவமையாகக் கூறுவதன் நுட்பம் போற்றுதற்குரியது.

சிலப்பதிகாரம் பாடிய இளங்கோவடிகளும் தம் காப்பிய நாயகனாகிய கோவலனைச் செவ்வேளாகவும் நாயகியாகிய கண்ணகியை வள்ளி போல்வாள் என்றும் கூறும் மரபு

அறிந்து -முதற் காப்பிய மரபு அறிந்து சேக்கிழாரும் தம் காப்பிய நாயகனாகிய சுந்தரரை முருகனாகக் காட்டுகிறார். போலும் . சேக்கிழாரும் பரவையார் மனத்தில் சுந்தரரை முருகனாக நினைத்ததற்கேற்ப, சுந்தரர் மனத்தில் பரவையார் கற்பகத்தின் பூங்கொம்பாகிய தெய்வயானையைப்பொன்று திகழ்ந்தார் என்றும் கூறுவதாகக் கொள்ளலாம். நம்பி யாரூராகிய சுந்தரர்"தம்பிரானைத் தம் உள்ளம் தழீஇயவர்" அதாவது சிவபெருமானாகிய ஆண்டவர்க்கும் தோழர் அடியாராகிய சேரமான் பெருமாள் எனப்படும் கழறிற்று அறிவார்க்கும் நண்பர். சேரமான் பெருமாள் நாயனாருடன் பல நாட்கள் தங்கிப் பலதலவழிபாடு செய்து நட்புறவு கொண்டு திருவாரூருக்குத் திரும்ப நினைக்கிறார் சுந்தரர்;. அவருக்குச் சேரமான் பெருமாள் பொன்னும் மணியும் செல்வமும் கொடுத்து பிரியாவிடைதருகின்றார். ஆரூரர் கொணர்ந்த பொன்னையும் மணியையும் சிவபெருமான் வேடனாக வந்து கவர்கின்றான். பிறகு சுந்தரர் திருமுருகன் பூண்டித் திருக்கோயிலுக்குள் சென்று"கொடுகு வெஞ்சிலை" என்று தொடங்கும் பதிகம் பாடிப்பொருட் குவியலை மீண்டும் பெறுகிறார். இந்தப்பதிகப்பாடல் முழுதும் திருமுருகன் பூண்டியில் " எத்துக்கு இங்கு இருந்தீர் எம்பிரானாரே" என்று முடியும். சுந்தரர் வாழ்வில் இறைவன் இந்தத் திருவிளையாடலை ஏன் செய்தான் என்பதற்குக் காரணம் கூறுகிறார் சேக்கிழார்.

தம்பிரான் தோழராகிய-தம் நண்பராகிய சுந்தரர்க்குத் தம்மைத் தவிர மற்றவர் பொன் கொடுக்க விரும்பாமையே அந்தக்காரணம் ஆகும். இந்த நிகழ்ச்சி நடந்த இடம் திருமுருகன்பூண்டி. இந்நகர்க்கு அடைமொழியாகச் சேக்கிழார் "சீருரும் திருமுருகன் பூண்டி" என்கிறார். சீர்-சிறப்புகள் அனைத்தும் ஊர்ந்து வரும் சிறப்புடைய திருமுருகன் பூண்டி என்னும்போது சிறப்புகள் அனைத்தும் பொருந்தியவன் திருமுருகன் என்றும் முருகனுக்கு அடையாகவும் கொள்ளலாம் அல்லவா?

திருமுருகன் என்பதில் உள்ள திருவும் கண்டாரால் விரும்பப்படும் தெய்வத்தன்மையைக் காட்டுகிறது. முருகன் இறையருளை உணர்த்துகிறது என்று கொள்ளவும் இடம் உண்டு.

"அரும்பெறல் மரபின் பெரும் பெயர் முருகன் " என்று நக்கீரர் முருகன் நாமத்தின் பெருமையைப் பேசுகிறார். அத்தகைய முருகன் பெருமையைச் சேக்கிழார் போற்றும் திறத்தை இங்கே காண்போம்.

**கண்ணப்பர் வரலாற்றில் செவ்வேள்**

அன்பின் திருவுருவமாக விளங்கிய அடியார் கண்ணப்பர். ஞானசம்பந்தர், நாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர், என்ற நால்வர் பெருமக்களாலும் போற்றப் பெற்ற அடியார்கள் கண்ணப்பரும், சண்டேசரும் ஆவர். "கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை" என்று திருவாசகம் கண்ணப்பரின் அன்பின் எல்லையைப் பாராட்டுகின்றது. "நாளாறில் கண் இடந்து அப்ப வல்லேன் அல்லேன்" என்று கண்ணப்பர் பெருமையைப் பட்டினத்தார் போற்றுகின்றார். "கலைமலிந்த சீர் நம்பி"

ஆகிய கண்ணப்பர் இம்மண்ணுலகில் திருஅவதாரம் செய்வதற்குக் காரணமாக இருந்தது முருகப்பெருமான் திருவருள் என்பது சேக்கிழார் கருத்தாகும். கண்ணப்பரின் தந்தையார் வேடர் தலைவன் நாகனுக்கும், தாயார் தத்தை என்பாருக்கும் நெடுநாள் மகப்பேறு வாய்க்கவில்லை. இவர்களுக்குப் புதல்வர்ப்பேறு வாய்ப்பது இனி மிக அரிது என்று எல்லோரும் கூறிவிட்டனர். இந்நிலையில் அவர்கள் வேறு வழி அறியாது வேடர்கள் வாழும் குறிஞ்சி நிலக் கடவுளாகிய முருகப் பெருமானிடம் சென்று அவன் முற்றத்தில் நின்று நாளும் வழிபட்டுப் பராய்க்கடன் நெறியில் (வேண்டுதல் செய்து) நின்றனர். இதனைச் சேக்கிழார்,

முருகுஅமர் அலங்கல் செவ்வேள் முருகவேள் முன்றில் சென்று பரவுதல்

செய்து நாளும் பராய்க்கடன் நெறியில் நிற்பார் (659)

என்று கூறுகிறார். மணம் பொருந்திய மாலை சூடிய செவ்வேள், முருகவேள் என்று முருகன் குறிக்கப்படுகிறான். வேள் என்பது விருப்பம் என்று பொருள் உடைய வேட்கை என்பதன் அடிச்சொல் ஆகும். விரும்புதற்குரியவன் வேள். வேள் என்பது தலைவனையும் குறிக்கும். விரும்புதற்குரிய தலைவன் முருகப் பெருமான். வேள் என்பது இலக்கியங்களில் தலைவன்எனக் குறித்து கருவேள்- கரிய வேள் என்பது மன்மதனையும் செவ்விய சிவந்தவேள் என்பது முருகனையும் குறிக்கும் தொடர்களாக அமைந்துள்ளன. செவ்வேள் என்பதில் உள்ள அடைமொழி நிறச் செம்மையை மட்டுமா முருகனுக்கு உணர்த்துகிறது. பண்புச் செம்மையையும் நேர்மைத் தன்மையையும் சுட்டி நிற்கிறது. முருகப் பெருமான் செவ்வியன் என்பதை " தாமரை புரையும் காமர் சேவடி பவழத்தன்ன மேனி" எனவரும் குறுந்தொகைக் கடவுள் வாழ்த்து உணர்த்தி நிற்கிறது. சங்க இலக்கியங்களில் முருகப் பெருமானைச் செவ்வேள் என்று அழைக்கின்ற மரபு மிகுதியாக உண்டு. பரிபாடல் பாடல் பகுப்பைக் கூறும் பழைய பாடல் ஒன்று " செவ்வேட்கு முப்பத்தொருபாட்டு" என்று செப்புகிறது. சிலப்பதிகாரம் "கண்டேத்தும் செவ்வேள்" என்றும், "அறுமுகச் செவ்வேள் அணிதிகழ் கோயிலும்" என்றும், "வென்றிச் செவ்வேள் வெலன் பாணியும்" என்றும் கூறுகிறது "செவ்வேள் ஏறிய மஞ்ஞை வாழ்க" என்று வாழ்த்துப்பாடலும் உண்டல்லவா?

செவ்வேள், முருகவேள் என்று மட்டும் கூறாது இன்டினாரு பாடலில் (677) வென்றி வேள் என்றும் சேக்கிழார் இதே புராணத்தில் குறிப்பிடக் காணலாம். இம்மூன்று அடையும் செவ்-முருக-வென்றி (வெற்றி)- மன்மதனாகிய கருவேளிலிருந்து முருகனைப் பிரித்துக் காட்டும் மாண்பின எனலாம்.

நாகனும் தத்தையும் முருகப் பெருமானுக்கு. சேவல்கள், மயில்கள் முதலியனவற்றை அவன் கோயிலில் விட்டுக் குன்றக் குரவை ஆடல் செய்து பெருவிழா எடுக்கின்றனர்.

“வாரணச் சேவலொடும் வரிமயிற் குலங்கள் விட்டுத்

தோரண மணிகள் தூக்கிச் சுரும்பணி கதம்பம் நாற்றிப்

போரணி நெடுவேலோற்குப் புகழ்புரி குரவை தூங்கப்

பேரணங்கு ஆடல் செய்து பெருவிழா எடுத்த பின்னை”(660)

என்று இதனைச் சேக்கிழார் குறிப்பிடுகிறார். “போரணி நெடுவேலோன்” என்று முருகப்பெருமான் புகழப்படுகிறான். போருக்கு அணி செய்கின்றது அவன் நீண்ட வேல் என்றும், அது பிணி செய்யாது என்றும் சேக்கிழார் வற்புறுத்த விழைகிறார். குன்றக் குரவையாடல் முருகப்பெருமானுக்கு வேடர்கள் எடுக்கும் ஆடல் என்பதைச் சிலப்பதிகாரம் செப்புகிறது.

பெருவிழா எடுத்த பின்னர் தத்தை கருவுற்றாள் . கண்ணப்பர் பிறந்தார். இதனைச் சேக்கிழார்.

“எயிலுடைப் புரங்கள் செற்ற எந்தையார் மைந்தரான

மயிலுடைக் கொற்ற ஊர்தி, வரையுரம் கிழித்த திண்மை,

அயிலுடைத் தடக்கை, வெற்றி அண்ணலார் அருளினாலே” (661)

தத்தைபால் கருப்பம் நீடியது என்கிறார் இங்கே சேக்கிழார், முருகன் திரிபுரம் எரித்த சிவனார் மைந்தர் என்றும், மயிலை-வெற்றி பொருந்திய வாகனமாகக் கொண்டவர் என்றும், கிரவுஞ்ச மலையைப்பிளந்த உரம் கொண்டவர் என்றும், அயிலாகிய வேலை உடைய கையர் என்றம், வெற்றிமிக்க தலைவர் என்;றும் முருகப்பெருமான் பெருமைகள் பலவற்றை ஒரு சேரப்பாடிப் போற்றுகிறார். இங்கே முருகன் பிள்ளை வரம் தரும் பெருவள்ளலாக இருக்கும் இயல்பினைப் பார்க்கிறோம். “கருவயிறு உறுகெனக்கடம்படுவோரும்” திருப்பரங்குன்றத்து முருகனை வழிபடும் பலரில் ஒருவராகக் குறிப்பிடுகிறது பரிபாடல் என்பதையும் ஈண்டு நினைக்க வேண்டும் சட்டியில் (கந்த சஷ்டியில்; விரதம்) இருந்தால் தானே அகப்பையில் (கருப்பையில்) வரும் என்னும் பழமொழிக்கு ஞானியார் சுவாமிகள் தரும் விளக்கம் இப்போது புரிகிறது அல்லவா?

தத்தை கருவுற்றபின் வெறியாட்டு நடக்கிறது.வேலனுக்கு வெறியாடல் நடத்துவதும் சங்க கால மரபு ஆகும். பின்பு கண்ணப்பர் தோன்றுகிறார். குழந்தை பிறந்ததும் “வரையுறை கடவுள் காப்பு’செய்ததாகச் சேக்கிழார் சொல்கிறார். மலையுறை தெய்வம் முருகன் அல்லவா?

கண்ணப்பர் வளர்ந்து வில் தொழில் பயிலத் தொடங்குகிறார். நல்ல நாள் குறித்து விழா எடுத்து விற்கலை பயிலத் தொடங்குவது வேடர் பழக்கம். அந்த இடத்திலும் சேக்கிழார்

“ வேடர் தம் கோமான் நாகன்

வென்றிவேள் அருளால் பெற்ற

சேடரின் மிக்க செய்கைத்

திண்ணன் வில் பிடிக்கிறான்“

என்று கூறிக் கண்ணப்பர் தோற்றத்திற்கு முருகப்பெருமானே காரணம் என்பதை மீண்டும் வலியுறுத்துகிறார்.

**<u>சிறுத்தொண்டர் வரலாற்றில் சரவணத் தனயர்</u>**

அறுபத்து மூன்று நாயன்மார்களில் சிறுத்தொண்டர் சிவபெருமானுக்குத் தம் ஊறிலாத தனிப்புதல்வன் தன்னை அரிந்து அங்கு அமுதாக ஊட்டியவர். திருச்செங்காட்டங்குடியில் ஞானசம்பந்தர் காலத்து வாழ்ந்;த பெருமகனார். பல்லவ மன்னர்க்குத் தண்டு போய் வடபுலத்து வாதாபியை வென்ற படைத்தலைவர் அடியார்களை வழிபடும் மிகச் சிறியராய் நின்ற பணிவால் சிறுத்தொண்டர் என அழைக்கப்பட்டார். “ஒரு குடிக்கு நல்ல சிறுவன் ஒரு மகனைத் தாதை அரியத் தாய் பிடிக்கும் பொழுதில் தம்மில் மனம் உவந்தே ஏதுமின்றி அமைத்த கறி” அமுது ஆக்கி இறைவனுக்குப் படைத்த சிறுத்தொண்டர் பெருமையை “வாளால் மகவு அரிந்து ஊட்ட வல்லேன் அல்லேன்” என்று பட்டினத்தார் பாராட்டுகிறார். இவர் தொண்டின் திறங்கண்ட சிவபெருமான் உமை அம்மையாரோடும் சரவணத்துத் தனயராகிய முருகப் பெருமானோடும் காட்சி கொடுத்ததாகக் காரணம் என்ன? சிறுத் தொண்டரின் தொண்டு-பிள்ளைக்கறி சமைத்த பெருஞ்செயல்-அவர் ஒருவரால் மட்டும் நிறைவேறியதன்று. அவர், அவர் மனைவி, சீராளனாகிய அவர் மகன் ஆகிய மூவரும் கூடி நின்று ஒருங்கே நிறைவேற்றிய பெரும்பணி ஆகும். எனவே மூவர்க்கும் காட்சி கொடுக்கும் முகத்தான் மூவரும் கூடிய ஒருவராக அம்மையுடனும் முருகப் பெருமானுடனும் கூடிய நிலையில் சிவனார் காட்சி கொடுத்தருளினார்.

சோமாஸ்கந்த மூர்த்தம் சத், சித்து, ஆனந்தம் ஆகிய மூன்றையும் காட்ட வல்லது. சத் என்பது இறைவன்: சித் என்பது சத்தி, உமை: ஆனந்தம் என்பது முருகன். எனவே பேரின்ப வாழ்வாக முருகப் பெருமான் இருக்கும் பெற்றியை இது எடுத்து இயம்புகிறது.

முருகப்பெருமானைச் சேக்கிழார் இங்கு”சரவணத்துத் தனயர்” என்று குறிப்பிடுகிறார். நாணல்புல் செறிந்து சூழ்ந்த பொய்கையில் தோன்றிய காரணம் பற்றிச் சரவணபவன் என்னும் பெயர் முருகனுக்கு உண்டாயிற்று. “சரவணத்தின் வெறிகமழ் , கமலப் போதில் வீற்றிருந்தருளினானோ” என்பது கந்தபுராணம் . மேலும் சரவணபவ என்பது முருகப் பெருமானுக்குரிய ஆறெழுத்து மந்திரம் ஆகும். இங்கு ச-மங்களம், ர-ஒளி, கொடை, வ-சாத்வீகம், ந-போர், பவன்-தோன்றியவன். மங்களம், ஒளி, சாத்வீகம் ,

வீரம் முதலிய உயர்த்த பண்புகளுடன் தோன்றியவன் முருகன் என இத்தொடர்க்குப் பொருள் உரைப்பர்.

சரவணன் என்பது சிவபெருமானையும் திருமாலையும் குறிக்கும் பெயர் என்றும், முருகன் அவ்விருவர் இயல்யையும் கொண்டவன் என்றம் திருச்செந்தூர்ப் புராணம் கூறுகிறது. (ந. ரா. முருகவேள்)

''வென்றி நெடுவேல் மைந்தர்''(3746) என்றும் சேக்கிழார் முருகப்பெருமானை இப்புராணத்தில் அழைக்கின்றார்.

**<u>முருக நாயனார் வரலாற்றில் அன்பன்</u>**

அறுபத்து மூன்று நாயன்மார்களில் முருக நாயனார் முருகனின் திருப்பெயரைத் தாங்கியவர். திருப்புகலூரில் ஞானசம்பந்தர் காலத்தில் வாழ்ந்தவர். பெரும் புலர் காலை மூழ்கிப் பித்தர்க்குப் பத்தராகி, நந்தவனம் அமைத்து மலர்கள் எடுத்துப் பலவகை மாலை கட்டிக்கொடுத்துச் சிவபெருமானுக்குச் சாத்தி வழிபாடு செய்யும் தொண்டு நெறியினர். அவரை அறிமுகப்படுத்தும்போது செக்கிழார்

''ஞான வரம்பின் தலை நின்றார் நாகம் புனைவார் சேவடிக்கீழ்

ஊனமின்றி நிறைஅன்பால் உருகும் மனத்தார் முருகனார்'' (1026)

என்று அறிமுகப்படுத்துகிறார் . நிறை அன்பால உருகும் மனம் உடையவர் முருகனார். முருகு என்ற சொல்லிலேயே உருகு என்ற ஒலிநயத்தை நாம் உணர்கிறோம்.

குமரகுருபரதாச சுவாமிகள்(பாம்பன் சுவாமிகள்)

''முருகு லாம் நறிய முருகு

முருகு கொடி என முருகு

முருகு முசுலக முருகு

முருகு றாதுமன முருகு''

என்னும் பாடலில் முருகுக்குரிய பலபொருள்களைக் கூறுகிறார். திருவிழாவில் உலாவும் நல்ல, இளமைப் பருவம் உடைய முருகு என்னும் திருப்பெயர் உடையாய், (என்னைக்) கொள்வாயக! என்று மலர்களின் மணமும் அழகும் மொய்க்கின்ற உலகத்தில் துன்பத்தின் உருகுகின்ற பிறப்பானது இனியும் பொருந்தாமல் மனமே! உருகுவாயாக ! என்பது இந்தச் செய்யுளின் பொருள். (ந.ரா. முருகவேள்)

மொழிக்குத் துணை முருகா எனும் நாமங்கள் அல்லவா? முருகு என்று உருகும் மனந்தான் நம்மை உய்விக்கும் என்பதைச் சேக்கிழார் அன்பால் உருகும் மனத்தார்

முருகனார் என இங்கு விளக்குகிறார். முருகனார் ஆண்டவன் பெயராக மட்டுமன்றி அடியார் பெயராகவும் இருக்கும் இயல்பையும் காண்கிறோம்.

**<u>சண்டேசர் வரலாற்றில்: சேந்தன்</u>**

"மெய்ம்மையே திருமேனி வழிபடா நிற்க, வெகுண்டெழுந்த தாதைதாள் மழுவினால் எறிந்த அம்மையான் அடிச்சண்டப் பெருமானுக்கு அடியேன் " என்று சுந்தரரின் திருத்தொண்டத் தொகை சண்டேசரின் சரிதத்தைப் பேசுகிறது. சண்டேசர் சோழ நாட்டில் திருச்சேய்ஞலூர் என்னும் ஊரில் தோன்றிய அந்தணச் சிறுவர் . இவர் இயற்பெயர் விசாரசருமர். இவர் இளமைப்பருவத்தே மணலால் சிவலிங்கம் அமைத்துப் பசுவின் பாலால் திருமஞ்சனம் ஆட்டி வழிபாடு செய்து வந்ததைப் பலநாளும் அறிந்த இவர் தந்தையார் ஒரு நாள் நேரில் கண்டு அவரை அடித்துத் திருமஞ்சனத்துக்குரிய பாலையும் இடறிவிட்டதால் தந்தை என்றும் பாராமல் அவர் காலை வெட்டி வீழ்த்தினார். இறைவன் உடன் தோன்றி "நம் பொருட்டால் ஈன்ற தாதை விழ எறிந்தாய் அடுத்ததாதை இனி உனக்கு நாம்" என்று பணித்தருளினான். பிறகு அவருக்குக் கொன்றை மாலையைச் சூட்டித் தொண்டர்க்குத் தலைவனாக்கித் 'தான் உண்ட கலமும் உடுப்பனவும் சூடுவனவும் உனக்காக' என்று கூறிச் சண்டீசப்பதம் கொடுத்தருளினான். அது முதல் அவர் சண்டீசர் ஆனார். இவர் வரலாற்றை ஞானசம்பந்தர் முதலான நால்வர் பெருமக்களும் கூறியுள்ளனர். தோத்திரம் மட்டுமா?

"அரசனடிக்கு அன்பர் செய்யும் பாவமும் அறமதாகும்

பரனடிக்கு அன்பிலாதார் புண்ணியம் பாவமாகும்

வரமுடைத் தக்கண் செய்த மாவேள்வி தீமையாகி

நரகினிற் பாலன் செய்த பாதகம் நன்மையாய்த்தே"

என்று சிவஞான சித்தியார் என்னும் சாத்திரநூலும் சண்டேசர் புகழைப் பேசுகிறது.

இத்தகைய புகழ்மிக்க அடியாராகிய சண்டேசர் தோன்றிய ஊரான செய்ஞலூர் பற்றியறிமுகம் செய்யும் சேக்கிழார்.

"பூந்தண் பொன்னி எந்நாளும் பொய்யாது அளிக்கும் புனல் நாட்டு

வாய்ந்த மண்ணித் தென்கரையில் மன்ன முன்னாள் வரை கிழிய

ஏந்தும் அயில்வேல் நிலைகாட்டி, இமையோர் இகல்வெம்பகை சேந்தன் அளித்த திருமுறையோர் மூதூர் செல்வச் சேய்ஞலூர் கடக்கும்" (1211)

என்று பாடுகிறார். சேய் என்பது முருகப் பெருமானைக் குறிக்கும். "சேயோன் மேய மைவரை உலகம்" என்பது தொல்காப்பியம். முருகப் பெருமானாகிய சேய்-

சேந்தன் அளித்த மூதூர் சேய்ஞலூர்"சேந்தனைக் கந்தனைச் செங்கோட்டு வெற்பனை" என்று கந்தரலங்காரம் முருகப் பெருமானைச் சேந்தன் என அழைக்கிறது. இங்குச் சேக்கிழார் சேந்தன் என முருகப் பெருமானை அழைக்கிறார். முருகப் பெருமான் கிரவுஞ்ச மலையாக நின்ற அசுரனை அழித்துக் கூரிய வேலின் சிறப்பினைக் காட்டி தேவர்கள் துயரைப் போக்கியவன் என்பதைச் சேக்கிழார் இங்கு விளக்குகிறார். தாருகனை அழித்துச் சூரனை வதைக்கும் முன்னர்ச் சேய்ஞலூரை உளதாக்கிச் சிவனை முருகன், வழிபட்டதாகக் கந்தபுராணம் குமாரபுரிப்படலம் கூறுவதையும் காணலாம். இமையோரின்-தேவர்களின் துயரையே போக்கிய முருகப்பெருமான் இம்மையில் இருக்கும் நம் துயரைப் போக்காமலா இருப்பான்?

முருகப் பெருமான் சிவனாரின் சேய்- மைந்தன். அவன் அளித்த ஊர் சேய்ஞலூர். இந்த ஊரில் சிவபக்தியால் சிவனாரால் மைந்தனாக ஏற்றுக் கொள்ளப்பட்ட சண்டேசர் தோன்றினார் என்பதையும் சேக்கிழார் இங்குச் சொல்லாமல் சொல்கிறார் அல்லவா?

Thinnappan, SP. Cekkilar kanda Sevvel (Murugan in Sekkilar's Periyapuranam) In: Consegration Souvenir Magazine, Sri Thandayuthapani Temple, Kulalumpur, (Malaysia) (1998) pp 54-58 (Tamil)

# சிலம்பும் செவ்வேளும்

நகரத்தார் மரபினாராகக் கருதப்படும் கோவலன் கண்ணகி ஆகிய இருவரையும் தலைவன் தலைவியராகக் கொண்டு அவர்களின் வாழ்க்கையை விளக்கும் காப்பியம் சிலப்பதிகாரம் "நெஞ்சை துள்ளும் சிலப்பதிகாரம் என்ற ஓர் மணியாரம் படைத்த தமிழ்நாடு" என்று பாரதியாரால் பாராட்டப்படும் இக்காப்பியம் சேரமன்னர் இளங்கோ அடிகளால் கி. பி. இரண்டாம் நூற்றாண்டில் இயற்றப்பட்டதாகும். இக்காப்பியமே தமிழில் தோன்;றிய முதற்காப்பியம் என்றும், வரலாற்றுக்காப்பியம் என்றும், குடிமக்கள் காப்பியம் என்றும், இயல், இசை , நாடகம் மூன்றையும் பேசும் முத்தமிழ்க் காப்பியம் என்றும், பெண்ணின் பெருமை பேசும் காப்பியம் என்றும் , உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள் கொண்ட காப்பியம் என்றும், சமயப்பொறையுடைய காப்பியம் என்றும் அறிஞர்கள் பாராட்டுவார்கள். இக்காப்பியம் சோழநாட்டின் தலைநகரமாகிய பூம்புகாரில் தொடங்கி, பாண்டிய நாட்டுத் தலைநகரமாகிய மதுரையில் முக்கிய நிகழ்ச்சிகளைப் பெற்ற, சேரநாட்டின் தலைநகரமாகிய வஞ்சி நகரில் நிறைவேறுகின்றது. இத்தகைய காப்பியத்தில் நகரத்தார்களின் குலதெய்வமாக விளங்கும் முருகப்பெருமான் இடம்பெறும் இயல்பை விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

சிலப்பதிகாரத்தின் முதல் காதையாகிய மங்கல வாழ்த்துப்பாடலில் காப்பியத் தலைவனாகிய கோவலனை இளங்கோ அடிகள் அறிமுகம் செய்கின்ற போது பூம்புகார் நகரத்துப் பெரும் செல்வ வணிகராகிய மாசத்துவான் என்பவரின் மகன் என்றும், பதினாறு ஆண்டு வயதுடையவன் என்றும் கூறிய பின்னர் அவன் முருகப்பெருமான் போன்று அழகுடையவன் என்ற புகார் நகரத்துப் பெண்களெல்லாம் பாராட்டிப் பேசுவதாகக் கூறியுள்ளார். அவ்வரிகள் வருமாறு:

"மண் தேய்த்த புகழினான் மதிமுக மடவார் தம்

பண் தேய்த்த மொழியினர் ஆயத்துப் பாராட்டிக்

கண்டு ஏத்தும் செவ்வேள் என்று இசை போக்கிக் காதலால்

கொண்டு ஏத்தும் கிழமையான்: கோவலன் என்பான் மன்னோ

இவ்வரிகளில் இளங்கோஅடிகள் பூம்புகார் நகரத்து இளம் பெண்கள் தங்கள் குழுவில் கோவலனைக் கண்ணாரக் கண்டு (கண்டேத்தும்) செவ்வேள் என்று பாராட்டிக் காதலால் தம் மனத்துள் கொண்டு போற்றுகிறார்கள் என்று கூறுகிறார். இங்கு முருகப்பெருமானை ஆசிரியர் செவ்வேள் என்று குறிப்பிடுகிறார். வேள் என்றால் தலைவன் என்று பொருள் . பழங்காலத்தில் வேள் என்பது அழகுத் தெய்வமாக விளங்கும் மன்மதனையும், ஆற்றல் மிக்க முருகனையும் குறிக்கும். இவர்களை வேறுபடுத்த கரு என்ற அடைமொழியைச் சேர்த்தக் கருவேள்(அதாவது கருப்பு நிறம் உடைய) மன்மதனைக் குறித்தனர். சிவப்பு நிறம் மிக்க முருகனைக் குறிக்க

செம்மென்ற அடைமொழியைச் சேர்த்து செவ்வேள் என்று அழைத்தனர். செவ்வேள் என்ற தொடர் முருகப் பெருமானின் சிவப்பு நிறத்தையும், செம்மை ஆகிய தலைமைச் சிறப்பையும் உணர்த்தும் வகையால் கோவலனுக்கு உவமையாக வந்துள்ளது. "தாமரை புரையும் காமர் சேவடி" என்று வரும் குறுந்தொகைக் கடவுள் வாழ்த்துப் பாடல் முருகப் பெருமான் செந்நிறம் உடையவன் என்பதை உணர்த்தும். "மணங்கமிழ் தெய்வத்து இளநலம் காட்டி"என்னும் நக்கீரரின் திருமுருகாற்றுப்படைத் தொடர் வாயிலாக அழியா அழகும், மாறா இளமையும் , இறைமைத் தன்மையும் உடையவன் முருகப்பெருமான் என்பதை நாம் அறிகிறோம். இத்தகைய இயல்புகளையெல்லாம் எண்ணித்தான் காப்பியத் தலைவனாகிய கோவலனைச் செவ்வேளோடு இளங்கோ அடிகள் உவமைகாட்டிப் பேசுகிறார்.

**வள்ளி**

திருமனத்தின்போது கோவலனைச் செவ்வேள் என்று கூறியதற்கேற்பக் காப்பியத் தலைவியாகிய கண்ணகியை அவள் தன் கற்பின் ஆற்றலை மதுரையில் வெளிப்படுத்திவிட்டுச் சேரநாட்டுக்கு வரும் நுழைவாயிலில் உள்ள மலைப்பகுதியில் உள்ள குன்றக் குறவர்கள் பார்க்கும் போது வள்ளி போலக் காட்சியளிப்பதாக இளங்கோ அடிகள் குறிப்பிடுகிறார் வரிகள் பின்வருமாறு.

"குருவி ஓப்பியும் கிளி கடிந்தும்

குன்றத்துச் சென்று வைகி

அருவி ஆடியும் சுனை குடைந்தும்

அலவற்று வருவேம் முன்

மலை வேங்கை நறு நிழலின்

வள்ளி போலவீர்! மனம் நடுங்க,

முலை இழந்து வந்து நின்றீர்:

யாவீரோ "என

குன்றக் குறவர்கள் கண்ணகியைப்பார்த்துக் கேட்கின்றனர். அதற்கு வேங்கை மரத்து அடியில் நின்ற கண்ணகி அவர்மீது சினம் கொள்ளாமல் தன் வரலாற்றைச் சுருக்கமாகக் கூறுகிறாள். "மதுரை நகரும் பாண்டியனும் அழியுமாறு வலிய தீவினை வந்து என் வாழ்வில் குறுக்கிட்டது. அங்கே என் கணவனைப் பறிகொடுத்து இங்கே வந்து இப்படி நிற்கின்றேன்" என்று சுருக்கமாகக் கண்ணகி அவர்களிடம் சொல்கிறாள். இதனைக் கேட்ட குறவர்கள் "இவள் போன்று ஒரு தெய்வம் இதுவரை நம் குலத்துக்குக் கிடையாது " என்று கூறிக் கண்ணகியைத் தெய்வமாகக் கருதி

வழிபாடு செய்கின்றனர். இங்கே வள்ளி “ குறவரின் குலமகள்” என்பது குறிப்பிடத்தக்கது.

**வேலின் வெற்றி**

பிறகு குறவர்களெல்லாம் கூடி அவர்களுக்குரிய குறிஞ்சித் தெய்வமாகிய முருகப்பெருமானின் வேலினைத் துதிக்கும் குரவைப்பாட்டு பாடுகின்றார்கள். இவர்கள் பாடும் பாடல்களில் முருகப்பெருமானைப் பற்றிய பல செய்திகள் இடம் பெறுகின்றன. முதலில் கடலின் நடுவே மாமரமாகி நின்ற அசுரனைக் கொன்ற முருகப் பெருப்பெருமானின் வேலினைப்பாராட்டும் வகையில் மூன்று பாடல்கள் உள்ளன.

அவற்றுள் முதலாவது பாடல் வருமாறு:

“சீர் கெழு செந்திலும், செங்கோடும், வெண்குன்றும்,

ஏரகமும் நீங்கா இறைவன் கை வேலன்றே

பாரிரும் பௌவத்தின் உள்புக்குப் கண்டொருநாள்:

சூர்மா தடித்த சுடரிலைய வெள்வேலே!”

இப்பாடலின் கருத்து வருமாறு

சீர்கெழுமிய திருச்செந்தூர், திருச்செங்கோடு, திருவெண்குன்றம், திருவேரகம் ஆகிய தலங்களை விட்டு எந்நாளும் பிரியாதவன் முருகப்பெருமான் , பண்டொரு நாள் இப்பூமியைச் சூழ்ந்திருக்கும் கடலின் நடுவிடத்தே. புகுந்த சூரனாகிய மாமரத்தைப் பிளந்து வீழ்த்திய ஒளியுடைய இலையுடன் விளங்கும் வெற்றிவேல். அவன் கையிலிருக்கின்ற இவ்வேல் தானேயன்றோ! (இங்கே நான்கு முருகத்தலங்கள் சொல்லப்படுவதை நினைவிலிறுத்துக)

இரண்டாவது பாடல்

“அணி முகங்கள் ஓர் ஆறும், ஈராறு கையும்

இணையின்றித் தானுடையான் ஏந்திய வேலன்றே

பிணிமுக மேற்கொண்டு அவுணர் பீடழியும் வண்ணம்

மணி விசும்பிற் கோனேத்த மாறட்ட வெள்வேலே:

இப்பாடலின் கருத்து வருமாறு

அழகிய திருமுகங்கள் ஓர் ஆறும், கைகள் ஈர் ஆறும், உடையவன் அவன், தனக்கு வேறு ஒப்பின்றி , விளங்கும் அவற்றைத் தான் ஒருவனாகவே பெற்றவன் அவன்

மயிலாகிய ஊர்தியிலே சென்று , அவுணரின் ஆற்றல்கள் அழியுமாறும் அழகிய வானகத்தின கோமான் போற்றுமாறும், பகைவர்களை அழித்த வெற்றிவேல், அவன் கைவேல் தானேயன்றோ!

மூன்றாவது பாடல்

"சரவணப்பூம் பள்ளியறைத் தாய்மார் அறுவர்

திருமுலைப்பால் உண்டான் திருக்கை வேலன்றே

குருகு பெயர்க் குன்றம் கொன்ற நெடுவேலே!

இப்பாடல் கருத்து வருமாறு:-

சரவணப் பொய்கையிலே, தாமரை மலராகிய பள்ளியறைக்கண் , தாய்மாராகிய கார்த்திகைப் பெண்டிர் அறுவரின் திருமுலைப்பாலினை உண்டு வளர்ந்தவன் அவன் , வளரும் மலையினைச் கூடிவரும் அவுணனின் மார்பினைப் பிளந்து கிரவுஞ்சத்தை அழித்த நெடுவேல், அவன் கைவேல் தானே யன்றோ!

மேற்கொண்ட மூன்று பாடல்களும் முருகப் பெருமானின் வேலின் வெற்றியைப் போற்றுபவை வேல் என்பது தீமையை வென்று நன்மையை நிலை நாட்டும் ஞானத்தின் அடையாளமாகும் ஞானம் என்னும் அறிவு ஆழம் , அகலம், கூர்மை ஆகிய முப்பெரும் பண்புகளைக் கொண்டது. திருவாசகம் சிவபுராணத்தில் உள்ள "ஆழ்ந்தகன்ற நுண்ணியனே" என்றும் தொடருக்கு ஏற்ப வேலும் ஆழம், அகலம் கூர்மை ஆகியவற்றைக் கொண்டது. இத்தகைய வேலைக் கொண்ட முருகப் பெருமான் சரவணப்பொய்கையில் கார்த்திகைப் பெண்டிர் அறுவர் பாலூட்ட வளரந்தவன். ஆறுமுகமும், பன்னிரண்டு கையும் கொண்டவன். திருச்செந்தூர், திருச்செங்கோடு, திருவெண்குன்றம், திருவேரகம் ஆகிய நான்கு தலங்களிலும் நீங்காதிருப்பவன் கடலில் ஒளிந்து கொண்டு நின்ற சூரனை வென்ற வெல் அவனுடைய கைவேல். மலையாக நின்ற அசுரன் மார்பினைப் பிளந்ததும் அந்த வேல் இந்திரனும் போற்ற மயிலேறி அசுரரை வீழ்த்திய வேல் என்று வேலின் வெற்றியை இளங்கோ அடிகள் குன்றக் குறவர் வாயிலாகப் போற்றுகிறார்.

குன்றக் குரவையில் வரும் ஏனைய பாடல்களின் வழியாக முருகப்பெருமான் ஆலமர் செல்வனும், கைலை மலைத் தலைவனுமாகிய சிவபெருமானுக்கும், மலைமகளாகிய பார்வதிக்கும் மகனாகவும், குறவர்தம் குலமாகளாகிய வள்ளியம்மைக்குக் கணவனாகவும் விளங்கியவன் என்ற செய்தியும் தெரிய வருகின்றது. முருகப் பெருமானுக்குரிய மாலை கடப்பம்பூ மாலை என்பதையும் இளங்கோ அடிகள் குறிப்பிடுகின்றார்.

**முடிவுரை**

இவ்வாறு சிலப்பதிகாரத்தில் கோவலனை அறிமுகப்படுத்தும் இடத்தில் செவ்வேள் என்ற குறிப்பும், குன்றத்தில் குறவர்காணும் தெய்வக் கண்ணகியை வள்ளியாகக் காணும் காட்சியும், குறவர் வழிபாட்டில் முருகப் பெருமானின் வேலின் வெற்றியும் அவன் உறவு நிலையும், ஊர்தியும் , ஆற்றலும் பேசப்பட்டுள்ளன. " சிலம்பு கண்ட செவ்வேள்" பற்றிய செய்திகளைப் படித்து அவன் சேவடிகளை வணங்கி அருளும், பொருளும் பெற்று வாழ்வோமாக!

74 Thinnappan, SP , Cilappthikaarattil cevveeL in **Thannnirmalai Thandayuthapani Temple Mahakumbabishekam Souvenir** , , November 2011

# திருநாவுக்கரசர் தேவாரம் தயாமூல தன்மம்

திருநின்ற செம்மையே செம்மையாகக் கொண்ட

திருநாவுக்கரையன்றன் அடியார்க்கும் அடியேன்- சுந்தரர்

திருநாவுக்கரசு வளர்திருத் தொண்டின் நெறி வாழ

வருஞானத் தவ முனிவர் வாகீசர் வாய்மைதிகழ்

பெருநாமச் சீர் பரவலுறுகின்றேன் பேருலகில்

ஒருநாவுக்கு உரை செய்ய ஒண்ணாமை உணராதேன்

திருத்தொண்டின் நெறி வாழ வந்த திருநாவுக்கரசர் கி.பி. ஏழுhம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். அவர் பாடிய பாடல்களுக்கே தேவராம் என்று பெயர். திருஞானசம்பந்தர் பாடிய பாடல்கள் திருக்கடைக்காப்பு எனவும், சுந்தரர் பாடிய பாடல்கள் திருப்பாட்டு எனவும் அழைக்கப் பெற்றன. கூற்றாயினவாறு விலக்ககலீர் என்ற பதிகம் பாடியவுடன் சிவபெருமான் திருநாவுக்கரசு எனப்பெயர் கொடுத்து அழைத்தான் . திருஞான சம்பந்தப்பெருமான் அப்பரே என்று அழைத்தார். எனவே ஆண்டவனாலும் அடியவராலும் பெயர்சூட்டப் பெற்ற பெருமையுடையவர் திருநாவுக்கரசர். திலகவதியார் தம்பியார் உளராக வேண்டும் என வைத்த தயாவினால் சைவத்திற்கு மீட்டெடுக்கப்பட்டவர்.

திருநாவுக்கரசர் பாடிய பதிகங்கள் 312, பாடல்கள் 3066. அவற்றுள் பண்ணமைந்த பாடல்கள் நான்காம் திருமுறையாகவும், திருக்குறுந்தொகைப் பாடல்கள் ஐந்தாம் திருமுறையாகவும், திருத்தாண்டகப் பாடல்கள் ஆறாம் திருமுறையாகவும் உள்ளன. திருமுறை என்னும் சொல்லுக்குத் திருநாவுக்கரசர் தேவாரம் வழிப்பொருள் காண்போம். ‘திருவே என் செல்வமே’ என்று சிவபெருமானை அழைக்கிறார் நாவுக்கரசர். ‘முறை முறை நெறிகள் வைத்தார்’ என்றும் அவர் கூறுகிறார் . எனவே சிவபெருமான் நம் வாழ்வியலுக்குப் பயன்படும் வகையில் அருளாளர்கள் வாயிலாக வகுத்த நெறிமுறைகளே திருமுறைகளாகும். திருமுறையே வாழ்க்கையின் நெறிமுறை என்பது தானே நம்ஆய்வரங்கின் கருப்பொருள்.

திருஞானசம்பந்தர் தாம் பாடிய பாடல்களைத் ‘திருநெறிய தமிழ்’ என அழைக்கிறார். திருநாவுக்கரசரோ ‘தமிழோடிசை பாடல்’ எனத் தாம் பாடிய பாடல்களைக் குறிப்பிடுகிறார். சுந்தரரோ ‘நல்விசை ஞானசம்பந்தன் நாவினுக்கரையன் பாடிய நற்றமிழ் மாலை’ எனக் கூறுகிறார். நற்றமிழ் மாலையே நம் தேவாரம்

திருத்தாண்டகம் திருநாவுக்கரசர் தமிழுக்களித்த நன்கொடை . எனவேதான் திருநாவுக்கரசர் தாண்டகவேந்தர், தாண்டகச்சதுரர் எனப் புகழப் பெறுகிறார் . திருத்தாண்டகத்தில் வரும் ஒரு தொடர்தான் தயாமூலதன்மம் என்பது.

## தயா மூலம் தன்மம்

தயா மூலதன்மம் என்னும் சொற்றொடர் தயா, மூலம், தன்மம் என்னும் மூன்று சொற்களால் இணைந்த ஒரு சொற்றொடர். இம்மூன்று சொற்களும் வடமொழி எனப்படும் சமஸ்கிருத மொழியைச் சார்ந்த சொற்கள். முதலில் இவற்றின் பொருளைக் காண்போம்

தயா, தயை, தயவு என்னும் மூன்று சொற்களும் ஒரு பொருளுணர்த்தும் ஒத்த நிலையுடைய சொற்கள். இவை அருள், கருணை , அன்பு பக்தி, பரிவு இரக்கம் என்னும் பொருளை உணர்த்தும் இயல்பின. "தாயிற் பெரிதும் தயாவுடைய தம் பெருமான்" (திருவாசகம் 13. 3) என்றும், "நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத் தாயிற் சிறந்த தயாவன தத்துவனே "(திருவாசகம்1.61) என்றும் , திருவாசகம் தயா என்னும் சொல்லைக் கையாள்கின்றது. "தாயிற்சிறந்த தயா" என்பதையும் "பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப்பரிந்து" (திருவாசகம் பிடித்தப்பத்து) என்பதையும் ஒப்பிட்டுப் பரிவு, அன்பு, கருணை எனப் பொருள் தந்து நிற்பதைக் காணமுடிகிறது இறைவனை தாயிற் சிறந்த தயாவன தத்துவனாகக் கூறும் மணிவாசகர் தயாபரனாகவும் இறைவனை அழைக்கிறார். "தானேயாகிய தயாபரன் எம்மிறை" (திருவாசகம்2. 96) என்பதைக் காண்க. இறைவன் கருணைக்கடலாகக் காட்சி அளிப்பதை இவ்வரிகள் சுட்டுகின்றன.

மூலம் என்பது அடி, வேர், கிழங்கு, ஆதி, வழி, வாயில், பிரதானம், காரணம் என்று பல பொருள் உணர்த்தும் ஒரு சொல்லாகும். சிறுபஞ்சமூலம் என்று பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்றாக விளங்கும் நூலின் பெயரில் மூலம் என்பது வேர்களைக் குறிக்க விளங்குகிறது. "மூலவோலை மாட்சியிற் காட்ட" என்னும் பெரியபுராணத் தொடரில் ஆதியானது என்ற பொருள் உள்ளது. "இது அவன் மூலமாகக் கிடைத்தது' என்னும் பேச்சுவழக்குத் தொடரில் மூலம் என்பது வழி, வாயில், என்னும் பொருளுடன் விளங்குகிறது. "மும்மை சால் உலகுக்கெல்லாம் மூலமாகிய மும்மலம்" என்று வரும் கம்பராமாணத் தொடரில் (வாலிவதை71) மூலம் என்பது அடிப்படை, தலைமை என்னும் பொருளுடன் திகழ்கிறது "மூலமாகிய மும்மலம்" (திருவாசகம் 2.111), "மூலநோய் தீர்க்கும் முதல்வன் கண்டாய்" (அப்பர் தேவாரம்845.9) என்னும் தொடர்களில் மூலம் என்பது அடிப்படை காரணம் என்னும் பொருளில் அமைந்துள்ளது.

தன்மம் என்னும் சொல் தர்மம் எனப்பொருள்படும் அறத்தைக் குறிப்பதாகும். புத்த மதத்தினர் போற்றம் மும்மணிகளில் ஒன்று தன்மம் என்பதை மணிமேகலை(30.3)

சுட்டுகின்றது. "புத்த, தன்ம , சங்கம் என்னும் முத்திறமணியை மும்மையின் வணங்கி' என வருதல் காண்க.

தயா மூல தன்மம் என்னும் சொற்றொடருக்கு அருள்வழி அமைந்த-அருளை அடிப்படையாகக் கொண்ட- அறநெறி எனப்பொருள் கூறலாம் . அருளறம் என்னும் சொற்றொடரைப் புத்த பகவானைக் குறிக்கப் பயன்படுத்தும்போது மணிமேகலை(5.75)"இன்பச் செல்வி மன்பதை எய்த அருளறம் பூண்ட ஒரு பெரும் பூட்கையின்" எனச் சுட்டுகிறது

தயா மூல தன்மம் என்னும் சொற்றொடரைத் தமிழுலகுக்கு முதன் முதலில் அறிமுகப்படுத்திய பெருமை அப்பரடிகளாரைச் சாரும். அவர் தம் திருத்தாண்டகத்தில் இத்தொடரை இருமுறை கையாளுகிறார். திருமழபாடித் திருத்தாண்டகத்தில் ஆறாவது பாடலாக வரும் பாடல் இது.

சினந்திருத்துஞ் சிறுப்பெரியார் குண்டர் தங்கள்

செதுமதியார் தீவினைக்கே விழுந்தேன் தேடிப்

புனந்திருந்தும் பொல்லாத பிண்டி பேணும்

பொறியிலியேன் தனைப்பொருளா ஆண்டு கொண்டு

தனந்திருத்து மவர் திறத்தை யொழியப் பாற்றித்

தயாமூல தன்மவழி எனக்கு நல்கி,

மனந்திருந்தும் மழபாடி வயிரத் தூணே

என்றென்றே நானரற்றி நைகின் றேனே

இப்பாட்டில் தயா மூல தன்ம வழியை இறைவன் தமக்குத் தந்து மனந்திருத்தினான் என்று திருநாவுக்கரசர் பெருமான் கூறுகிறார்.

திருநள்ளாறு என்னும் தலத் திருத்தாண்டகத்தின் ஆறாவது பாடலிலும் தயா மூல தன்மம் என்னும் தொடர் வருகின்றது.

குலங்கெடுத்துக் கோள்நீக்க வல்லான் தன்னைக்

குலவரையன் மடப்பாவை இடப்பா லானை

மலங்கெடுத்து மாதீர்த்தம் ஆட்டிக் கொண்ட

மறையவனைப் பிறைதவழ்செஞ் சடையினானைச்

சலங்கெடுத்துத் தயாமூலதன்மம் என்னும்

தத்துவத்தின் வழிநின்று தாழ்ந்தோர்க் கெல்லாம்

நலங்கொடுக்கும் நம்பியை நள்ளாற் றானை

நானடியேன் நினைக்கப் பெற்றுய்ந்த வாறே

வஞ்சனை நீக்கித் தயா மூல தன்மம் என்னும் தத்துவத்தை வழங்கும் வள்ளலாக இறைவன் இருப்பான் என்பதை நாவுக்கரசர் இங்கே கூறுகிறார். இந்த இரு பாடல்களின் மூலம் நாம் உணர்வதென்ன? தயா மூல தன்மம் என்பது ஒரு நெறி- தத்துவம் -என்பதையும் , அந்நெறி ஆண்டவனால் அப்பர் பெருமானுக்கு நல்கப்பட்ட ஒன்று என்பதையும் , அவ்வழி நின்று வணங்கியவர்களுக்கெல்லாம் சிவபெருமான் நலங்கொடுப்பார் என்பதையும் அறிந்து கொள்கிறோம்.

திருப்பனந்தாள் மடத்தின் பதிப்பான திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம் (தலமுறை) என்னும் நூலில், திருமழபாடித் தாண்டகத்தின் கீழ், "தயாமூலதன்ம வழி- தருமங்களுக்கெல்லாம் மூலமாகிய அன்பு என்னும் அறம்" என்று அடிக்குறிப்புள்ளது. அறங்களுக்கெல்லாம் ஆணிவேராக இருப்பது அன்பு என்பதை உணர்த்துவது தயாமூலதன்மம் என்னும் கருத்து இங்கே பெறப்படுகிறது.

தருமபுர ஆதீனத்தின் வெளியீடான திருத்தாண்டக உரையில் திரு. சொ. சிங்கார வடிவேலன் அவர்கள் "தயா மூல தன்மம் அன்பும் அன்பிற்கு அடிப்படையான அறமும், என்னும் புதிய சொற்றொடரை அடிகள் வாக்கிற் காண்கிறோம். அன்பும் அறமுமாகிய பணிவுகள் செறிந்த மெய்ம்மையைத் தயா மூல தன்மம் என்னும் நறுஞ்சொற்றொடரால் ஆண்டு விளக்குகிறார்" என்றும், "தயா மூல தன்ம மென்னும் தத்துவத்தின்" "தயா மூலதன்ம வழி" இவ்விடத்துச் சைவசித்தாhந்தச் செந்நெறியைக் குறிக்க இத்தயா மூல தன்மவழி என்னும் சொற்றொடரை அடிகள் கனிந்து அருளியுள்ளமை காணலாம். மனிதர்களாகப் பிறந்த நாம் அன்பும் அறமும் கொண்டு உயர்ந்தால் அதனினும் சீரிய வாழ்வு உண்டோ? அவ்வாழ்வினை அடையும் நெறியே இத்தயா மூல தன்மம் என்னும் முப்பெருங்சொற்களிலே அடங்கி இருக்கிறது. உலகு இந்நெறி நின்றால் பூசல் உண்டோ? அமைதியன்றோ உலகிற் செழிக்கும்! அவ்வமைதி உலகை, மாந்தர் இனத்தை வாழ்விக்கும் மெய்ம்மருந்து . அதனை உலகுக்கு எடுத்துரைக்கும் தமிழ்மையை இத்திருக்கவியிற் காணலாம்" என்றும் கூறுகிறார். இவர் கருத்துப்படி அன்பும், அடிப்படையான அறமும்தான் தயா மூலதன்மம் என உணர்கிறோம்.

அன்பும் அறமும் ஆகிய பண்புகள் செறிந்த மெய்ம்மைதான் தயா மூல தன்மம் என்னும் தத்துவம் என்கிறார் இவர். மேலும் தயா மூல தத்துவம் என்பது சைவ சித்தாந்தச் செந்நெறியைக் குறிப்பது என்னும் கருத்துடையவராகவும் இவர் திகழ்கிறார்.

மேற்கண்ட பதிப்புரையில் திரு. அருணைவடிவேல் முதலியார் அவர்கள் “தயா மூல தன்மம் என்னும் தத்துவம் இரக்கமே அடிநிலை அறம் என்னும் உண்மை. அ:்து இறைவனை உணர்ந்தோர்ககே கைகூடும் என்றவாறு. இத்தொடரைப் புத்தர் முதலியோர் வாளாவாய்ப்பறையாகச் சாற்றுதல் பயனுடைத்தாகாது என்றவாறு” என்று கூறி (பக் 156) “தயா மூல தன்மம் என்னும் வழி, உண்மையில் இறைவன் உண்மை உணர்ந்து அவன் வழி நிற்றலே என்க “ எனக் குறிப்பிடுறார். (பக்297) அப்பர் வரலாற்றாராய்ச்சியும் தேவாரத் திருமுறையும் என்னும் நூலாசிரியர் திரு. கு. நடேசக் கவுண்டர் “அட்டபுட்பங்களில் கூறப்பட்ட கொல்லாமையும் அருளுமே சைவ சமயத்தின் வேராக உள்ளவை. ஆதலால் அவனடியார்கள் நின்ற திருத்தொண்டின் நெறியை அப்பர்; தயா மூல தன்மம் என்று அறியப்படும்” என்று கூறுகிறார். இதனடிப்படையில் பார்க்கும் போது தயாமூல தன்மம் என்பது சமண, புத்த சமயத்துடன் தொடர்புடைய ஒன்று என்றும் , அது இரக்கத்தையே அடிநிலையாகக் கொண்ட அறம் என்றம் அது உண்மையில் இறைவன் உண்மை உணர்ந்து அவன் வழி நிற்றலே என்றும் அதனைத் திருத்தொண்டின் நெறி என அழைக்கலாம் என்றும் அறியமுடிகின்றது.

இவற்றையெல்லாம் நோக்கும் போது தயா யுமூல தன்மம் என்பது அன்பு, அருள் (கருணை , இரக்கம்) , அறம் ஆகியவற்றுடன் தொடர்புடைய ஒன்று என்று சொல்ல வேண்டியிருக்கிறது. அறத்ிதை இல்லறம், துறவறம் என இரண்டாகப் பகுத்து இல்லறத்திற்கு இன்றியமையாத பண்பு அன்பு என்றும், துறவறத்திற்கு விழுத்துணையாகும் பண்பு அருள் என்றும் கூறிய வள்ளுவர் அருள் என்பது அன்புத்தாய் பெற்ற குழந்தை என்றும் தெளிவுபடுத்திக் காண்பர். அன்பு என்பது தொடர்புடையாரிடத்துக் கொள்ளும் காதல் என்றும் அருள் என்பது தொடர்பு பற்றாது இயல்பாக எல்லா உயிர்கள் மேலும் செல்வதாகிய கருணை என்றும் பிரித்துக் காண்பார் பரிமேலழகர்.

மக்கள் அறநெறி நின்று வாழ வேண்டும். இல்லறநெறி நின்று துறவறநெறிக்குச் செல்லுதலை வலியுறுத்துகிறது சைவம்.

மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் வைகலும்,

எண்ணில் நல்ல கதிக்கு யாதுமோர் குறைவிலை

கண்ணில் நல்ல:்துறும் கழுமல வளநகர்ப்

பெண்ணில் நல்லாளொடும் பெருந்தகை இருந்ததே

என்னும் ஞானசம்பந்தப்பெருமானின் திருமுறைப்பாடல் இதற்குச் சான்று. இல்லறநெறியில் நிற்கும்போது அன்பைக் கடைப்பிடித்தொழுகி வையத்து வாழ்வாங்கு வாழ்தல் வேண்டும். பின்பு படிப்படியாக மன்னுயிர் அனைத்தையும் தன்னுயிராகக் கருதும் மாண்பினதாகிய அருளை மேற்கொண்டு துறவற நெறிக்குச்

செல்லுதல் வேண்டும். இத்தகைய நெறி நின்றார் பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க நெறி நின்றார் ஆகக் கருதப்படவார். நீடுவாழ்தலாகிய வீடுபேறு பெறுகின்றவராகவும் திகழ்வர்.

தயா மூல தன்மம் என்னும் தொடரில் முதன்மைச் சொல்லாக இருப்பது அருள் என்பதே ஆகும். "காக்கை குருவி எங்கள் சாதி" என்று கருதி எல்லா உயிர்களையும் ஓம்பி மேம்படுகின்ற இயல்பினதாகிய அருள் தருகின்ற செல்வம் தான் செல்வத்துட் செல்வமாகக் கருதப்படும். பலவழிகளில் ஆராய்ந்து பார்த்தாலும் அருள்தான் ஒருவனுக்கு உற்ற துணை என்பது வள்ளுவர் கண்ட முடிவு . அருளுடையார் மருளுடைய உலகம்(நரகம்) புகார்: மன்னுயிர் ஓம்பி அருளாள்கின்றவர்களுக்குத் தன்னுயிர் அஞ்சும் தீவினைகள் இல்லை. மேலும் அல்லல் (துன்பம்) என்பதே அருளாள்வார்க்கு இல்லை. இதற்கு உலகம் சான்று பகரும் என்பார் திருவள்ளுவர். பொதுவாக, அருளாளர்கள் என்ற சொல்லும்போது இருவகைப்பொருள் சொல்லாம்.

அருள் என்னும் கருணைப் பண்பினைத் தம் வாழ்விற் கடைப்பிடித்து ஒழுகுகின்ற சான்றோர்கள் என்பது ஒரு பொருள். இறைவனின் பெருங்கருணைத் திறமாகிய அருள்-திருவருள் பெற்ற சான்றோர்கள் என்பது மற்றொரு பொருள்.

அல்லல் என் செயும் அருவினை என்செயும்,

தொல்லை வல்வினை தொந்தந்தான் என்செயும்

தில்லை மாநகர்ச் சிற்றம்பலவனார்க்கு

எல்லையில்லதோர் அடிமை பூண்டேனுக்கே

என்னும் அப்பர் பெருமானின் திருமுறைப் பாடல் அருளாளர்கள் துன்பம் போக்கி எந்நாளும் இன்பமுடன் இருக்கும் இயல்பினர் என்பதைக் கூறுகின்றது

அருளுடையார் வீடு பேறு பெறுவர்

"அருளில்லார்க்கு அவ்வுலகம் இல்லை

பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லாகியாங்கு"

என்னும் குறள் வாயிலாக இது வலியுறுத்தப் பெறுகின்றது. அருளில்லார்க்கு உய்தி என்பதே இல்லை. அருளில்லாமல் செய்யப்படுகின்ற அறம் ஞானமில்லாதவன் மெய்ப்பொருள் காண்பதை ஒத்ததாகும் . எனவே அருள்வழி என்பது அல்லவை நீக்க உதவுவது: துன்பம் போக்கி இன்பம் தருவது: வீட்டின் பத்தையும் வழங்குவது இத்தகைய அருள்நெறியே தயா மூலதன்மம் என்னும் தகைமை நெறி

சமணர்கள் , புத்தர்கள் வலியுறுத்திய தயாமூல தன்மம் என்பது இவ்வுலக உயிர்களிடத்தில் இரக்கம் கொண்ட பெருங் கருணை செலுத்துகின்ற இயல்பு- அருள்

ஒன்றனையே குறிக்கும். " அருளல்லது யாதெனின் கொல்லாமை கோறல்" என்னும் குறட் கருத்து இதனை வலியுறுத்துகிறது. ஆனால் சைவ சமயச் சான்றோராகிய நாவுக்கரசர் கண்ட தயா மூல தன்மம் என்பது எல்லாவுயிர்களிடத்தும் கருணை செலுத்துகின்ற இயல்பு (அருள்) தோன்றுவதற்கு அடிப்பைடயான இறைவனுடைய திருவருளையும் இணைத்துப் பேசும் . மன்னுயிரனைத்தையும் தன்னுயிராக் காண்கின்ற மாண்புக்கு மூலமாக இருப்பது இறைவனது திருவருளே என்று கருதும் மாண்பினர் சைவசமயச் சான்றோர் . எனவேதான் தாயுமானார்,

எவ்வுயிரும் என்னுயிர்போல் எண்ணி இரங்கவும்

தெய்வ அருட்கருணை செய்யாய் பராமபரமே

என்று வேண்டுகிறார். வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடிய இராமலிங்க அடிகளாரும்"அருட்பெருஞ்சோதி தனிப்பெருங் கருணை" எனக் கொள்கை முழக்கஞ் செய்தது இதன் விளைவினால் ஏற்பட்ட ஒன்றே ஆகும். இறைவனின் திருவருட் பயன்தான் எல்லா உயிர்களிடத்திலும் பெருங்கருணை செலுத்த வைக்கும் இயல்பினது என்பதை விளக்குவதுதான் தயாமூல தன்மம் என்னும் தத்துவம். இதனைத்தான் சிவபெருமான் நாவுக்கரசருக்கு நல்கி அருளினான். இவ்வழியின்றிக் கொல்லாமையை மட்டுமே கொண்டு மறைந்தொழுகி வாழுவது மனிதப் பண்பாகுமே அன்றி இறைவழி காட்டும் இனிய பண்பாகாது என்பதையும் தயா மூல தன்மம் , என்னும் கோட்பாடு வலியுறுத்துகிறது.

தயா மூல தன்மம் என்னும் தொடர் உலகத்திலுள்ள அறங்களுக்கு எல்லாம் அடிப்படை:

தயை-அருள் என்பதையும் சுட்டி நிற்கும். ஈதலை அறமாகக் கொண்டாலும் அதற்கு அடிப்படையாக அமைவது வறியார் மீது கொள்ளுகின்ற இரக்கம்-கருணையே ஆகும். அறனெனப்பட்டதே இல்வாழ்க்கை என்று கொண்டாலும் அதற்கு அடிப்படைப் பண்பாக இருப்பது அருட்குழவியின் தாயான அன்பு என்பதே ஆகும். துறவறத்தையே அறமாகக் கொண்டாலும் அதற்கு அடிப்படையாக இருப்பது மன்னுயிர் ஓம்புதலாகிய அருளே ஆகும். "அறஞ்செய விரும்பு" என்னும் சொல்லுக்கு அடிப்படைக் காரணமாக விளங்குவது அருள் என்னும் கருணையே அறவோர் என்பவர் யார்?

அத்தணர் என்போர் அறவோர் மற்றெவ்வுயிர்க்கும்

செந்தண்மை பூண்டொழுகலான்

என்பார் வள்ளுவர். இங்கு அறவோர்க்குரிய இலக்கணத்திலும் அருட்குணமே முன்னிற்பதைக் காண முடிகிறது. அரசியலிலும் கூடக் கண்ணோட்டம் என்பது

ஓரறமாகக் கருதப்படுவதையும் காண்க. எனவே அறநெறி நோக்கில் காணும்போது தயா மூல தன்மம் என்னும் சொற்றொடர் உலகிலுள்ள அறநெறிகளுக்கு எல்லாம் அடிப்படையாக அமைவது. தயாதான்-அருள்தான் என்பதையும் சுட்டி நிற்கிறது.

தயா மூலதன்மம் என்றும் தொடரில் வரும் தயா சுட்டும் அருளை -திருவருள் எனக் கொண்டால் இறைவன் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல். அருளல் என்னும் ஐந்தொழில்களையும் நிகழ்த்துவதற்கு அடிப்படைக் காரணம் அவன் ஆன்மாக்கள்பால் கொண்ட பெருங்கருணை என்னும் சைவசித்தாந்தக் கோட்பாட்டையும் இத்தொடருடன் இணைத்துக் காண இயலும். “அருளது சக்தியாகும் “ என்னும் சிவஞானசித்தியார் தொடருடன் இணைத்துப் பார்க்கும் போது உலகத் தோற்றத்துக்கு அடிப்படையே சிவபெருமானின் தயா- அருள்தான் என்பதையும் உணரலாம். எனவே தன்மங்களுக்குள் மூல தன்மம் அவன் சக்திதான் என்பது வெளிப்படை. எனவேதான் சக்திக்கு அறம் வளர்த்த நாயகி என்று ஒரு பெயர் வந்தது போலும்.

வீடுபேறு பெறுதற்குரிய அறநெறிகளில ; முதன்மையாக இருப்பது-மூலமாக இருப்பது-மூலதன்மமாக இருப்பது இறைவனது திருவருள் தான். “அவனருளால் அவன் தாள் வணங்குதல்” “அவனருளே கண்ணாகக் காணுதல் ;” என்னும் திருமுறைத் தொடர்கள் இதனை வலியுறுத்தும். எனவேதான் இறைவனுக்கு, “தயாபரன்” என்னும் திருப்பெயர் திகழ்கிறது. இக்கருத்தையும் தயாமூலதன்மம் என்னும் தொடர் தருகிறது எனக் கூறலாம்.

தயாவும் (கருணையும் ) மூலதன்மமும் (அறநெறியும்) உடையவன் இறைவன் . அறவாழி அந்தணன் என்னும் திருக்குறள் தொடர் இறைவன் அறக்கடலாகவும் இரக்கத்தின் -அருளின் உருவமாகவும் இருக்கின்றார் என்பதை உணர்த்துகிறது. அறமும் அருளும் இறைவனிடமுள்ள இன்றியமையாப் பண்புகள். இறைவன் அறக்கடலாக இருப்பதால் உலக அறங்கள் எல்லாம் தோன்றுவதற்கும் அவனே காரணமாக இருக்கிறான். அதே போல் அருள் வடிவமாகவும் விளங்குகிறான். எனவே தாயமூலதன்மம் என்பது இறைவனின் பண்புகளை உணர்த்தும் ஒரு தொடர் எனவும் கருத இடமுண்டு.

“அறிவுடையார் எல்லாம் உடையார் அறிவிலார்

என்னுடைய ரேனும் இலர்”

என்பார் திருவள்ளுவர். இத்தகைய அறிவும் எப்போது பயன்படும் எனின் தயையுடன் கூடிய நிலையில் தான் என்பது வள்ளுவம்.

“அறிவினான் ஆகுவதுண்டோ பிறிதின் நோய்

தந்நோய்போல் போற்றாக் கடை”

என்னும் குறள் வழியாக அறிவின் பயன் அருளுடன்-இரக்கத்துடன்-கருணையுடன் கூடி வாழ்வதே என்பது உணர முடிகிறது. எனவே அறிவுடன் கூடிய வாழ்க்கை றி என்பது அருளுடன் இணைந்த ஒன்றே என்பதையும் தாயமூல தன்மம் என்னும் தொடர் உணர்த்துகிறது. இங்கே தன்மம் என்பது வாழ்க்கை நெறி என்பதைச் சுட்டும் இல்லற தர்மம் என்னும் தொடர் ஆட்சியையும் காண்க.

தயை ஒன்றிருந்தால் ஏனைய தர்மங்கள் எல்லாம் தாமாகவே வரும். ஆதலால் தயை என்னும் இரக்கப் பண்பினை ஏனைய அறங்களுக்கு வழிகாட்டியாகக் கொள்ளவும் இடமுண்டு.

“அறிவினை யாதெனில் கொல்லாமை'

“நல்லாறு எனப்படுவது யாதெனில் யாதொன்றும்

கொல்லாமை சூழும் நெறி”

என்னும் குறள்களால் எதிர்மறை முகத்தால் அறச்சொல்லுக்கு விளக்கந் தந்த வள்ளுவர்.

“பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்

தொகுத்தவற்றுள் எல்லாம் தலை”

என்னும் குறளில் உடன்பாட்டு முகத்தால் அறச்செயலை விளக்ககின்றார்.

'கொல்லா நலத்தது நோன்மை'

“உற்றநோய் நோன்றல், உயிர்க்குறுகண் செய்யாமை

அற்றே தவத்திற்கு உரு”

என்னும் குறள்களில் தவத்திற்கு அடிப்படை அருள் என்பதை வள்ளுவர் விளக்குகிறார் இவ்விளக்கங்களின் அடிப்படையில் காணும்போது தயா எனப்படும் அருள் எல்லா அறங்களிலும் எற்றம் தருவது: எனவே அது மூலதன்மமாகக் கருதப்படுகிறது என்று சொல்லமுடியும். “கொலைப்பாவம் விளைவிக்கும் துன்பம் ஏனைப்பாவங்கள் எல்லாம் கூடியும் விளைக்க மாட்டாதாம். கொல்லாமை தானே பிற அறங்கள் எல்லாவற்றின் பயனையும் தரும்” என்று பரிமேலழகர் தரும் விளக்கமும் இதற்கு அரண் செய்யும்.

ஆன்மாவுக்கு அறிவு, இச்சை இயல்பு. ஒன்றில் இச்சை தோன்றுவது ஆன்மாவுக்கு அதன் மீதுள்ள தயை காரணமாகத்தான். எனவே ஆன்மாவுக்குள்ள இயல்புக் குணங்களில் ஒன்று தயை . எனவே அது மூலதன்மமாக விளங்கும் இயல்பினதாக உள்ளது என்னும் கருத்தையும் தயா மூல தன்மம் என்னும் தொடர் தெரிவிக்கின்றது.

தயா மூலதன்மம் என்னும் தத்துவம் புத்த சமண சமயத்தில் ஓர் அறநெறிப்பண்பாகத் தோற்றம் கண்டது. சைவ சமயத்தில் அஃது இறைநெறிப்பண்பாக மாற்றம் பெற்றது. அது நம் வாழ்க்கை ஏற்றம் பெறுவதற்கு ஊற்றமாகவும் இலங்குகிறது.

Thinnappan, SP. Daya:mu:la Dhanman (Grace is the Root of all virtues)In : Malaya Arulneri Thirukkutta Coral Jubliee Celebration Souvenir,Ed.

Mrs. D. Nadaraja & Others, ArulneriThirukkuttam, Kualalumpur, Malaysia (1991), 109-113 (Tamil).

-பன்னிரு திருமுறை ஆய்வரங்கம், திருமுறை மாநாட்டு வெளியீடு, வெள்ளிவிழா ஆண்டு. 2005

# திருவாதிரைச் சிறப்பு

சிவபெருமானை முழு முதற் பொருளாகக் கொண்டு வழிபடும் செந்நெறியே சைவ சமய நன்னெறியாகும். சிவபெருமானுக்கு உகந்த நட்சத்திரமாகக் கருதப் பெறுவது திருவாதிரை நட்சத்திரமாகும். சிவபெருமானுக்குரிய குணங்களை எட்டாகக் கூறும் திருக்குறள், 'எண்குணத்தான்' என்னும் கடவுள் வாழ்த்துக் குறள் (9) தொடருக்குப் பொருள் கூறும் பரிமேலழகர் தன்வயத்தனாதல், தூய உடம்பினனாதல், இயற்கை உணர்வினனாதல், முற்றும் உணர்தல், இயல்பாகவே பாசங்களின் நீங்குதல், பேரருள் உடைமை, முடிவு இல் ஆற்றல் உடைமை, வரம்பு இல் இன்பமுடைமை என இவ்வாறு சைவ சமயத்துட் கூறப்பட்டது என்று உரைப்பர். சிவபெருமானின் வடிவை நிலம், நீர், தீ, கற்று, விசும்பு, ஞாயிறு, திங்கள், ஆன்மா என எட்டு வகையாக, அட்ட மூர்த்தங்களாகத் திருமுறைகள் கூறும். சிவபெருமானின் வீரச் சாதனை புரிந்த தலங்களும் எட்டு. (கண்டியூர், கோவலூர், அதிகை, பறியலூர், விற்குடி, வழுவூர், குறுக்கை, கடவூர்) எனவே சிவபெருமானுக்கு உகந்த நட்சத்திரமாகிய திருவாதிரையின் சிறப்பை மொழியியல் , அறிவியல், சோதிட இயல், இலக்கியம், சமுதாயஇயல், சமயம், பண்பாடு, தத்துவம் என்னும் எட்டுவகை நோக்கில் காண்பதே இக் கட்டுரையின் நோக்கம். மேலும் உலகியலில் ஒரு பொருளை அல்லது கட்டிடத்தைக் கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு, வடகிழக்கு, வடமேற்கு, தென்கிழக்கு தென்மேற்கு ஆகிய எட்டுத் திசைகளிலிருந்து நோக்கினால் அதுதெளிவாகத் தெரியும். அது போலத் திருவாதிரையின் சிறப்பும் மேற்கண்ட எட்டுவகை நோக்கில் காணும் போது தெளிவுறும் என்பதில் ஐயமில்லை.

**<u>மொழியியல் நோக்கில் -</u>**

திருவாதிரை என்னும் சொல்லின் அமைப்பு, பிறப்பு, பொருள் பற்றி விளக்குவது. மொழியியல் நோக்கு எனப்படும். திருவாதிரை என்னும் தொடர் திரு என்னும் அடைமொழியும் ஆதிரை என்னும் தலைச் சொல்லும் .இணைந்த ஒன்றாகும். ஆதிரை என்னும் சொல் ஆருத்ரா என்னும் சமஸ்கிருதச் சொல்லின் திரிபு என்று சென்னைப் பல்கலைக் கழகத் தமிழப் பேரகராதி கூறுகிறது. ஆதிரை என்பது தமிழ்ச் சொல் என்று கருதுவாரும் உளர். திரு என்னும் அடைமொழிக்கு அழகு, தெய்வத்தன்மை, செல்வம் எனப் பல பொருள் உண்டு. ஆதிரை என்பது சிவபெருமானுக்கு உகந்த நட்சத்திரமாக இருப்பதால் திரு என்னும் அடைமொழி பெற்றுள்ளது எனக் கருதலாம். இருபத்தேழு நட்சத்திரங்களில் திரு என்னும் அடைமொழியடன் திகழ்வன இரண்டு . ஒன்று திருவாதிரை, மற்றொன்று திருவோணம். இவற்றுள் முன்னையது சிவனுக்கும், பின்னையது திருமாலுக்கும் உகந்தவை. திரு என்னும் சொல்லும் ஆதிரை என்னும் சொல்லும் சேரும்போது இரண்டுக்கும் இடையே வ என்னும் உடம்படுமெய் எழுத்து தோன்றியுள்ளது. இறைவனையும் உயிரையும் உடன்படுத்துகின்ற இணைக்கின்ற மெய் எழுத்து மெய்ப்பொருளாகிய இறையை இது குறிக்கின்றது. அவனருளாலே அவன்தாள் வணங்குவது தானே இயல்பு. இங்கு ஆதிரை என்பது பெயர்ச்சொல். இதனடியாக ஆதிரை

நாச்சியார், ஆதிரைக்களி என்னும் தொடர்களும் அமையும். திருவாதிரை என்னும் சொல்லுக்கு 1. 27 நட்சத்திரங்களில் 6 ஆவது நட்சத்திரம், 2. ஒரு விழா 3. நகரத்தார் மரபில் கொண்டாடப் பெறும் ஒரு சடங்கு என்று சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேரகராதி பொருள் கூறும்.

**அறிவியல் நோக்கில் -**

அறிவியலில் நட்சத்திரங்கள், கோள்கள் பற்றி ஆராயும் பிரிவு வானவியலாகும். இதனடிப்படையில் திருவாதிரை பற்றிய செய்திகைளத் தமிழ்க் கலைக் களஞ்சியத்தின் துணை கொண்டு பின்வருமாறு தொகுத்துக் கூறலாம். திருவாதிரை நட்சத்திரத்திற்குரிய பெயர் . இது வானில் உச்ச ஒளியுள்ள ஓரையன் ( ) என்னும் நட்சத்திர மண்டலத்திலுள்ள பிர்காசமான நட்சத்திரங்களில் ஒன்று. மஞ்சட் சிவப்பு நிறம் உடையது. இதனுடனுள்ள மற்ற நட்சத்திரங்கள் வெண்ணிறம் உடையவை. எனவே இஃது எளிதில் கண்ணுக்குப் புலப்பபடும். பார்ப்பதற்கு இது சில சமயம் செவ்வாய்க் கிரகம் போலத் தோன்றம். இது சூரியனைப் போல 1200 மடங்கு ஒளி உடையது. சூரியனிடமிருந்து 325 ஒளி ஆண்டுத் தொலைவிலுள்ளது. இது செண்டுக்கு 15 மைல் வீதம் சூரியனிடமிருந்து விலகிச் செல்வதாகக் கணிக்கப் பட்டுள்ளது. இதில் சோடியம், மக்னீசியம், இரும்பு, இருப்பதாக இதன் நிறமாலை காட்டுகின்றது. இதனை இந்திய வானவியலார் பிரஜாபதி என்று கூறுவர்.

**சோதிட நோக்கில் -**

சோதிட நோக்கில் திருவாதிரையின் பண்புகளைக் காணலாம். 27 நட்சத்திரங்களில் 6ஆவது நட்சத்திரமான திருவாதிரை மிதுன ராசிக்குரியது. இதற்குரிய பெயர்ச் சிறப்பெழுத்துகள் கு, க, ங, ச என்பன.

திருவாதிரையில் ஜனித்தோர்கள்,

“திறமாய்ப் பொய்யைப் பேசிடினும்
மருவொன்றில்லா வாசகமாய் மதிப்பார்
உலகோர், திடகாத்திர
உருவாய் விளங்கிடுவோர், வறுமை
உற்றே தரித்திரம் எய்திடினும்
பெருமையாளனைப் போலப் பேசிச்
சமர்த்தராய்த் திரிகுவரே”

என்று சோதிட அரிச்சுவடி என்னும் நூல் திருவாதிரையில் பிறந்தோர்க்குரிய இயல்புகளைக் கூறும். கீரத்தி, பொய் பேசுதல், மனோதைரியம், கோபக்குணம், இடம்பம்,சரீரபலம், சினேக பட்சம், பிடிவாதம் முதலிய குணங்கள் இந் நட்சத்திரத்தில் பிறந்தோர்க்குண்டு என்பர்.

பஞ்சாங்கங்களில் தீதுறு நட்சத்திரங்களில் ஒன்றாகத் திருவாதிரை கருதப் பெறுகிறது. 'ஆதிரை பரணி கார்த்திகை ஆயிலியம் முப்புரம் கேட்டை, தீதுறு விசாகம் சோதி சித்திரை மகம் ஈறாறில், மாதனம் கொண்டார் தாரார், வழிநடை போவார் மீளார், பாயினில் படுத்தார் தேறார், பாம்பினில் வாய்த்தேரை தானே' என்று பஞ்சாங்கங்களில் உள்ள பாடல் இதனைக் கூறும். மேலும் திருஞானசம்பந்தப் பெருமான் பாடிய கோளறு பதிகத்தில் "என்பொடு கொம்பொடாமை" என்று தொடங்கும் இரண்டாவது பாடலில் குறிப்பிடப் பெறும் தீதுறு நட்சத்திரங்களில் ஒன்று திருவாதிரை என்பதும் கருதத் தக்கது.

திருவாதிரை பற்றிய கதை ஒன்று அபிதான சிந்தாமணி என்னும் நூலில் உள்ளது. அது வருமாறு - பிரமன் சரசுவதியைப் படைத்துத் தான் புணரச் செல்லுகையில், சரசுவதி மான் உருக்கொண்டு ஓடினாள். பிரமனும் அவ்வுருக் கொண்டு தொடர்ந்தனன். தேவர் வேண்டுகோளால் சிவமூர்த்தி வேடுருக் கொண்டு ஆன்மானை எய்ய, அதனின்றும் ஒரு சோதி தோன்றி ஆதிரை நாளாயிற்று. இக்கதையை ஒத்த ஒரு கதை கிரேக்கப் புராணத்திலும் இருப்பதாகக் கலைக் களஞ்சியம் கூறுகிறது.

ஓரையன் என்பவன் அழகும் ஆற்றலும் நிரம்பிய ஒரு வேடன். கடல் தேவனான போசைடனின் மகன். ஈனோப்பியன் என்னும் அரசனுடைய மகள் மிரப்பி என்பவளை மணஞ் செய்ய விரும்பி அவளைத் தூக்கிக் கொண்டு போக முயன்றான். அதனால் ஓரையனை அரசன் மதுவருந்துமாறு செய்து கண்களைக் குத்திக் குருடாக்கினான். ஓரையன் தேவர் கம்மியனான ஹீப்பெஸ்ட்டஸ் உதவியால் ஞாயிற்றை நோக்கிக் கண்களைப் பெற்றான். அதன்பின் அவன் வேட்டையாடி வரும் போது அப்பாலோ என்னும் தேவனுடைய தங்கை ஆர்ட்டிமிஸ் என்பவள் ஓரையன் மீது காதல் கொண்டாள். இதனை அவள் அண்ணன் அறியான். ஓரையன் மீது அவன் அழுக்காறு கொண்டு கொல்ல முயன்றான். ஒருநாள் காட்டுவழியில் தங்கையுடன் செல்லும்போது ஓரையன் குளத்தில் குளிப்பதைக் கண்டு தன் தங்கையை அவன் மீது அம்பெய்து கொல்லப் பணித்தான். அவளும் அவ்வாறு செய்து கொன்று விட்டாள். பிறகு அறிந்து பெருந்துயருற்றாள். காதலனை அவள் நாயுடன் வானத்தில் ஒரு நட்சத்திர மண்டலமாகச் செய்தாள். இதுதான் அக்கதை.

**<u>இலக்கிய நோக்கில் -</u>**

திருவாதிரை பற்றித் தமிழ் இலக்கியங்களில் வரும் செய்திகளைத் தொகுத்துக் காண்பதே இலக்கிய நோக்காகும். தமிழ் இலக்கியத்தில் முதன்முதலாகப் பரிபாடல் என்னும் சங்க இலக்கியத்தில் திருவாதிரை பற்றிய குறிப்பு வருகிறது. பரிபாடலின் 8ஆவது செய்யுளில் முருகப் பெருமான் உறையும் திருப்பரங்குன்றம் பற்றிப் பேசும்போது "ஆதிரை முதல்வன்' என்னும் ஒரு தொடர் வருகின்றது. இது திருவாதிரை

நட்சத்திரத்திற்கு உகந்த தலைவனாகிய சிவபெருமானைக் குறிக்கும். பரிபாடலில் 11ஆவது செய்யுளில் பாவை நோன்பு பற்றிய குறிப்பு வருகின்றது. இதற்கு அப்போது அம்பா ஆடல் என்று பெயர். "வெம்பாதாக வியனில வரைப்பு"(இவ்வுலகம் வெம்மை நீங்குக) என்று வழிபடும் இந்த விழா தொடங்கப் பெற்றதைச் சுட்டும்போது "மாயிருந் திங்கள் மறு நிறை ஆதிரை வரிநூல் அந்தணர் விழவு தொடங்க" என்னும் அடிகள் வருகின்றன. மார்கழி மாதத்தில் ஆதிரை நாளன்று இவ்விழா தொடங்கியது என்பது இதன் வழி நாம் அறியும் கருத்து. கலித்தொகை என்பது சங்க இலக்கியங்களில் ஒன்று. அதன் பகுதியாகிய நெய்தற்கலியில், "அரும்பெறல் ஆதிரையான் அணிபெற மலர்ந்த" என்னும் தொடர் (கலி. 150-20) வருகின்றது. திருவாதிரைக் காலத்துச் சிவபெருமான் அணிகளை அணிந்திருப்பது போல அமைந்த ஒரு செண்பகமரம் பற்றிய குறிப்புப் பற்றியது இந்த தொடர். இங்கும் ஆதிரையான் என்பது சிவபெருமானைச் சுட்டி நிற்பதை அறியலாம்.

மூவேந்தர்களைப் பற்றிய வெண்பா யாப்பில் பாடும் இலக்கியம் முத்தொள்ளாயிரம். இதன் கடவுள் வாழ்த்து வருமாறு -

"மன்னிய நாள்மீன் மதிகனலி என்றிவற்றின்

முன்னம் படைத்த முதல்வனைப் -பின்னரும்

ஆதிரையான் ஆதிரையான் என்றென்(று) அயருமால்

ஊர்திரை நீரவேலி உலகு"

நாள் , நட்சத்திரம், சந்திரன், சூரியன் முதலியவற்றைப் படைத்தவன் முதல்வனாகிய சிவபெருமான்தான். அவனை உலகம் ஆதிரையான், ஆதிரை நட்சத்திரத்துக்குகந்தவன் என்று கூறி மயங்குகிறதே ஏன்? என்று இப்பாடல் கேட்கிறது. 27 நட்சத்திரங்களையுமே படைத்தவன் சிவபெருமான் தானே. அப்படி இருக்க அவனுக்குத் திருவாதிரை நட்சத்திரத்தை மட்டும் உரியதாக - உகந்ததாக ஆக்குவது ஏன்? இதனை எண்ணிப் பார்க்க வேண்டும். குணம் குறி கடந்தவன் சிவபெருமான். ஒருநாமம் ஓருருவம் இல்லாதவன். பிறவான் இறவானாகிய பெரியான். இது சிவபெருமானின் சொரூபநிலை. இவன் பொருட்டுப் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய ஐந்தொழிலையும் செய்ய உருவம் சொண்ட நாள் திரு ஆதிரை என்று கருதப்பெறுகிறது என்றும் இந்த நாளில் சிவன் கோயில்களில் பஞ்சகிருத்திய உற்சவம் நடத்துவர் என்றும் கலைக் களஞ்சியம் கூறும். நடராசப் பெருமானின் திருவுருவம் ஐந்தொழில் த்துவத்தைக் காட்டுவது என்பதை அனைவரும் அறிவர்.

"தோற்றம் துடியதனில் தோயும் திதி அமைப்பில்,

சாற்றியிடும் அங்கியிலே சங்காரம், - ஊற்றமாய்

ஊன்று மலர்ப்பதத்தே உற்றதிரோதம் அம்முத்தி

நான்ற மலர்ப்பதத்தே நாடு"

என்று சாத்திர நூல் கூறும். எனவே நடராசப் பெருமானின் திருவுருவத்துடன் நெருங்கிய தொடர்புடையதாகத் திருவாதிரை கருதப் பெறுவது பொருத்தம் தானே? மேலும் தாருகாவனத்து முனிவர்களின் செருக்கை அடக்கிய சிவபெருமான் முதன்முதல் உமை அம்மையார் காண நாட்டியம் ஆடினான். அம்முனிவர்கள் ஏவிய பாம்பு முதலிய பொருள்களைக் கையில் கொண்டு அவன் ஆடிய நடனம் திருவாதிரை நாளன்று நிகழ்ந்ததாகவும் கூறுவர். சிதம்பரத்தில் பதஞ்சலி வியாக்ரபாதருக்காக நடனக் காட்சி காட்டிய நாள் தைப்பூச நன்னாள் என்பதையும் அறிய வேண்டும்.

மணிமேகலை என்னும் காப்பியத்தில் ஆதிரை பற்றிய குறிப்பு ஒன்றுள்ளது. இது சைவ சமயச் சார்பு பற்றியதன்று. மணிமேகலையில் 16 ஆவது காதை ஆதிரை பிச்சையிட்ட காதை என்பதாகும். ஆதிரை என்பது நகரத்தார் மரபைச் சாரந்த ஒரு பெண்ணின் பெயர். ஆதிரை என்பவள் பூம்புகார் நகரத்துச் சாதுவன் என்னும் நகரத்தார் வணிகன் மனைவி தீயபழக்கம் காரணமாகப் பொருளிழந்த சாதுவன் கடல் கடந்து பொருள் தேடச் சென்ற இடத்தில் கலங்கவிழப் பெற்று நாக நாடு சென்று அங்கு அவர்களுக்கு அறிவுரை நல்கினான். அவன் நகர் திரும்பாததால் அவன் இறந்ததாகக் கருதி ஆதிரை தீப் புகுந்தாள். அவளைத் தீ சுடாமையால், கணவன் வரவைப் பற்றி அசரீரி சொல்லக் கேட்டுப் பின் கணவன் வரக் கண்டு கூடி வாழ்ந்தாள். மணிமேகலை அமுதசுரபியைப் பெற்றவுடன் அதில் யாரிடம் முதலில் பிச்சை ஏற்பது என்று எண்ணும்போது அவள் தோழி காயசண்டிகை என்பவள் சிறந்த பத்தினிப் பெண்ணாகத் திகழும் ஆதிரை நல்லாளிடம் முதலில் பிச்சை வாங்குவது சிறந்தது என்று சொன்னாள். அதற்கேற்ப மணிமேகலை ஆதிரையிடம் வந்து முதற்பிச்சை பெற்றாள். ஆதிரை, “பாரமடங்கலும் பசிப்பிணி அறுக” என்று கூறிப் பிச்சையிட்டாள். பிறகு தான் அமுதசுரபியில் அன்னம் எடுக்க எடுக்கக் குறையாததாயிற்று. மணிமேகலையும் மண்டிணி ஞாலத்து வாழ்வோரக்கெல்லாம் உண்டி கொடுத்து உயிர் கொடுத்தோள் ஆயினாள். இந்த ஆதிரையை நினைத்தே நகரத்தார் மரபினர் கன்னிப் பெண்களுக்குத் திருவாதிரை என்னும் சடங்கு - விழாக் கொண்டாடுகின்றனர். மார்கழித் திருவாதிரை நாளன்று கன்னிப் பெண்கள் கூட்டங் கூட்டமாக அண்டை வீடுகளுக்குச் சென்று கைகளில் வெள்ளிச் சட்டியுடன் சென்று மங்கல மகளிரிடம் “ஆடி ஆடி வாரோம் அவரைக்காய் போடுங்கள், பாடிப் பாடி வாரோம் பாடவரங்காய் போடுங்கள் , கூடிக்கூடி வாரோம் கூட்டுக்காய் போடுங்கள்” என்று பாடிக் காய்கறிகள் வாங்கி வந்து வீட்டில் கூட்டாஞ்சோறு சமைத்து “ஆதிரையாள்’ கும்பிடுவார்கள். மணிமேகலைக்குப் பிச்சையிட்ட தம் மரபுப் பெருமாட்டியை இவ்வாறு இவர்கள் வழிபாடு செய்கிறார்கள். இந்தச் சடங்கு நடத்திய பெண்கலே முழு மனிதர்களாகக் கருதப் பெறுவர். ஓரோவழி அவர்கள் இறந்தால் எரியூட்டுவர், இந்தச் சடங்குக்கு முன் இறந்தால் அவர்கள் புதைக்கப் பெறுவர்.

திருஞானசம்பந்தர் மயிலாப்பூரில் பூம்பாவையை எழுப்புவதற்காகப் பாடிய பதிகத்தில் சைவசமயத் தொடர்பான பல விழாக்களைக் குறிப்பிட்டு , அவற்றைக்

“காணாது போதியோ பூம்பாவாய்”? எனக் கூறுகிறார். அங்கே “கபாலீச்சுரம் அமர்ந்தான் ஆதிரை நாள் காணாதே போதியோ பூம்பாவாய்” என்று ஒரு பாடலின் ஈற்றடி அமைந்துள்ளது. சைவ சமய விழாக்களில் ஒன்றாக ஆதிரைநாள் விழா, ஞானசம்பந்தர் காலத்தில் இருந்ததை நாம் உணர முடிகின்றது.

திருநாவுக்கரசர் தேவாரத்தில் 4 ஆம் திருமுறையில் திருவாதிரைத் திருப்பதிகம் என்று ஒரு பதிகமும் (10 பாடல்கள்) உள்ளது. அதற்குரிய பண் குறிஞ்சி. திருவாரூரில் கொண்டாடப்பட்ட திருவாதிரைத் திருவிழாவின் சிறப்பினை விரிவாக இப்பதிகம் விளக்குகிறது. இப்பதிகத்தின் ஒவ்வாரு பாடலும் “ஆரூர் ஆதிரை நாளால் அது வண்ணம் “ என்னும் ஈற்றடி கொண்டது.

“நணியார் சேயார் நல்லார் தீயார் நாடோறும்

பிணிதான் தீரும் என்று பிறங்கிக் கிடப்பாரும்

மணியே பொன்னே மைந்தா மணாளா என்பார்கடகு

அணியான் ஆரூர் ஆதிரை நாளால் அது வண்ணம்”

என்பது அந்தப் பதிகப் பாடல்களில் ஒன்று.

திருவாசகத்தில் திருவெம்பாவையில் ‘மார்கழி நீராடேல் ஓர் எம்பாவாய்” என்று வருவதையும், திருவெம்பாவை திருவாதிரைத் திருநாளுடன் தொடர்புடைய ஒன்று என்பதையும் அனைவரும் அறிவர்.

சேக்கிழாரின் பெரியபுராணத்தில் திருநாவுக்கரசர் புராணம் (1505), திருஞானசம்பந்தர் புராணம்(2398) ஆகிய புராணங்களில் திருவாதிரைத் திருநாள் பற்றிய குறிப்பு வருகின்றது. திருப்புகலூரில் திருஞானசம்பந்தரைத் திருநாவுக்கரசர் திருவாரூரிலிருந்து வந்து சந்திக்கிறார். அப்போது சம்பந்தர் திருவாரூர்ச் சிறப்புப் பற்றி வினவ அதற்குத் திருநாவுக்கரசர் முன்னே குறிப்பிட்ட திருவாதிரைப் பதிகம் பாடி ஆதிரை நாள் சிறப்பைக் குறிப்பிட்டார் எனச் சேகிழார் கூறுகிறார்.

“மேவு திருவாதிரை நாள் வீதி

விடங்கப் பெருமான் பவனி தன்னில்

தேவர்கள் முனிவர்கள் முன் சேவிக்கும்

அடியார்களுடன் சேவித்து

மூவுலகும் களிகூர வரும் பெருமை

முறைமையெலாம் கண்டு போற்றி

நாவினுக்குத் தனியரசர்

நயக்கும் நாள்......"

"சித்தம் நிலாவும் தென்

திரு ஆரூர் நகராளும்

மைத்தழை கண்டர் ஆதிரை

நாளின் மகிழ் செல்வம்

இத்தகைமைத்து என்று

என் மொழிகேன்" (1505)

என்று "திருவாதிரை நிகழ் செல்வம் சொன்னார்" இந்தப் பாடல்களில் சேக்கிழார் திருவாதிரை நாளில் திருவாரூரில் செய்யப்படும் வழிபாடுதான் உண்மையான செல்வம் என்று போற்றுகிறார். "செல்வத்துட் செல்வம் செவிச் செல்வம்" என்றும் "அருட் செல்வம் செல்வத்துட் செல்வம்" என்றும் கேள்வியையும் அருளையும் திருவள்ளுவர் குறிப்பிடுகின்றார். பக்திக் காலத்தில் "செல்வன் கழலேத்தும் செல்வம் செல்வமே" என்று ஞானசம்பந்தர் பாடுகின்றார். வழிபாடுதான் சிறந்த செல்வமாகக் கருதப்பெற்றது. "மண்ணிற் பிறந்தார் பெறும் பயன், மதிசூடும் அண்ணலார் அடியார்தமை அமுது செய்வித்தல், கண்ணினால் அவர் நல்விழாக் காணுதல்". எனவே திருவாதிரை நாள் வழிபாடு சிறந்த செல்வமாக, மானிடப் பிறவியின் மாண்புறு பயனாக் கருதப்பட்ட நிலையை இங்கே காணுகிறோம்.

திருவாதிரை நாளை ஒட்டிச் சைவ சமயச் செந்நெறிக்கு இரண்டு நூல்கள் கிடைத்துள்ளன. ஒன்று திருப்பல்லாண்டு , மற்றொன்று கொடிக்கவி. முன்னையது தோத்திரம், பின்னையது சாத்திரம். திருப்பல்லாண்டு பாடியவர் சேந்தனார். இவர் சிதம்பரத்தில் விறகு வெட்டி விற்று வரும் லாபத்தில் நாள் தோறும் சிவனடியார்க்கு உணவிட்டுப் பின் உண்ணும் நெறியினர். ஒருநாள் இரவு நடராசப் பெருமானே சிவனடியாராக இவரிடம் சென்று களியுண்டு (கூழுண்டு) அந்தக் களியை மறுநாள் தம்

திருமேனியில் காட்டிச் சேந்தனார் பெருமையை உலகுக்கு வெளிப்படுத்தினார். இந்த அற்புதம் அவரால் நிகழ்ந்ததோ என்று ஐயம் கொண்டவர்ககு ஐயம் நீங்கத் திருவாதிரை நாளன்று ஓடும் தம் திருத்தேரை அழுந்தச் செய்து சேந்தனார் திருப்பல்லாண்டு பாடத் திரும்பத் தேரை ஓடச் செய்தார் நடேசப் பெருமான். மன்னுயிர் அனைத்தையும் வாழ்த்தும் மாண்புடைய திருப்பல்லாண்டு - இறைவனை வாழ்த்தும் திருப்பல்லாண்டு எழுந்த நாள் திருவாதிரை நன்னாளே ஆகும். திருப்பல்லாண்டு ஒன்பதாம் திருமுறையிலுள்ள பதிகம். எனினும் பஞ்சபுராணத்தில் ஒன்றாக வைத்துப் பாடப் பெறும் சிறப்புடையது. திருவாதிரை நாளில் திருவாதிரைக் களி வைப்பதற்குரிய காரணமும் இப்போது விளங்கும்.

"அவிழ்ந்த துணியில் அவிழ்ந்த அவிழை

அவிழ்ந்த மனத்தால் அவிழ்க்க அவிழ்ந்த சடை

வேந்தனார்க்கு இன்னமுத மாயிற்றே மெய்யன்பில்

சேந்தனார் செய்த செயல்" (53)

என்று திருக்களிற்றுப்படியார் சேந்தனார் பெருமையைச் செப்புகிறது. கொடிக்கவி என்பது சைவ சித்தாந்த சாத்திரங்களில் ஒன்று. அளவால் மிகச் சிறியது. கட்டளைக் கலித்துறை ஒரு பாடலும் 3 வெண்பாக்களும் கொண்ட ஒரு சிறிய நூல். இதனை இயற்றியவர் உமாபதி சிவாச்சாரியார். கி.பி. 14ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். தில்லைத் தீட்சிதர்களில் ஒருவர். இவர் மறைஞான சம்பந்தர் என்னும் வேளாளரைத் தம் குருவாகக் கொண்ட காரணத்தால் தில்லைத் தீட்சிதர்கள் இவரை ஒதுக்கி வைத்துவிட்டனர். இது பொறாது நடராசப் பெருமான் திருவாதிரைத் திருநாளில் கொடியேறாது தடைப்படுத்தித் தீட்சிதர்களிடம் அசரீரி வாயிலாக உமாபதி சிவாச்சாரியாரை அழைத்து வந்து கொடிக்கவி பாடுமாறு பணித்தனன். அதன்படி உமாபதியார் வந்து கொடிக்கவி பாடியதும் கொடியேறி விழா நடந்தது. எனவே கொடிக்கவி என்னும் சாத்திர நூல் தோன்றுவதற்குத் திருவாதிரை நாள் காரணமாய் இருந்திருக்கிறது. கொடிக்கவியில் உள்ள ஒரு பாடல் வருமாறு.

"அஞ்சு எழுத்தும் எட்டு எழுத்தும்

ஆறு எழுத்தும் நால் எழுத்தும்

பிஞ்சு எழுத்தும் மேலைப்

பெருவெழுத்தும்- நெஞ்சமுத்திப்

பேசும் எழுத்துடனே பேசா

எழுத்தினையும்

கூசாமல் காட்டக் கொடி"

**சமய நோக்கில்** -

“மாதங்களில் நான் மார்கழி” என்பது கீதை வாக்கு. மார்கழி மாதம் திருவாதிரைத் திருநாளை ஒட்டிப் பத்து நாட்கள் திருவெம்பாவை கோயில்களில் ஓதப்படுகின்றன. ஓதுவார்கள் இந்தப் பத்து நாட்களும் ஏனைய திருமுறைப் பாடல்களுக்குத் திருக் காப்பிட்டு வைத்துவிட்டுத் திருவெம்பாவை மட்டுமே ஓதுவர். திருவெம்பாவை என்பது பரிபாடலில் கூறப்பட்ட அம்பா ஆடலுடன் தொடர்புடையது. மார்கழியில் கன்னிப் பெண்கள் பாவை ஒன்று செய்து நாள்தோறும் காலையில் எழுந்து சென்று குளித்து விட்டு நோன்பு நோற்று வழிபடுவர். இந்த நோன்பின் நோக்கம் இரண்டு. ஒன்று நாடு செழிக்க நல்ல மழை பெய்ய வேண்டும், இன்னொன்று வீடு செழிக்க நல்ல கணவனை வாய்க்க வேண்டுதல் ( சிவனடியார்கள் தாம் கணவனாக வர வேண்டுதல்)

பரிபாடலில் தைநீராடல் என்ற ஒன்று சுட்டப் பட்டுள்ளது. அதன் வளர்ச்சியே மார்கழி நீராடல் என்று கூறுவர். கன்னிப் பெண்கள் காலையில் எழுந்து ஒருவரை ஒருவர் எழுப்பிச் சென்று பொய்கையில் சிவன் பெருமைபாடி நீராடுதலை இது சுட்டும். “மார்கழி நீராடேல் ஓர் எம் பாவாய்” என்று திருவெம்பாவையில் இது பேசப்படுகிறது.

திருவாதிரை சிவபெருமானுக்குகந்த விரதங்களில் ஒன்று. மார்கழித் திருவாதிரை நாள் தொடங்கி, அடுத்த மார்கழித் திருவாதிரை வரை இருக்க வேண்டிய ஒன்று. உபதேச காண்டத்தில் இதுபற்றிச் சொல்லப் பட்டிருக்கிறது.

“செவ்வழிச் சின்மயச் சிதம்பரத் தலத்து

இவ்வழி இந்த நோன்பியற்று வாரவர்

வௌவழித் தன்மைய வினையின் நீங்கி மற்று

உய்வழி அருங்கதி ஒடுங்குவார்களே”

இவ்விரதம் இருந்து முருகன், வியாக்ரபாதர், விஜயன் சிறப்புற்றதாகக் கூறுவர்.

திருவாதிரை அன்று தரிசனம் தரப்பெறும். தரிசனம் என்றால் திருவருட் காட்சி. நடராசப் பெருமான் தன் நடனக் காட்சியை முதலில் உமையம்மையாருக்குக் காட்டினார். பிறகு முப்பத்து முக்கோடி தேவர்களுக்குக் காட்டினார். முப்பத்து முக்கோடி தேவர்கள் பசுமாட்டில் உறைவதாக நம்புவதால்தான் தரிசனத்தன்று முதலில் பசு மாட்டிற்குக் காட்சி கொடுக்கப் படுகின்றது. பிறகு பதஞ்சலி, வியாக்ரபாதர் வேண்டுகோளுக்காகத் தில்லையில் மண்ணுலகில் சிதம்பரத்தில் நடனக் காட்சி காட்டினார். பிறகு மாணிக்க வாசகப் பெருமான் அம்பலவாணர் காட்சியைக் காட்டினார். அவர் ஆன்மாக்களாகிய

நமக்குக் காட்சி அளிக்குமாறு நடராசப் பெருமானை உமையம்மையாருடன் அழைத்து வந்து காட்சி கொடுக்கச் செய்கிறார். இதனால்தான் திருவாதிரைத் தரிசனம் என்று இவ்விழா அழைக்கப் படுகின்றது. நடராசப் பெருமானுக்கு ஆண்டுக்கு ஆறுமுறை அபிடேகம் நடக்கும். திருவாதிரை நாள் அபிடேக நாட்களில் ஒன்று.

**சமுதாய நோக்கில் -**

நகரத்தார் மரபினர் கன்னிப் பெண்களுக்குச் செய்யப்படும் திருவாதிரைச் சடங்கு இப்போது இரண்டு நாட்கள் மார்கழித் திருவாதிரை அன்றும், மறுநாள் அன்றும் நடத்தப் படுகின்றது. முதல் நாள் அன்று மணிமேகலையில் கூறப்படும் ஆதிரை நல்லாளை வழிபாடு செய்து கொண்டாடப்படும். கன்னிப் பெண்கள் வீடு வீடாகச் சென்று மங்கல மகளிரிடம் காய்கறி வாங்கி வந்து கூட்டாகச் சோறு சமைத்து ஆதிரையாளைக் கும்பிட்டு வழிபடுவர். அடுத்த நாள் நடராசப் பெருமான் தரிசனக் காட்சியின் போது கன்னிப் பெண்கள் மணப்பெண்கள் போல அணி செய்யப் பெற்று ஊர்வலமாக வருவர். இது திருவெம்பாவை நோன்புடன் தொடர்புடைய ஒன்று. நகரத்தார்கள் வழிவழிச் சைவர்கள் ஆதலினால் “எங்கொங்கை நின் அன்பர் அல்லார் தோள் சேரற்க, எங்கை உனக்கல்லாது எப்பணியும் செய்யற்க”(திருவெம்பாவை 19) என இறைவனை வேண்டுவதாகும். கன்னிப் பெண்களுக்குச் செய்து வந்த இச்சடங்குகள் இப்போது அருகியே காணப்படுகின்றன.

சேந்தனார்க்கு இறைவன் நடராசப் பெருமான் திருவாதிரை நாளில் களியுண்டு அருள் செயதது, திருப்பல்லாண்டு பாடச் செய்து தேரோடச் செய்தது ஆகிய நிகழ்ச்சிகள் சைவ சமயத்தில், இல்லாரும் உள்ளாரும் கீழ் நிலையிலுள்ளாரும் மேல் நிலையிலுள்ளாரும், திருவருளைப் பெறுவதற்கு எவ்விதத் தடையும் இலலை என்பதை உணர்த்துகின்றன.

“சாத்திரம் பல பேசும் சழக்கர்காள்

கோத்திரமும் குலமும் கொண்டு என் செய்வீர்,

பாத்திரம் சிவனென்று பணிதிரேல்

மாத்திரைக்குள் அருளும் மாற் பேறரே”

(திருநாவுக்கரசர் தேவாரம்)

என்பது திருமுறை வாக்கு. சைவத்தில் கடையனுக்கும் கடைத்தேற்றம் உண்டு என்பதை இந்நிகழ்ச்சிகள் காட்டுகின்றன.

உமாபதி சிவாச்சாரியார் வாழ்வில் நடந்த கொடிக்கவி நிகழ்ச்சி குருவாகக் கொள்வதற்குக் குலத்தாழ்ச்சி உயர்ச்சி கருதுதல் பாவம் என்னும் கோட்பாட்டை

வலியுறுத்துகிறது. குருவாகக் கொள்ளத் தகுதி - அறிவும் அருளும் ஒழுக்கமும் பெற்ற தகுதிதான் பார்க்க வேண்டுமே ஒழியப் பிறப்பு வேறுபாடு கருதக் கூடாது. அப்பூதி அடிகளாகிய அந்தணர் திருநாவுக்கரசராகிய வேளாளரைக் குருவாகக் கொண்டு வழிபட்டதைப் பெரிய புராணம் காட்டவில்லையா என்ன?

**<u>தத்துவ நோக்கில் -</u>**

தத்துவ நோக்கில் திருவாதிரை என்னும் தொடரைப் பார்ப்போம். இத்தொடரில் திரு ஆ திரை என்னும் மூன்று சொற்கள் இருப்பதைக் காண முடிகிறது. திரு என்பது சிவத்தை - இறைவனைக் குறிக்கும். "திருவே என் செல்வமே" என்னும் திருநாவுக்கரசர் தேவாரத் தொடரை நோக்குக. திரு என்பது திருவருளையும் குறிக்கும். "சென்றடையாத திருவுடையான்i' என்னும் திருஞானசம்பந்தர் தேவாரத் தொடரையும் "கேடும் ஆக்கமும் கெட்ட திருவினார்" என்னும் பெரியபுராணத் தொடரையும் பார்க்க. ஆ என்பது பசு,ஆன்மாக்களாகிய உயிர்களைக் குறிக்கும். திரை என்பது தடை - தளை, அதாவது ஆன்மா இறைவனை அடைய விடாது இடையில் இருக்கும் பாசம். எனவே திரு ஆ திரை என்பது பதி, பசு, பாசம் என்னும் சைவ சித்தாந்தக் கோட்பாடு வலியுறுத்தும் முப்பொருள் உண்மையையும் உணர்த்துகிற்து. நம் ஆலயங்களில் சிவலிங்கம், நந்தி, பலிபீடம் ( பதி, பசு, பாசம்) இருக்கும் வரிசை முறையும் திரு ஆ திரை என்னும் சொற்களின் வரிசை முறையையும் உணர்த்துகிறது. எனவே திருவாதிரை என்பது நம் கோயில் தத்துவத்தின் உயிர் நாடியையும் சுட்டுவதாக உள்ளது.

திருவெம்பாவையில் பாவை நோன்பு நோற்கும் பெண்கள் ஒருவர் எழுந்து மற்றொருவருடன் சேர்ந்து ஒருவர் இருவர் மூவர் என்று கூட்டமாக ஒவ்வொருவர் இல்லத்திற்கும் சென்று அங்குத் துயின்று கொண்டிருக்கும் தம் தோழிமாரை எழுப்பிச் சென்று நீராடுவதைப் பார்க்கிறோம். அதாவது பக்குவம் பெற்ற ஆன்மா பக்குவம் பெறாத ஆன்மாவைத் தட்டி எழுப்பிக் கண்ணைத் துயின்று அவமே காலத்தைப் போக்காதே, விண்ணுக்குஒரு மருந்தை வேத விழுப்பொருளைக் கண்ணுக்கு இனியானைப் பாடிக் கசிந்துருகுமாறு தூண்டுவதாகக் கொள்ள வேண்டும். இறுதியில் எல்லோரும் நீராடுவதை இறைவனின் திருவருட் பொய்கையில் திளைப்பதாகக் கருத வேண்டும்.

திருவெம்பாவையின் தத்துவம் சக்தியை வியத்தது ஆகும். சக்தி என்பது திருவருளைக் குறிக்கும். பொய்கை திருவருட் சக்தியைக் குறிக்கும். மழை என்பதும் திருவருளையே சுட்டும். இறுதிப் பாடலில் எட்டுப் போற்றிகள் இடம் பெற்றுள்ள்ன. முதல் இரண்டு இறைவனின் தோற்றம், ஒடுக்கம் ஆகியவற்றை வாழ்த்துகின்றன. அடுத்த ஐந்து போற்றிகளும் இறைவனின் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய ஐந்தொழில்களைப் போற்றுகின்றன. எட்டாவது மார்கழி நீராடலை, வழிபாட்டுக்கு வழிவகுத்த மார்கழி நீராடலைப் போற்றுகிறது. இறைவன் தொழிற்பட இயங்கும் நிலைதானே சக்தியடன் கூடிய நிலை? எனவே இந்த நிலையை வியக்கும் போது போற்றும்போது சக்தியை வியத்ததாகின்றது.

திருவெம்பாவைக்கு உரை எழுதிய பேராசிரியரகள் சிலர் மனோன்மணி முதலிய நவசக்திகளை எழுப்பி வழிபடுவதாகவும் திருவெம்பாவையின் முதற்பகுதிக்கு விளக்கம் தருவர்.

**பண்பாட்டு நோக்கில் -**

திருவாதிரையை ஒட்டித் தோன்றிய திருவெம்பாவைத் திருவிழா தமிழகத்தைத் தாண்டிக் கடல் கடந்து தாய்லாந்து நாட்டுக்குச் சென்று கொண்டாடப் பெறும் நிலையைத் தான் பண்பாட்டு நோக்கு என்று கூறுகிறோம். “தாய்லாந்தின் திருவெம்பாவை திருப்பாவைத் திருவிழா”பற்றி மலாயாப் பல்கலைக் கழகஇந்தியத் துறைப் பேராசிரியர் ச.சிங்காரவேலு அவர்கள் ஆய்வுகள் செய்துபல கட்டுரைகள் எழுதியுள்ளார். தாய்லாந்தில் கொண்டாடப் படும் திருவெம்பாவை திருப்பாவைத் திருவிழா அந்நாட்டு மொழியில் “லோஜின்ஜா” என்று அழைக்கப் பட்டது. இதற்குப் பொருள் ஊஞ்சலை வலித்தல் என்பதாகும். இது ஊஞ்சல் திருவிழா. தைமாதத்தில் கொண்டாடப் பட்டது. உயரமான ஊஞ்சலில் ஆடுபவர்கள் அருகே மூங்கில் கழியில் கட்டப்பட்ட பொற்கிழியைப் பல்லால் கடித்துப் பெறுவர். ஊஞ்சல் ஆடும் இடத்தின் அருகே சிவன், விஷ்ணு, கணேசர் கோயில்கள் உள்ளன. ஊஞ்சல் ஆடும்போது சங்கம் ஒலிக்கப் பெறும் கோயில் சடங்குகளின்போது திருவெம்பாவை, திருப்பாவைப் பாடல்கள் அரச அந்தணரால் ஓதப்பெறும். இவ்விழாவின் நோக்கம் சிவன் நிலவுலகிற்கு வருகை தந்து வரம் அளிப்பதாகும். இதனைத் தாய்லாந்து அரசரே அவ்விழாவிற்கு வருகை தந்து சிவனாகக் காட்சி அளிப்பதன் மூலம் உணர்த்தினர். அவ்வாறு அரசர் சிவனாக வீற்றிருக்கும்போது பாவைப் பாடல்கள் ஓதப் பெற்றன. மக்கள் மண்டியிட்டு வணங்கினர். அரசர்கள் அவர்களுக்குப் பரிசுகள் அளித்தனர். இப்பரிசளிப்பு சிவன் வரந்தருதற்கு நேராகும். ஊஞ்சல் விழாவிற்குப் பின் மழைத் திருவிழா நடக்கும். அப்போது ஊஞ்சலாடியவர்கள் மாட்டுக் கொம்பினைக் கையில் ஏந்தித் தண்ணீர்த் தொட்டியைச் சுற்றி நடனமாடிக் கொண்டு கொம்பில் நீரை நிரப்பி வாரி இறைப்பர். இந்த ஊஞ்சலாட்டமும் மழை நடனமும் திருவெம்பாவை - திருப்பாவை தொடர்படையன. ஊஞ்சல் கிழக்கு மேற்காக ஆடுவது ஆதிரையானான சிவபெருமானைக் குறிக்கும். நீர்த்தொட்டியில் நீராடுவது திருவெம்பாவையில் இடம் பெறும் குடைந்து குடைந்து நீராடுதலை உணர்த்தும். இல்லங்கள் தோறும் எழுந்தருளுதல் என்னும் திருவெம்பாவைக் கருத்து அரசன் சிவனாக வருதலுடன் ஒத்துள்ளது. அரசனின் இறைத் தன்மையை உணர்த்துகிறது. (சிங்காரவேலு. ச) இந்த ஆய்வுக் கருத்துகள் திருவெம்பாவை தென்கிழக்கு நாடுகளில் பெற்ற செல்வாக்கை - பண்பாட்டுச் செல்வாக்கை நமக்கு நன்குணர்த்துகின்றன.

**முடிவுரை-**

எண் குணத்தனாகவும் எண் வடிவினனாகவும் இலங்கும் இறைவனாகிய சிவபெருமானுக்கு உகந்த நட்சத்திரமாகிய திருவாதிரையையும் மொழியியல், அறிவியல், சோதிடம், இலக்கியம், சமயம், சமுதாயம், தத்துவம், பண்பாடு ஆகிய எண்கோணங்களில் நோக்கி ஆராயும் இக்கட்டுரை வழி திருவாதிரையின் சிறப்பு நன்கு

வெளிப்படும். ஆதிரையின் பெருமையை அறிந்து ஆதிரையானாகிய சிவனை மனத்தால் நினைந்து, வாயால் துதித்து, மெய்யால் வழிபட்டு முன்னேறுவோமாக.


**துணை நூல்கள்** -

1. திருக்குறள்
2. சென்னைப் பல்கலைக் கழகப் பேரகராதி
3. தமிழ்க் கலைக் களஞ்சியம்
4. சோதிட அரிச்சுவடி
5. அபிதான சிந்தாமணி
6. பரிபாடல்
7. கலித்தொகை
8. முத்தொள்ளாயிரம்
9. திருஞானசம்பந்தர் தேவாரம்.
10. பெரியபுராணம்.
11. திருக்களிற்றுப்படியார்
12. உபதேச காண்டம்.
13. தாய்லாந்தில் திருவெம்பாவை திருப்பாவைத் திருவிழா
   பேராசிரியர் ச.சிங்காரவேலு.



Thinnappan, SP. Greatness of Thiruvadhirai. In:
Saivam Kandhaiya Commemoration Volume ,Malaya
Arulneri Thirukkuttham, Kuala Lumpur (1994) pp 92-99 (Tamil)


-

# தைப்பூசத் திருவிழா

தைமாதத்தில் பூச நட்சத்திரமும் பௌர்ணமி திதியும் ஒன்றாகக் கூடும் நாள் தைப்பூச நன்னாளாகும். இந்நன்னாளில்தான் தைப்பூச விழாக் கொண்டாடப் பெறுகிறது. இப்பூச விழா தமிழகத்தில் மட்டுமின்றித் தமிழர்கள் வாழும் இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், பர்மா, இந்தோனேசியா முதலிய இடங்களிலும் சிறப்பாகக் கொண்டாடப் பெறுகிறது. இவ்விழாவின் ஏற்றம் பற்றி ஈண்டுச் சிறிது சிந்திப்போம்.

**குருவருள் -**

தேவர்களின் குருவாக விளங்கும் வியாழ பகவானாகிய பிரகஸ்பதி அறிவின் தேவதை என்று இந்துக்கள் நம்புவதால் பூச நட்சத்திரத்தை வணங்கினால் பிரகஸ்பதியின் அருள் கிடைக்கும் என்பர். தேவர்க்கு மட்டுமின்றி மூவர்க்கும் யாவர்க்கும் மூலமுதற் குருவாக - வாலறிவன் சொரூபமாக விளங்குபவன் முருகப் பெருமான். எனவேதான் "குருவாய் வருவாய் அருள்வாய் குகனே" என்றழைக்கிறார் அருணகிரியார். ஆறுபடை வீடுகளுள் ஒன்றாகும் திருவேரகப் பதியாகிய சுவாமி மலையில் முருகப் பெருமான் குருவாய் இருந்து பிரணவப் பொருளைச் சிவபெருமானுக்கு உரைத்த செய்தியும் சிந்திக்கத் தக்க ஒன்று. அங்கு வியாழக்கிழமை அவனுக்கு உகந்த நாளாகக் கருதப் படுவதையும் காண்க. எனவே முருகப் பெருமானைத் தைப்பூச நன்னாளில் வழிபடுவதால் குருவருள் பெறலாம். அதன்வழி இறைவன் திருவருள் அடையலாம்.

**அறிவும் ஆற்றலும் -**

முருகப் பெருமான் சூரபன்மனாகிய அரக்கனை அழிப்பதற்குத் தம் தாயாகிய சத்தியிடமிருந்து வேல் பெற்ற நாள் தைப்பூச நன்னாள் என்பர். இது புராணக் கதையாக இருப்பினும் இதனூடே ஒரு தத்துவம் புதைந்து கிடக்கிறது. இங்கே அரக்கன் என்பது ஆணவத்தை - அறியாமையை உணர்த்துகின்றது. ஆணவம் என்பதை "யான் எனது என்னும் செருக்கு " என்று சுருக்கமாகக் கூறலாம். ஆணவம் என்னும் அரக்கனை அழிக்க அறிவும் ஆற்றலும் தேவை. இங்கே வேல் என்பது அறிவை - ஞானத்தைக் குறிக்கிறது. வேல் என்பது நுனியில் கூர்மையாவது, இலை போன்று அகன்றது, பாயும் போது ஆழமாகச் செல்வது, கூர்மை, அகலம், ஆழம் ஆகிய மூன்று பண்புகளும் அறிவுக்கும் உண்டு. ஆழ்ந்தகன்ற நுண்ணிய அறிவுதான் - ஞானம் தான் - ஆணவத்தை வெல்ல உதவும் ஆயுதம் ஆகும். அந்த ஆயுதமும் ஆற்றல் பெற்றதாக அமைய வேண்டும். அந்த ஆற்றல்தான இங்கே சக்தி . மன உறுதியே சக்தி, வீரமே சக்தி. எனவே சக்தியிடமிருந்து வேல் வாங்கிச் சூரபன்மனை அழித்தல் என்பது மனஉறுதியுடன் அறிவென்னும் - ஞானமென்னும் - ஆயுதத்தால் ஆணவம் என்னும் அரக்கனை அழித்தல் என்பதைக் குறிக்கும். ஆணவம் அழியும்போது வீடுபேறாகிய பேரின்பம் கிட்டும். இந்தத் தத்துவத்தைத் தான் தைப்பூசத் திருவிih நமக்கு நினைவூட்டுகின்றது. இந்த நினைப்புடன் தைப்பூசம் கொண்டாடப் பெறுதல் வேண்டும். வீரவேல், தாரைவேல், விண்ணோர் சிறை மீட்ட தீரவேல், செவ்வேல், திருக்கைவேல், வாரி குவித்த வேல், கொற்றவேல், சூர்மார்பும்

குன்றும் துளைத்த வேல் என்று திருமுருகாற்றுப் படை வேலின் பெருமையை விளம்பும். இந்த நினைவைத் திருப்பூசவிழா நமக்குத் தர வேண்டும்.

**<u>எழுஞாயிறு -</u>**

தேவர்களுக்கு ஆடி மாதம் முதல் மார்கழி மாதம் ஈறாக இராக்காலம் என்றும், தைமாதம் முதல் ஆனி மாதம் ஈறாகப் பகற்காலம் என்றும் தை மாதம் ஒளியைத் தரக்கூடிய எழு ஞாயிறு தோன்றும் உதய காலம் என்றும் ஆன்றோர் கூறுவர். மார்கழி மாதத்தில் திருப்பள்ளி எழுச்சி நடைபெறுவதும் காண்க. முருகப் பெருமான் விண்ணோர்க்கு மட்டுமின்றி மண்ணோர்க்கும் விடிஞாயிறு எனத் திகழ்பவன். “உலகம் உவப்ப வலனேர்பு திரிதரு, பலர்புகழ் ஞாயிறு கடற் கண்டா அங்கு ஓஅற இமைக்கும் சேண்விளங் கவிரொளி” என்று நக்கீரர் அவனை எழு ஞாயிறாகக் கண்டு இன்புறுகிறார். முருகப் பெருமானுக்கு இவ்வகையிலும் தைப்பூச நன்னாள் உகந்ததாகிறது.

**<u>அன்பே சிவம் _</u>**

தைப்பூசம் சிவபெருமானுக்குரிய நாளாகவும் அமைகிறது. தைந்நீராடல் என்ற நோன்பு பற்றிச் சங்க இலக்கியங்கள் பேசுகின்றன. தைப்பூச நன்னாளில் புண்ணிய நதிகளில் நீராடினால் மிகுந்த புண்ணியம் கிடைக்கும் என்ற நம்பிக்கையும் இந்துக்களிடம் நிலவுகிறது. தஞ்சை மாவட்டத்தில் திருவிடை மருதூரில் தைப்பூச விழாவன்று கோயிலிலுள்ள சித்த தீர்த்தத்தில் முழுகுவதும். வில்வ மரத்தைச் சுற்றி வருவதும் சுவாமி தெரிசனம் செய்வதும் பாவங்களைப் போக்கும் என்பர். “பூசம் புகுந்தாடிப் பொலிந்து அழகாய ஈசன் உறைகின்ற இடைமருது ஈதோ” என்று திருஞான சம்பந்தர் கூறுகின்றார். நெல்லை மாவட்டத்தில் தாமிரபரணி நதியில் தைப்பூச நாளன்று தீர்த்தமாடுவதும் நலம் தரும் என்று நம்புகின்றனர். இங்கே சிவம் என்பது அன்பையே குறிக்கும். அன்பே சிவம் என்பார் திருமூலர். எனவே அன்பு என்னும் பொய்கையில் நாம் அனைவரும் மூழ்கி நீராட வேண்டும். அவ்வாறு நீராடினால் சிவத்தின் திருவருள் நமக்குக் கிடைக்கும் என்பதைத் தைப்பூசவிழா நமக்கு நினைவுறுத்துகின்றது. “அன்பரால் அன்றித் தேவரும் மூவரும் அறிய ஒண்ணாச் சோதியான்” என்பது திருவாசகம். எனவே அன்பு வழிபாடு ஒன்றே ஆண்டவனின் திருவடி அடைய ஏற்ற வழியாகும் என்பதையும் இவ்விழா நமக்குணர்ததுகிறது.

**<u>நடராசர் -</u>**

தில்லைவாழ் அந்தணர்க்கும், மனுமகன் இரணியவர்மனுக்கும், பதஞ்சலி, வியாக்ரபாதர்க்கும், தில்லை நடராசப் பெருமான் தன் எல்லையில தனிப்பெரும் பேரின்பக் கூத்தாகிய திருநடனக் காட்சியைக் காட்டிய நாளும் தைப்பூச நன்னாளே ஆகும். தில்லையில் அத்திருவிழா இன்றும் கொண்டாடப் படுகிறது. தமிழர்கள் உலகுக்கு வழங்கிய சிற்ப நன்கொடைகளில் மிகச் சிறந்தது நடராச வடிவமே ஆகும். நடராச வடிவத்தில் பொதிந்து கிடக்கும் தத்துவ நுட்பங்கள் பலப்பல. இதனை ஆனந்தகுமாரசுவாமி என்னும் அறிஞர் ஆக்கிய நூல் ஒன்றில் விளக்கி உலகுக்கு நடராச

வடிவத்தின் உயர்வை உணர்த்தினார். நடராசப் பெருமானின் கையிலுள்ள உடுக்கை படைத்தல் தொழிலையும், அபயகரம் காத்தல் தொழிலையும், கையிலுள்ள தீ அழித்தல் தொழிலையும், ஊன்றிய திருவடி மறைத்தல் தொழிலையும், தூக்கிய திருவடி அருளல் தொழிலையும் குறிக்கும் என்பர். எனவே ஐந்தொழில் நுட்பம் உணர்த்தும் ஆனந்தத் தாண்டவ வடிவம் தோன்றிய நாளைத் தைப்பூசம் நமக்கு நினைவூட்டுகிறது.

**<u>ஞானசம்பந்தர் போற்றும் விழா -</u>**

திருமுறைகள் என்பது சைவர்களுக்குரிய தமிழ் மறையாகும். இந்த மறையின் தொடக்கம் தோடுடைய செவியன் என்னும் திருப்பாடலாகும். இப்பாடலைப் பாடியவர் திருஞானசம்பந்தர். இறைவன் திருவருளைத் தம் மூன்றாம் ஆண்டில் எய்தியவர். இத்தகைய ஞானசம்பந்தப் பெருமான் மயிலாப்பூரில் பூம்பாவையை எழுப்பப் பாடிய பதிகத்தில் "மைப்பூசும் ஒண்கண் மடநல்லார் மாமயிலைக், கைப்பூச நீற்றால் கபாலீச்சுரம் அமர்ந்தான், நெய்ப் பூசும் ஒண் புழுக்கல் நேரிழையார் கொண்டாடும், தைப்பூசம் காணாது போதியோ பூம்பாவாய்" என்று தைப்பூச விழாவைச் சிறப்பித்துப் பாடுகின்றார்.

**<u>சேந்தனார் இறைவனடி சேர்ந்த நாள்-</u>**

சைவத் திருமுறைகள் பன்னிரண்டில் முருகப் பெருமானைத் தலைவனாகக் கொண்டு பாடப் பெற்ற பாடல்கள் நக்கீரர் பாடிய திருமுருகாற்றுப்படையும், சேந்தனார் பாடிய திருவிடைக்கழி பற்றிய திருவிசைப் பாவும் ஆகும். முன்னது பதினோராம் திருமுறையிலும், பின்னது ஒன்பதாம் திருமுறையிலும் உள்ளன. பட்டினத்தடிகளின் கணக்கராக விளங்கியவர் சேந்தனார். தில்லைப் பெருமானிடத்து எல்லையில்லா அன்புடையவர். தில்லைத் திருவிழாவில் ஓடாது தடைப்பட்டு நின்ற தேரினைத் திருபபல்லாண்டு பாடி ஓடும்படி செய்தார். பின்னர்த் திருவிடைக்கழி என்னும் தலத்தை அடைந்து அங்கு குரா நிழற்கீழ் அமர்ந்த முருகப் பெருமான் மீது திருவிசைப்பா பாடியுள்ளார். இத்தகைய அடியார் இறைவனடி சேர்ந்த நாளும் தைப்பூச நன்னாளே ஆகும். எனவே தைப்பூச நன்னாள் திருவிடைக்கழியில் சிறப்பாகக் கொண்டாடப் பெறுகின்றது.

**<u>இராமலிங்கர் சோதி தரிசனம் காட்டிய நாள் -</u>**

வடலூர் வள்ளல் பெருமான் தனிப்பெருங் கருணையாளனாகிய இறைவனுக்கு அருட் பெருஞ்சோதி வழிபாட்டைத் தொடங்கி வைத்ததும் தைப்பூச நன்னாளில்தான். எனவேதான் அந்நன்நாளில் வடலூரில் பலமுறை சோதி தரிசனம் காட்டப் படுகின்றது. முருகப் பெருமான சோதி வடிவமாக விளங்குகின்றான் என்பதை, "அருவமும் உருவுமாகி அநாதியாய்ப் பலவாய் ஒன்றாய், பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பதோர் மேனியாகக் கருணைகூர் முகங்களாறும், கரங்கள் பன்னிரண்டும் கொண்டெ, ஒரு திருமுருகன் வந்தாங் குதித்தனன் உலகம் உய்ய" என்று கந்தபுராணம் பேசுகின்றது. அன்பே தகழியாக, ஆர்வமே நெய்யாக, என்புருகு சிந்தை இடுதிரியாக,நன்புருகி, ஞானச்சுடர் விளக்கேற்றி வழிபாடு செய்வதையும் தைப்பூச விழா தமிழர்க்கு நினைவூட்டுகிறது.

**ஞானியார் சுவாமிகள் பரிபூரணம் அடைந்த நாள் _**

சைவ வானில் ஒரு தனி ஞாயிறாகவும், தமிழுக்கு ஓர் தண்மதியாகவும் விளங்கிய ஞானியார் சுவாமிகள் ஒரு சிறந்த முருக பக்தர். அவர்கள் பரிபூரணமடைந்த நாளும் தைப்பூச நன்னாளே (1942) ஆகும்.

தமிழர்கள் கண்ட பக்தி என்னும் நாணயத்திற்கு இரண்டு பக்கங்கள் உண்டு. ஒருபக்கம் ஆண்டவன் வழிபாட்டினையும் மற்றொரு பக்கம் அடியார் வழிபாட்டினையும் குறிக்கும். இத்தகைய இரண்டு வழிபாட்டினையும் ஒருங்கே உணர்த்தும் ஆற்றல் தைப்பூச விழாவிற்கு உண்டு.

இவ்வாறு பல்லாற்றானும் சிறப்புடைய தைப்பூச நன்னாளில் முருகப் பெருமானை - பழநி ஆண்டவனை வழிபட்டு அவன் அடியார்களையும் அவனாகவே கண்டு வணங்கி, அவர்களுக்கு அமுது படைத்து, மகேஸ்வர பூசை செய்து வணங்குவது மண்ணனிற் பிறந்தார் பெறும் பெரும் பயனாகும். தமிழர்கள் முயற்சியினால் தைப்பூச நன்னாள் சிங்கப்பூர், கோலாலம்பூர் , பினாங்கு, இரங்கூன், செய்கோன் முதலிய கடல் கடந்த நகரங்களிலும் பெருவிழாவாகக் கொண்டாடப் படுகின்றது. இவ்வாறு இந்தியாவிலும் ஏனைய இடங்களிலும் தைப்பூச நன்னாளில் அண்ணலார் , அடியார் அமுது செய்வித்து விழாக்கண்ட தமிழர் குலம் தழைக்க முருகப் பெருமான் திருவருளை வணங்குகின்றேன்.

23 Thinnappan, SP. Thaippusam (Thaippusam Festival in various perspectives) In: Sri Thandayuthapani Temple Singapore Maha Kumbabishegam Souvenir Magazine, Sri Thandayuthapani Temple, Singapore (1996) pp 53-57 (Tamil)

# சைவத்தில் உலகம்

சைவ நெறியின் சால்பினை விளக்கும் தமிழ் நூல்களில் உலகம் பற்றி வரும் ஒரு சில கருத்துகளைச் சுட்டிக் காட்டுவதே இச்சிறு கட்டுரையின் நோக்கம்.

“நிலம், நீர் தீ வளி விசும்பு ஐந்தும் கலந்த மயக்கம் உலகம்” என வரையறை கூறியது தமிழ் முதல் நூலாகிய தொல்காப்பியம். “உலகம் உவப்ப வலனேர்பு திரிதரு பலர்புகழ் ஞாயிறு கடற்கண்டாங்கு” என்று சங்கப் புலவர் பெருமகனார் நக்கீரர் சைவ முதல் நூலாகிய திருமுருகாற்றுப் படையைத் தொடங்குகிறார். பத்துப்பாட்டின் முதற்பாட்டு திருமுருகாற்றுப்படை. சைவ முதல் நூலாகத் திகழும் சால்பும் அதற்குண்டு. அவருக்கு நீலக்கடலில் காலைச் செங்கதிர் தோன்றும் காட்சி நீலமா மயிலின் மீது செவ்வேளாகிய முருகப் பெருமானின் தோற்றக் காட்சியை நினைவு படுத்துகிறது.

உலகைக் காட்டியே கடவுள் உண்மையை - அம்மை அப்பன் ஆற்றலை நிலைநாட்டுகிறது திருக்குறள். “அகர முதல எழுத்தெல்லாம் ஆதிபகவன் முதற்றே உலகு’’ என்பது திருக்குறள். இக்குறளில் எழுத்தெல்லாம் அகரம் முதலாகக் கொண்டிலங்குகின்றன. அதுபோல உலகம் ஆதிபகவனை முதலாகக் கொண்டு திகழ்கிறது என்னும் கருத்து அமைந்துள்ளது. “அகரமுதலானை’’ என்னும் திருமுறைத் தொடர் இக்கருத்தைவலியுறுத்தும். அ’ என்பது எழுத்தால் அகரம், எண்ணல் எட்டினையும் (தமிழில் எண் எட்டு என்பது அ வடிவம் தாங்கியது) குறிக்க வல்லது. “எட்டினோடு இரண்டறியாத என்னைப் பட்டி மண்டபம் பாங்கறிந்து ஏற்றினை) என்னும்’’ திருவாசகத் தொடரில் எட்டு என்பது ”அ” எனக் கொண்டு அது சிவனைக் குறிப்பதாகவும் கொள்வர். எட்டு என்பது எண் குணத்தானாகிய முழுமுதற் பொருளையும் குறிப்பதாகவும் கொள்ளலாம்.

திருமுறைத் தலைவர் ஞானசம்பந்தப் பெருமானின் அவதார நோக்கமே ,”தாவில் சராதம்எல்லாம் சிவம் பெருக்குவது’’ தான் என்பார் சேக்கிழார். (1929) “ஞாலம் நின் புகழே மிக வேண்டும் தென் ஆலவாயில் உறையும் எம் ஆதியே’’ என்று திருஞானசம்பந்தர் தம்தேவாரத்தில் மதுரைப் பதியின் உறையும் மகேசனை வேண்டுகிறார். திருஞானசம்பந்தர் இறைவன் அளித்த முத்துச் சிவிகையில் அஞ்செழுத்து ஓதி “ உலகெலாம் உய்ய ஏறினார்’’ என்றுதானே சேக்கிழார் பாடுகிறார். (1119)

தமிழ் மொழித் தலைவராகிய திருநாவுக்கரசர் பெருமான் அவதாரத்தைப் பாடும் போதும் சேக்கிழார், “அலகில் கலைத்துறை தழைப்ப அருந்தவத்தோர் நெறிவாழ உலகில் வரும் இருள்நீக்கி ஒளி விளங்கு கதிர் போல மலரும் மருணீக்கியார் வந்தவதாரம் செய்தார்’’(1288) என்று கூறுகிறரர். உலகின் மயக்கம் நீக்கியவர் தானே நாவுக்கரசர்.

சுந்தரர் அவதாரம் பற்றிப் பாடும் போது சேக்கிழார் , “உலகம் உய்யத் திரு அவதாரம் செய்வதாக’’த்தான் கூறுகிறார். (149)”உலகம் உய்யவும் சைவம் நின்று ஓங்கவும் அலகில் சீர் நம்பி ஆரூரர் பாடியது’’ அன்றோ திருத்தொண்டத் தொகை(50) அங்கு வரும் அடியார்கள்

அனைவரும் , “ஒருமையில் உலகை வெல்வார்’’(342) எனச் சிவபெருமானால் பாராட்டைப் பெற்றவர்கள். தென்னாடுடைய சிவனே போற்றி என்று கூறிச் சிவனை எந்நாட்டவர்கரும் பொதுமையாக்குகிறார் மாணிக்கவாசகப் பெருமான். “தாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வவையகம்’’ என்று திருமூலர் தாம் பெற்ற சிவனருட் செல்வத்தினை உலகிற்கு வாரி வழங்கிச் சென்றார்.

திருத்தொண்டர் பெருமை பேசும் பெரிய புராணத்திறகு நடராசப் பெருமான், “உலகெலாம்’’ என அடியெடுத்துக் கொடுத்தருளினார். அந்நூல் உலகெலாம் எனத் தொடங்கி உலகெலாம் என முழங்குகின்றதன்றோ. மேலும் 14 இடங்களில் இச்சொலைலைக் கையாண்டு சேக்கிழார் பெருமான் மேல்உலகம் 7 கீழ் உலகம் 7 ஆகிய 14 உலகிலும் சிவனடியார் சிறப்பைப் பெருக்க விழைகிறார்.

திருத்தொண்டத் தொகையில் வரும் 9 தொகை அடியார்களில் ஒருவராகிய அப்பாலும் அடிச்சார்ந்தார் பற்றிய விளக்கத்தில் சேக்கிழார் சிவனடியார் திருக்கூட்டத்தைக் காலம் இடம் கடந்த ஒன்றாகக் காட்ட முயல்கிறார். பின்னே வந்த தாயுமானார் “ சேரவாரும் செகத்தீரே’’ என்று உலக மக்களை நோக்கிச் சைவ நெறியில் சேர அழைப்பு விடுக்கின்றார். இராமலிங்கர் உலகெலாம் என்பதற்குப் பேருரை அளித்த பெரியார். தோத்திர நூல்களில் மட்டுமா உலகம் முதன்மை பெறுகிறது . சாத்திர நூல்களிலும் உலகம் .இடம் பெறுகின்றது.

சைவசித்தாந்தச் செந்நெறிக்கு முதனூலாகத் திகழும் சிவஞான போதத்தின் முதல் சூத்திரம் அவன் அவள் அது எனச் சுட்டிக் காட்டப்படும் அவ்வுலகம் சுட்டிக் காட்ட முடியாத இறைவனையே முதலாகக் கொண்டிருப்பதாகக் கூறுகிறது. திருக்களிற்றுப்படியார் என்னும் சாத்திர நூல் “அம்மையப்பரே உலகுக்கு அம்மையப்பர் என்று அறிக’’ என்று தொடங்குகிறது. சிவஞான சித்தியாரும் தொடக்கத்தில் அகிலம் ஈன்ற மாதினை ஒருபாகத்து அடக்கியவர் சிவபெருமான் (2) எனச் செப்புகிறது. இருபா இருபஃது என்னும் நூல்,

“கண்ணகன் ஞாலத்துக் கதிரவன்தான் என

வெண்ணெய்த் தோன்றிய மெய்கண்ட தேவா’’(2)

என விளிக்கிறது. ஏனைய சாத்திர நூல்களும் இவ்வாறு உலகு பற்றிப் பல இடங்களில் பரக்கப் பேசுகின்றன.

“தோத்திரமும் சாத்திரமும் ஆனார் தாமே ‘’ என்று இறைவனைப் போற்றுகிறார் நாவுக்கரசர். தோத்திரமும் சாத்திரமும் காட்டும் உலகைப் போற்றுவோம், உயிரினுள் உடனாகவும், ஒன்றாகவும், வேறாகவும் இலங்கும் சிவனை வழிபடுவோம், சிறப்பெய்துவோம்.

# “தமிழ் இலக்கியம் தரும் மாரியம்மன்”

மாரியம்மன் என்னும் சொற்றொடர் மாரி அம்மன் என்னும் இருசொற்களின் இணைப்பால் உருவான ஒன்றாகும். மாரி என்னும் சொல்லுக்கு மழை என்பது பொருள். அம்மன் என்னும் சொல் அம்மையை - சக்தியை- இறைவியைக் குறிக்கும். எனவே மாரிஅம்மன் என்பது மழையைத் தரவல்ல சக்தியாகிய இறைவியை உணர்த்தும் தொடர். மழைக்குரிய கடவுளை மாரிஅம்மன் என்று அழைத்தனர் நம் முன்னோர். மழையாகிய சக்தி - கடவுள் என்றும் பொருள் கூறலாம். நிலம், நீர், தீ, வளி (காற்று), விசும்பு (ஆகாயம்), ஐந்தும் சேர்ந்தது தான் உலகம். நிலத்தை நிலமகள் (பூமாதேவி) என்றும், தீயை அக்கினி தேவன் என்றும், காற்றை வருணன் என்றும் அழைத்துத் தெய்வங்களாக்கி வணங்கியதைப் போல நீர் தரும் மழையை மாரி என்று தெய்வத் திருவுருவம் கொடுத்து வணங்கினர். கல்வி தருபவளைக் கலைமகள் (சரஸ்வதி) என அழைக்கிறோம். திருவை (செல்வத்தை)த் தருபவளைத் திருமகள் அல்லது அலைமகள் (லெட்சுமி) என அழைக்கிறோம். மலையில் தோன்றிய உமையம்மையை மலைமகள் என அழைக்கிறோம். இவ்வாறே போர்மகள் , புகழ் மகள், சீர்மகள் என்றெல்லாம் பெண்ணாக உருவகிக்கிறோம். இப்படியே மழை தரும் மாரியம்மனை மழைமகள் என்று கூறுவதில் தவறு ஒன்றுமில்லை. வெப்பமாகிய வெம்மையைத் தவிர்த்துத் தட்பமாகிய குளிர்ச்சியைத் தரவல்லவளாகத் தானே மாரியம்மனை நாம் கருதுகிறோம். இத்தகைய மழைமகளாகிய மாரியம்மனை மழைக்குரியதாய் நம் தமிழ் இலக்கியம் எவ்வாறு சித்திரிக்கிறது என்பதைக் கோடிட்டுக் காட்டுவதே இக்கட்டுரையின் நோக்கம்.

**<u>சங்க இலக்கியம் காட்டும் மாரி -</u>**

சங்க .இலக்கியம் தமிழின் தங்க இலக்கியம், காலத்தாற் பழமை வாய்ந்தது. அகம், புறம் என்னும் இருபொருள் பற்றிப் பேசுவது. அகம் என்பதுகாதல் பற்றியும், புறம் என்பது காதலல்லாத போர், கொடை, சமூகம் முதலியவை பற்றியும் விளக்கும். புறத்தைப் பற்றிய நூல் புறநானூறு. இந்நூலில் கடையெழு வள்ளல்களில் சிறந்து விளங்கிய பாரியைப் பற்றிக் கபிலர் என்னும் புலவர் ஒரு பாடல் பாடியுள்ளார். பாரி ஒரு குறுநில மன்னன். கபிலர் தான் சங்க இலக்கியத்தில் மிகுதியான பாடல்களைப் பாடிய புலவர்.. படர்வதற்கு வழிஇல்லாது தவித்த முல்லைக்குத் தேரீந்த வள்ளல் பாரி. “இவனின் வள்ளல் தன்மையைப் பற்றிப் புகழ்ந்து பாரி பாரி என்று பலபடப் பாராட்டிய வண்ணம் புலவர்கள் இருக்கின்றனரே அவன் ஒருவன் மட்டும் தான் உலகைக் காப்பாற்ற இருக்கின்றானா? இல்லையே. மாரி என்று கூறப்படும் மழையும் தானே உலகைக் காப்பற்றுகிறது. அதனைப் புலவர்கள் புகழ மறந்து விட்டார்களா? என்று ஒரு கேள்வியைக் கேட்கிறார் கபிலர். கவிதை இதோ -

“பாரிபாரி என்று பல ஏத்தி

ஒருவற் புகழ்வர் செந்நாப் புலவர்

பாரி ஒருவனும் அல்லன்

மாரியும் உண்டு ஈண்டு உலகு புரப்பதுவே"

எனவே உலகைக் காப்பாற்றும் சக்தி மழைக்கு இருக்கிறது. அதுபோல உலகைக் காப்பாற்றும் அன்னையே மாரியம்மன் என்பதை இதன் வாயிலாக உணரமுடிகிறது.

அகப்பொருளாகிய காதலைப் பற்றிக் கூறும் சங்க இலக்கியங்களில் ஒன்று குறுந்தொகை. இதனை "நல்ல குறுந்தொகை '' என்று பாராட்டிப் பேசுவர் அறிஞர். அந்நூலில் காதலின் பெருமையை விளக்கும் ஒரு பாடலில் மழை வருகிறது.

"யாயும் ஞாயும் யாராகியரோ?

எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்

யானும் நீயும் எவ்வழி அறிதும்

செம்புலப் பெயல் நீர் போல

அன்புடை நெஞ்சம் தாம் கலந்தனவே''

என்னும் பாடலில் காதலன் காதலியைப் பார்த்து முன்பின் எவ்வித அறிமுகமோ உறவோ இல்லாத அவர்களிடையே காதல் மலர்ந்ததைக் கூறும்போது செம்மண்ணில் விழுந்த மழைநீர் போல நெஞ்சக் கலப்பு நிகழ்ந்ததைச் சுட்டிக் காட்டுகிறான். செம்மண் நிலம் கடினமானது. அதில் மேல் விழும் மழை நீர் அதன் கடினத் தன்மையைப் போக்கி நெகிழ வைக்கிறது. குழைய வைக்கிறது. பிறகுதான் அம்மண் பயிர் செய்ய ஏற்ற பண்புடையதாக மாறும். அதுபோல மாரியம்மனும் தன்னை வழிபடும் பக்தர்களின் நெஞ்சக் கனகல்லை நெகிழ்ந்துருகச் செய்பவள் ஆவாள். நம் மனத்திலுள்ள கடினத் தன்மையைத் தன் கருணை மழையால் உருக்கும் ஆற்றல் மாரியம்மனுக்கு உண்டு. கல்லைப் பிசைந்து கனியாக்கும் ஆற்றல் கடவுளாற்றல் அல்லவா?

**குறள் கூறும் மாரி -**

திருவள்ளுவர் இயற்றிய திருக்குறள் தமிழ்த் தாயின் திலகம் எனத் திகழ்வது. திருக்குறளில் கடவுள் வாழ்த்து என்பது முதல் அதிகாரம். அதனை அடுத்து வருவது வான் சிறப்பு என்னும் அதிகாரம். இந்த அதிகாரத்திலுள்ள பத்துக் குறள்களும் மழையின் மாண்பினைக் கூறுகின்றன. வான் என்பது மழை, சிறப்பு என்பது பெருமை. கடவுளை வாழ்த்திய பின்னர் கடவுளுக்கு அடுத்த நிலையில் மழையின் சிறப்பபைப் பேசுகிறார் திருவள்ளுவர் என்றால் அவர் மழைக்குக் கொடுத்துள்ள முக்கியத்துவம் நன்கு புலப்படுகிறது. உலகமும் உலகத்திற்கு உறுதியாகிய அறம், பொருள், இன்பம் ஆகிய மூன்றும் இயங்க வேண்டுமானால் மழை வேண்டும். எனவே உலகம் நீரின்றி அமையாது என்று கூறுகிறது வள்ளுவம். மழை உலகத்து உயிர்களின் பசியைப் போக்கும் உணவை விளைவிப்பதற்கு உறுதுணையாக இருப்பதுடன் அவற்றின் நீர் வேட்கையை நீக்கும்

உணவாகவும் இருக்கும் சிறப்புடையது அல்லவா? மழை இல்லாவிடில் உலகெங்கும் பசிப்பிணி தாண்டவமாடி உயிர்களைத் துன்புறுத்தும் . உழவர்கள் தொழில் செய்ய முடியாது. பசும்புல் கூட வளம் குன்றிவிடும். கோயில்களில் பூசை, திருவிழா நடக்க இயலாது. தானம் , தவம் ஆகிய செயல்களுக்கும் இடமில்லை. மழை பெய்யாமலோ அதிகமாகப் பெய்தோ கெடுக்கும் ஆற்றலுடையது. அதே சமயத்தில் கெட்டொழிந்தவனைத் திரும்ப எடுத்து நிறுத்தி வாழவைக்கும் வல்லமையும் மழைக்குண்டு. எனவே மழையைச் சாவாமைக்குக் காரணமாக இருக்கும் அமிழ்தம் என்றே உணர வேண்டும். இவை மழையின் பெருமையை விளக்க வந்த திருவள்ளுவரின் கருத்துகள். இக்கருத்துகள் அனைத்தும் மாரி அம்மனுக்கும் ஒப்புடையனவே. அவளின்றி ஓர் அணுவும் அசையாது. அவள் அருள் இல்லாவிடில் உலகத்தில் புல், பூண்டு கூடத் தழைக்காது போகும். அவளே பக்திக்குரிய குறியாகவும் , நெறியாகவும் ( means and end ) இருக்கும் பண்பினள். அவளருளாலே தான் அவளை வணங்க வேண்டும். நல்லவர்களை வாழவைக்கவும் அல்லவர்களை அழிக்கவும் வல்லவள் மாரி அம்மன். அவள் சக்தி. ஆதலால் எல்லாத் தொழிலுக்கும் இயக்கமாக , ஆற்றலாக இருந்து இயக்குபவள். அள்ள அள்ளக் குறையாத அருட் சுரங்கம் - கடல் அவள். குறைவிலா நிறைவாகவும் கோதிலா அமுதாகவும் அவள் திகழ்பவள். நினைத்தொறும் கூறுந்தொறும் பேசுந்தொறும் அனைத்தெலும்பு உள்ள நெக ஆனந்தத் தேன் சொரியும் இனிமைச் சுரங்கம் அவள். இம்மைப் பயனும் , மறுமைப் பயனும், சிற்றின்பமும், ஆனந்தத்தையம் அளிப்பவள் அவள். மழைக்குள்ள பண்புகள் அனைத்தையம் மாரி அம்மனுக்கும் பொருத்திப் பார்க்க வள்ளுவரின் வான்சிறப்பு அதிகாரம் வழிவகுக்கிறது.

உலகத்திற்குப் பயன்பட வாழ்தலைத் திருவள்ளுவர் ஒப்பரவறிதல் என்னும் அதிகாரத்தில் விளக்குகிறார். அந்த அதிகாரத்தின் முதற் குறள் -

"கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்டு

என்னாற்றுங் கொல்லோ உலகு " (41)

என்பது, உலகத்துக்கு நீருதவி செய்யும் மழைக்கு உலகம் என்ன கைம்மாறு செய்ய முடியும் என்று வள்ளுவர் இக்குறளில் ஒரு வினா எழுப்புகிறார். கைம்மாறு கருதாத மழை போல மாரி அம்மனும் தம் அன்பர்களுக்குக் கைம்மாறு கருதாது - பயன் கருதாது பல்லாற்றாலும் உதவி செய்கிறாள். அவளுக்கு அன்பர்கள் எவ்வகையில் நன்றி செலுத்த முடியும், "மாரியை நோக்கிக் கைமாறு இயற்றுமோ வையம்" என்று கம்பரும், "வான் செய்யும் நன்றிக்கு வையகத்ததோர் செய்யும் கைம்மாறு உண்டோ?" என்று பரஞ்சோதியாரும் வள்ளுவர் வழி நின்று இத்தகைய வினாக்கள் எழுப்பிக் கைம்மாறு கருதாது உதவி நிற்கும் மழையின் பெருங்குணத்தைப் பாராட்டி நிற்கின்றார்கள்.

**சிலம்பு செப்பும் மாரி -**

நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் என்று பாரதியாரால் பாராட்டப்படும் சிலப்பதிகாரம் தமிழில் தோன்றிய முதற் பெருங்காப்பியம். கற்பிற் சிறந்த கண்ணகியின்

கதையைக் கவிதை வடிவில் கூறும் நூல். இதனை இயற்றிய இளங்கோவடிகள் தம் நூலின் தொடக்கத்திலேயே மழையை வணங்கிப் போற்றுவதைக் காணமுடிகிறது.

“மாமழை போற்றுதும் மாமழை போற்றுதும்

வீங்குநீர் வேலி உலகிற்கு அவன் குலத்தோடு

ஓங்கிப் பரந்து ஒழுகலான்”

“அச்சத்தைத் தருகின்ற கடல் சூழ்ந்த உலகத்திற்குச் சோழ அரசனின் அருள் போல - இரக்கமிக்க கருணை போல வளம் தந்து பெய்வதால் பெரிய மழையைப் போற்றுவோம்” என்பது இந்த அடிகளின் கருத்து. இங்கு மழையைப் போற்றி வழிபடும் மரபையும் அதற்குரிய காரணமாகத் தண் கருணைத் தன்மையையும் காண முடிகிறது. அதுபோல மாரியம்மனும் வழிபடுவதற்குரிய தெய்வமாகவும் தண்கருணைமிக்க தன்மை உடையவளாகவும் இருப்பதை நாம் உணரலாம்.

மழைவளம் சுரக்க இந்திரனுக்கு விழா எடுத்து வழிபடும் மரபினைச் சிலப்பதிகாரம் மணிமேகலை ஆகிய நூல்கள் பேசினாலும் பத்தினிப் பெண்டிர் இருந்த நாட்டில் வானம் பொய்யாது பெய்யும் என்னும் நம்பிக்கை அக்காலத்து இருந்ததையும் சிலப்பதிகாரம் குறிப்பிடுகிறது. தெய்வந் தொழாது கணவனைத் தொழுது வாழும் கற்புடைப் பெண்கள் பெய் என மழை பெய்யும் என்று திருவள்ளுவரும் குறிப்பிடுகிறார் அல்லவா? கற்பிற் சிறந்த கண்ணகியைக் கடவுளாக்கி இமயத்தில் கல்லெடுத்துக் கங்கையில் நீராட்டி வஞ்சி மாநகரில் கோயில் எழுப்பி முதன் முதலில் வழிபாடு செய்தான் ரேசன் செங்குட்டுவன். இவ்வழிபாட்டு விழாவுக்கு வந்த ஆரிய மன்னரும் இலங்கைக் கயவாகுவும் குடகுக் கொங்கரும் மாளுவ வேந்தரும் தத்தம் நாடுகளில் கண்ணகி வழிபாட்டினைத் தொடங்கி வைத்தனர். மழைதரும் மாண்பு மிக்க ஆற்றல் கொண்ட கண்ணகி வழிபாடு பிற்காலத்தில் மாரியம்மன் வழிபாடாக மாறியது என்று சிலம்புச் செல்வர் ம,பொ. சிவஞானம் அவர்கள் ஆய்வு செய்துள்ளார்கள்.

**<u>மணிமேகலை தரும் மாரி -</u>**

சிலப்பதிகாரத்துடன் ஒருசேர மதிக்கப் பெறும் மற்றொரு காப்பியம் மணிமேகலை. மாதவி மகளாகிய மணிமேகலையின் துறவு நிலையைப் பேசும் நூல் இது. இதனை இயற்றியவர் சாத்தனார். அவர் மழைதரும் கற்புப் பற்றிப் பேசும் திருக்குறளை அப்படியே மேற்கோள் காட்டி அதனைப் பொருள் பொதிந்த உரை எனப் போற்றுகின்றார்.

“தெய்வம் தொழாஅள் கொழுநற் தொழுதெழுவாள்

பெய்யெனப் பெய்யும் மழை என்ற அப்

பொய்யில் புலவன் பொருளுரை தேறாய் “ (சிறைசெய் காதை)

என்று வள்ளுவரைப் பொய் கூறாத புலவன் என அவர் பாராட்டி நிற்பதையும் அறிய முடிகிறது. மகளிர் கற்பு மழையைத் தர வல்லது என்னும் கருத்தை உடன்பட்டு நிற்கும் நிலை சாத்தனார்க்கு உண்டு என்பதை நாம் உணரமுடிகின்றது.

மணிமேகலையின் பெயருக்கும் பெருந்துறவுக்கும் காரணமாக விளங்கிய மணிமேகலா தெய்வம் மணிமேகலை மீது காதல் கொண்ட உதயகுமாரன் என்னும் இளவரசனிடம்,

"மன்னவன் மகனே
கோல்நிலை திரிந்திடின் கோள்நிலை திரியும்
கோள்நிலை திரிந்திடின் மாரி வறங்கூரும்
மாரி வறங்கூரின் மன்னுயிர் இல்லை"

என்று அறிவுரை கூறுகிறது. "அரசன் செங்கோல் ஆட்சி இல்லாவிடில் வானத்திலுள்ள கிரகங்கள் நிலைமாறும். அவை நிலை மாறினால் மழை பெய்யாமல் போகும். அவ்வாறு போனால் உலகில் நிலைபெற்ற உயிர்கள் இலலாது போகும்" என்பது இவ்வறிவுரையின் கருத்து, எனவே மாரி இல்லாவிடில் மன்னுயிர் இல்லை. மாரியம்மன் இல்லாவிடில் உலகத்தில் உயிர்களின் வாழ்வேது? வாழ்விழந்து வாடும் என்பதை நாம் இங்கு உணர்கிறோம். இக்கருத்தினைச் சீவகசிந்தாமணி என்னும் காப்பியத்திலும் காணலாம். அரசன் ஆட்சி சரியில்லா விடில் நீணிலம் மாரியின்றி விளைவு குறையும்" (1.255) எனச் சீவக சிந்தாமணி கூறுகிறது.

**<u>பக்தி இலக்கியங்கள் பகரும் மாரி -</u>**

பக்தி இலக்கியங்கள் தமிழின் தனித் தன்மைக்குத் தக்க சான்றாகத் திகழ்கின்றன. இவற்றிலுறள்ள பண்சுமந்த பாடல்களை இயற்றியவர்கள் சைவ நாயன்மார்களும் வைணவ ஆழ்வார்களும் ஆவர். சைவ நாயன்மார்கள் சிவபெருமானை முழுமுதற் கடவுளாகக் கருதிப் பாடியவை திருமுறைகள், வைணவ ஆழ்வார்கள் திருமாலை முழுமுதற் பொருளாகக் கருதிப் பாடியவை நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம். இவற்றில் மாரியம்மன் - மழைக்குரியதாய் எப்படி வருகிறாள் எனக் காண்போம்.

**<u>திருவாசகம் செப்பும் சிவ மாரி -</u>**

சைவத் திருமுறைகளில் எட்டாம் திருமுறையாக இருப்பது மாணிக்கவாசகர் இயற்றிய திருவாசகம். இந்நூலிலுள்ள பக்திப்பாடல்கள் படிப்போர் மனத்தை உருக்கும் பண்பின. திருவாசகத்துக்கு உருகாதார் ஒருவாசகத்துக்கும் உருகார் என்பது பழமொழி. இந்நூலில் மழை சக்தியாகவும் சிவனாகவும் பேசப்படுகிறது திருவாசகத்தில் திருவெம்பாவை என்பது ஒரு பகுதி. இதில் இருபது பாடல்கள் உள்ளன. மார்கழி மாதத்தில் கன்னிப் பெண்கள் அதிகாலையில் எழுந்து (ஒருவரை ஒருவர் எழுப்பிக் கொண்டு) கூட்டமாகச் சென்று பொய்கையில் நீராடிப் பாவை நோன்பு நோற்றுச்

சிவபெருமானைத் தங்களுக்கு நல்ல கணவன்மார் கிடைக்க வேண்டும் என்றும் நாட்டில் மழை பொழிய வேண்டும் என்றும் வேண்டி வழிபடுவதே திருவெம்பாவையின் திரண்ட கருத்தாகும். இப்பகுதியின் உட்கருத்து சக்தியை வியந்தது என்று உரைப்பர். அதாவது சக்தி என்பது இறைவனின் அருளைக் குறிக்கிறது. "அருளது சக்தியாகும் அரன் தனக்கு" என்று சைவ சித்தாந்த சாத்திர நூலாகிய சிவஞான சித்தியார் கூறுகிறது. மழையை உமையம்மையாகச் சக்தியாகக் கூறும் மாணிக்கவாசகரின் திருவெம்பாவைப் பாடல் -

"முன்னிக் கடலைச் சுருக்கி எழுந்து உடையாள்

என்னத் திகழ்ந்து எம்மை ஆளுடையாள் இட்டிடையின்

மின்னிப் பொலிந்து எம்பிராடடி திருவடிமேல்

பொன்னஞ் சிலம்பில் சிலம்பித் திருப்புருவம்

என்னச் சிலைகுலவி நந்தம்மை ஆளுடயாள்

தன்னிற் பிரிவிலா எங்கோமான அன்பர்க்கு

முன்னியவள் நமக்கு முன்சுரக்கும் இன்னருளே

என்னப் பொழியாய் மழையேலோர் எம்பாவாய் "

மழையே, முன்னுள்ள இக்கடல் நீரினை உட்கொண்டு வானின் மேல் எழுந்து, சக்தியின் கருமை நிறம் போலக் கருத்து அவள் சிற்றிடை போல மின்னி, அவள் திருவடியிலுள்ள சிலம்பு போல இடி முழக்கமிட்டு, அவள் புருவம் போல வானவில்லிட்டுச் சிவனுக்கு முன்னர் வந்து சக்தி நமக்குச் சுரக்கும் இனிய திருவருளே போல நீரைச் சொரிவாயாக" என்பதே இப்பாட்டின் கருத்து. இப்பாட்டில் மழையின் ஒவ்வொரு நிலையும் உமையம்மையின் நிறம், அணி, அருள் முதலியவற்றுக்கு உவமைகளாக உரைக்கப் படுகின்றன. இங்கு மழை - மாரி- உமையம்மையாகச் சிவசக்தியாகக் காட்சி அளிக்கும் சிறப்பைக் காண முடிகிறது.

திருவாசகத்தில் திருவண்டப் பகுதி என்று ஒரு பிரிவு உள்ளது. இதில் அண்டமாக விரிந்து நிற்கும் சிவபெருமானின் சிறப்பைப் பேசுகிறார் மாணிக்கவாசகர். இதில் சிவபெருமானை மழையாகக் கண்டு மகிழ்கிறார். சிவபெருமானை அவர் "அண்டத்து அரும் பெறல் மேகன் வாழ்க " என்று வாழ்த்துகிறார். அந்த மேகம் பரமானந்தப் பெருங்கடலில் தோன்றித் திருப்பெருந்துறை என்னும் மலைமீது ஏறி மின்னொளி வீசி மெய், வாய், கண். மூக்கு. செவி என்னும் ஐம்பொறி உணர்வுகளாகிய பாம்புகள் அஞ்சி ஓடி இடி முழக்கி, கொடிய பிறவித் துன்பமாகிய வெயில் மறையக் கருணை மழை பொழியும் மேகம் ஆகக் காண்கிறார். அவர் இந்த மேகம் பொழிந்த மழையால் தொண்டர்களாகிய உழவர்கள் வழிபாடு என்னும் வயலில் அன்பு என்னும் விதைகளை விதைத்துப் பக்திப் பயிர் விளைவிக்கின்றார்கள். இவ்வாறு மழை - மாரி - சிவனாக - குவளைக் கண்ணிக்

கூறனாக - அர்த்தநாரீசுவர வடிவம் ஆகிய உமையொரு பாகனாக இருக்கும் இயல்பை உணர்கிறோம்.

**<u>ஆண்டாள் பாடிய மாரி -</u>**

ஆழ்வார்களில் பெரியாழ்வார் பெற்றெடுத்த பெண்கொடி ஆண்டாள். சூடிக்கொடுத்த சுடரக்கொடி. திருவரங்க நாதனையே காதலித்து மணந்து கொண்ட காரிகை. அவள் பாடிய திருப்பாவையில் 'ஆழிமழைக் கண்ணா" என்று ஒரு பாடல் தொடங்குகிறது. கன்னிப் பெண்கள் மார்கழி மாதத்தில் நீராடுவதற்கு ஏற்ற வகையில் மேகம் கடலில் புகுந்து திருமாலின் கரிய நிறம் போலக் கறுத்து திருமாலின் கையிலுள்ள சக்கரம் போல் மின்னி, அவன் கையிலுள்ள சங்கு போல ஓசை எழுப்பி, அவன் விடும் அம்புச்சரம் போல உலகம் வாழ மழை பெய்ய வேண்டும் என்று அப்பாடலில் திருமாலிடம் ஆண்டாள் வேண்டுகிறாள். இங்கு மழை - மாரி - கண்ணனாக - திருமாலாக மாறி நிற்கும் விந்தையைக் காண்கிறோம். மாரி மலை முழைஞ்சில் (குகையில்) மன்னிக் கிடந்து உறங்கும் சீரிய சிங்கம் எனவும் திருப்பாவைப் பாடல் ஒன்றில் மழையை மாரியாகக் கூறும் செய்தியைக் காண்கிறோம்.

**<u>கம்பனில் மாரி-</u>**

கவிச் சக்கரவர்த்தி கம்பன் எழுதிய இராமாயணத்தில் காவிய நாயகனாகிய இராமன் "மழைக்குன்றம் அனையான்" என்று அழைக்கப் படுகிறான். மேலும் இராமன் வெயில் ஒளியில் செல்லும் அழகை அவன் நிற அழகைக் கம்பன்,

"மையோ மரகதமோ மறிகடலோ மழைமுகிலோ

ஐயோ இவன் வடிவென்பதோர் அழியா அழகுடையான்"

என்று வருணிக்கிறான். மழைமுகிலோ - கார்மேகமோ - என்று இராமனைக் கண்டு வியப்படைகின்றான். இங்கே மழை - மாரி -கருணை மேகமாகிய இராமனாகக் காட்சி அளிக்கும் பண்பைக் காண்கிறோம்.

**<u>தத்துவ நூல் தரும் மாரி -</u>**

மாரி அம்மை என்னும் போது மழையும் தாயும் நினைவுக்கு வரும். மழை என்பது அருளைக் குறிக்கும். தாய் என்பது அன்பின் அடையாளம். அருள் சேய், அன்பு அதன் தாய், அன்பு இல்லையாயின் அருள் இல்லை. அன்பே சிவம் அருளே சக்தி, "அன்பும் சிவமும் இரண்டு என்பர் அறிவிலார். அன்பே சிவமாவது அறிந்த பின்,அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே" என்று திருமூலர் தம் திருமந்திரத்தில் கூறுகிறார். சைவ

சித்தாந்தசாத்திர நூல்களில் "அருளது சக்தியாகும் அரன் தனக்கு" என்று அறை கூவுகின்றது சிவஞான்சித்தியார்.

**ஔவை பாடிய மாரி -**

ஔவையார் தம் கொன்றை வேந்தனில் "மாரியல்லது காரியமில்லை' என்று கூறி மாரி - மழையின் ஆற்றலைப் புலப்படுத்துகிறார். மாரியம்மன் இல்லாது மக்கள் எந்தக் காரியமும் செய்யும் சக்தி பெற முடியாது என்பதை இத்தொடர் விளக்குகிறது அல்லவா?

**பாரதி பாடிய முத்துமாரி** -

இருபதாம் நூற்றாண்டுப் பெருங்கவிஞர் பாரதி தான் முதன் முதலில் முத்துமாரியை, "உலகத்து நாயகியே - எங்கள் முத்துமாரியம்மா, எங்கள் முத்து மாரியம்மா" என அழைத்து அவள் பாதத்தில் சரணம் புகுகின்றார். "துணி வெளுக்க மண்ணுண்டு, எங்கள் மனம் வெளுக்க வழி இல்லையே" என்று கூறிப் பிணிகளுக்கு மாற்று உண்டு, அறியாமைக்கு மாற்று இல்லை. அரக்கர் பலர் எங்கள் மனத்தில் புகுந்து விட்டனர். பல கற்றும் கேட்டும் பயன் ஒன்றும் இல்லை, நிலை எங்கும் காணவில்லை, எனவே உன்னிடம் அடைக்கலம் புகுந்தோம்" என வேண்டி நிற்கிறார் பாரதி. இங்கு அணிகளுக்கு, அழகுக்கு, ஓர் எல்லையாய் இருக்கும் அழகுத் தெய்வமாகியய மாரியம்மை பற்றியும் அவள் வழிபாடு பற்றியும் நேரடியாகக் காணமுடிகிறது. மனம் தூய்மை பெறவேண்டி நிற்கும் மாண்பினையும் பார்க்கிறோம். மனத் தூய்மை தானே அறம். பாரதியின் பாட்டில் தெய்வப் பக்தியடன் தேசபக்தியையும் தேடிப் பார்க்க முடிகிறது.

**பாரதிதாசன் பாராட்டும் மாரி -**

"தமிழுக்கு அமுதென்று பேர், அந்தத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்" என்று பாடினார் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன். அமுதம் என்றால் மழையே என்று ஆய்ந்து தெளிந்து அமிழ்து எது என்னும் வினாவிற்கு விடை அளிக்கின்றார் அவர். எனவே மழை - மாரி - அமிழ்தாக - தமிழாகப் புரட்சிக் கவிஞர் கவிதையில் பொலிந்து நிற்கிறது. மாரி அம்மை தமிழாக மாறும் காட்சியை இங்கே காண்கிறோம். கனகசுப்புரத்தினம் பாரதிதாசனாக மாறியதற்குக் காரணமாக இருந்த பாட்டே "எங்கெங்கு காணினும் சக்தியடா அவள் எழுகடல் வண்ணமடா" என்னும் சக்தியைப் பற்றிய பாட்டுத்தானே.

**கவியரசு கண்ணதாசன் காட்டும் மாரி** -

கவியரசர் கண்ணதாசன் ஆதிசங்கரர் பாடிய கனகதாரா தோத்திரத்தை அழகாகப் "பொன்மாரி" என்று தமிழில் கவிதைகளாக ஆக்கியுள்ளார். அவரும் மாரியம்மன் பற்றிய திரைப் பாடல்கள் பாடியுள்ளார். "மழை கூட ஒருநாளில் தேனாகலாம்" என்று மழையைத் தேனாகக் காணும் காட்சியைக் கண்ணதாசனிடம் காண முடிகிறது. மாரி அம்மை நினைக்கும் போது கூறும்போதும் இனிக்கும் தேன் அம்மை அல்லவா.

**<u>வைரமுத்து வழங்கும் மாரி -</u>**

வைரமுத்து மழையைப் பற்றி ஒரு புதுக் கவிதையில் "மழை மழை மழை, மண்ணின் அதிசயம் மழை, பூமியை வானம் புணரும் கலை மழை, சமுத்திரம் எழுதும் சமத்துவம் மழை, மழை பாடும் பள்ளி எழுச்சியில் ஒவ்வோர் இலையிலும் உயிர் சோம்பல் முறிக்கிறது" என்று கூறி மழையொடு வாழாத வாழ்வென்ன வாழ்வா? என்ற கேட்கிறார். மழையை மாரி அம்மனாகக் கண்டு பாருங்கள். இக்கவிதையின் கருத்தாழம் புரியும்.

**<u>முடிவரை -</u>**

தமிழ் இலக்கியத்தில் மாரி அம்மன் உலகைக் காப்பாற்றும் தாயாக, நெஞ்சக் கல்லை நெகிழ்ந்துருகச் செய்யும் நீராக - உயிரினங்களை வாழவைக்கும் ஒப்பில்லா மழையாக - கைம்மாறு கருதாத கன்னியாக - கருணை மழை பொழியும் காரிகையாக - உமையம்மையாக -சிவனாக - கண்ணனாக - இராமனாக - திருமாலாக - அன்புத் தாய் பெற்ற அருள் சேயாக - காரியம் ஆற்றும் சக்தியாக - மனத்தூய்மை செய்யும் மருந்தாக - தமிழாக - இயக்கும் சக்தியாக - பொன்மாரி பொழியும் திருவாக - விண்ணையும் மண்ணையும் இணைக்கும் விரிசக்தியாக விளங்குவதை இக்கட்டுரை விளக்குகிறது அல்லவா.

(ஈசூன் மகாமாரியம்மன் கோயில் குடமுழுக்கு விழா மலர்)

------------------

<u>Thinnappan, SP.</u> Tamil Ilakkiyathil Mariamman (The Goddess Mari Amman in Tamil Literature) In: Sree Maha Mariamman Temple Maha Kumbabishegam Souvenir Magazine Ed: Mrs Kunavathy Nallathamby, Sri Maha Mariamman Temple Yishun, Singapore (1997) pp 67-74 (Tamil)

# சைவ நன்னெறி.

தமிழகத்தில் அன்றுமுதல் இன்றுவரை தொன்றுதொட்டு நின்று நிலவி வரும் சமயங்கள் இரண்டு. அவற்றுள் ஒன்று வைணவம். மற்றொன்று சைவம். வைணவம் திருமாலை முழுமுதற் பொருளாகக் கொண்டு வழிபாடு செய்கின்ற சமயமாகும். சைவமோ சிவபெருமானை முழுமுதற் பொருளாகக் கொண்டு வழிபாடு செய்கின்ற சமயமாகும். இன்று நமக்குக் கிடைக்கும் தமிழ் நூல்களுள் காலத்தால் தொன்மை வாய்ந்த தொல்காப்பியத்தில் இந்த இரண்டு சமயங்களைப் பற்றிய குறிப்புகள் உள்ளன. எனவே இவை இரண்டும் சுமார் 3000 ஆண்டுகளுக்கு முன்னரே தமிழர் வாழ்வில் இரண்டறக் கலந்திருந்தன. மொஹஞ்சதாரோ, ஹரப்பா என்னும் நகரங்களில் புதையுண்டிருந்த சின்னங்களுள் சிவலிங்கமும் ஒன்று என்று கூறிச் சைவசமயம் 5000 ஆண்டுகளுக்கு முன்னே இருந்த திராவிட நாகரிகத்துடன் தொடர்புடையதாகக் கூறுவர்.

**<u>தோத்திர நூல்கள் -</u>**

சைவ சமயத்துக்குரிய தமிழ் நூல்களைத் தோத்திர நூல்கள் , சாத்திர நூல்கள் என இருவகைப் படுத்துவர். இவை வேத, ஆகமங்களை உடன்பட்டு எழுந்தவை. சிவபெருமானின் புகழையும் சிறப்பினையும் பேசுகின்ற வழிபாட்டுப் பாடல்களைத் தோத்திர நூல்கள் என்பர். சைவ சமயத்திலுள்ள தோத்திர நூல்கள் பன்னிரண்டு திருமுறைகளாகும். திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகிய மூவர் பாடிய தேவாரப் பாடல்கள் முதல் 7 திருமுறைகளாக உள்ளன. மாணிக்கவாசகர் பாடிய திருவாசகமும் திருக்கோவையாரும் எட்டாம் திருமுறையாகும். திருமாளிகைத் தேவர் முதலாகிய ஒன்பது ஆசிரியர்களால் இயற்றபபட்ட திருவிசைப்பா, திருப்பல்லாண்டுப் பாடல்கள் ஒன்பதாம் திருமுறை எனப்படும். திருமூலர் பாடிய திருமந்திரம் பத்தாம் திருமுறை. பட்டினத்ததார், காரைக்காலம்மையார், சேரமான் பெருமாள் நாயனார் முதலிய 11 பேர் பாடிய பாடல்களின் தொகுப்பு பதினோராம் திருமுறை ஆகும். சேக்கிழார் பாடிய பெரியபுராணம் பன்னிரண்டாம் திருமுறை. இந்தப் பன்னிரு திருமுறைகளைப் பாடிய அருளாளர்கள் இருபத்தேழு பேர். இத்திருமுறைகளில் உள்ள மொத்தப் பாடல்கள் 18402. திருமுறை ஆசிரியர்கள் இறைவன் திருவருளைப் பெற்று அத்திருவருளை மற்றவர்களும் பெறக் கூடிய வழி முறைகளைத் தம் பாடல்களில் கூறினார்கள் . திருமுறைப் பாடல்களாகிய தோத்திர நூல்களிலிருந்து சாத்திர நூல்கள் தோன்றின.

**<u>சாத்திர நூல்கள்</u>** -

சாத்திரம் என்பது சைவ சமயக் கோட்பாடுகளாகிய தத்துவக் கருத்துகளைத் தருவது. சைவ சமயத்தில் சாத்திர நூல்கள் பதினான்கு. இந்நூல்களை மெய்கண்ட சாத்திரங்கள் என அழைப்பர். ( திருவியலூர் உய்யவந்த தேவநாயனார் இயற்றிய திருவுந்தியார், திருக்கடவூர் உய்யவந்த தேவநாயனார் இயற்றிய திருக்களிற்றுப்படியார், திருவெண்ணெய் நல்லூர் மெய்கண்டார் எழுதிய சிவஞானபோதம், திருத்துறையூர் அருணந்தி சிவாச்சாரியார் எழுதிய சிவஞான சித்தியார், இருபா இருப஼்து , திருவதிகை

மனவாசங்கடந்தார் ஆக்கிய உண்மை விளக்கம், கொற்றவன்குடி உமாபதிசிவாச்சாரியார் இயற்றிய சிவப்பிரகாசம், திருவருட்பயன், வினாவெண்பா, போற்றிப் ப∴றொடை, கொடிக்கவி, நெஞ்சுவிடுதூது, உண்மைநெறி விளக்கம், சங்கற்ப நிராகரணம் ஆகிய எட்டு நூல்கள் ஆக மொத்தம் பதினான்கு நூல்கள் சாத்திர நூல்கள் எனப்படும்.) இவற்றுள் மெய்கண்டார் எழுதிய சிவஞானபோதம் சைவ சமயத் தத்துவக் கருத்துகளைச் சுருக்கமாகவும் ஆழமாகவும் கூறுகின்ற அடிப்படை நூலாகக் கருதப் படுகின்றது. (தோத்திர நூல்கள் பழம் எனின் , சாத்திர நூல்கள் பழச்சாறு எனலாம். தோத்திர நூல்கள் உணர்வுக்கு விருந்தாக அமைந்து, சமய நம்பிக்கையை வளர்ப்பன. சாத்திர நூல்கள் அறிவுக்கு விருந்தாக நின்று இறை நம்பிக்கையை விளைவிக்க உதவுபவை. “தோத்திரமும் சாத்திரமும் ஆனார் தாமே” என்று சிவபெருமானைத் தோத்திர சாத்திர வடிவமாகக் கண்டு வழிபாடு செய்கின்றார் திருநாவுக்கரசர்.)

**<u>தத்துவம் -</u>**

தோத்திரத்திலிருந்து எழுந்த சாத்திரக் கருத்துகளை உள்ளடக்கிய சைவ சமயத் தத்துவ நெறியைச் சைவ சித்தாந்தம் என்று கூறுவர். (சைவ சித்தாந்தம் என்னும் சொற்றொடருக்கும் பொதுவாகச் சைவ சமயக் கொள்கைகள், கோட்பாடுகள் எனப் பொருள் கூறினாலும் சிறப்பாகச் சைவ சமயத்தினர் கண்ட அறிவு முடிபுகள் அல்லது சைவ மெய்ந்நெறிக் கொள்கைகள் அல்லது சமய மெய்ப் பொருள் நெறி முறைகள் எனக் கொள்ள வேண்டும்) தமிழர்கள் கண்ட தனிப் பெரும் தத்துவ நெறி சைவ சித்தாந்த நெறி. இதனை ‘வேதாந்தத் தெளிவாம் சைவ சித்தாந்தம்’ என்றும் போற்றுவர். மேனாட்டு அறிஞரான போப் பாதிரியார், திராவிடர்களின் நுண்ணறிவின் மிகத் தேர்ந்த படைப்பு சைவ சித்தாந்தம் எனப் பாராட்டுகிறார். (இந்தச் சைவ நன்னெறிகள் யாவை எனக் காண்போம்)

**<u>முப்பொருட் கொள்கை</u>** -

சித்தாந்தம் என்னும் சொற்றொடரில் உள்ள சித் என்னும் சொல் அறிவைக் குறிக்கும். இதற்கேற்ப அறிவை மையமாக வைத்து, உலகிலுள்ள எல்லாப் பொருள்களையும் மூன்று பிரிவுகளில் சைவ சித்தாந்தம் அடக்கிக் காண முற்படுகிறது. அறிவிக்காமலே அறிகின்ற பொருள் ஒன்று. அறிவித்தால் அறிந்து, அறிவிக்காவிடில் அறியமாட்டாத பொருள் ஒன்று. அறிவித்தாலும் அறிய முடியாத பொருள் ஒன்று இம் முப்பொருள்களையும் முறையே பதி( இறை) பசு (உயிர்கள்) பாசம் (தளை) என்று சைவ சித்தாந்தச் செந்நெறி கூறுகிறது. இந்த மூன்று பொருள்களும் என்றும் இருக்கும் உள்பொருள்கள். இவற்றை அனாதி நித்தியப் பொருள்கள் என்று சித்தாந்தம் கூறும். இவை யாராலும் தோற்றுவிக்கப் படாதவை. “பதி பசு பாசம் எனப் பகர் மூன்றில் பதியினைப் போல் பசுபாசம் அனாதி” என்று திருமூலரின் திருமந்திரம் கூறுகிறது. இந்த முப்பொருள் உண்மைதான் சைவ சித்தாந்தத்தின் அடிப்படைக் கொள்கையாகும்.

## கடவுட் கொள்கை-

முப்பொருள்களுள் முதற்பொருள் பதி. பதி என்னும் சொல்லுக்குத் தலைவன் என்பது பொருள். இங்கே இறைவனாகிய சிவபெருமானைக் குறிக்கும். கடவுள் ஒருவரே. அவருக்கு இரண்டு நிலைகள் உண்டு. ஒருநாமம் ஓருருவம் ஒன்றுமில்லாத நிலை ஒன்று. இதற்குச் சொரூப நிலை என்று பெயர். இந்த நிலையிலுள்ள கடவுளுக்கும் பெயர், குணம், குறி முதலியன ஒன்றும் இல்லை. நம் மனம், மொழி, உடல் ஆகியவற்றிற்கு எட்டாத பெருநிலை இது. இந்த நிலையைத்தான் பரமசிவம் என அழைப்பர். சொருப நிலையிலுள்ள பரமசிவன் உயிர்களுடைய துன்பங்களைப் போக்கி அவைகட்கு அருள் செய்தற்காக இரக்கம் கொண்டு, தானாகவே பல படிகள் இறங்கி வந்து படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய ஐந்தொழில்களைச் செய்யும் நிலை மற்றொன்ற. இந்நிலை தடத்தநிலை எனப் பெயர் பெறும். (கடவுளாகிய இறைவன் ஒருவனே ஒன்றிலும் தோய்வில்லாமல் சுயம்பிரகாசமாய் நிற்கும் நிலையில் சிவம் எனவும், உலகெலாம் ஆகி வேறாய் உடனாய் உயிர்களின் வழிநிற்கும் நிலையில் சக்தி எனவும் ஐந்தொழில் செய்யும் நிலையில் பதி எனவும் பெயர் பெறுகின்றான். ) (உலகிலிருந்து வேறுபட்டு அப்பாலுக்கப்பாலாகவும் ஆண்டவன் காட்சி அளிக்கிறான். கடந்து நிற்கும் பொருள்தானே கடவுள். உலகப் பொருள்கள் யாவற்றிலும் நீக்கமற நிறைந்து இருப்பவன் பதி. அதாவது , எல்லாப் பொருள்களிலும் தங்கி இருப்பவன் இறைவன். இறை என்னும் சொல்லுக்கே தங்குதல் என்பதுதான் பொருள். மேலும், கடவுள் எல்லாப் பொருள்களிலும் தங்கி இருப்பது மட்டுமன்றி அவற்றுடன் இருந்து அவற்றை இயக்கவும் செய்கிறான். எனவே. இறைவனுக்கு இயவுள் எனறு ஒரு பெயர் உண்டு.) இயக்கமில்லாத நிலை சிவம், இயக்கம் பெறுகின்ற நிலை சக்தி. சிவனுக்கும் சக்திக்குமிடையேயுள்ள உறவு சொல்லுக்கும் பொருளுக்கும் இடையேயுள்ள உறவாகும். இறைவனின் திருவருள் நிலையே சக்தி ஆகும். நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம், சூரியன், சந்திரன், ஆன்மாவாகிய உயிர் ஆகிய எட்டிடங்கள் இறைவன் இருப்பிடங்களாகும். அளவில்லாத ஆற்றலுடைமை, இயல்பாகவே பாசங்களிலிருந்து நீங்குதல், இயற்கை உணர்வினனாதல், தன்வயத்தனாதல், முற்றும் உணர்தல், பேரருளுடைமை, தூய உடம்பினனாதல், வரம்பில்லாத இன்பமுடைமை ஆகிய எட்டுக் குணங்களும் இறைவனுக்குரிய குணங்களாகும். கடவுள் உருவமில்லாத அருவமாகவும், உருவம் கொண்டும், இரண்டுக்கும் இடைப்பட்ட சிவலிங்கத் திருமேனியாகிய அருவுருவமாகவும் இருக்கிறான். இறைவன் ஆதியும் அந்தமுமில்லாதவன். அன்பெனும் பிடியினுள் அகப்படும் மலை. அன்பே சிவம் என்று கூறுகிறார் திருமூலர். இறைவன் சத்து- அதாவது உண்மை வடிவினன், சித்து- அதாவது தூய அறிவு வடிவினன், ஆனந்தன் - இன்ப வடிவினன். எனவேதான், இறைவனைச் சச்சிதானந்தன் என்று சைவ சித்தாந்தம் கூறுகிறது.

## உயிர்க்கொள்கை -

முப்பொருள்களுள் இரண்டாவது பொருள் பசு. பாசத்தால் கட்டுண்ட உயிர்களை இச்சொல் குறிக்கிறது. ஆன்மா எனவும் கூறுவர். உயிர்களைக் கடவுளோ வேறு யாரோ

படைக்கவில்லை. அவை எண்ணில்லாதவை. அவை என்றும் உள்பொருள்கள். உயிர்கள் தாமே அறியும் தன்மையன அல்ல, அறிவற்றவை என்றும் கூற முடியாது. அறிவிக்க அறிந்து கொள்ளும் இயல்புடையவை. இத்தகைய இயல்படைய உயிர்களுக்கு இறைவன் அறிவு பெறச் செய்கிறான். உயிர்கள் சார்ந்ததன் வண்ணம் உடையவை. அதாவது, பதியாகிய இறைவனையோ பாசமாகிய தளையையோதான் உயிர்கள் சார்ந்து நிற்கும். பாசமாகிய தளையில் இருக்கும் உயிர்கள் தளைகளை நீக்கிக் கடவுளைச் சார்ந்து நிற்பதே முத்தி எனப்படும் வீடுபேறாகும். (பாச நிலையில் உள்ள ஆன்மா பல வகைப் பிறவிகளை எடுக்கும் இயல்படையது. பாவ புண்ணியங்களுக்குரிய வினைகளைச் செய்ய வல்லது)

<u>தளை பற்றிய தத்துவம்</u> -

முப்பொருள்களுள் மூன்றாவது பொருள் பாசம். அதாவது அறிவற்ற பொருள். இதனைத் தளை, கட்டு, தடை எனக் கூறலாம். உயிர்களை இறைவனை நாட விடாது செய்யும் தடையே - பிணிப்பே - கட்டே - பாசமாகும். இந்தப் பாசத்தை ஆணவம், கன்மம், மாயை என மூன்றாகப் பகுத்துக் காண்பது சைவ சித்தாந்த நெறி. (இந்த மூன்று கூறுகளும் எப்போதும் உள்பொருள்களே. இவற்றைமலம் அல்லது அழுக்கு என்பர்) ஆணவம் என்பது உயிரை அறியாமையாகிய இருளில் ஆழ்த்தும் ஆற்றல் உடையது. உயிர்களுக்கு யான் எனது என்னும் செருக்கினை ஊட்டுவது. (உயிர்கள் தம்மை உணரவிடாது செய்வது ஆணவம். ஆணவம் எப்போதும் உயிருடன் உடனாகவே இருப்பது. முத்தி நிலையில்தான் இறைவன் முன்னர் ஆணவம் ஒடுங்கி ஆற்றல் அற்று நிற்கும்) கன்மம் எனப்படுவது உயிர்கள் செய்யும் நல்வினை, தீவினைகளைக் குறிப்பது. (மனம், மொழி, உடல் ஆகிய மூன்றால் செய்யப்படும் செயல்கள்தாம் வினைக்குக் காரணமாகும். நல்வினை, தீவினை என வினை இருவகைப்படும். உயிர்களின் பிறவிக்குக் காரணமாக இருப்பது கன்ம மலமே. வினை நீக்கமே பிறவியறுக்கும். இருள்சேர் இருவினையும் சேரா இறைவன் பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு" என்பது குறள்) இறைவன் திருவருளால் இருவினைகளைப் போக்கலாம் என்பதுதான் சைவசமயம் காட்டும் நன்னெறி. பாசத்தின் மூன்றாவது கூறு மாயை. எல்லாப் பொருள்களும் தோன்றுதற்கும் ஒடுங்குதற்கும் காரணமானது எதுவோ அதுவே மாயை. இந்த மாயையிலிருந்தே இந்த உலகம் தோன்றுகிறது. (பானைக்கு மண் போல உலகிற்கு முதற்காரணம் மாயை. பானை செய்யக் குயவன் வேண்டும். அதுபோல இறைவன் இருக்கிறான். பானை செய்ய மண், குயவன் மட்டும் போதுமா? சக்கரம் வேண்டாவா? சக்கரம் போலச் சக்தி இருக்கிறாள்.) மாயையிலிருந்து தத்துவங்காகிய மூலப்பொருள்கள் தோன்றுகின்றன. இந்த மூலப் பொருள்களிலிருந்து உயிர்களுக்குத் தேவையான உடம்பு, மனம், புத்தி, சித்தம், அகங்காரம் ஆகிய உட்கருவிகள், உலகம், இன்ப துன்பங்களை நுகர்வதற்கேற்ற நுகர்ச்சிப் பொருள்கள் ஆகிய அனைத்தும் உருவாகின்றன. இவற்றைத் தனு கரண புவன போகங்கள் என அழைப்பர். தத்துவங்கள் 36. மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்னும் உட்கருவிகள் நான்கு. மெய், வாய், கண், மூக்கு, செவி எனும் ஐம்பொறிகள் செயல்களுக்குரிய வாய்(மொழி), கால், கை, எருவாய், கருவாய் ஆகிய ஐந்து கலை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என ஐம்புலன்கள் , நிலம், நீர், நெருப்பு, காற்று , ஆகாயம் ஆகிய ஐம்பூதங்கள், இந்த

இருபத்து நான்கு தத்துவங்களும் ஆன்ம தத்துவங்கள் எனப்படும். சிவம், சக்தி, சதாசிவம், ஈசுரம், சுத்த வித்தை என்பன 5 சிவதத்துவங்கள். காலம், நியதி, கலை, வித்தை, அராகம், புருடன், மாயை என்னும் ஏழு்ம் வித்தியா தத்துவங்கள் ஆகும். பாசத்தின் மூன்று கூறுகளுள் ஆணவமும் கன்மமும் நுண்பொருள்களாய் அமைந்தவை. அவற்றின் நிலைகளை மாயையாகிய பருப்பொருள்களில்தான் உணரமுடியும். ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களை - பிணிப்புகளை- நீக்காமல் இறைவனை உயிர்கள் அடைய முடியாது. இவற்றிலிருந்து நீங்க - சிறிது சிறிதாக நீங்க - உயிர்களுக்குத் தனு கரண புவன போகங்கள் தேவைப்படும். இந்தப பாசம் உள்ளவரை உயிர்கள் பிறந்தும் இறந்தும், இன்ப துன்பங்களை அனுபவித்தும் அல்லலுறும். பதியாகிய இறைவனைப் பாசம் சென்று அணுகாது. உயிர்களைத்தான் பாசம் பந்தப்படுத்தும். உயிர்கள் இறைவனை அடையும்போது பாசம் நிற்காது. பாசத்திலிருந்து தளையிலிருந்து உயிர்கள் விடுதலை அடைதலே வீடுபேறு ஆகும். வீடுபேறு முத்தி அடைவது எப்படி? என இனிக் காண்போம்.

**<u>குறியும் நெறியும் –</u>**

ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களுள் முதலில் அறுவது மாயா மலம். இரண்டாவதாக அறுவது கன்ம மலம். மூன்றாவதாக அறுவது ஆணவ மலம். இம்மலங்களை நீக்க முதலில் செய்யவேண்டியது தீட்சை. அதாவது, ஒரு குருவை நாடி, அவரிடம் உய்யும் வழியாகிய வழிபாட்டு நெறிமுறைகளைப் பெறுவது; உயிர்கள் பாசத்திலிருந்து நீங்குவதற்கு அடிப்படையாக அமைவது வழிபாடு. அந்த வழிபாடு இறைவழிபாடு., அடியார் வழிபாடு என இரண்டு வகைப்படும். இந்த வழிபாட்டினைச் செய்ய நான்கு வழிகளை -நெறிகளைக் காட்டுகிறது சைவ சித்தாந்தம். முதலாவது நெறி சரியை எனப்படும். உடலால் செய்யும் வழிபாடு. கோயில் பணிகள், அடியார் தொண்டு ஆகியவற்றைச் சரியை உணர்த்தும். மெய்த்திருத் தொண்டு, கைத்திருத்தொண்டு என்று சேக்கிழார் இதனைக் குறிப்பிடுவார். நாவுக்கரசர் காட்டிய நன்னெறி இதுவாகும். இரண்டாவதுநெறி கிரியை. இஷ்ட மூர்த்தம் எனப்படும் விருப்பத்திற்குரிய ஒரு தெய்வத் திருவுருவத்தை எடுத்துக்கொண்டு மந்திரங்களை ஓதிப் பூசை செய்து வழிபாடு செய்வது கிரியை. இது ஞானசம்பந்தர் காட்டிய நன்னெறி. மூன்றாவது நெறி யோகம். அதாவது, உள்ளத்தால் செய்யும் வழிபாடு. இறை உருவத்தை உள்ளத்தால் தியானம் செய்வது. இது சுந்தரர் காட்டிய நெறி. நான்காவது வழி ஞானம். ஞானம் என்பது ஈசன்பால் பேரன்பு செலுத்துவதாகும். தோத்திர நூல்களையம் சாத்திர நூல்களையும் ஓதுவது ஞானத்தின் ஒரு கூறாகும். (சரியை, கிரியை யோகங்களைச் செய்து வந்தால் மலம் நீங்குவதற்கரிய பக்குவ நிலை உண்டாகும். இதற்கு மலபரிபாகம் என்று பெயர். பிறகு நல்வினை, தீவினைகளையும் அவற்றின் பயனாகிய இன்ப துன்பங்கள் இரண்டையும் சமமாக நோக்கி. விருப்பு வெறுப்பற்ற நிலையை அடைய வேண்டும். இதற்கு இருவினை ஒப்பு என்று பெயர். பிறகு, இறைவனது திருவருட்சக்தி நம்மீது பொழியும். இந்நிலை சத்திநிபாதம் எனப்படும். உயிர்கள் பக்குவம் எய்தியதும் இறைவன் குருவடிவாக வந்து நமக்கு ஞானத்தை உணர்த்துவான். ஞானம் பெற்ற பின்னர் உயிர் இறைவனுடன் இரண்டறக்

கலந்து பேரின்பத்தை நுகரும். இதற்கு முத்தி என்று பெயர்.)ஞானநெறியை முன்பு நமக்குக் காட்டியவர் மாணிக்கவாசகர். (மலங்களை அறுத்தல் என்பது நோய் நீங்குவதற்கு ஒப்பானது. நோய் நீங்குவது முதற்படி. சுகம் பெற்று இன்பமாக வாழ்வதே நம்மால் விரும்பப் படுவது. இது போல மலம் அறுத்தல், - பாச நீக்கம் முதற்படி. சிவப்பேறு அல்லது பேரின்பப்பேறு, முடிந்த நோக்கமும் அனுபவமும ஆகும். வாழ்க்கையின் குறிக்கோள் இதுவே. இக்குறிக்கோளை அடைய மூலநோய் தீர்க்கும் முதல்வனாகிய இறைவன் துணை வேண்டும். அவனருளாலே அவன்தாள் வணங்க வேண்டும். இதற்கேற்ற பிறவி மானிடப் பிறவியே ஆகும். இப்பிறவியில் வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும் தாழ்த்தச் சென்னியும் நமக்கு இறைவன் தந்திருக்கிறான். மனம் மொழி மெய்யால் செய்வதுதான் உண்மையான வழிபாடு. கடவுள் நமது பூசையை ஏற்றுக்கொண்டு நமக்கு அருள் செய்வதற்கென்றே பூசித்து வழிபடும் உருவத்தில் எழுந்தருளி இருக்கிறார் என்று மனத்தினால் பாவிக்க வேண்டும். வாயினால் திருமுறைப் பாடல்களை மந்திரங்களை ஓத வேண்டும். உடலால் இறைபணி செய்ய வேண்டும். உள்ளத்தால் இறைவனை நினைத்தலும், வாயினால் அவன் புகழ் பாடுதலும், உடலினால் இறைவனுக்குரிய தொண்டு செய்தலுந்தான் உண்மையான வழிபாடு, அடியார் வழிபாட்டிலும் இந்நெறியையே மேற்கொள்ள வேண்டும்.

**வழிபாடு** -

வழிபாட்டில் உயிர்நாடியாக இருப்பது அன்பு. அன்பு ஒன்றினால்தான் ஆண்டவனை அடைய முடியும். 'எவ்வுயிரும் நீங்காது உறையும் இறை சிவனென்று, எவ்வுயிர்க்கும் அன்பாயிரு' என்பது சான்றோர் வழக்கு. உடலாக இருப்பது ஐந்தெழுத்து மந்திரமாகிய நமசிவாயமந்திரம். 'காதலாகிக் கண்ணீர் மல்கி, ஓதுவார் தமை நன்னெறிக்கு உய்ப்பது, வேதம் நான்கினும் மெய்ப்பொருளாவது நாதன் நாமம் நமச்சிவாயவே' என்பார் ஞானசம்பந்தர். உயிரும் உடலுமாக இணைந்து இயக்கமாக இருப்பது இறைபணி. இது கோயில் பணி, அடியார் பணி என இருவகைப் படும். 'இலங்கும் உயிர் உடல் அனைத்தும் ஈசன் திருக்கோயில்' என எண்ணிப் பணி செய்து பிறவிப் பிணிp நீங்கிப் பேரின்பப் பெருவாழ்வு எய்த முயல்வோமாக.

"என் கடன் பணிசெய்து கிடப்பதே

தன்கடன் அடியேனையும் தாங்குதல்" - அப்பர்.

-------------

(இராயபுரம் சிவன்கோயில் குடமுழுக்கு விழாமலர்)

Thinnappan, SP. Saiva Nanneri (The Philosophy of Saiva Religion) In: Rayavaram Sivam Temple Kumbahisheka Malalar Ed.A Rayavaram, India (1994). (Tamil)

# நால்வர் நன்னெறி

திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகிய நால்வரும் சைவ சமயத்தை வாழ்விக்க வந்த சான்றோர்கள் ஆவர். இவர்களைச் சைவ சமயத்தினர், "நால்வர்" என்று ஏற்றுக் குருமார்களாகக் கொண்டு வழிபட்டு வருகின்றனர். இவர்கள் நால்வரும் தமிழ்நாட்டில் கி.பி. ஏழு, எட்டு, ஒன்பதாம் நூற்றாண்டுகளில் தோன்றிப் புறச் சமயத் தாக்குதலால் தளர்ச்சி அடைந்திருந்த சைவ சமயத்தை வளர்ச்சி பெறச் செய்தார்கள். இவர்கள் சிவபெருமானையே இறைவனாகக் கருதி வழிபட்டார்கள். இவர்கள் அடியார் கூட்டங்களுடன் தமிழ் நாட்டிலுள்ள கோயில்கள் தோறும் சென்று அங்குள்ள இறைவனை இசைத் தமிழ்ப் பாடல்களால் பாடி வழிபட்டுப் பக்திப் பயிர் வளர்த்தார்கள். இவர்கள் பாடிய பாடல்களே முதல் எட்டுத் திருமுறைகளாகத் திகழ்கின்றன. திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுர்நதரர் ஆகிய மூவரும் பாழய பாடல்களைத் தேவாரம் என அழைக்கிறோம். மாணிக்கவாசகர் பாடிய பாடல்கள் திருவாசகம், திருக்கோவையார் என்னும் இரண்டு நூல்களில் அடங்கும்.

இவர்கள் நால்வரும் தங்கள் வழிபாட்டால் இறைவனடைய திருவருள் பெற்றுப் பேரின்பத்தில் திளைத்தார்கள். "நான் பெற்ற இன்பம் பெறக இவ்வையகம்" என்பதற்கேற்ப ஏனையோரும் இறைவனின் அருளைப் பெறுவதற்குரிய வழிகாட்டிகளாகவும் இவர்கள் விளங்கினார்கள். இறைவனுடை திருவருளைப் பெறுவதற்குரிய ஒரேவழி அன்பு. நெறியாகிய பக்தி வழிபாடே என்பது இவர்களின் அசைக்க முடியாத நம்பிக்கையாகும். உள்ளத்தால் ஓயாமல் இறைவனை எண்ணுவதும், உரையால் அவன் நாமமாகிய ஐந்தெழுத்தை ஓதி அவன் திருப்புகழைப் பாடுவதும், உடலால் அவனுக்குத் திருப்பணிகள் செய்வதுமே உண்மையான பக்தி வழிபாடு என்று இந்நால்வர் பெருமக்களும் கருதினர். இவர்கள் வாழ்ந்து காட்டிய நன்னெறியே சைவ சமய செந்நெறியாக இன்று விளங்குகிறது.

**<u>திருஞானசம்பந்தர் -</u>**

திருஞானசம்பந்தர் சீர்காழியில் தோன்றினார். மூன்றாம் வயதில் உமாதேவியாரால் ஞானப்பால் ஊட்டப் பெற்றுத் "தோடுடைய செவியன்" எனத் தொடங்கும் தேவாரப் பாடலைப் பாடினார். இறைவன் இவருக்குப் பொற்றாளமும், முத்துச் சிவிகையும் கொடுத்துச் சிறப்பித்தான். இவர் தமிழ் நாடெங்கும் சுற்றித் தலங்கள் தோறும் இசைப் பாடல்களைப் பாடி மக்களைச் சைவ நெறியிலே செல்லுமாறு செய்தார். பாண்டிமாதேவி மங்கையர்க்கரசியாரின் வேண்டுகோளுக்கு இணங்கப் பாண்டிய நாடு (தமிழகத்தின் தென்பகுதி) சென்று அங்குச் செல்வாக்குப் பெற்றிருந்த சமணரை வாது செய்து வென்று பாண்டிய மன்னனைச் சைவ சமயத்திற்கு மாற்றினார். இவர் இவ்வுலகில் பதினாறு ஆண்டுகளே வாழ்ந்தார். இவர் நிகழ்த்திய அற்புதச் செயல்கள் பலப்பல. இவையனைத்தும் இறைவன் திருவருளால் அவர் மற்றவர்களுக்காகச் செய்தன. இவர் தமக்கென்று இறைவனிடம் எதனையும் கேட்கவில்லை. இவர் இறைவனைத்

தந்தையாகவும் தன்னை மகனாகவும் கருதி வழிபட்டார். இவர்பாடிய பாடல்கள் முதல் மூன்று திருமுறைகளாகத் தொகுக்கப் பெற்றுள்ளன. இவர்பாடிய பாடல்களின் எண்ணிக்கை -4158.

“காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி

ஓதுவார் தம்மை நன்னெறிக்கு உய்ப்பது

வேதம் நான்கினும் மெய்ப்பொருளாவது

நாதன் நாமம் நமச்சிவாயவே”

**<u>திருநாவுக்கரசர்</u>** -

திருநாவுக்கரசர் திருவாய்மூரில் பிறந்தார். இவரது இயற்பெயர் மருணீக்கியார்.இளமையில் பல சமய ஆராய்ச்சி செய்து சமண சமயத்திற்குச் சென்று அங்குத் தருமசேனர் என்னும் பட்டம் பெற்றுத் தலைவராக விளங்கும் தகுதியும் பெற்றார். இவர் தமக்கையார் திலகவதியார். தம் தம்பியை ஆட்கொள்ளுமாறு இறைவனை வேண்டினார். திருநாவுக்கரசர் வயிற்றில் சூலைநோய் தோன்றியது. அதைப் போக்க வழி அறியாமல் இவர் தம் தமக்கையாரை நாடினார். தமக்கையார் திருநீறு அளித்து இறைவனை வழிபடச் செய்தார். சூலைநோய் மறைந்தது. மருணீக்கியார் இறைவன் புகழைப் பாடும் ஆற்றல் பெற்றுக் “கூற்றாயினவாறு விலக்ககலீர்” என்று தொடங்கும் பாடலைப் பாடினார். இவர் பாடல்களில் இருந்த பொருட் சிறப்புக் காரணமாக இறைவன் இவருக்கு நாவுக்கரசர் என்ற பெயர் சூட்டினான். இவர் கோயில்கள் தோறும் சென்று மனத்தினால் தியானித்து, வாயினால் இறைவன் புகழைப் பாடிக் கையினால் உழவாரப்பணி செய்தார் உழவாரம் என்பது புல் செதுக்கும் ஒரு கருவி. கோயிலில் மண்டிக் கிடக்கும் புல்லை உழவாரத்தினால் செதுக்கித் தூய்மை செய்வதைத் திருப்பணியாகக் கொண்டார் நாவுக்கரசர். இவர் சைவரானமை அறிந்த பல்லவப் பேரரசன் சமணர் தூண்டுதலால் இவரைச் சுண்ணாம்பு நீற்றறையில் இட்டும், நஞ்சு கொடுத்தும், கடலில் தள்ளியும், துன்புறுத்தினான். இறைவன் திருவருளாலும் தம் பக்தித் திறத்தாலும் இவர் இறவாது மீண்டார். இவர் அருளாற்றலைக் கண்டு பல்லவப் பேரரசனும் சைவனாக மாறினான். திருஞானசம்பந்தர் இவரை அப்பர் என அழைத்தார். இவர் திருவையாற்றில் கைலைக் காட்சியைக் கண்டு இன்புற்றார். இவர் எண்பத்தோராண்டுகள் இவ்வுலகில் வாழ்ந்தார். இறைவனிடத்தில் உறுதியான பற்றும் உண்மையான தொண்டுள்ளமும் கொண்ட அப்பர் பாடிய பாடல்கள் நான்கு, ஐந்து, ஆறு திருமுறைகளாகத் தொகுக்கப் பெற்றுள்ளன. இவர் இறைவனைத் தலைவனாகவும் தன்னை அடிமையாகவும் கொண்டு வழிபட்டவர். .இவர் பாடிய பாடல்களின் எண்ணிக்கை 3066.

“நங்கடம் பனைப் பெற்றவள் பங்கினன்

தென்கடம்பைத் திருக் கரக் கோயிலான்

தன் கடன் அடியேனையும் தாங்குதல்

என் கடன் பணிசெய்து கிடப்பதே”

**சுந்தரர் -**

சுந்தரர் என்னும் நம்பியாரூரர் திருநாவலூர் என்னும் ஊரில் தோன்றினார். அரசர் ஒருவரால் வளர்க்கப் பட்டார். இவருக்குத் திருமணம் ஏற்பாடாகியிருந்த போது சிவபெருமான் ஒரு முதிய வேதியராகத் தோன்றி இவர் தமக்கு அடிமை என்று கூறித் தடுத்தாட் கொண்டான். இவருக்கு இறைவன் காட்சி கொடுத்து “அருச்சனை பாட்டே ஆகும். சொற்றமிழ் பாடுக” என்று பணித்தான். “பித்தா பிறைசூடி” என்று இவர் பாடத் தொடங்கினார். இறைவன் சுந்தரரை நண்பராக ஏற்று இவருக்கு வேண்டிய உதவிகள் பலவற்றை அவ்வப்போது செயது வந்தான். இவர் பரவையார், சங்கிலியார் என்னும் இரு பெண்களை மணந்து இவ்வுலகில் 18 ஆண்டுகள் வாழ்ந்தார். இவர் சத்தியம் தவறியதற்காக இறைவன் இவர் கண்ணொளி மழுங்கச் செய்தான். பிறகு இறைவனிடம் இவர், தம் தவற்றினைக் கூறி மன்னிப்பு வேண்டினார். பிறகு கண்ணொளி பெற்றார். சுந்தரர் பல ஊர்களுக்குச் சென்று இறைவனை வழிபட்டுப் பாடல்கள் பாடியுள்ளார். இவர் பாடிய பாடல்கள் ஏழாம் திருமுறையாக அமைந்துள்ளன. இவர் சைவ சமய அடியார்களின் வரலாற்றைத் திருத்தொண்டத் தொகை என்னும் அமைப்பில் 11 பாடல்களைப் பாடியுள்ளார். இப்பாடல்களே சேக்கிழார் பாடிய பெரிய புராணத்திற்கு ஆதாரமாக அமைந்தன. இவர் வாழ்க்கை தோழமை என்னும் யோக நெறியைப் புலப்படுத்துவது. சம்பந்தர், நாவுக்கரசர் காட்டிய நெறியைப் பரப்பிய பெருமை இவரைச் சாரும். இவர் பாடிய பாடல்களின் எண்ணிக்கை -1026.

“மற்றுப் பற்றெனக்கு இன்றி நின்திருப்பாதமே மனம் பாவித்தேன்

பெற்றலும் பிறந்தேன் இனிப் பிறவாததன்மை வந்தெய்தினேன்

கற்றவர் தொழுதேத்தும் சீர்க்கறையூர் பாண்டிக்கொடு முடி

நற்றவா உனை நான் மறக்கினும் சொல்லும் நா நமச்சிவாயவே”

**மாணிக்கவாசகர் -**

இவர் திருவாதவூரில் தோன்றியவர். இவர் பாண்டிய மன்னனிடம் முதல் அமைச்சராகப் பணியாற்றினார். அரசனிடம் பெருஞ்செல்வம் பெற்றுக் குதிரை வாங்கச் சென்றபோது திருப்பெருந்துறை என்னும் இடத்தில் இறைவன் குருவாக வந்து இவரை ஆட்கொண்டார். உடனே இறைவன் திருவருளால் இவர் கனிவு மிகுந்த - மாணிக்கம் போன்ற வாசகங்களைப் பாடினார். இறைவன் இவருக்கு மாணிக்க வாசகர் என்னும் பெயரைச் சூட்டினான். இறைவனுக்குத் திருப்பெருந் துறையில் பெரிய கோயில் ஒன்றை இவர் கட்டினார். இறைவன் இவருக்காக மதுரையில் நரிகளைப் பரிகளாக்கியும்)குதிரைகளாக்கியும்) பிட்டுக்கு மண் சுமந்தும் திருவிளையாடல் புரிந்தான்.

இவரும் பலதலங்களை வழிபட்டு இறுதியில் தில்லையை அடைந்தார். இவர் தில்லையில் புத்த சமயத்தினரை வாதம் செய்து வென்றார். இறுதியில் தில்லை நடராசப் பெருமான் அருளைப் பெற்று அவன் திருவடி சேர்ந்தார். இவர் இவ்வுலகில் 32 ஆண்டுகள் வாழ்ந்தார். இவர் பாடிய பாடல்கள் திருவாசகம், திருக்கோவையார் என்னும் இரண்டு நூல்களாக உள்ளன. இவை எட்டாம் திருமுறையாக அமையம். இவர் காட்டிய நெறி ஞான நெறியாகிய சன்மார்க்க nநிறயாகும். திருவாசகத்திற்கு உருகார் ஒருவாசகத்திற்கும் உருகார் என்பது பழமொழி. உள்ளத்தை உருக்கும் பாடல்களின் தொகுப்பே திருவாசகம். இது “நமசிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க” என்று தொடங்குகிறது. திருவாசகப் பாடல்களின் எண்ணிக்கை 656. திருக்கோவையார் பாடல்கள் எண்ணிக்கை- 400.

“நாடகத்தால் உன்னடியார் போல் நடித்து நானடுவே
வீடகத்தே புகுந்திடுவான் மிகப்பெரிதும் விரைகின்றேன்
ஆடகச்சீர் மணிக்குன்றே இடையறா அன்புனக்குள்
ஊடகத்தே நின்றுருகத் தந்தருள் எம்முடையானே.”

-நான்காம் திருமுறை மாநாட்டு வெளியீடு- 1984

# (காரைக்கால்) அம்மையார் அற்புதம்.

சிவபெருமானை மனத்தால் நினைத்து, வாயால் அவன் புகழ்பாடி, உடலால் அவனுக்குரிய பணிகளைச் செய்து வாழ்ந்த பெருமக்களை நாயன்மார்கள் எனச் சைவச் செந்நெறி அழைக்கும். "மதிவளர் சடைமுடி மன்றுளாரை முன் துதிசெயும் நாயன்மார்'' என்றுதான் நாயன்மார் வரலாற்றைப் பாடிய சேக்கிழார் நமக்கு அறிமுகப் படுத்துகிறார். அளவிலாத பெருமையராகிய அடியார்கள் நாயன்மார்கள். இவர்கள் அறுபத்து மூவர். இவர்களின் ஒருவரான காரைக்கால் அம்மையாரின் அற்புதங்களை, தனிச் சிறப்பினைசு சுட்டிக் காட்டுவதே இந்தக் கட்டுரையின் நோக்கமாகும். சேக்கிழார் பாடிய பெரியபராணத்தில் காணப்படும் காரைக்கால் அம்மையார் பராணத்திலருந்தும் காரைக்கால் அம்மையார் பாடிய "அற்புதத் திருவந்தாதி, திரு இரட்டை மணிமாலை, திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகங்கள் ''ஆகிய பதினோராம் திருமுறை நூல்களிலிருந்தும் அம்மையாரின் பெருமையைப் பார்க்க முயல்வோம்.

**வணிகர் குல வனிதையார்** -

அறுபத்து மூன்று நாயன்மார்களில் தனவணிகர் குலத்தைச் சார்ந்தவர் ஐவர். அமர்நீதியார், இயற்பகையார், கலிக்கம்பர், காரைக்கால் அம்மையார், மூர்த்தி நாயனார் ஆகிய ஐவரில் ஒருவராகக் காரைக்கால் அம்மையார் விளங்குகின்றார். சேக்கிழார் காரைக்கால் அம்மையார் புராணத்தைத் தொடங்கும் போதே "மானமிகு தருமத்தின் வழிநின்று வாய்மையினில் ஊனமில் சீர்ப் பெருவணிகர் குலம்'' என்று (1722)வணிகர் குலப் பெருமையைப் பேசுகிறார். "தன்னிலையில் தாழாமையும் தாழ்வு வந்துழி உயிர் வாழாமையுமாகிய மான மிக்கவர்கள், அறநெறி பிறழாத வாழ்க்கையினர் , உண்மை நேர்மைப் பண்பு உடையவர்கள் , குற்றமில்லாத பெருமை கொண்டவர்கள்'' என்று வணிகர்களின் நல்லியல்புகளைப் பாராட்டிய சேக்கிழார் "வணிகர் பெருங்குலம் விளங்க வந்து பிறந்தருளியவர்'' காரைக்கால் அம்மையார் என்று அம்மையார் பெருமையைப் பேசுகிறார். தனவணிகர் குலத் தகுதிக்கு அம்மையார் அக்குலத்தில் தோன்றியது ஆக்க மூட்டிய ஒன்றல்லவா? பெரிய புராணம் பேசும் நாயன்மார்களில் மங்கையர்க்கரசியார், காரைக்கால் அம்மையார், இசை ஞானியார், ஆகிய மூவரும் பெண்கள். இவர்களில் காரைக்கால் அம்மையார் பாடல் இயற்றிய கவியரசியாக விளங்கியவர் அல்லவா?

**பெயர்ச் சிறப்பு -**

அம்மையார்க்கு அவர் பெற்றொர் இட்ட பெயர் புனிதவதியார் என்பதாகும். தூய்மை வாழிடம் என்பது இதன் பொருள். "தூய்மை என்பது அவாவின்மை மற்றது வாஅய்மை வேண்ட வரும்''(குறள் - 364) என்னும் குறளுக்கேற்ப அவா ( ஆசை) இல்லாதிருந்தவையே வாழ்வாகக் கொண்டவர் அம்மையார். அத்தன்மையையும் மெய்ப் பொருளாகிய இறைவனை வேண்டிப் பெற்றவர். பேயார் என்று சுந்தரர் திருத்தொண்டத் தொகையில் இவரைக் குறிப்பிடுகின்றார். அம்மையார் பாடிய திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகத்தில் "காரைக்காற்பேய்'' என்ற தொடர் வருகின்றது. இத்தொடர் அற்புதத்

திருவந்தாதியிலும் (86) இடம் பெற்றுள்ளது. மேலும் அந்நூலில் "பேயாய நற்கணத்தில் ஒன்றாய நாம்'' என்று தம்மை அம்மையார் அழைத்துக் கொள்கிறார். தம் கணவன் தம்மைத் தெய்வமாக வணங்கிய காரணத்தால் அவனுக்காகத் தாங்கிய அழகுமிக்க தசைப் பொதியைக் கழித்து இறைவனிடத்தில் இவர் பேய் வடிவினை வேண்டிப் பெற்றதால் - எலும்புடம்பாக இருந்ததால் - இவர் பேயார் என அழைக்கப் பெற்றார். கைலாயத்திற்குத் தலையாலே இவர் நடந்து சென்றபோது இறைவன் உமையம்மையாரிடம் காரைக்கால் அம்மையாரை "இவள் நம்மைப் பேணும் அம்மை காண்'' என்று அறிமுகப் படுத்தி, இவரை அம்மைகாண் என்று அழைத்த காரணத்தால் இவர் அம்மையார் என அழைக்கப் பெற்றார். இவர் பிறந்த ஊராகிய காரைக்கால் என்பதையம் சேர்த்துக் காரைக்கால் அம்மையார் என அழைத்தனர். இதனையே சேக்கிழாரும் இவர் புராணத்துக்குப் பெயராகக் கூறுகிறார். காரைக்கால் அம்மையார் கி.பி. 5 அல்லது 6ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் என்பது ஆராய்ச்சியாளர் கருத்து. (அழகப்பன். வெ.சு - 1987 -18)

**<u>இளமையிலேயே இறை நாட்டம்-</u>**

அம்மையார் பேசத் தொடங்கிய நாளிலிருந்து ஆண்டவனிடம் ஆராக்காதல் பூண்டவர். இவர் பாடிய அற்புதத் திருவந்தாதியின் முதல் பாட்டில் காணப்படும்,

"பிறந்து மொழி பயின்ற பின்னெலாம் காதல்

சிறந்து நின் சேவடியே சேர்ந்தேன்''

என்னும் தொடர் வாயிலாக அறியக் கிடக்கின்றது. இதனைச் சேக்கிழார் "வண்டல் பயில்வன வெல்லலாம் வளர்மதியம் புனைந்த சடை அண்டர் பிரான் திருவார்த்தை அணைய வருவன பயின்று'' (1726) என்று குறிப்பிடுகின்றார். சிறு வயதில் மணல் வீடுகட்டி விளையாடும் பருவத்திலேயே இறைவன் பெருமை பேசி விளையாடும் இயல்பினர் அம்மையர் என்று குறிப்பிடுகின்றார்.

**<u>மாங்கனி பெற்ற மாண்பு -</u>**

அம்மையார் சிவபெருமானிடத்தில் கொண்ட ஈடுபாட்டினைப் போலவே சிவனடியார்களிடத்தும் பக்தி கொண்டவர். அவர் தம் கணவருடன் இல்லறம் தொடங்கிய காலத்திலிருந்தே சிவனடியார்களுக்கு நல்லமுது அளித்தும், நவமணிகளும் நல்லாடைகளும் நல்கியும், வேண்டுவன வழங்கியும் வாழ்ந்தவர். இப்படி வாழும்போது ஒருநாள் அம்மையாரின் கணவனாகிய பரமதத்தனுக்கு அவன் நண்பர்கள் இரு மாங்கனிகள் கொடுத்தனர். அவற்றை அவன் மனைவியார் பால் சேர்ப்பித்தான். அவன் உணவுண்ண வருமுன் சிவனடியார் ஒருவர் அம்மையாரின் இல்லம் வந்தார். அவர் பசியால் வருந்தி இருப்பதைக் கண்ட அம்மையார் அவர்கட்கு அமுது படைக்கும் போது கனியாக மாங்கனிகளில் ஒன்றைப் படைத்து விட்டார். பின்னர் கணவன் தான் உணவுண்ண வந்தபோது அம்மாங்கனியைக் கொண்டு வருமாறு கேட்டான். அம்மையார் ஒரு மாங்கனியைக் கொடுக்க அதனைச் சுவைத்த கணவன் இன்னொரு மாங்கனியையும்

கேட்டான். அம்மையார் அறையில் தனித்து நின்று தயங்கி இன்னொரு கனிக்கு என்செய்வது என நினைத்திருக்கும் வேளையில் இறைவன் அருளால் அவர் கையில் ஒரு மாங்கனி வந்து நின்றது. இதனைக் கணவனிடம் கொடுத்து மகிழ்ந்தார் அம்மையார். இக்கனி முன்புண்ட கனியை விடச் சுவை மிகுதியாக உடையதாக இருக்கக் கண்ட கணவன், ஐயுற்றுக் கேட்க அம்மையார் நிகழ்ந்தவற்றைக் கூறினார். ஈசனருள் என அதனை நம்பாத கணவன் அதனைச் சோதிக்க வேண்டி மற்றுமொரு கனி வரவழைத்துத் தருக எனக் கேட்க அவர்முன் இறையருளால் மற்றுமொரு கனியும் பெற்றளித்தார். கணவன் கையில் வந்ததும் அக்கனி மறையக் கண்டான். உடனே உள்ளம் தடுமாறித் தன் மனைவியின் தெய்வத் தன்மையை உணர்ந்து அவருடன் உடனுறையாது வாணிகத்தின் பொருட்டுச் செல்வான் போல் அவ்வூரிலிருந்து பாண்டியநாடு சென்றான். மாங்கனி இறையருளால் அம்மையார் பெற்றது இவர்வாழ்வில் நடந்த ஓர் அற்புதச் செயலல்லவா? இந்த அற்புதச் செயல்தான் வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்த அம்மையாரை வானுறையும் தெய்வத்துள் ஒன்றாக வைத்தது.

**<u>கணவன் தொழுத காரிகை -</u>**

பாண்டிநாடு சென்ற கணவன் வேறொருத்தியை மணந்து அவள்பால் பெற்ற பெண்மகளுக்கு அம்மையார் பெயரை இட்டு வாழ்ந்து வந்தான். இச்செய்தி அறிந்த அம்மையாரின் உறவினர்கள் அவளைப் பாண்டிய நாட்டிற்கு அழைத்துச் சென்றனர் அம்மையாரைக் கண்ட பரமதத்தன் அம்மையார் அடியின் கீழ் தன் மனைவி மகள் ஆகியோரோடு வீழ்ந்து வணங்கி, உற்றார் உறவினரிடம் இவர் மானிடப் பிறவியல்லர், "இவர் தெய்வமாகப் போற்றத் தக்கவர். நீங்களும் இவரைப் போற்றி வழிபடுங்கள்" என்று கூறினான். இதனைக் கேட்ட பின்னர்தான் அம்மையார் இறைவனை வேண்டிப் பேய்வடிவம் பெற்றார்.

**<u>பேய் வடிவம். -</u>**

அம்மையார் பெற்ற பேய் வடிவம் இறைவனை அவர் வேணடிப் பெற்ற வடிவம். இறைவனது திருவடியைப் போற்றி வணங்கி ஞான உணர்வு பெறுவதற்காக அம்மையார் பெற்ற வடிவம் அது. உடம்பிலுள்ள ஊன், தசை ஆகியவற்றால் அமையும் அழகை எல்லாம் உதறி எலும்பு வடிவமே உடம்பாக (எலும்புச் சட்டமாக உடல் தென்படுமாறு) அமைந்த வடிவமே அந்தப பேய் வடிவம். இப்பேய் வடிவத்தைக் கண்டு வானமும் மண்ணும் எல்லாம் வணங்கியதாகச் சேக்கிழார் குறிப்பிடுகிறார். (1171) அற்புதத் திருவந்தாதியில் இறைவனை வணங்கும் நற்கணத்தில் ஒன்றானேன் நான் என்னும் பொருள்பட இவர் கூறுவதால் இறைவனை வணங்கும் பேய்க் கூட்ட வடிவம் இவர் கொண்ட வடிவம் ஆகும். "பிறப்பறுக்கல் உற்றார்க்கு உடம்பும் மிகை" என்னும் குறளுக்கேற்ப அமைந்த நிலை இது. கைலை செல்ல முயன்றபோது இவ்வடிவத்தைக் கண்டவர் அஞ்சி வியப்புற்று ஓடினர். இந்நிலையில் அம்மையார் "ஆண்டவன் என்னை அறிந்தால் போதும், மற்றவர்க்கு நான் எக்கோலத்தில் இருந்தால் என்ன?" என்று கேட்கிறார்.

**<u>கைலைக் காட்சி -</u>**

கைலை சென்று இறைவனை வழிபட நினைத்த காரைக்கால் அம்மையார் கைலையை அடைந்ததும் அதனைக் காலால் நடந்து சென்று கடப்பது முறையன்று எனக் கருதித் தலையினால் நடந்து சென்றார். இக்காட்சியைக் கண்ட உமையம்மையார் சிவபெருமானை நோக்கித் தலையினால் நடந்திங்கேறிவரும் என்புருவ யாக்கையின் அன்பின் திறன் என்னை? என்று (1178) வியந்து கேட்கிறார். அதற்குச் சிவபெருமான் "இவ்வாறு வரும் இவள் நம்மைப் பேணும் அம்மையார், இப்பெருமை சேர் வடிவம் வேண்டிப் பெற்றனர்'' என்று கூறி அம்மையாரை நோக்கி. "அம்மையே'' என்றழைத்தான். இந்தச் சொல்லைச் சேக்கிழார் "செம்மை ஒருமொழி உலகமெல்லாம் உய்யவே அருளிச் செய்தார் சிவபெருமான்'' என்கிறார். (1179) அம்மையாரும் சிவனை நோக்கி'அப்பா' என்றழைத்து வணங்கினார். இவ்வாறு இறைவனாலேயே அம்மையே என்றழைக்கப் பெற்ற பெருமை காரைக்கால் அம்மையார் ஒருவருக்கே உண்டு.

**<u>பிறவாமையும் மறவாமையும் -</u>**

சிவபெருமான் அம்மையாரை நோக்கி "நம்பால் வேண்டுவதென்ன?'' என்று கேட்க அதற்கு அம்மையார்,

"இறவாத இன்ப அன்பு வேண்டிப் பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் , மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும், இன்னும்வேண்டும் நான் மகிழ்ந்து பாடி
அறவா, நீ ஆடும்போது உன் அடியின்கீழ் இருக்க "(1781)

என்றார். இறைவனும் "திருவாலங்காட்டில் ஆடும் நடனக் காட்சியைக் கண்டு எப்போதும் பாடுவாய் நம்மை'' என்று கூறுகிறார். அதற்கேற்ப அம்மையாரும் திருவாலங்காடு சென்று மூத்த திருப்பதிகம் பாடினார். திருவாலங்காட்டுப் பதிக்கும் அம்மையார் தலையாலே நடந்து வந்ததாகச் சேக்கிழார் குறிப்பிடுகின்றார். அம்மையார் இறைவனிடம் அழியாத அன்பையே முதலில் வேண்டுகின்றார். பின்பு பிறவாமை வேண்டுகின்றார். பிறப்பு இருக்குமானால் இறைவனை மறவாது இருக்கும் இயல்பு வேண்டுகிறார். இறைவன் திருநடனக் காட்சியை அருகில் இருந்து கண்டு திளைக்க வேண்டும் என்கிறார். 'கூடும் அன்பினில் கும்பிடலே அன்றி வீடும் வேண்டாத ''(1431) சிறப்பினை அம்மையாரிடத்தில் காண்கிறோம்.

**<u>இருந்த கோலம் -</u>**

திருக்கோயில்களில் உள்ள அறுபத்து மூன்று நாயன்மார்களில் திருவுருவச் சிலைகளை உற்று நோக்கினால் காரைக்கால் அம்மையார் திருவுருவம் மட்டுமே உட்கார்ந்து இருக்கும். அமர்ந்திருக்கும் நிலையில் காட்சி அளிக்கும். எல்லா நாயன்மார்களும் நின்ற கோலத்தில் இருக்க அம்மையார் மட்டும் அமர்ந்திருக்கும்

கோலத்தில் காட்சி அளிக்கக் காரணம் என்ன? அவர் சிவபெருமானுக்கு மட்டுமல்ல, அவன் உருவத்தினைச் சிந்தையில் தாங்கி இருக்கும் சிவனடியார்களுக்கும் அம்மை என்பதைக் காட்டவா? அம்மையார் கைலையில் இறைவனிடத்தில் வரம் கேட்கும் போது “நீ ஆடும் போது அடியின் கீழ் இருக்க'' என்று கேட்டாரல்லவா? அதனால்தான் இறைவன் இவரை மட்டும் “இருக்க'' வைத்திருக்கிறான்.

**<u>மூவரும் போற்றும் முதன்மை -</u>**

தேவாரம் பாடிய ஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகிய மூவரும் காரைக்கால் அம்மையாரிடம் பெருமதிப்பு வைத்துப் போற்றியுள்ளனர். திருஞான சம்பந்தர் தாம் மேற்கொண்ட தலயாத்திரையில் திருவாலங்காட்டுக்கு அருகே வந்தபோது , “இம்மையிலே புவியுள்ளோர் யாரும் காண ஏழுலகும் போற்றிசைப்ப எம்மை ஆளும் அம்மை திருத்தலையாலே நடந்து போற்றும் அம்மையப்பர் திருவாலங்காடாம் '' என்று கூறி, அம்மையார் தலையாலே நடந்து சென்ற அப்பகுதியைக் காலால் மிதித்து நடக்க அஞ்சி நின்று பதிகம் பாடியதாகச் சேக்கிழார் (2911) கூறுகிறார். இங்கு ஞானசம்பந்தப் பெருமான் காரைக்கால் அம்மையாரை ‘எம்மை ஆளும் அம்மை’ என்று அழைத்துப் போற்றியுள்ள செய்தியைக் காணுகிறோம். இறைனாலும் இறைவனடியாரும் அம்மை என அழைக்கப் பெற்ற பெருமை காரைக்கால் அம்மையார் ஒருவருக்கே உண்டு. இறைவன் ‘தாயமிலி தந்தையும் இலி’ உலகிற்கெல்லாம் அம்மை அப்பன், அவன் காரைக்கால் அம்மையாரை அம்மை என அழைத்துள்ளான். ஞானசம்பந்தப் பெருமானுக்கோ ஞானப்பால் ஊட்டிய அம்மை அப்பன் திருத்தோணிபரத்து ஈசன். இருவரும் போற்றும் ஏற்றம் அம்மையாருக்குக் கிடைத்துள்ளது. திருநாவுக்கரசர் தம் தேவாரத்தில் அம்மையாரின் கருத்து, சொல், கற்பனை ஆகியவைகளைப் பல இடங்களில் எடுத்து ஆள்கிறார் என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர். (அழகப்பன். வெ.சு.-1987-167,168) “பூமாலை புனைந்தன்பாய்'' என்பது அம்மையாரின் அற்புதத் திருவந்தாதித் தொடர். ( பா..87) நாவுக்கரசர் “நிலைபெறுமாறு எண்ணுதியேல் '' என்ற பாட்டில் “பூமாலை புனைந்து ஏத்திப் புகழ்ந்து பாடி'' என்று கூறுகின்றார். சுந்தரர் தம் திருத்தொண்டத் தொகையில் (4)’பேயார்ககும் அடியேன்’ என்று போற்றுகின்றார்.

**<u>திருமுறைக்கு ஒரு பெண்மணி -</u>**

சைவ சமயத் தோத்திர நூலாகிய திருமுறைகள் பன்னிரண்டும் பாடிய பெருமக்கள் இருபத்தேழு பேர். இவர்களில் காரைக்கால் அம்மையார் ஒருவர்தான் பெண்மணி. ஏனையோர் ஆடவர். இந்த இருபத்தேழு பேரும் இருபத்தேழு விண்மீன்கள் எனக் கொண்டால் காரைக்கால் அம்மையார் ஒரு துருவ நட்சத்திரம் எனக் கூறலாம். காரைக்கால் அம்மையார் பாடிய அறபுதத் திருவந்தாதி, திரு இரட்டை மணிமாலை, திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகங்கள் ஆகிய மூன்றும் பதினோராம் திருமுறையில் திருவாலவாயாராகிய இறைவன் பாடலுக்கு அடுத்து வைத்துப் போற்றப் பட்டுள்ளன. ஏனைய திருமுறை ஆசிரியர்களுக்குப் பதிகப் பொருளையும், பலவகைப் பாட்டு நெறிகளையம், புதிய இலக்கிய வகைகளையும் காட்டி நின்ற பெருமாட்டி அம்மையார்

அல்லவா? பதினோராம் திருமுறையிலேயே சேரமான் பெருமாள் நாயனார் பாடல்களில் காரைக்கால் அம்மையாரின் பாடலின் செல்வாக்கு இருப்பதைப் பார்க்கலாம். மேலும் நம்பியாண்டார் நம்பியும் திருத்தொண்டர் திருவந்தாதியில் "காரைக்காலின் மேயகல தனமே'' என்று அம்மையாரைப் பாராட்டுகிறார் (28)

**தத்துவத்தின் தாய் -**

தமிழரின் தனிப்பெரும் தத்துவமாகிய "சைவ சித்தாந்தம்'' தொடர்பான அடிப்படைக் கருத்துகளுக்கும் வித்திட்டவர் காரைக்கால் அம்மையார் என்பர் அறிஞர். சித் என்றால் அறிவு. அறிவைஅடிப்படையாகக் கொண்டது சைவ சித்தாந்தத் தத்துவ நெறி.

"அறிவானும் தானே அறிவிப்பான் தானே

அறிவாய் அறிகின்றான் தானே - அறிகின்ற

மெய்ப்பொருளும் தானே விரிசுடர்பார் ஆகாசம்

அப்பொருளும் தானே அவன் '' (அற்புதத் திருவந்தாதி -20)

இப்பாடலில் இறைவன் அறிவு வடிவாக அமைந்து உயிர்களுடன் ஒன்றாகவும் வேறாகவும் உடனாகவும் இருந்து இயங்கும் கருத்தை அம்மையார் கூறுவதைக் காணலாம். இவ்வாறு பல சான்றுகளைக் கூறலாம்.

**அந்தாதி பாடிய அம்மையார் -**

அந்தாதி என்பது ஒருபாட்டின் அந்தமாகிய அதாவது இறுதியாகிய எழுத்தோ அசையோ சீரோ சொல்லோ அடியோ அடுத்த பாட்டின் ஆதியாக - தொடக்கமாக அமையப் பாடும் இலக்கிய அமைப்பாகும். இவ்வகை அமைப்பு பழந்தமிழ் இலக்கியங்களில் காணப் பட்டாலும் அந்தாதியை ஒரு நூலாக இலக்கியமாக காரைக்கால் அம்மையாருக்கு முன் யாரும் இயற்றவில்லை. காரைக்கால் அம்மையார்தான் முதன் முதலில் அந்தாதி இலக்கியத்தை இயற்றிப் பிற்காலத்து எழுந்த அந்தாதி இலக்கியங்களுக்கெல்லாம் தோற்றுவாய் செய்தார். காரைக்கால் அம்மையார் சிவபெருமானைப் பற்றி வெண்பா யாப்பில் செய்த நூலே அற்புதத் திருவந்தாதி ஆகும். இந்நூல் 101 வெண்பாக்களால் வந்து மண்டலித்து முடிகின்றது. 101ஆம் பாட்டு கடைக்காப்புச் செய்யுள். பாடலின் பொருள் 100ஆம் பாட்டுடன் முடிந்து விடுகிறது. 101ஆம் பாட்டின் இறுதிப்பகுதி முதற் பாட்டின் தொடக்கமாக அமைகின்றது. இந்நூல் காணும் அனைத்து வெண்பாக்களும் இருவிகற்ப நேரிசை வெண்பாக்களாகும். இலக்கியம், தத்துவம் இரண்டும் அற்புதமாகக் கலந்த கலவையாக இந்நூல் அமைந்துள்ளது. மேலும் அம்மையார் தம் வாழ்வில் நிகழ்ந்த அற்புதத்தை எண்ணிப் பாடிய நூல் இது . தமிழில் அகராதி இலக்கியத்திற்கு வித்திட்ட பெருமை காரைக்கால் அம்மையாரையே சாரும்.

**இரட்டை மணிமாலை பாடிய ஏந்திழையார் -**

காரைக்கால் அம்மையார் சிவபெருமானைக் குறித்துத் திருஇரட்டை மணிமாலை என்னும் நூல் இயற்றியுள்ளார். இரட்டை மணிமாலை என்பது வெண்பா, கட்டளைக் கலித்துறை என்னும் இரண்டு வகைப் பாடல்கள் மாறி மாறி வந்து (மாலை போல்) அந்தாதி முறையில் அமைந்து இருபது பாடல்களைக் கொண்ட ஓர் இலக்கிய வகையாகும். அம்மையார் பாடிய இந்த இரட்டை மணி மாலையில் முதலில் கட்டளைக் கலித்துறையும் அடுத்து வெண்பாவுமாக மாறி மாறி வருகின்ற இயல்பைப் பார்க்கலாம். இந்த இருபது பாடல்களும் அந்தாதி முறையில் அமைந்துள்ளன. இந்த இரட்டை மணிமாலை இறைவனைப் பற்றியதாதலால் திரு இரட்டை மணி மாலை எனப் பெயர் பெற்றது. தமிழிலக்கியத்தில் பின் தோன்றிய இரட்டை மணி மாலைகள் எல்லாம் பாடப் பெற்றோரின் பெயரோடு இணைந்து வரும் இயல்புடையன. இங்கு அப்படி இல்லை. தமிழிலக்கியத்தில் இரட்டை மணி மாலை என்னும் இலக்கிய வகையையும் முதன் முதலில் தோற்றுவித்த பெருமை காரைக்கால் அம்மையாருக்கே சாரும். மேலும் கட்டளைக் கலித்துறை என்னும் புதிய யாப்பு வடிவச் செய்யுளைத் தமிழிலக்கியத்தில் முதன் முதலில் இயற்றிய பெருமையும் காரைக்கால் அம்மையாருக்கே உரியது.

**மூத்த பதிகங்கள் பாடிய மூதாட்டியார் _**

பத்துப் பாடல்கள் ஒரு பொருள் பற்றி அமையும் நிலையினைப் பதிற்றுப் பத்து, திருக்குறள் முதலிய பழந்தமிழ் இல்கியங்களில் காண முடிகின்றது. இம்முறையில் இறைவனைப் பாடு பொருளாகக் கொண்டு பாடிய நிலையில் பதிகம் எனும் இலக்கிய வகை உருவாயிற்று. காரைக்கால் அம்மையார் திருவாலங்காடு என்னும் திருத்தலத்திலுள்ள சிவபெருமானைப் பாடுபொருளாகக் கொண்டு இரண்டு பதிகங்கள் இயற்றி உள்ளார். இவை திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகங்கள் எனப் பெயர் பெற்றன. ஒவ்வொரு பதிகமும் 11 பாடல்களைக் கொண்டது. இவற்றில் இறுதிப் பாடல் கடைக் காப்புச் செய்யுளாகும். இதனை நீக்கின் பத்துப்பாடல் எனக் கணக்கு அமையும். ஒவ்வொன்றும் ஆசிரிய விருத்தம் என்னும் யாப்பு வகைப் பாடலைக்கொண்டது. மேலும் இப்பதிகங்களுக்கு பண் வகுத்து வைத்துள்ள அருமையும் பெருமையும் அம்மையாரைச் சாரும். பிற்காலத்தில் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகியோர் பாடிய தேவாரத்தில் பதிகங்களுக்கு எல்லாம் முன்னோடியாக இருந்தவை காரைக்கால் அம்மையார் பாடிய திருவாலங்காட்டுத் திருப்பதிகங்களே ஆகும். எனவே காலத்தால் முந்திய இப்பதிகங்களை மூத்த திருப்பதிகங்கள் என முன்னோர் அழைத்தனர். இப்பதிகங்களில் காரைக்கால் அம்மையார் இறைவனுடைய திரு நடனத்தைப்பற்றி பேய்க்கணங்களின் வருணனையடன் பேசும் திறன் பாராட்டிற்குரியது. பாடும் பொருள், யாப்பு, பண் அமைப்பு ஆகிய மூன்றின் வாயிலாகப் பிற்காலத்தில் தோன்றிய பக்தி இலக்கியத்திற்கு வழிகாட்டிய பெருமை காரைக்கால் அம்மையாரையே சாரும்.

**முத்தமிழ் வித்தகி -**

இயல், இசை, நாடகம் என்னும் முத்தழிழறிவும் வாய்க்கப் பெற்ற வித்தகி காரைக்கால் அம்மையார். அற்புதத் திரு அந்தாதி, திரு இரட்டை மணி மாலை, திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகங்கள் வாயிலாக அம்மையாரின் இயற்றமிழ் புலமை வெளிப்படுகின்றது. திருவாலங்காட்டுப் பதிகங்களுக்கு நட்டபாடை, இந்தளம் ஆகிய பண்களை வகுத்துள்ளார். எனவே அவருக்குள்ள இ.சைத் தமிழ்ப் புலமையை உணர முடிகிறது. மேலும் இப்பகுதிகளில் இறைவன் திருநடனத்தின் பல்வேறு கூறுகளை இவர் பாடுவதன் வாயிலாக இவரது நாடகத் தமிழ்ப் புலமையை நாம் அறிய முடிகிறது.

**புது நெறி காட்டிய பெருமாட்டி-**

பல்லவர் கால இலக்கியப் போக்கிற்கு வழிகாட்டி வைத்த பெருமை அம்மையார் அருளிச் செய்த பிரபந்தங்களுக்கே உண்டு. அதனால் தமிழ்நாட்டுப் பெரும் புலவர் வரிசையில் வைத்து எண்ணத தக்க சிறப்பு வாய்ந்தவர் அவர் எனப் பாராட்டுகின்றனர் தமிழ் இலக்கிய வரலாற்றாசிரியர்கள். (செல்வநாயகம். வி. - 1960-61) நான்கு சிறிய நூல்கள் (அற்புதத் திருவந்தாதி, திரு இரட்டை மணிமாலை, திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகங்கள் 2) பாடியவர்தான் அம்மையார். எனினும் இலக்கியத்தின் பாடு பொருளாகிய உள்ளடக்கத்தாலும் யாப்பு நெறியாகிய உருவத்தாலும், கூறு முறையாகிய உத்தியாலும், புதுமைகள் பல புகுத்தியவர் அம்மையார். இவர்க்கு முன் தோன்றிய சங்க கால இலக்கியங்கள் காதலையம், வீரத்தையும் பாடுபொருளாகக் கொண்டவை. பின்னர்ச் சங்கம் மருவிய சமய நூல்கள் அறநெறியை வலியுறுத்தும் இயல்பான இந்நிலையில் பக்தியைப் பாடு பொருளாகக் கொண்டு இலக்கியம் செய்த பெருமாட்டி அம்மையார். பின்னே பல்லவர் காலத்தில் தோன்றிய பக்தி இயக்கத்திற்கு முன்னோடியாக இருந்து வழிகாட்டிய பெருமை அம்மையாருக்கே உண்டு. பக்தியில் தோததிர உணர்வையும் சாத்திர அறிவையும் காடடிப் பாடிய பெருமையும் அம்மையாருக்கு உண்டு. பக்தி அனுபவங்களைப் பாடுவதற்குரிய யாப்பு நெறிகளாகக் கட்டளைக் கலித்துறை, விருத்தம் ஆகிய புதியயாப்பு வகைச் செய்யுள்களையம் முதன் முதலில் பாடியவர் அம்மையார். இவருக்கு முன் ஆசிரியப்பாவும் வெண்பாவும் கலிப்பாவுமே இலக்கிய உலகில் கோலோச்சின. பின்னர் விருத்தம் என்னும் யாப்புப் பெருகிக் காப்பியப் பாவாக மாறுவதற்குக் காரணமாக இருந்தவர் அம்மையார்தான். கூறும் முறையிலும் அந்தாதி, இரட்டை மணி மாலை, பதிகம் எனப் பலப்பல புதுவகை இலக்கிய வகைகளை உருவாக்கிப் பிற்காலத்தே இவ்வகை இலக்கியங்கள் தோன்றிட வழிகாட்டியாக இருந்தவர் அம்மையார் அல்லவா? எனவேதான் தமிழ் இலக்கிய வரலாற்றில் அம்மையார் ஒரு புதிய இலக்கிய மரபினையே ஆரம்பித்து வைத்தவர் எனப் போற்றப் பெறுகிறார்.

**முடிவுரை -**

காரைக்கால் அம்மையார் சிவபெருமானுக்கும் சிவன் அடியார்களுக்கும் மட்டுமின்றித் தமிழிலக்கியத்திற்கும் தமிழ்த் தத்துவத்திற்கும் “அம்மையாக, தாயாக”

விளங்கி அற்புத ஆற்றல் பெற்றவர். இவரைத் தம் குல மூதாட்டியகாக் கொண்ட தனவணிகர் தழைக்க இறைவனை வேண்டுவோமாக.

------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

**துணை நூல்கள்** -


அழகப்பன். வெ.சு, பதினோராந் திருமுறைத்திறன், காரைக்குடி, கண்ணம்மை பதிப்பகம்.

செல்வநாயகம். வி,தமிழ் இலக்கிய வரலாறு, யாழ்ப்பாணம்,ஸ்ரீலங்கா அச்சகம், 1960

பெரிய புராணம், சென்னை, சைவ சித்தாந்த சமாஜம், 1950.

பதினோராந் திருமுறை,திருப்பனந்தாள், காசிமடம், 1950.


(பினாங்கு சிவன் கோயில் குடமுழுக்கு விழா மலர்)

¬¬¬¬¬¬------------------------


Thinnappan, ‘Karaikkaal Ammaaiyar’ in **ThirumuRai thantha PerumakkaL** Singapore, Thirumurai conference silver jubilee, pp 71-77, 2005

Thinnappan, SP. Ammaiyaar Arputam (The Place of Karaikkal) Ammaiyar in Tamil literature. In: Penang Sivan Temple Consecration Souvenir Magazine, Ed: Ray Ramasamy, Sivan Temple, Penang, Malaysia (1996) pp 56-61 (Tamil)

# அப்பர் அறிவுரை

அப்பர் என்று அழைக்கப் பெறும் திருநாவுக்கரசர் சைவ சமயக்குரவர்நால்வருள் காலத்தால் மூத்தவர்.ஏழாம் நூற்றாண்டில் தமிழகத்தில் சமண சமயச் செல்வாக்கினின்று சைவத்தைக் காப்பாற்றிய சான்றோர். மக்களை மட்டுமின்றிப் பல்லவப் பேரரசன் மகேந்திரவன்மனையும் மதம்மாறச் செய்த மாண்புடையவர். திருவாமூரில் அலகில் கலைத்துறை தழைக்கவும் அருந்தவத்தோர் நெறி வாழவும் உலகில் வரும் இருள் நீக்கி ஒளி விளங்கு கதிர்போல் புகழனார் , மாதினியார் என்ற இருவருக்கும் இவர் மகனாய்த் தோன்றினார். இவர் இயற் பெயர் மருணீக்கியார். இளமையில்தம் பெற்றோரை இழந்து குடும்பத்தில் ஏற்பட்ட துன்பங்களைக் கண்டு நில்லாத உலகியல்பு உணர்ந்து 'நிலையா வாழ்க்கை அல்லேன்' என்று அறத் துறந்து சமண சமயத்தில் சார்ந்து நின்றார். அச்சமண நெறியிலுள்ள நூல்களை எல்லாம் கற்றுத் துறைபோன அறிஞராய் விளங்கினார்.

பின்னர் இவர் தமக்கையார் 'தூண்டுதவ விளக்கனையார்' வேண்டுகோளுக்கு இணங்க இறைவன் இவருக்குச் சூலை நோய் கொடுத்துச் சைவத்திற்கு மீளுமாறு செய்தான். "கூற்றாயினவாறு விலக்ககிலீர்"என்று பதிகம் பாடத் தொடங்கினார். அதுகேட்டு இன்புற்ற இறைவன் "நாவுக்கரசு என்றுலகு ஏழினும் நின் நாமம் நயப்புற மன்னுக" என்று பணித்தருளினான். அன்று முதல் நாவுக்கரசர் நாள் தோறும் இறைவனையே இடையறாது எண்ணும் தியான உணர்வும் , ஈடின்றி எழும் திருவாசகமும் ,கையில் திகழும் உழவாரமும் கொண்டு மன மொழி மெய்யினால் சைவப்பணி செய்யத் தலைப்பட்டார். "தூய வெண்ணீறு பூசிய பொன்மேனி, கழுத்திலே தாழ்வடம், நாயகனாகிய இறைவனையே எண்ணும் நல்ல சிந்தை, நைந்துருகிப் பாய்வது போல் அன்புநீர பொழிகின்ற அருட்கண்கள், பதிகம்பாடும் பவளவாய், கையிலே உழவாரம்" இதுதான் சேக்கிழார் காட்டும் நாவுக்கரசரின் நல்லுருவம். சேக்கிழார் "திருநாவுக்கரசு வளர் திருத்தொண்டின் நெறி வாழ வருஞானத்தால் முனிவர் வாகீசர்" என அறிமுகம் செய்து "அவர் பெருமையை ஒருநாவுக்குரை செய்ய ஒண்ணாமை உணராதேன்" என்று தன்னடக்கம் கூறி நாவுக்கரசர் வரலாற்றைப் பாடத் தொடங்குகிறார்.

நாவுக்கரசர் பாடிய தமிழ்ப்பாடல்கள் தான் முதன்முதலில் தேவாரம் என்று வழங்கப்பெற்றன.சைவத் திருமுறைகளில் நான்கு, ஐந்து, ஆறாம் திருமுறைகளாகதிருநாவுக்கரசர் பாடல்களைத் தொகுத்துள்ளனர். 'இணைகொள் ஏழெழு நூறிரும் பனுவல்கள் ஈன்றவன் திருநாவினுக்கரையன்' என்று சுந்தரர் பாடினாலும் இன்று நமக்கு அப்பர் பாடிய பாடல்களாக 312 பதிகங்கள்தாம் கிடைத்துள்ளன. தன் எண்பது ஆண்டு வாழ்வில் தலங்கள்தோறும் சென்று இவர் பாடிய பாட்ல்களில் காணக்கிடைக்கும் சிறப்புச் செய்திகள் பல. தன்னை அடிமையாகவும் தன்னை ஆட்கொண்ட இறைவனைத் தலைவனாகவும் கொண்டு 'என்கடன் பணிசெய்து கிடப்பதே தன் கடன்அடியேனையும் தாங்குதல்' என்று கூறும் குறிக்கோள் இவர் பாடல்களில் அடிப்படை நாதமாய் அமைந்துள்ளது. ' தொண்டலால் உயிர்க்கு ஊதியமில்லை' என்று பல இடங்களில் தொண்டின்பெருமையை விளக்கி

நிற்கும் பெற்றயையும் காணலாம். தம் வாழ்நாளில் பெரும்பகுதியைப் புறச்சமய நெறியில் நின்று போக்கிய புன்மையை எண்ணி எண்ணி ஏங்கிய நிலையையும் இறைவன் தன்னைத் திருத்திய பெருங்கருணைத் திறத்தையும் நினைந்துவருந்தி நிற்கும் உருக்கமிக்க பாடல்களையும்நாம்பார்க்க முடியும். எனவேதான் அவர் பதிகந்தோறும்'பிழை செய்த இராவணனை உய்வித்த பேரருள் குற்றமுடையஎன்னையும் கோது நீக்கி ஆட்கொண்டது" என்ற குறிப்பைப் பேசுகிறார். சம்ப்ந்தர், சுந்தரர் இருவர் பதிகங்களிலும் காணப்பெறாத திரு நேரிசை, திருக்குறுந்தொகை,திருவிருத்தம், திருத்தாண்டகம் என்ற யாப்புவிகற்பங்களும் இவர் தேவாரத்தில் அமைந்துள்ளன. தாண்டவேந்து என்றல்லவவா இவரைத் தமிழ்கூறும்நல்லுலகம் இவரைப் போற்றுகிறது. இத்தகைய பல சிறப்புகளைக் கொண்ட நாவுக்கரசர் பாடல்களில் அவர்தம் அனுபவ முதிர்ச்சியின் விளைவாக வந்த அறிவுரைப் பகுதிகளும் உண்டு. அவர் உலக மக்களுக்கு மட்டுமன்றி தன் உள்ளத்தையும் உடல் உறுப்புக்களையும் நோக்கிக் கூறும் அறிவுரைகள் சிலவற்றையும் இங்கே பார்ப்போம்.

**திருஅங்கமாலை -**

"வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும், தாழ்த்தச் சென்னியும் '' இறைவன் தந்துள்ளான் என்பது அப்பர் கருத்தாகும். எனவேதான் 'திருஅங்கமாலை' என்ற பதிகத்தில் ஒவ்வோர் உறுப்புகளையும் விளித்து இறைபணி செய்யுமாறு ஏவுகிறார். "உயிர் கொண்டு போம் பொழுது குற்றாலத்துறை கூத்தனல்லால் நமக்கு உற்றாராருளரோ'' என்று கருதித் "திருமாலொடு நான்முகனும் தேடித் தேடொணாத் தேவனை உள்ளத்தினுள்ளே தேடிக் கண்டு கொண்டார்'' நாவுக்கரசர். ''தலையே நீதலைவனை வணங்காய்' என்றும் 'கண்காள் கடல் நஞ்சுண்ட கண்டன் தன்னைக் காண்மிகள் ' என்றும், 'செவிகாள் சிவனவன் திறம் கேண்மின்கள்' என்றும், 'மூக்கே முக்கணனை முரல்' என்றும், 'வாயே, அவன் புகழை வாழ்த்து' என்று ஐம்பொறிகளும் ஆண்டவனை வாழ்த்துமாறு ஆணையிடுகிறார். ஆளுடைய அரசர் , நெஞ்சை நோக்கி நினைக்குமாறு கட்டளையிட்டு விட்டு உடம்பின் பயன் உடம்பினுள் உறையும் ஆண்டவன் பணி செய்வதுதான் என்று உரைப்பது போல 'ஆக்கையாற் பயனென்? அரன் கோயில்வலம்வந்து பூக்கையால் அட்டிப் போற்றி என்னாத இவ் - ஆக்கையாற் பயனென்?'' என்று கேட்கிறார்.

**நெஞ்சே நீ வா**

**உடலுறுப்புகளை இயக்குவன உள்ளத்தில் எழுகின்ற எண்ணங்களே என்பது அனைவரும் அறிந்த உணமை. நெஞ்சில் எழுகின்ற நினைவு நேர்மையுடய்தாக இருந்தால் அஞ்சு பொறிகளும் அதன் வழிப்படும். செயலுக்கு அடிப்படை எண்ணம். என்னம் எழுவது நெஞ்சில்.. எனவே நெஞ்சை நோக்கி நன்னிலைப்படுத்துபவன் போல்'நெஞ்சே நீ நிமிர்மின் செஞ்சடை நிமல்னை நினை' என்று கூறுகிறார். அந்த நினைப்பு அச்சத்தின் காரணமாக வந்தாலும் சரி, அன்பு காரணமாக வந்தாலும் சரி, நினைவு வரவேண்டும் என்று**

**சொல்கிறார்.'பேசப் பொருளலாப் பிறவிதன்னைப் பெரிதென்ரு உன் சிறுமனத்தால் வேண்டி ஈண்டு வாசக் குழல் மடவார் போகமென்னும் வலைப்பட்டு வீழாதே வருக நெஞ்சே' என்று பிறவிக் கடலில் வீழ்ந்து துன்புறும் பேதை நெஞ்சை விளித்து 'பண்டு செய்த பழவினையின் பயன் கண்டுங் கண்டுங் களித்தி காண் நெஞ்சமே' என்று இரங்கி, 'தந்தை யார் தாய் ஆர் உடன்பிறந்தார் தாரம் ஆர் புத்திரர் ஆர் தாந்தாம் ஆரே வந்தவாறெங்ஙனே போமாறேதோ மாயமாம் இதற்கேதும் மகிழவேண்டாம்' என்று அறிவுரை கூறுவதுடன்' தினைத்தனையோர் பொறையிலா உயிர் போங் கூட்டை பொருளென்று மிக உன்னி மதியால் இந்தஅனைத்துலகும் ஆளலாம் என்று பேசும் ஆங்காரமே தவிர் நெஞ்சே' என்று ஆணையிடுகிறார். அதே சமயத்தில் ' மண் பாதலம் புக்கு மால் கடல் மூடி மற்றேழுலகும் விண்பால் திசைகெட்டு ணிரு சுடர் வீழினும் அஞ்சல் நெஞ்சே ' என்று அஞ்சாதிருக்குமாறு வேண்டிஉய்தி பெறுவதற்குரிய வழியையும் உரைக்கிறார்.புண்ணியமும் நன்னெறியுமாவதெல்லாம் இறைவனைப் போற்றுவது தான் என்பதே அவர்காட்டும் வழி. அதனால் பாசத்தைப் பற்றறுக்கலாம். என்றும் இன்பம் தழைக்க இருக்கலாம். நன்று நாடொறும்** நம்வினை போயிறும். "பற்றிநின்ற பாவங்கள் மாற்ற வேண்டில்,பரகதிக்குச் செல்வதொரு பரிசு வேண்டில், சொல்லுகேன் கேள் நெஞ்சே, அஞ்சா வண்ணம் உற்றவரும் உறுதுணையும் நீயே என்றும், உன்னையல்லால் ஒரு தெய்வம் உள்கேன்'' என்றும், "அரற்றிப் பிழைத்ததெல்லாம் பொறுத்தருள் செய் பெரியோய்'' என்றும், பிஞ்ஞகனே மைஞ்ஞவிலும் கண்டா'' என்றும், அழைத்தலறி அடியேன் உன் அகங்கனியாய் என்று இறைவனடி வீழ்தல் வேண்டும் என்கிறார். இதனால் இளைத்த நாளெல்லையையும் கடக்கலாம். "நிலை பெறுமாறு எண்ணுதியேல் நெஞ்சே , நீவா, நித்தலும எம்பிரானுடைய கோயில் புக்குப் புலர்வதன் முன் அலகிட்டு. மெழுக்குமிட்டுப் பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித் தலையாரக் கும்பிட்டுக் கூத்துமாடிச் சங்கரா சயசய போற்றி என்றும் அலைபுனல் சேர் செஞ்சடை எம் ஆதி என்றும் , ஆரூரா என்றும் அலரா நில்லே '' என்று தொண்டு வழிபாட்டு முறையையும் தன் தூய நெஞ்சுக்கு அறிவுரை கூறுமுகமாகப் பேசுகிறார். "சித்தம் ஒடுக்கிச் சிவாயநம என்றிருக்கினல்லால் அத்தன் அருள் பெறலாமோ அறிவிலாப் பேதை நெஞ்சே'' என்று மன ஒருமையுடன் ஐந்தெழுத்தோதி ஆண்டவன் அருள் பெறுமாறு தன் நெஞ்சை ஆற்றுப் படுத்தும் தன்மையையும் நாம் காண்கிறோம்.

<u>மனிதர்காள் வம்மின் –</u>

நாவுக்கரசர் போன்ற நம் சமயத்தலைவர்கள் தங்களை மட்டும் எண்ணி வாழ்கின்ற இயல்பினர் அல்லர். 'யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்ற உயர்ந்த நோக்கத்துடன் தாங்கள் பெற்ற இறையருள் இனபத்தை ஏனைய மக்களும் பெற வேண்டும் , பெற்றுப் பேரின்பம் நுகர வேண்டும் என்ற அருள் உள்ளம் கொண்ட பெருந்தகையாளர்கள்.'ஆளும் நாயகன் இருக்கை கண்டல்லால் மாளுமிவ்வுடல் கொண்டு ஒருபோதும் மீளேன்' என்று உறுதியுடன் கயிலை நோக்கித் தம் தள்ளா வயதில் தவழ்ந்து சென்று கொண்டிருந்த நாவுக்கரசருக்கு இறைவன் கைலைக்

காட்சியைத் திருவையாற்றில் காட்டி அருளினான்.'கணடறியாதன கண்டேன் அவர் திருப்பாதம் கண்டேன்' என்று பாடி மகிழ்ந்தார் அவர். அத்துடனன்றி 'பொருளே தேடி ..களிதா மனத்தால் வாழ்வீர்! ஐயாறே ஐயாறே என்பீராகில் அல்லல் தீர்ந்து அமருலகம் ஆளலாமே' என்று உலகத்தவரை நோக்கி ஐயாறந் அடித்தலம் காணும் வழியையும் கூறுகிறார். 'உலகத்தீர்.ஈசன் என்பார்க்கெல்லாம் அருள் கொடுத்திடும் ஆனைக்கா அண்ணலே' என்று அருள் பெறும் வழியையும் கூறுகிறார். 'மலையே வந்து வீழினும் மனிதர்காள் நிலையில் நின்று கலங்கப் பெறிதிரேல்' என்று ஆறுதல் கூறி 'மனிதர்காள் இங்கே வம் ஒன்று சொல்லுகேன், கனி தந்தால் கனி உண்னவும் வல்லீரே. புனிதன் பொறகழல் ஈசன் எனும் கனி, இனிது சாலவும் ஏசற்றவர்க்கே' என்று திருவருட் கனியைத் தருகின்றார் திருநாவுக்கரசர். அவன்அருள் பெற்ற பின்னர் 'அல்லல் என்செயும் அருவினை என்செயும் தொல்லை வல்வினைத் தொந்தம் என்செயும்' என்று கேட்கிறார். இறைவன் 'கனியினும் கட்டி பட்ட கரும்பினும் தனிமுடி கவித்தாளும் அரசினும்பனி மலர்க்குழல் பாவை நல்லாரினும் இனியன்' ஆதலால்' இடர்தன்னைக் கழிக்க வேண்டில் இறைவனை ஏத்துமினோ' 'இறைவனை நாளும் ஏத்த இடர் போயகலும்' எனவே "ஒன்றியிருந்து நினைமின்கள் உந்தமக்கு ஊனமில்லை' என்ற அவர் நமக்கு அறிவுரை தருகின்றார். இதனால் துன்பமினறித் துயரின்றி என்றும் இன்பம் பெறலாம். "மறுமையைக் கழிக்க வேண்டில் பெற்றதோர் உபாயம் தன்னால் பிரானையே பிதற்றுமின்கள்'' என்று கூறுவதால் பிறவிப் பிணியும் தீரப் பெறலாம்.

இவ்வாறு செய்யின் "வேம்பினைப் பேசி விடக்கி ஓம்பி வினைபெருக்கித் தூம்பினைத் தூர்த்து ஆங்கு ஒர் சுற்றம் துணை'யென்று கருதி ஐம்பொறி வழிச் சென்று வண்ணப்பிணி பிணி மாய யாக்கை வாழ்வில் ஈடுபட்டுப் பொருளையே பெரிதாகக் கருதிச் சிற்றின்ப வாழ்வில் பொழுது போக்கும் மானிடரை நோக்கிப் பல இடங்களில் நாவுக்கரசர் இரங்குகின்றார். "கெடுவது இம்மனிதர் வாழ்க்கை, காண்தொறும் கேதுகின்றேன், மிறைபடும் இவ்வுடல் வாழ்வை மெய்யென்று எண்ணி வினையிலே கிடந்தழுந்தி வியவேல்'', 'கட்டராய் நீங்கள் காலத்தைக் கழிக்க வேண்டா, முன்னெஞ்சமின்றி மூர்க்கராய்ச்சாகின்றார், ஐயனை அறியார் சிலர் ஆதர்கள் பொய்யர் காலங்கள் போக்கிடுவார்களே'' என்று இரங்குவதுடன், "தாயினும் நல்ல சங்கரனுக்கன்பர் ஆய உள்ளத் தமுதருந்தப் பெறார்'' "ஆளாகார், ஆளானாரை அடைந்துய்யார், மீளா ஆட்செய்து மெய்ம்மையுள் நிற்கிலார், தோளாத அணியோ தொழும்பர் செவி, வாளாமாய்ந்து மண்ணாகிக் கழிவரே'' என்று வருந்தவும் செய்கின்றார். எனவே 'நடலை வாழ்வு கொண்டென் செய்தீர், நாணிலீர் சுடலை சேர்வது சொற் பிராமணமே' என்று கூறிக்" கையினொடு கால்கட்டியுமரெலாம் ஐயன் வீடினன் (இறந்தனன்) என்பதன் முன்னம் நீர் ...... மையுலாவிய கண்டனை வாழ்த்துமே என்று தெருட்டுகின்றார். அன்புதான்இன்றியமையாது வேண்டப் படுவது. அஃதற்ற வழிபாடு ''ஓடும் நீரை ஓட்டைக் குடத்தில் எடுத்து மூடிவைத்த மூர்க்கத்தனத்துடன் ஒத்தது'' என்று ஓரிடத்தில் கூறுகிறார். எனவே அன்புமிக்கு அகங் குழைந்து மெய்யரும்பி உள்ளத்தால் ஒன்றி நின்று ஆண்டவனை வழிபடவேண்டும். அவ்வாறு நெக்கு நெக்கு நினைப்பவர் நெஞ்சுளே

ஆண்டவன் புக்கு நிற்பான். அவ்வாறு அன்றிக் "கங்கையாடிலென் காவிரியாடிலென் , கொங்கு தண் குமரித்துறை யாடிலென்? ஓங்குமா கடல்ஓத நீராடிலென்? நன்று நோற்கிலென்? பட்டினியாகிலென்? குன்றமேறி இருந்தவம் செய்யிலென்? பட்டராகிலென்? சாத்திரம் கேட்கிலென்? இட்டும் அட்டியும் ஈதொழில் பூணிலென்? நீதி நூல்பல நித்தம் பயிற்றிலென் ?" என்று வினாக்களை அடுக்கடுக்காக் கேட்கிறார் அப்பர். "குறிகளும் அடையாளமும் கோயிலும் நெறிகளும் அவர் நின்றதோர் நேர்மையும் அறிய ஆயிரம் ஆரணம் ஒதிலும் வழிபாட்டில் மனம் ஒன்று படாவிடில் பயனில்லை "என்று கூறுகிறார். அதே சமயத்தில் "சாத்திரம் பல பேசம் சழக்கர்காள் ,கோத்திரமும் குலமும் கொண்டென் செய்வீர் பாத்திரம் சிவமென்று பணிதிரேல் , மாத்திரைக்குள் அருளும் மாற் பேறரே" என்று உறுதியுடன் இடித்துரைக்கும் இயல்பையும் அவரிடம் பார்க்கிறோம்.

எனவே நாம் அப்பர் கூறும் அறிவுரை வழி நின்று நெஞ்சத்தில் அன்பு நிறையப் பூக்கள் கொண்டு, இறைவன் பொன்னடி போற்றித் தொண்டராகித் தொழுது பணிந்து வழுவிலா வாழ்க்கை வாழ முயல்வோமாக.

(தமிழ்நேசன் மே.6. 1972)

Thinnappan, SP. Appar Arivurai (Advice of Appar).
Tamil Nesan, Malaysia, (1972), 16-18 (Tamil).

# பயனுள்ள தொகுப்பு நூல்

## திருமுறை வழிபாடு

இறைவழிபாடு என்பது கடவுளை மனத்தால் எண்ணி (பாவனை செய்து கொண்டு) வாயால் அவன் புகழ்மொழிகளைப் பாடி(மந்த்pரம் கூறி), உடலால் அவனுக்குரிய பணிகளைச் (கிரியைகளைச்) செய்வதாகும். எண்ணத்திற்கும் செயலுக்கும் இடைப்பட்டது மொழி. மேலும் இவை இரண்டையும் இணைப்பதும் மொழியே. இம்மொழி செம்மையாக இருக்க வேண்டுவது. வழிபாட்டிற்கு இன்றியமையாத ஒன்று. இந்த மொழி , "நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த மறை மொழியாக'' (தொல்காப்பியம்) இருக்குமானால் வழிபாடு பல்வகையாலும் சிறப்புற வழியுண்டு. நம் பைந்தமிழ்த் திருமுறை பன்னிரண்டும் இத்தகைய மறை மொழிகளன்றோ? இத்தகைய திருமுறைப் பாடல்களைக் கொண்டு இறைவனை வழிபாடு செய்வதுதான் "திருமுறை வழிபாடு'' ஆகும்.

வழிபாட்டுக்கு மலர் கட்டாயம் வேண்டும். அந்த மலர் நாள்தோறும் செடியில் பூக்கும் நன்மலராக மட்டும் இருந்தால் போதாது. "மதிவளர் சடைமுடி மன்றுளாரை முன்துதிசெயும் நாயன்மார் தூய சொன்மலராகவும் , அடியார் உள்ளத் தடாகத்தில் பூத்த பொன்மலராகவும் (திருமுறையாகவும்) இருக்க வேண்டும் என்று கருதி நண்பர் "எஸ்ஸாரெம்'' "திருமுறை வழிபாடு'' என்னும் பெயரில் ஓர் அழகிய நூலைத் தொகுத்து வெளியிட்டுள்ளார். இந்த உட்கருத்தை இந்நூலின் முகப்பட்டை வண்ண ஓவியம் அழகுற விளக்குகின்றது. ஒரு பக்கம் சிவலிங்க வடிவம், எதிரே இன்னொரு பக்கம் பன்னிருதிருமுறை ஆசிரியர்கள் திருவுருவப் படம். நெறியும் குறியும் நேர் எதிரே இருக்கக் காண்கிறோம். "காணாத அருவினுக்கும் உருவினுக்கும் காரணமாய், நீணாகம் அணிந்தார்க்கு நிகழ்குறியாகத் (பெரிய புராணம் (3648) திகழ்வதுதானே சிவலிங்கம். சிவனை அடையம் நெறியை வழியைக் காட்டியவர்கள் தாமே திருமுறை ஆசிரியர்கள். சிவ வழிபாட்டினை இம்மண்ணுலகில் முதன் முதலாகத தொடங்கி வைத்த பெருமை உலகன்னையாகிய உமையம்மையாரையே சாரும் என்பதை வலியுறுத்த அட்டைப் படத்தில் சிவலிங்கத் திருவுருவத்துக் கீழே ,

"எண்ணில் ஆகமம் இயம்பிய இறைவர்தாம் விரும்பம்

உண்மை யாவது பூசனை எனஉரைத் தருள

அண்ண லார்தமை அர்ச்சனை புரியஆ தரித்தாள்

பெண்ணின் நல்லவளாயின பெருந்தவக் கொழுந்து''

என்னும் பெரியபுராணப் பாடலைக் கொடுத்திருப்பது பாராட்டிற்குரிய ஒன்றாகும்.

பூவினால் செய்யப்படும் பூசை (பூ - செய்) ஆகிய இறை வழிபாடு, அகவழிபாடு புறவழிபாடு என இரண்டு வகைப்படும். நெஞ்சத்தில் செய்யப் படுவது அகவழிபாடு, இல்லத்திலோ கோயிலிலோ செய்யப் படுவது புறவழிபாடு. இல்லங்களில் அகப் பூசையாக இறைவனை வழிபடுபடுவதற்கெனப் பன்னிரு திருமுறைகளிலிருந்து தொகுக்கப் பெற்றது எனத் தொகுப்பாசிரியர் தம் தொகுப்பின் நோக்கத்தைக் குறிப்பிட்டுள்ளார். எனினும் இந் நூலுக்கு முன்னுரை வழங்கியுள்ள புலவர் மணி, சித்தாந்த வித்தகர் முரு.பழ.இரத்தினம் செட்டியார் அவர்கள் அகவழிபாட்டிற்கு மட்டுமின்றி, அர்ச்சனைகளும் புறவழிபாட்டிற்கும் இந்நூல் பொருந்தும் வகையில் அமைந்துள்ளது எனப் போற்றிப் பாராட்டியிருக்கிறார். மேலும் அவர் "இம்முறையைத் திருக்கோயில்களில் பின்பற்றினால் அது சிறந்ததிருமுறை வழிபாடாக அமைந்துவிடும். திருமுறை சிறப்புற்றோங்க இதனைவிடச் சிறந்த முறை வேறில்லை'' என்று கூறுகிறார். திருக்கோயில்களில் இதனைப் பின்பற்றும் நாள் எந்நாளோ அந்நாள்தான் சைவப் பெருமக்களுக்குத் திருநாள். தமிழர்களுக்குப் பெருநாள்.

இத்தகைய பின்னணிப் புலங்களுடன் நூலுக்குள் நுழைகிறோம். நுழைவாயிலில் கோரட்டுமலை விநாயகப் பெருமான் வண்ணத் திருவுருவத்தில் காட்சி தருகிறார். கைகூப்பி வணங்குகிறோம். ஏன்? என்னும் வினாவிற்கு விடையாக வழிபாட்டின் முதற் பாட்டாக காப்புப் பாடலாக,

"திருவாக்கும் செய்கருமம் கைக்கூட்டும் செஞ்சொற்

பெருவாக்கும் பீடும்பெருக்கும் - உருவாக்கும்

ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்

காதலால் கூப்புவர்தம் கை. ''

என்னும் பாடல் திகழ்கிறது. பிறகு இறைவன் திருவருவத்தை உள்ளத்தில் எழுந்தருளச் செய்து கொள்கிறோம். 'என்னுள் எழு பரஞ்சோதி உள்ளவா காண வந்துருள்வாய்(2) என்னும் திருவாசக வரியைப் பாடிக் கேட்கும் போது இறைவன் தானே வந்து நம் உள்ளத்தினுள் புகுவான் அல்லவா? பிறகு திருவிளக்கு ஏற்றி வழிபாடு தொடங்கி, இறுதியாகப் பிரார்த்தனை செய்து பிழை பொறுக்க வேண்டி வாழ்த்தி நிறிகறோம். எல்லாம் 'திருநெறிய தமிழால் செய்கிறோம் என்பதை நினைக்கும் போது உள்ளம் தித்திக்கிறது. உள்ளம் பெருகிறது. "என்னை நன்றாக இறைவன் படைத்தனன், தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே'' என்று திருமூலர் பாடிய அனுபவத்தில் திளைக்க முடிகிறது. தமிழால் முடியுமா என்று கேட்பாhர் தலை தாழ்கின்றது.

இந்நூல் காப்பு, திருப்பள்ளி எழுச்சி,,ஓமம் , அபிஷேகம், அலங்காரம், வழிபாடு, வழிபாடு நிறைவு என்னம் ஏழு பிரிவகளைக் கொண்டு எழுமை நோய் தீ{ர்க்கும் எழில் மருந்தாக விளங்குகிறது. இந்நூலின் பாடல் எண்ணிக்கை 82. இதனைக் கூட்டி எண் அமைப்பு நோக்கில் எண்ணிப் பார்த்தால் ஒன்று என்பது தோன்றும், கடவுள் ஒருவரே

என்று கருதி ஒன்றாவதுதானே வழிபாடு. “ஒன்றியிருந்து நினைமின்கள் உந்தமக்கு ஊனமில்லை'' என்பது அப்பர் அருள் வாக்கு. அன்றோ. இவற்றையெல்லாம் எண்ணிப் பார்க்கும்போது தொகுப்பாசிரியரின் திருமுறைத் தமிழ்ப் பற்றும்,ஆழ்ந்து அகன்ற திருமுறை ஞானமும் இருகரம் கூப்பி நிற்க இறையருள் இவ்வாறு செய்துள்ளது என்றே நினைக்கத் தோன்றுகிறது.

இந்நூலை ஆழ்ந்து படிக்கும்போது , நம்நாயன்மார் கலத்திருந்த வழிபாட்டுச் சடங்கு முறைகளைப் பற்றியும் தெரிந்து கொள்கிறோம். தூய தழிழ்த் தொடர்கள் சிலவற்றையும் அறிந்து கொள்கிறோம். அபிஷேகம் என்பதற்கு ஆட்டு என்ற சொல்லையே திருமுறையாசிரியர்கள் கையாண்டுள்ளனர். குட தீபத்தை ‘அறுகு’(53) என்றும், கண்ணாடியைப் படிமக்கலம் 955) என்றும் கூறுகின்ற வழக்குகளைக் காண்கிறோம். தைலமாடுதலை நறுநெய்யாட்டு(17) என்று கூறுதலும் பன்னீர் ஆட்டினைப் பனிநீர் ஆட்டாகக் காண்பதும் (32) நீள நினைந்து போற்றுதற்குரியது.

இந்ந}லில் 108 போற்றிகளை உற்று நோக்கும் போது இறைவனுக்குரிய பொதுப் பண்புகள் அடங்கிய தொடர்களே இலங்கக் காண்கிறோம். எனவே கடவுளின் எல்லாத் திருமேனிகளுக்கும் உரிய வகையில் இந்தத் தமிழ் அரச்சனையை நாம் பயன்படுத்த முடியும். தமிழில் அர்ச்சனை செய்ய விழைவார்கு இது பேருதவியாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

திருவாசகத்தையே சிவபூசைக்குரிய சிவலிங்கமாகக் கொண்டு வழிபட்டவர்களும் உண்டு. அந்த வகையில் இந்த நூல் திருமுறையை வழிபடும் நூலாகவும் திகழ்கிறது. இன்னும் சொல்லப் போனால் “திருமுறை வழிபாடு '' என்னும் இந்நூல் தலைப்பு “திருமுறை வழி(நீ)பாடு '' என்று நமக்கு ஆணையிடுகிறது. “பாடும் பணியே பணியாய் அருள்வாய்'' என்றுதானே அருணகிரியார் முருகனைக் கேட்கிறார். “அர்ச்சனை பாட்டேயாகும், சொற்றமிழ் பாடுக'' என்று சுந்தரரிடம் ஆணையிட்டவர். தூமறை பாடும் வாயாராகிய சிவபெருமான் அல்லவா?

எனவே அன்பர்கள் இந்த நூலை வாங்கி இல்லத்திலும், உள்ளத்திலும் இறை வழிபாட்டிடங்களிலும் திருமுறை வழிப் பாடல்களைத் “தினமும் பாடித் திருமுறை வழி இறைவனை வழிபாடு செய்தல் வேண்டும். திருமுறை(யை) வழிபாடு செய்யுங்கள்,'' அது தீந்தமிழ் வழிபாடாய் அமைத்து ஆண்டவனுக்குத் தேனாய் , அமுதமாய்த தித்திக்கும், எத்திக்கும் தமிழ் மணம் பரப்பும்.

(தமிழ் நேசன் கோலாலம்பூர் 14-4-1991 பக் 7)

# தமிழில் அருச்சனை தமிழருக்கு உகந்தது.

தமிழ் மக்கள் தமிழ் அருச்சனை செய்வதில் ஆர்வமும் அக்கறையும் கொள்ள வேண்டும். தங்கள் பகுதியிலுள்ள கோயில் நிருவாகத்தினரிடம் கூறித் தமிழ் அருச்சனை செய்யுமாறு ஏற்பாடு செய்ய வேண்டும். கோயில் நிருவாகத்தினரும் இதனை ஏற்று ஆவன செய்ய வேண்டும். இது சிறந்த தமிழ்த் தொண்டாக அமையும். பொது மக்களும் கோயில்களுக்குச் சென்று தமிழ் அருச்சனை செய்யுமாறு கேட்க வேண்டும். தமிழ் அருச்சனை வாங்குமிடத்திலும் தமிழில் அருச்சனை செய்யப்படும் என்பதை எழுதி வைக்க வேண்டும். அருச்சனைச் சீட்டு விற்பவர்களும் இதற்கு விளக்கம் கொடுக்க வேண்டும்.

குருக்கள்மார்களும் பண்டாரங்களும் தமிழ் அருச்சனை என்பது வழிபாட்டின் ஒரு கூறு இப்பகுதியே என எண்ணி இதில் ஈடுபாடு கொண்டு செய்ய வேண்டும். இதனால் அவர்கள் வேலை போக வழி இல்லை என்பன உறுதியாகக் கூறலாம். அவசரமாக இருந்தாலோ கூட்டமாக இருந்தாலோ விழாக் காலங்களிலோ முதல் 10 போற்றிகளும், அடுத்த 8 போற்றிகளுமாக 18 போற்றிகளாக மட்டும் சொல்லி அருச்சனை செய்யலாம். 108 போற்றிகளைக் காலை மாலைப் பூசையின்போது மட்டும் ஒரு முறை சொன்னால் போதும் என்று வைத்துக் கொள்ளலாம். எனவே குருக்கள்மாரும் பண்டாரங்களும் இந்தத் திருப்பணிக்குத் தமிழ்ப் பணிக்கு முன்வந்து நல்வழி காட்டுவார்களென்று நம்புகிறோம். குருக்கள்மார்கள் அல்லது பண்டாரங்கள் அருச்சனை செய்யும் போது தங்கள் உள்ளத்திற்குள் அமைதியாகப் போற்றி அருச்சனை தமிழில் சொல்லி வழிபடலாம்.

சிங்கப்பூரில் தமிழ் அருச்சனை டேங்க் ரோடு அருள்மிகு தண்டாயுதபாணி கோயிலிலும் சௌத் பிரிட்ஜ் ரோடு மாரியம்மன் கோயிலிலும் செய்யப் படுகின்றது. டெப்போ ரோடு உருத்திரக்காளியம்மன் கோயிலிலும் செய்கிறார்கள். மலேசியாவில் கோலாலம்பூர் கோர்ட்டுமலை விநாயகர் கோயில், மாரியம்மன் கோயில், பத்துமலை முருகன் கோயில் ஆகியவற்றிலும் தமிழ் அருச்சனை நடைபெறுகின்றது. இக்கோயில்களைப் பின்பற்றி இசையத் திருக்கோயில்களிலும் தமிழ் அருச்சனை நிகழ இறைவனை வேண்டுகிறோம். தமிழ்ப் பெருமக்களையும் கோயில் நிருவாகத்தினரையும் ஆவன செய்யும்படி கேட்டுக் கொள்கிறோம்.

இறைவழிபாடு என்பது இறைவன் திரு உருவத்தை மனத்தால் நினைத்து, வாயால் அவன் புகழ் பாடி, உடலால் அவனுக்குரிய பணிகளைச் செய்வதாகும். மனத்தால் நினைத்தற்கும் உடலால் செயலாற்றுவதற்கும் மொழி தேவையில்லை. வாயால் துதிப்பதற்குத்தான் மொழி தேவைப் படுகிறது. வாயால் இறைவன் திருப்பெயர்களைச் சொல்வதும் அவன் புகழ்பாடும் தேவாரம், திருவாசகம் போன்ற பக்திப் பாடல்களைப் பாடுவதும் வாயினால் செய்யப்படும் வழிபாடாகும். இதற்கென்று கட்டாயம் ஒரு மொழி தேவை.

இறைவன் திருநாமங்களையும், பெருமைகளையும் எம்மொழியிலும் கூறலாம். எம்மொழியில் கூறினாலும் இறைவன் உணர்ந்து கொள்வான். அவன் எல்லையற்ற அறிவுடையவன். ஆனால் வழிபடுவோர்களாகிய நம் அறிவிற்கு ஓர் எல்லை உண்டு. நாம் எம்மொழியினையும் புரிந்து கொள்ள இயலாது. நமக்கெனக் கருத்துப் பரிமாற்றம் செய்து கொள்ள ஒரு சில மொழிகள் உள்ளன. நாம் இளமையிலிருந்து பழகிய சிந்தனைகளை, உணர்வுகளை வெளிப்படுத்த உதவும் மொழியே தாய்மொழி அல்லது முதல் மொழி ஆகும் இறைவழிபாடு என்பது உணர்வுடன் ஒன்றிய ஒன்று. எனவே அது தாய்மொழியில் இருப்பது தான் நல்லது. அப்போது தான் நம் உள்ளத்தை இறைவன் பால் ஒன்றிடச் செய்ய முடியும். நமக்குத் தெரியாத புரியாத மொழியில் வழிபாடு செய்யும்போது நம் மனம் இறைவனிடத்து ஒன்றுபட ஈடுபட இயலாது. எனவே இறை வழிபாடு செய்வோர் அவரவர் தாய் மொழியில் செய்வது தான் சிறந்த பயன் நல்கும்.

நம் தாய்மொழி தமிழ். தமிழில் வழிபாடு செய்வது நம்மைப் பொறுத்த வரையில் எவ்வகையில் தவறாகும். தமிழ்க் கிறித்துவர்களும் தமழ் இஸ்லாமியர்களும் தங்கள் வழிபாடுகளையும் சடங்குகளையும் தமிழில் செய்கிறார்கள். தமிழ் அறிந்த இர்நதுக்கள் தமிழில் செய்தால் என்ன?

நம் தாய்மொழியாகிய தமிழ் வேறு எந்த மொழிக்கும் தாழ்ந்ததன்று. தமிழைப் பக்தி மொழி என்று பாராட்டுகிறார் தனிநாயக அடிகளார். தமிழைத் தெய்வீக மொழி ( திரு - நெறிய தமிழ்) என்று போற்றுகிறார் ஞானசம்பந்தர். யாமறிந்த மொழிகளிலேயே தமிழ் மொழிபோல் இனிதாவதெங்கும் காணோம் என்று கூறுகிறார் பாரதியார். உலக மொழிகளில்உயர்தனிச் செம்மொழியாக விளங்கிய தன்மை உடையது தமிழ் என்று சொல்கிறார் பரிதிமால் கலைஞர் எனப்படும் வி.கோ.சூரிய நாராயண சாஸ்திரியார். “பண்ணிடைத் தமிழொப்பாய்’’ என்று இறைவனைத் தமிழாகவே அழைக்கிறார் சுந்தரர். இந்நிலையில் வழிபாட்டுக்குரிய மொழியாகும் தகுதி தமிழுக்கு இல்லை என எப்படி மறுக்க முடியும்?

அருச்சனை என்பது வழிபாட்டின் ஒரு கூறு ஆகும். இறைவனின் திருப்பெயர்களை 108 முறை அல்லது 1008 முறை கூறிப் போற்றி இறைவன் திருவடியில் மலர் இட்டு வழிபடுவது தான் -அருச்சனை. இந்தத் திருப் பெயர்களை நமக்குப் புரியும் வண்ணம் தமிழில் சொல்வதுநம் நெஞ்சத்தை நெகிழ்விக்க உதவும். இவ்வாறு தமிழில் போற்றி கூறுவது நீண்ட நெடுங்காலமாகத் தமிழர்களிடையே இருந்து வரும் இயல்பு என்பது திருநாவுக்கரசர் தேவார அடிகளால் அறிய முடியும். “பூக்கையால் அட்டிப் போற்றி என்னாத வர்க்கு ஆக்கையால் பெற்ற பயன் என்ன?’ என்று கேட்கிறார் நாவுக்கரசர். “நிலைபெறுமாறு எண்ணுதியேல், நெஞ்சே நீ இங்கேவா, நித்தலும் எம்பிரானுடைய கோயில் புக்கு அலகிட்டு மெழுக்கிட்டுத் தலையாரக் கும்பிட்டுக் கூத்துமாடி சங்கரா சய சய போற்றி என்று அலரா நில்லா’’ என்று அவர் நமக்கு அறிவுறுத்துகிறார்.

மேலும் தமிழர்கள் ஒவ்வொருவரும் சிவபெருமானுக்குத் தமிழில் போற்றி சொல்லி அருச்சனை செய்ய உதவும் வகையில் திருநாவுக்கரசர் போற்றித்

திருத்தொண்டகம் ஐந்து பதிகங்கள் தம் தேவாரத்தில் பாடிக் கொடுத்திருக்கிறார். மாணிக்க வாசகப் பெருமான் தம் திருவாசகத்தில் " போற்றித் திரு அகவல் " என்ற பகுதியைப் பாடியுள்ளார்.

மற்ற பகுதிகளிலும் இறைவன் திருவடியையம் திருப் பெயராகிய நமச்சிவாய மந்திரத்தினையும் போற்றிப் பாடி இருக்கிறார். சுந்தரரைத் தடுத்தாட் கொண்ட போது வடமொழியில் வேதத்தை அருளிய சிவபெருமான் அவரிடம் 'அருச்சனைப் பாட்டே ஆகும் சொற்றமிழ் பாடுக" என்று சொன்னதாகச் சேக்கிழார் கூறுகிறார். எனவே தமிழில் அருச்சனை செய்வது தமிழர்க்கு உகந்ததே.

தமிழில் அனைவரும் அருச்சனை செய்வதற்குரிய வகையில் போற்றி அருச்சனைப் புத்தகங்கள் வெளியாகியுள்ளன. இவற்றுள் விநாயகர், முருகன், சிவபெருமான்,அம்மை ஆகியோர்க்குரிய தமிழ் அருச்சனைகள் உள்ளன. இவற்றைப் படித்து வீட்டிலும் கோயிலிலும் வழிபாடு செய்யும் போது அருச்சனை செய்ய வேண்டும். இதனால் தமிழர்கள் தங்கள் வழிபாட்டில் மனத்தை ஈடுபடுத்த முடியும். . அதே நேரத்தில் தமிழ் மொழியையும் ஒருவகையில் வாழ வைக்க முடியும். உண்மையான வழிபாடும் உங்கள் மொழியும் உயர்ந்திட உங்களால் இயன்றதை இன்றே செய்யுங்கள்.

Thinnappan, SP. Tamil Aruchchanai (Worship in Tamil)

Tamil Murasu, Singapore (1994) pp8 (Tamil)

# பள்ளியறை சொல்லும் பாடம்.

சிவாகம அடிப்படையில் எழுப்பப்படும் திருக்கோயில்களில் பள்ளியறை என்று ஒரு பகுதி - ஓர் இடம் இருக்கும். பள்ளியறை என்பது சிவனும் சக்தியும் துயில் கொள்ளுகின்ற படுக்கை அறையாகும். பள்ளி என்னும் சொல்லைப் படுக்கை என்னும் பொருளில் திருவள்ளுவரும் “கழா அக்கால் பள்ளியுள் வைத்தற்றால் சான்றோர் குழாஅத்துப் பேதை புகல் ”)குறள் -840) என்னும் குறளில் கையாளுகிறார். பள்ளியறை மெத்தென அமையும் படுக்கை - தலையணையுடன் கூடிய கட்டில் அல்லது ஊஞ்சல் கொண்டதாக இருக்கும். சுற்றுச் சுவர்களில் கண்ணாடி பதித்த நிலையிலும் சில இடங்களில் இருக்கும். அங்கு உமை அம்மையின் உருவச்சிலை இருக்கும். ஒவ்வொரு நாளும் இரவில் நிறைவாக நடைபெறும் அர்த்தசாமப் பூசையின் முடிவில் கருவறையிலுள்ள சாமி சன்னதியிலிருந்து திருவடி அமைப்பிலுள்ள உருவத்தை அல்லது சாமியின் உருவம் தாங்கிய வடிவத்தை எடுத்து வந்து பள்ளியறையில் அம்மையுடன் வைத்துப் பால் அல்லது பாயாசம் வைத்துப் படைத்து வழிபாடு நடத்தி ஊஞ்சலை ஆட்டிப் பள்ளியறைக் கதவைப் பூட்டிச் செல்வர். பிறகு மறுநாள் காலையில் பூசை தொடங்குதற்கு முன் முதல்நாள் இரவு கொண்டுவந்த திருவுருவத்தைப் பள்ளியறையிலிருந்து திரும்பவம் கருவறைக்குப் பால் படைத்து வழிபாடு நிகழ்த்திய பின் எடுத்துச் சென்று வைப்பார்கள். அதன் பின்னர்தான் மற்ற எல்லாப் பூசைகளும் நடக்கும். கருவறைக்கும் பள்ளியறைக்கும் எடுத்துச் செல்லச் சில கோயில்களில் சிறு பல்லக்கைப் பயன் படுத்துதலும் உண்டு. வைணவக் கோயில்களிலும் பெருமானை இரவில் துயிலுறச் செய்தலும் காலையில் துயில் எழுப்பதலும் உண்டு. இத்தகைய பள்ளியறை வழிபாடு சொல்லும் பாடம் என்ன என்பதைப் பார்ப்போம்.

**<u>தோற்றம்</u>** -

தமிழில் இன்று கிடைக்கும் நூல்களில் காலத்தால் பழமையானது தொல்காப்பியம். அது ஓர் இலக்கண நூல். கி.மு. மூன்றாம் நூற்றாண்டுக்கு முற்பட்டது. இந்நூலில் பொருளதிகாரத்தின் புறத்திணையியலில் அரசனைப் புகழ்ந்து பாடுகின்ற துறைகளில் கண்படைநிலை, துயிலெடை நிலை என இரண்டு துறை பற்றிய செய்திகள் உள்ளன. “கண்படை கண்ணிய கண்படை நிலையும்”(1036.5) என்னும் தொல்காப்பியத் தொடர் அரசனது உறக்கத்திற்காகப் பாடுகின்ற நிலை எனப் பொருள்படும். இது பின்னாளில் ஒருவகைச் சிற்றிலக்கியமாக வளர்ந்து விட்டது. அதாவது அரசனும் அரசனைப் போல்வாரும் அவையில் நெடுநேரம் தங்குகையால் மருத்துவர் அமைச்சர் முதலியோர் அவர்க்குக் கண்துயில் கோடலைக் கருதிக் கூறும் இலக்கிய வகையாகும். இதுபோலவே துயிலெடைநிலை என்பது அரசரை உறக்கத்திலிருந்து எழுப்புதற்குரிய துறையாகும். “தாவின் நல்லிசை கருதிய கிடந்தோர்க்குச் சூதர் ஏந்திய துயிலெடை நிலை” (1037) பாசறைக்கண் துயிலும் அரசனைப் பாடகர்கள் அவர் புகழ் கூறித் துயில் எழுப்புதல் கூறும் துறையாகும். இதுவே பிற்காலத்தில் திருப்பள்ளி எழுச்சி எனும் ஒருவகை இலக்கியமாக ஆயிற்று. எனவே அரசனைத் துயிலுறச் செய்யும் கண்படை நிலையும், துயில் எழுப்பும்

துயிலெடை நிலையும் பின்னாளில் இறைவனை இரவில் பள்ளியறைக்கு அனுப்புதற்கும் அதிகாலையில் அவனைப் பள்ளியறையிலிருந்து எழுப்புதற்கும் உரிய தோற்று நிலைக் களன்களாகக் கருதலாம். அரசனுக்குரிய மரபுகள் பல ஆண்டவனுக்குப் பின்னாளில் மாற்றப் பட்டதைத் தமிழக வரலாறு உணர்வார் நன்கு அறிவர். மன்னர் பின்னோராகிய கோவலன் கண்ணகி திருமணம் முடிந்த பின் "அங்கண் உலகின் அருந்ததி அன்னாளை (கண்ணகியை) மங்கல நல் அமளி ஏற்றினார்"(1-64) என்று இளங்கோ அடிகள் சிலப்பதிகாரத்தில் கூறுகிறார். இந்தநல் அமளி ஏற்றுதலே பின்பு பள்ளியறை ஆயிற்று.

**<u>இல்லற வாழ்வின் ஏற்றம் -</u>**

தமிழர்கள் இல்லற வாழ்விற்கு இன்றியமையாத இடம் கொடுத்தனர். "அறத்தான் வருவதே இன்பம்" எனக் கூறிய வள்ளுவர் "அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை" என்று கூறி "அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றின் புறத்தாற்றின் போஒய்ப் பெறுவது எவன்" என்று கேட்கிறார். இல்லறத்திலிருந்து இன்பம் துய்த்து நன்மக்களைப் பெற்று வாழ்ந்து பின்பு துறவறம் மேற்கொள்ளுவதையே வாழ்வியலாகக் கண்டவர்கள் தமிழர்கள்.

"காமம் சான்ற கடைக்கோட் காலை

ஏமம் சான்ற மக்களோடு துவன்றி

அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்

சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே"

என்னும் தொல்காப்பியய நூற்பா இதனை உணர்த்தும். சமணர்களும் பௌத்தர்களும் துறவறத்தை வலியுறுத்திய காலத்தில் தோன்றிய திருஞான சம்பந்தப் பெருமான்,

"மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் வைகலும்

எண்ணில் நல்லகதிக்கு யாதுமோர் குறையிலை

கண்ணில் நல்லஃதுறும் கழுமல வளநகர்ப்

பெண்ணின் நல்லாளொடும் பெருந்தகை இருந்ததே"

என்று பாடினார். எனவே பள்ளியறையில் சிவனும் உமையும் சேர்ந்திருப்பது நாம் மண்ணில் நல்ல வண்ணம் திருமணஞ் செய்து கொண்டு இல்லற வாழ்வில் ஈடுபட்டு இன்புற்றிருக்க வேண்டும் என்பதற்காகவே அதாவது இல்லற வாழ்வின் பெருமையை இவ்வுலகுக்கு உணர்த்துவதற்காகவே என்று கூறலாம்.

**<u>அன்பும் அருளும்</u>** -

இல்லற வாழ்விற்கு இன்றியமையாத பண்பு அன்பு. இது குடும்பத்தினர், உறவினர், உற்றார், ஊரார் முதலிய தொடர்புடையாரிடத்துச் செலுத்தும் பாச உணர்வு. இது

படிப்படியாக மன்னுயிரனைத்தும் தன்னுயிராகக் கருதும் அருளாகப் பரிணமிக்க வேண்டும். அருளிலார்க்கு அவ்வுலகம் இல்லை அன்றோ? எனவே இதுவே நம் வாழ்வின் இலட்சியம். பள்ளியறையில் இருக்கும் சிவமே அன்பின் வடிவம் அல்லவா? 'அன்பே சிவம்' என்பது தானே திருமூலர் வாக்கு. அங்குள்ள சக்தி அருளின் வடிவம் அன்றோ? "அருளது சக்தியாகும் அரன் தனக்கு" என்பது சிவஞான சித்தியார். ஆகவே பள்ளியறையில் இருக்கும் சிவனும் உமையும் அன்பின் வடிவமாகவும் அருளின் வடிவமாகவும் அமைந்து காட்சி அளிக்கின்றனர்.

**<u>மங்கலமும் மனைமாட்சியும் –</u>**

"மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன் நன்கலம் நன்மக்கட்பேறு" என்னும் திருக்குறளுக்குப் பரிமேலழகர், "மனையாளது நற்குண நற்செய்கைகளை ஒருவர்க்கு நன்மை என்று அறிந்தோர் சொல்வர், குழந்தைப் பேற்றை அவற்றிற்கு நல்ல அணிகலன் என்பர்" என உரை எழுதுகிறார். சிவம் என்ற சொல்லுக்கே நன்மை, மங்கலம் எனத் தமிழ் அகராதி பொருள் கூறும். மனைமாட்சிக்கு எடுத்துக் காட்டாக இருப்பவர் மங்கையர்க்கு அரசியாகிய உமை அம்மை அல்லவா? எனவே பள்ளியறையில் இருக்கும் சிவனும் உமையும் முறையே மங்கலமும் மனைமாட்சியும் என்று கூறலாம்.

**<u>அம்மையும் அப்பனும்</u>** -

சிவபெருமான் தாயுமிலி, தந்தையும் இல்லாதவன், ஆனால் உலகத்து உயிர்களனைத்துக்கும் தாயாகவும் தந்தையாகவும் இருப்பவன். எனவேதான் திருநாவுக்கரசர் "அம்மை நீ அப்பன் நீ" எனவும் , மாணிக்கவாசகர் "அம்மையே அப்பா"எனவும் அழைக்கின்றனர். சிவபெருமானின் ஒரு கூறே சக்தி. பள்ளியறையில் இருக்கும் உமையும் சிவனும் அம்மையும் அப்பனுமாக அதாவது சிவபெருமான் அம்மையப்பனாகக் காட்சி அளிக்கும் பாங்கினை உணர்த்துவதாகக் கொள்ளலாம். "பெறுமவற்றுள் யாமறிவதில்லை" எனத் திருவள்ளுவரே போற்றும் மக்கட் பேற்றின் மாண்பினைக் கூறுவதாகவும் கொள்ள இடமுண்டு. அம்மையப்பரின் இயல்பைத் திருக்களிற்றுப்படியார் என்னும் சைவ சாத்திர நூல்,

"அம்மையப்பரே உலகுக்கு அம்மையப்பர் என்று அறிக

அம்மையப்பர் அப்பரிசே வந்து அளிப்பர் -அம்மையப்பர்

எல்லா உலகுக்கும் அப்புறத்தார் இப்புறத்தும்

அல்லார்போல் நிற்பர் அவர்"

என்று சொல்கிறது.

**<u>ஆணும் பெண்ணும் -</u>**

கடவுள் 'ஆண் அல்லன் , பெண்ணும் அல்லன், அலியும் அல்லன் '' என்பது திருவாசகம். கடவுள் ஒருவரே சக்திமான் சக்தி என இரு கூறாயினர். சூரியனும் ஒளியும் போல, மலரும் மணமும் போல, சிவனும் சக்தியும் இருப்பர். "பெண்ணாகிய பெருமான்'' என்றார் திருஞானசம்பந்தர். "பெண்ணாகி ஆணாய்'' என்றார் மாணிக்கவாசகர். இன்பங் குறைந்த - நிறைந்த துன்பமுடைய உயிர்களாகிய நாம் ஆண் பெண் ஆம் இரண்டு உருவம் எடுத்திருத்தலால் நம்மைக் காக்கக் கடவுளும் ஆண் பெண் ஆம் உருவம் இரண்டு கொண்டனர் என்பர் ஞானியார் சுவாமிகள். ஆணும் பெண்ணுமாக உயிர்களிடையே கோலம் கொண்ட காட்சியினைக் கயிலைக்காட்சியாகத் திருவையாற்றில் கண்டார் நாவுக்கரசர்.

"மாதர்ப்பிறைக் கண்ணியானை மலையான் மகளொடும்பாடி
போதொடு நீர் சுமந்தேத்திப் புகுவாரவர்பின் புகுவேன்
யாதும் சுவடுபடாமல் ஐயாறடை கின்றபோது
காதல் மடப்பிடியோடும் களிறு வருவன கண்டேன்
கண்டேனவர் திருப்பாதம் கண்டறியாதன கண்டேன்.''

இத்தகைய காட்சியைத் தானே பள்ளியறையில் காண்கிறோம்.

**<u>திருமண மக்கள் -</u>**

இல்லறத்தின் முதற்படி திருமணம். அதனை மங்கலம் என்பது தமிழ் மரபு. சிலப்பதிகாரத்தில் வரும் முதல் காதை மங்கல வாழ்த்துப் பாடல் என்பதறிக. இந்து சமயத்தில் தான் கடவுளர்க்குக் கல்யாண உற்சவம் நடத்துகிறோம். ஏன்? உயிர்களாகிய நாம் திருமணம் செய்து கொண்டு சுத்த போகத்தைத் துய்த்துப் போகத்தின் தன்மை இத்தன்மைத்து என்று உணர்ந்து, மும்மலத்தினின்று நீங்கி முழு இன்பத்தையும் பெறுவதற்காகவே கடவுளும் ஆணும் பெண்ணுமாகி மணம் செய்து கொண்டனன் என்பது ஞானியார் அடிகள் தரும் விடை. அதாவது நாம் இவ்வுலகில் திருமணம் செய்துகொண்டு இன்பம் துய்க்கவே கடவுளும் கல்யாணம் செய்து கொள்ளுகிறார் இதனையும் பள்ளியறை நமக்கு உணர்த்துகிறது.

"விதிவழி வழாது வேள்வி வினையெலாம் நிரம்ப இங்ஙன்

அதிர்கடல் உலகம் தேற ஆற்றினான் மறைகள் ஆர்ப்பக்

கதிர்மணி நகையார் வாழ்த்தக் காமனைக் காய்ந்த நம்பி

முற்ற மங்கலநாண் சாத்தி முழுதுலகீன்றாள் செங்கை

பற்றினன் பற்றிலார்க்கே வீடருளும் பரம யோகி''

என்னும் திருவிளையாடல் புராணத் தொடர்களை நோக்குக. கடவுளர் திருமணம் காமத்தினால் விளைவதன்று. பற்றினால் ஏற்படுவது அன்று என்பதைக் காமனைக் காய்ந்த நம்பி, பரம யோகி எனும் தொடர்கள் வலியுறுத்தும்.

"மலையரையன் பொற்பாவை வாள் நுதலாள் பெண்திருவை

உலகறியத் தீவேட்டான் என்னுமது என்னேடி?

உலகறியத் தீவேளாது ஒழந்தனனேல் உலகனைத்தும்

கலைநவின்ற பொருளெல்லாம் கலங்கிடும்காண் சாழலோ''

என்னும் திருவாசகப் பாடலும் இறைவன் திருமண நோக்கத்தை உணர்த்தும்.

**நித்தமணாளன்** --

இறைவனை 'நித்த மணாளன்' என்று திருவாசகம் கூறும். சக்தியம் சிவனும் சேர்வது திருமணம். அவன் நித்ய மணாளன், கல்யாண சுந்தரன். அவளோ நித்யகல்யாணி. சக்தியும் சிவனும் கூடவில்லையானால் படைப்பேது? இன்பமேது?அவர்க்கு என்றும் திருமணம். என்றும் பேரின்பம், மானைக் காட்டி மானைப் பிடிப்பது போலச் சிற்றின்பத்தின் வழி பேரின்பம் என்னும் சிந்தனையை உணர்த்துவது பள்ளியறைக் காட்சி.

"கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்று அறியும் ஐம்புலனும் ஒண்தொடி கண்ணே உள'' என்கிறான் திருவள்ளுவர் கண்ட தலைவன். இதனைக் கடவுளிடம் பேரின்பக் காட்சியாக் கண்ட நாவுக்கரசர்,

'மாசில் வீணையும் மாலை மதியமும்

வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்

மூசு வண்டறை பொய்கையும் போன்றதே

ஈசன் எந்தை இணையடி நீழலே''

என்று பாடுகிறார்.

**இணைந்திருந்த இன்பக் காட்சி** -

சோம சுந்தரனாகச் சிவனும் மீனாட்சி அம்மையாக உமையும் இணைந்து மணக்கோலத்தில் இருந்த காட்சியைப் படம்பிடிக்கும் பரஞ்சோதியார் பாடலைப் பள்ளியறை நம் கண்முன்னே காட்டும்.

"பண்ணும் இன்னிசையும் நீரும் தண்மையும் பாலும் பாலின்

கண்ணும் இன்சுவையும் பூவும் நாற்றமும் மணியும் அங்கேழ்

வண்ணமும் வேறு வேறு வடிவு கொண்டிருந்தால் ஒத்தது

அண்ணலும் உலகம் என்ற அம்மையும் இருந்ததம்மா''

இறைவனும் இறைவியும் எப்போது பிரியாதிருப்பர். பின்னமிலான் எனத் திருவருட்பயன் பேசும். காதலிருவர் கருத்து ஒருமித்து ஆதரவு பட்டதே இன்பம் அல்லவா?

**<u>படைப்பின் இரகசியம்</u>** -

சிவபெருமான் நிட்டை இருந்த காலத்தில் படைப்பு இல்லை. பின்னர் உமாதேவியுடன் கூடியே உலகைப் படைத்தான். படைத்தல் தொழிலே ஐந்தொழிலின் முதற்படி. படைத்தல் பள்ளியறையில் தானே தொடங்குகிறது. கட்டிலின் விளைவு தானே தொட்டில். படைத்தல் தொழிலுக்கு முதற்காரணம் மாயை. துணைக்காரணம் சக்தி, நிமித்த காரணம் சிவன். சக்தி துணைக்காரணம் ஆதலால் பெண்பாலாகக் கருதி உலக மாதா என்கிறோம்.

"தென்பால் உகந்தாடும் தில்லைச் சிற்றம்பலவன்

பெண்பால் உகந்தான் பெரும்பித்தன் காணேடி

பெண்பால் உகந்திலனேல் பேதாய் இருநிலத்தோர்

விண்பால் யோகெய்தி வீடுவர்காண் சாழலோ''

பள்ளியறை இல்லாவிட்டால் உலகம் எங்கே? என்று கேட்கிறது திருவாசகம். பெருமான் பெண்பால் உகந்ததே பள்ளியறைக் காட்சி. இது இறைவன் ஆன்மாக்களின் மீது கொண்ட பெருங் கருணையின் விளைவு அல்லவா?

சிவன் சக்தி ஆகிய இரண்டும் சிருஷ்டிக்கு அவசியமானவை. உலர்ந்து போன களிமண்ணை வைத்துக் கொண்டு எந்தக் குயவனாலும் சட்டி பண்ண முடியாது. தண்ணீர் அதற்கு அவசியம் வேண்டும். அது போலச் சக்தியுடைய உதவி இல்லாமல் சிவனால் மட்டும் சிருஷ்டித் தொழில் நடைபெறாது என்பார் பகவான் இராமகிருஷ்ணர்.

**<u>உள்ளமே பள்ளியறை ஊஞ்சல்</u>** -

பள்ளியறையிலுள்ள ஊஞ்சலைத் திருப்பொன்னூசல் என்ற பகுதியில் மாணிக்கவாசகர்,

"நஞ்சமர் கண்டத்தன் அண்டத் தவர் நாதன்

மஞ்சுதோய் மாடமணி உத்தரகோச மங்கை

அஞ்சொலாள் தன்னொடுங் கூடி அடியவர்கள்

நெஞ்சுளே நின்று அமுதம் ஊறிக் கருணைசெய்து

துஞ்சல் பிறப்பு அறுப்பான் தூய புகழ்பாடிப்

புஞ்சமார் வெள்வளையீர் பொன்னூசல் ஆடாமோ''

எனும் பாடலில் அடியவர் உள்ளமாகக் காட்டுகிறார். அவன் அம்மையுடன் சேர்ந்து ஆடும்போது அங்கே பேரின்பம் ஊற்றெடுக்கிறது. பிறப்பற்ற நிலை ஏற்படுகிறது என்கிறார். திருப்பொன்னூசல் என்ற பகுதியின் பொருள் அருட்சக்தி என்பர். அதாவது அருளுடன் கூடுதல் என்பதாகும். அருளுடன் கூடியதும் இறைவனது ஐந்தொழிலால் ஆன்மாக்கள் மாசு நீங்கித் தூய்மை அடைகின்றன.

**<u>இயக்க சக்தி</u>** -

சிவம் இயங்கா நிலை. சக்தியுடன் கூடிய நிலையே இயக்க நிலை. சிவமாகிய பரம்பொருள் சக்தியடன் சேராவிடில் உலகில் ஒன்றும் நடைபெறாது. "சிவமெனும் பொருளும் ஆதி சத்தியொடு சேரின் எத்தொழிலும் வல்லதாம், இவள் பிரிந்திடின் இயங்குதற்கும் அரிது அரிது எனா மறை இரைக்கும்'' என்பது ஆன்றோர் வாக்கு. எனவே பள்ளியறை உலக இயக்த்தை உணர்த்துவதாகும்.

**<u>உடனாகி உதவும் கருணை -</u>**

கடவுள் கொள்ளும் உருவத் திருமேனிகள் போக வடிவம், கோர வடிவம், யோக வடிவம் என மூவகைப் படும். உயிர்கள் உலக இன்பங்களை அனுபவிக்கப் போக வடிவமும், உயிர்களின் வினை கழியக் கோர வடிவமும், உயிர்கள் முத்தி பெற யோக வடிவமும் கடவுள் கொள்கிறார்.

'யோகியாயிருந்து உயிர்க்குப் போகத்தைப் புரிதல் ஓரார்

யோகியா யோகமுத்தி உதவுதல் அதுவும் ஓரார்

வேகியா னாற்போற் செய்த வினையினை வீட்டல் ஓரார்

ஊகிய மூடரெல்லாம் உம்பரின் ஒருவன் என்பார்''

பள்ளியறையில் அம்மையோடு கூடியிருக்கும் வடிவமே போக வடிவமாகும். "இடப்பாகம் மாதராளோடு இயைந்து உயிர்க்கு இன்பமென்று அடைபரனாம்'' என்றமையால் உயிர்க்குப் போகத்தைப் புரிய இறைவன் அம்மையோடு கூடிப் போக வடிவம் கொண்டான். உயிர்களாகிய நாம் போகம் அனுபவிப்பதற்காக இறைவன் போகி ஆகிறான்.

“தொண்டனேன் புணருமாறு புணரே’’, “தொண்டனேன் விரும்புமாறு விரும்பே’’,”தொண்டனேன் நினையுமாறு நினையே’’ எனத் திருவிசைப்பாத் தொடர்கள் இதனை விளக்கும். தத்துவம் இதனை ஆன்மாக்களுடன் உடனிருந்து கூட்டுவிக்கும் உபகாரம் என்று உரைக்கும்.

**ஒடுக்கம் - இளைப்பாற்றல் -**

பள்ளியறை என்பது இறைவனின் ஐந்தொழிலில் ஒடுக்கத்தை உணர்த்தும் என்பர். படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகியவையே ஐந்தொழில் எனப்படும். இவை இறைவனின் அருட் செயல்களாகும். இவற்றுள் அழித்தலே ஒடுக்கம். இதனை இளைப்பாற்றல் என்பர். தனு, கரண, புவன, போகங்களை (உடம்பு, கருவி, உலகம், துய்ப்பு) ஆன்மாக்களின் வினை கழியப் படைத்த இறைவன் பின் இவற்றை, ஒடுக்கி அதாவது அடக்கிக் கொள்ளும் நிலையே அழித்தல் ஆகும். எங்கே ஒடுக்கம் உண்டோ அங்கே தான் தோற்றம் (படைப்பு) உண்டு. இதனைச் சிவஞானபோத முதல் சூத்திரம்,

“அவன் அவள் அது எனும் அவை மூவினமையின்

தோற்றிய திதியே ஒடுங்கி மலத்துளதாம்

அந்தம் ஆதி என்மனார் புலவர்.’’

என்று கூறும்.

**ஆன்ம நாயகன் -**

உயிரெலாம் கன்னிப் பெண்கள் என்றும், இறைவன் இந்த உயிர்களுக்கெல்லாம் நாயகன் என்றும், உயிர்கள் இறைவனை இறுதியில் சேர்ந்து இன்புற வேண்டும். பக்குவப்பட்ட உயிர்களை இறைவன் ஏற்றுக கொண்டு அருள்புரிவான் என்றும் திருமுறைகளில வரும் அகப்பாடல்கள் வழி அறிகிறோம். இதனையும் பள்ளியறை உணர்ததுகிறது எனலாம்.

‘கொம்பரில்லாக் கொடிபோல் அலமந்தனன் கோமளமே

வெம்புகின்றேன் விடுதி கண்டாய் ‘’ - திருவாசகம்

**திருவடி தெரிசனம்** -

பள்ளியறைக்குத் திருவடியைப் பல்லக்கில் இரவில் எடுத்துச் செல்லும் போதும் காலையில் திரும்பக் கருவறைக்குக் கொண்டு வரும் போதும் தெரிசனம் செய்யும் பேறு பெரும் பேறாகும். இறைவனின் திருவருள் நிலையே அவன் திருவடிகள்.

திருவள்ளுவரும் தம் கடவுள் வாழ்த்தில் ஏழு இடங்களில் இறைவனின் திருவடிகளைக் குறிப்பிடுகிறார். துன்பம் போக்கவும் பிறவிப் பெருங்கடல் கடக்கவும் அவை உதவம். அவையே முதலும் முடிவுமாகும் என்பதை ,"ஆதியும் அந்தமும் ஆவன ஐயாறன் அடித்தலமே'' என்னும் நாவுக்கரசரின் வாக்கால் உணரலாம். அவர் ஐயாற்றில் திருப்பாதம் கண்டவர் அல்லவா? அவர்,

"சிந்திப்பரியன, சிந்திப்பவர்க்குச் சிறந்து செந்தேன்

முந்திப் பொழிவன, முத்தி கொடுப்பன, மொய்த்து இருண்டு

பந்தித்து நின்ற பழவினைகள் தீர்ப்பன, பாம்பு சுற்றி

அந்திப் பிறை அணிந்து ஆடும் ஐயாறன் அடித்தலமே''

என்று திருவடிப் பெருமையைக் கூறுகிறார்.

இறைவனின் திருவடிகளே ஐந்தொழில்களையும் செய்வதாகத் திருவெம்பாவையின் கடைசிப் பாடல் கூறும். அவன் சக்தியே திருவடிகள் என்பர். எல்லா உயிர்க்கும் உண்மையான இன்ப அனுபவமாக இருப்பன திருவடிகளே. உலகியல் இன்பத்திலிருந்து நம்மை விடுவித்து மாறாத இறையியல் இன்பத்தைத் தமக்குத் தந்ததாக மாணிக்கவாசகர் கூறும் அச்சோப் பதிகப் பாடல்.

"பொய்யெலாம் மெய்யென்று புணர்முலையார் போகத்தே

மையலுறக் கடவேனை மாளாமே காத்தருளித்

தையலிடங் கொண்ட பிரான் தன்கழலே சேரும்வண்ணம்

ஐயன் எனக்கு அருளியவாறு ஆர்பெறுவார் அச்சோவே''

**சிவத்தின் நடுவே சக்தி -**

பள்ளியறைக் காட்சி சிவத்தின் நடுவே சக்தி இருப்பதையும் , சிவனும் சக்தியும் அடியார் நடுவில் இருப்பதையும் காட்டுவதற்காக மாணிக்கவாசகர் கூறும் திருவாசகப் பாடலை இக்கட்டுரையின் வாழ்த்தாகக் கூறி முடிப்போம்.

"உடையாள் உன்றன் நடுவிருக்கும், உடையாள் நடுவுள் நீ இருத்தி

அடியேன் நடுவுள் இருவீரும் இருப்பதனால், அடியேன் உன்

அடியார் நடுவுள் இருக்கும் அருளைப் புரியாய் பொன்னம்பலத்து எம்

முடியா முதலே என்கருத்து முடியும் வண்ணம் முன்நின்றே''

“சிவத்தினின்று சிவசக்தி தோன்றுவதால் சிவத்தின் நடுவில் சக்தி உள்ளது என்பார்கள். ஆற்றலுடையவன் சிவன். ஆற்றல் சக்தி, சிவ தத்துவத்திலிருந்து சக்தி பிறந்து, அதிலிருந்து சதாசிவம் பிறத்தலால் சிவத்தின் இடையே சக்தி என்பதாயிற்று. உலகத்திற்கு ஆதாரமாகவும், உலகத்தில் எப்புறத்திலும் சக்தி இருப்பதுபோல் சக்திக்கு ஆதாரமாகவும் சக்திக்கு எப்புறமும் சிவன் இருப்பதால் சிவத்தின் நடுவே சக்தி என்பதாயிற்று '' என்று விளக்கம் தருகிறார் சைவப் பெரியார் கா. இராமநாதனார்.

சிவன் சக்தியுடன் கலந்து அச்சக்தியின் உள்ளே போய் நெருப்பும் சூடும் போல நீக்கமற நிற்கிறான். சிவனும் சக்தியும் மாணிக்கவாசகர் போன்ற அடியார் நெஞ்சத் தாமரையில் வீற்றிருப்பர். எனவே அடியார்களோடு என்றும் இணங்கி இருக்க ஆண்டவனை வேண்டுவோமாக.

“செம்மலர் நோன்தாள் சேரல் ஒட்டா

அம்மலம் கழீஇ அன்பரொடு மரீஇ

மால் அற நேயமும் மலிந்தவர் வேடமும்

ஆலயம் தானும் அரன் எனத் தொழுமே”

(சிவஞானபோதம், சூத்திரம் -12)

(மலாக்கா திலகவதி அம்மன் கோயில் குடமுழுக்கு விழா மலர்)

Thinnappan, ‘PaLLIyaRai Vazipaadu’ in *Sri Subramaniyar Thuropathai Amman Alayam Maha Kumbabishega Malar,* Melaka, pp105-111, 2005

Thinnappan, ‘PaLLIyaRai Vazipaadu’ in 10th World Saiva Conferece Sydney, Australia 2006, Saiva Manram, Sydney,pp 2-48- 54, 27-29 January 2006

Thinnappan, ‘PaLLIyaRai collum paadam’ in *Glden Jubilee Souvenir*, Kuala Lumpur, Malaysia Arlneri Thirukkoottam, pp255-61, 2005.

## நிறைவுப் பகுதி எண். 51 முருகா வருக.

முருகா வருக முதல்வா வருக
அருளே பெறுக அன்பே தருக
வள்ளி மணாளா வருக வருக
புள்ளி மயிலேறும் புனிதா வருக
வெள்ளிப் பணம்தர விரைவில் வருக
அள்ளித் தருகவே அடியார்க்கு அருளை
தண்ணீர் மலைவாழ் தலைவா வருக
வெண்ணீறு அணியும் வேலா வருக
அலோர்ஸ்டார் உறையும் ஆண்டவா வருக
கூலிமில் குடிகொண்ட கோவே வருக
தைப்பிங்கில் இருக்கும் தண்மையே வருக
ஈப்போவில் இணங்கிய இறைவா வருக
பேராவில் பேசும் பெருமானே வருக
ஆரா அமுதே அழகே வருக
பத்துமலை விரும்பும் பரமா வருக
சித்தி பெறவே சீக்கிரம் வருக
கிள்ளானில் உள்ள கிளரொளியே வருக
வள்ளால் வருக வருவாய் தருக
கோலாலம்பூர் கோயில்வாழ் கோலமே வருக
பாலா வருக பாவம் போக்க
சிரம்பான் செல்வ விநாயக வருக
பரம்பொருள் முருகனுடன் பாங்காய் வருக
மலாக்கா வாழும் மன்னனே வருக
பலாப்பழம் விரும்பும் பழனியே வருக
மூவாரில் வளரும் மூத்தோனே வருக
பாவுக்கு உருகும் பாலா வருக
சிங்கைக்கும் சிறப்புச் சேர்க்கும் செல்வா
தங்கத் தமிழால் தண்டன் இட்டேன்
இங்கேவந்து இப்பொழுதே (இன்னல் போக்கி) இன்பம் தருகவே.

(காரைக்குடி இலக்குமணன் வேண்டஇயற்றியது)

# அன்னையின் ஆற்றல்.

பெண்மைக்குப் பெருமை சேர்ப்பது தாய்மையே. ஏன்? தாய்மைக்குரிய குணங்களான அன்பு, பரிவு , பாசம், பொறுமை, தியாகம் ஆகிய அனைத்தும் பெரும் குணங்களாகும். ஒருபெண் கருவுற்றிருக்கும் போது எத்தனையோ துன்பங்களுக்கு ஆளாகின்றாள். பிறகு கருவுயிர்க்கும் காலத்து அவள் படும் வேதனைக்கு அளவே இல்லை. அவ்வேதனையைத் தாங்கிக் கொள்கிறாள். பிறகு அந்தக் குழந்தையின் படிப்படியான வளர்ச்சிக்கு அவள் தரும் பங்கு பெரிது. தன் இரத்தத்தையே பாலாக்கி ஊட்டுகிறாள். சேய்க்கு நோய் வந்தால் தாய் அல்லவா பத்தியம் இருந்து பாதுகாக்கிறாள். பிறகு கல்வி கற்கும் நிலையில் தலைவாரிப் பூச் சூடிப் பள்ளிக்குப் போவென்று சொல்கிறாள். அந்த அன்னை. அந்தப் பிள்ளையைச் சான்றோன் எனப் பலர் பாராட்டும்போது ஈன்ற பொழுதைவிடப் பெரிதும் மகிழ்கிறாள்.

பிள்ளை மனம் கல்லாக இருந்தாலும் பெற்ற மனம் பித்தாக இருப்பதையே பார்க்கிறோம். மகன் தன்னைஅடித்தாலும் தன் வலிக்கு வருந்தாது மகனின் கைவலிக்குமே என்று வருந்துபவளே தாய். மேலும் மகனின் வலிமையை எண்ணி அந்த வருத்தத்திலும் அகமகிழ்ச்சி அடைபவளே தாய்.

தாயின் பெருமையைக் கருதியே மனிதன் தான் பெசும் மொழிக்குத் தாய்மொழி என்று பெயரிட்டு அழைக்கிறான். தான் வாழும் நாட்டைத் தாய் நாடு என்று கூறுகிறான். தன் உயிர் வாழ்வுக்கு இன்றியமையாத நீர்தரும் கங்கை, காவிரி போன்ற ஆறுகளைக் கங்கைத் தாய், காவிரித்தாய் என்று அழைப்பது இந்துக்களின் மரபு. மேலும் தனக்குப் பால் தரும் பசுக்களை “கோமாதா எங்கள் குலமாதா” என்று கூறும் பழக்கமும் இந்துக்களிடையே உண்டு.

தாயைக் கடவுளாகக் கருதி வழிபட்டவார்கள் தமிழர்கள். எனவேதான் “அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்” என்றும், “தாயிற் சிறந்தொரு கோயிலும் இல்லை” என்றும் ஔவைப் பாட்டி கூறுகிறாள். தாய் சொல்லைத் தட்டாதே என்பதும் ஒரு முதுமொழி. மாதா பிதா குரு தெய்வம்

என்று வரிசைப் படுத்தும் போதும் தாய்மைக்கே முதலிடம் தரப்பட்டது. காரணம் என்ன? தாய் சொல்லித்தானே தந்தையை நாம் அறிந்து கொள்கிறோம். எனவே நம் தந்தையை நமக்கு அறிமுகப்படுத்தி வைப்பவளே தாய் அல்லவா?

கடவுளைத் தாயாக்கி வணங்கியவர்கள் இந்து சமயத்தினர். இறைவனை "அம்மை நீ" என்றும், "அம்மையே" என்றும் அழைத்து வணங்குகிறார்கள் அடியார்கள். முன்னொரு காலத்தில் திருச்சிராப்பள்ளியை நோக்கி வந்து கொண்டிருந்த ஒரு பெண்ணுக்குக் காவிரிக் கரையில் கருவுயிர்க்கும் நேரம் வந்தபோது அவள் தனியே படும் துன்பத்தைக் கண்டு சிவபெருமான் தாயாக வந்து கருவுயிர்க்க உதவி செய்தான் என்று ஒரு புராணக் கதை உள்ளது. எனவே அந்த ஊர் இறைவனுக்குத் தாயுமானவர் என்று பெயர் உள்ளது.

சங்கரர் கண்ட சண்மதங்களுள் ஒன்றாகிய "சாக்தம்" என்னும் சக்தி வழிபாடு தாய்மையைப் பராசக்தியாக - காளியாக துர்க்கயையாக வணங்குவதாகும். வீரத்தையும் வலிமையையும் வெற்றியையும் தருபவள் அன்னை பராசக்தி அல்லவா? இறைவனின் அருளே சக்தி. சிவன் இயங்கா நிலை ஆற்றல். சக்தி இயங்கும் நிலை ஆற்றல். உலகைப் படைத்துக் காத்து அழிக்கும் இறையாகிய ஆற்றலே பராசக்தி. எனவேதான் "ஆவதும் பெண்ணாலே அழிவதும் பெண்ணாலே" என்று கூறினார்கள். நவராத்திரித் திருநாள மகிடாசுரனை வென்ற பராசக்தியின் துர்க்கையின் - பெருமையைத் தானே பேசுகிறது. மகிடாசுரன் - எருமை முக அரக்கன்- சோம்பலின் அடையாளம்- சோம்பலை வெல்வதற்குச் சக்தி -இயக்கம் - சுறுசுறுப்புத் தானே தேவை. எனவே ஆற்றலின் அடையாளமே தாய் அல்லவா.

அன்பின் அடையாளமாகவும், ஆற்றலின் அறிகுறியாகவும் , தியாகத்தின் சின்னமாகவும் திகழும் தாயைப் போற்றுவோம், தலை பணிவோம், தாய்மையின் தூய்மையைக் காப்போம், தாய்மை வாழ்க.

(சிங்கப்பூர் இந்து 13:3, ஜூலை- செப்டம்பர் 2001)

# முனீஸ்வரன் கோவிலில் கலைமகள் வழிபாடு

சிங்கப்பூர் காமன்வெல்த் ட்ரைவ் சாலையில் எழுந்தருளியிருக்கும் அருள்மிகு முனீஸ்வரர் ஆலயத்தில் கடந்த மாதம் 13.4.2001 புனித வெள்ளிக்கிழமை அன்று வருடாந்தர ‘‘சரஸ்வதி வித்யாராதனை’’ (கலைமகள் வழிபாடு) நிகழ்ச்சி மிகவும் சிறப்பான முறையில் நடைபெற்றது. அதில் திரளான பக்தர்கள் மற்றும் குழந்தைகள் கலந்து கொண்டனர். காலை 7-30 மணி அளவில் அருள்மிகு விநாயகர் மற்றும் முனீஸ்வரரிடம் அனுக்ஞை நடைபெற்றன. அதனைத் தொடர்ந்து மஹா சங்கல்பம், புண்யாகவாஹனம், கலசபூஜை,சூக்தாதி பாராயணம், யாக பூஜைகளைத் தொடர்ந்து புனித கலசங்கள் ஆலய வலம் வந்து துர்க்கை அம்மனுக்கு புஷ்பாஞ்சலியும் நடைபெற்றன. டாக்டர். சுப.திண்ணப்பன் அவர்களுடைய சிறப்புச் சொற்பொழிவு நடைபெற்றது. கலந்து கொண்டவர்களுக்கு அருட்பிரசாதங்கள் அன்னதானம் மற்றும் நினைவுப் பொருட்கள் வழங்கப் பெற்றன.

பூஜை ஏற்பாடுகளை ஆலய அறங்காவலர்கள் மற்றும் மேலாண்மைக் குழுவினர்கள் செய்திருந்தனர்.

---------------------------------

# சக்தி வழிபாடு

சக்தி என்னும் சமஸ்கிருதச் சொல்லுக்கு ஆற்றல் (energy) என்று பொருள். இந்த ஆற்றலை இயங்காநிலை ஆற்றல் (static energy), இயங்குநிலை ஆற்றல்(kinetic energy} என இரண்டு வகையாக அறிவியலார் பிரித்து ஆய்வார்கள். இயங்காநிலை ஆற்றலைச் சிவம் என்றும், இயங்கு நிலை ஆற்றலைச் சக்தி என்றும் இந்து சமயத்தினர் பெயரிட்டுள்ளனர். இறை சும்மா (சிவனே என) இருக்கும் நிலை சிவம். இயங்கும் நிலை சக்தி. சிவத்தை ஆணாகவும் சக்தியைப் பெண்ணாகவும் கருதி வழிபாடு செய்வது இந்து சமய மரபு.

ஒவ்வொரு பொருளுக்கும் ஆற்றல் உண்டு. எல்லாப் பொருளுக்கும் மூலமான இறைக்கும் ஆற்றல் உண்டு. அதற்கு வரம்பில் ஆற்றல் என்று பெயர். அந்த ஆற்றலே சக்தி. பொருளையம் அதன் ஆற்றலையும் பிரிக்க முடியாது. எனவேதான் சிவனும் சக்தியும் சூரியனும் கதிரும் போலவும், பழமும் சுவையும் போலவும், மலரும் மணமும் போலவும் பிரிக்க முடியாதவர்கள் எனக் கருதுகிறது. இந்து சமயம் அதனால் அர்த்தநாரீஸ்வர வடிவம் - அதாவது உமையொரு பாகன் வடிவம் கண்டு வழிபட்டது. இந்து சமயம் ஆணையும் பெண்ணயும் உலக வளர்ச்சிக்கு உயிர்நாடிகள் என்னும் உண்மையை உணர்த்தும் முயற்சியே இது.

சக்தியை முதன்மைப்படுத்தி முழுமுதற் பொருளாகக் கருதி வழிபடும் மதத்தைச் சாக்த மதம் என்று அழைத்தனர். இந்து மதத்தின் அறுவகைப் பிரிவுகளில் ஒன்றாகிய இந்த சாக்த வழிபாடு இந்தியாவில் குறிப்பாக வங்காளத்திலும் கேரளத்திலும் மற்ற இடங்களிலும் காளி வழிபாடாக அமைந்துள்ளது. மகிடாசுரனை - எருமை முக அசுரனை அழிக்கும் சக்தியே காளி. மகிடாசுரன் என்பவன் சோம்பலின் அறிகுறி. சோம்பலை அழித்துச் சுறுசுறுப்பாக்கிச் செயல்படுத்தும் ஆற்றலே மகிடாசுரவதம் உணர்த்தும் காளி வழிகாட்டுத் தத்துவம் ஆகும். இராமகிருஷ்ண பரமஹம்சர் கல்கத்தாவில் காளி வழிபாடு செய்த பெரியார் ஆவார்.

ஒன்றாய் நிற்கும் சக்தி செயல் படும்போது மூன்றாய் நிற்கும் எனச் சைவ சித்தாந்த தத்துவம் உணர்த்தும். “ஒன்றதாய் இச்சா ஞானக் கிரியை

என்று ஒரு மூன்றாகி நின்றிடும் சக்தி'' என்பது சிவஞான சித்தியார் என்னும் நூல் வாக்காகும். ஒரு செயலைச் செய்வதற்கு முதலில் அதில் ஆர்வம் - விருப்பம் - (attitude) இருக்க வேண்டும். இதுவே இச்சா சக்தியாகும். பிறகு அந்தச் செயல் தொடர்பான அறிவு (knowledge) வேண்டும். அது பற்றிப் பலவற்றைத் தெரிந்து கொள்ள வேண்டும். இதுவே ஞான சக்தியாகும். பிறகுதான் நாம் செயலில் இறங்கி (action) முயற்சி செய்ய வேண்டும். ஆர்வம், அறிவு, செயல் ஆகிய மூன்றனையெ இச்சா, ஞான, கிரியா சக்தி எனக் கண்டு அவற்றிற்கு வள்ளி, முருகன், தெய்வயானை என முறையே வடிவம் கொடுத்து வழிபட்டது இந்து சமயம்.

சக்தி என்பதைச் சடசக்தி, சித்சக்தி என இருவகைப் படுத்திப் பேசுவதும் உண்டு. நெருப்பு, காற்று போன்றவற்றின் சக்தி சடசக்தி. மக்கட்குரிய அறிவு சித்சக்தி. முதலில் நெருப்பு(அக்னி), காற்று (வருணன்). முதலியவற்றைக் கடவுளாக வழிபட்ட மக்கள் பின்பு அறிவு நிலையில் வாலறிவனாக வழிபட்டனர். ''சக்தி தன் வடிவேது என்னில் தடையிலா ஞானமாகும்'' என்று ஞானத்தை - அறிவை - வழிபடுவதும் சக்தி வழிபாடாகும்.

இறையின் சக்தியை அருளாகக் கருதி வழிபடுவதும் உண்டு. ''அருளது சக்தியாகும் அரன் தனக்கு'' எனச் சைவ தத்துவ நூல்கள் கூறும். இந்தச் சக்தியைப் பராசக்தி எனவும், திரோதான சக்தி எனவும் பகுத்துக் காண்பர். இறைவன் தன் நிலையில் இருப்பது பராசக்தி. அவன் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய ஐந்தொழில் நிலைப்படும் பொழுது திரோதான சக்தி எனப்படும்.

படைத்தல் நிலையில் பிரமன், காத்தல் நிலையில் திருமால், அழித்தல் நிலையில் சிவன் என இறையைப் பகுத்துக் கண்டு, மேற்கண்ட மூவர்க்கும் தேவியராக முறையே சரஸ்வதி, இலக்குமி, பார்வதி எனக் கூறி வழிபடுவதும் இந்து சமய நெறியாகும். கல்விக்குரிய சக்தியாகச் சரஸ்வதியும், செல்வத்திற்குரிய சக்தியாக இலக்குமியும், வீரத்திற்குரிய சக்தியாகப் பார்வதியும் கருதப் பெற்றனர். பார்வதிக்கு மூன்று நாள்களும், இலக்குமிக்கு மூன்று நாள்களும், சரஸ்வதிக்கு மூன்று நாள்களும் ஆக 9 நாள்கள் செய்யும் வழிபாட்டு விழாவே நவராத்திரி விழாவாகும். ஒவ்வொரு தெய்வத்திற்கும் மூன்று நாள்கள் ஏன்? வழிபாடு என்பது

மனத்தால் தியானித்து, வாயால் தேவியின் புகழ் பாடித் துதித்து உடலால் வணங்கித் தொண்டு செய்வதே ஆகும். எனவே மனம், மொழி, உடல் மூன்றின் வழிபாட்டிற்கு மூன்று நாள்கள் எனக் கருதலாம்.

அருள் என்பது கருணையாகும். அறக்கருணை, மறக்கருணை என அது இரண்டு வகைப்படும். நல்லோரை வாழ வைத்து இன்பம் நல்குவது அறக்கருணை. அல்லோரை - அநீதி செய்வோரை அழித்து இன்பம் தருவது மறக்க்ருணை. முன்னது ஒரு தாய் தன் பண்புடைய பிள்ளையை அரவணைத்து அன்பு காட்டுவது போன்றது. பின்னது ஒரு தாய் தன் தீய பழக்கம் உடைய குழந்தையை அடித்துச் சிறிது துன்புறுத்தி நல்வழிக்குக் கொண்டு வருவது போன்றது. முன்னது சக்தியின் சாந்த வடிவம். உமையம்மை , இராஜ இராஜேஸ்வரி போன்றவை. பின்னது சக்தியின் கோர வடிவம். காளி, துர்க்கை போன்றவை. எனவே சக்தி வழிபாடு தாய்மை வழிபாட்டையும் உணர்த்துகிறது. வைணவ சமயத்தினர் திருமால் தேவியைத் தாயார் என்றே அழைப்பார்கள்.

அருளை மழையாகக் காண்பதும் உண்டு. திருவள்ளுவரும் கடவுள் வாழ்த்துக்குப் பிறகு வான்சிறப்பை வைத்து மழையைப் போற்றுகின்றார். மழையின் மறுபெயர் மாரி. மழை தரும் சகதி வழிபாடே மாரியம்மன் வழிபாடாகும்.

இத்தகைய சக்தி வழிபாடு தமிழரிடையே வெற்றி தரும் கொற்றவை வழிபாடாகத் தொடங்கி, காளி வழிபாடாகவும், தேவி வழிபாடாகவும் மலர்ந்தது எனலாம்.

(சிங்கப்பூர் இந்து 15:3, ஜூலை- செப்டம்பர் 2003)

-------------------------------

# திருவாசகம்
# திருச்சதகம்
# அறிவுறுத்தல்

## முன்னுரை.

ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கும் திருவாசகம் சைவத் திருமுறைகளுள் எட்டாந் திருமுறை ஆகும். திருவாசகம் என்னும் தலைப்பு அழகிய தெய்வத் தன்மை வாய்ந்த சொற்களால் ஆகிய கவிதை நூல் என்னும் பொருளைத் தரும்.

திருவாசகத்தை இயற்றியவர் திருவாதவூரர் எனப்படும் மணிவாசகர் ஆவார். இவர் தமிழகத்தில் மதுரைக்கு அருகில் உள்ள திருவாதவூர் என்னும் தலத்தில் அந்தணர் குலத்தில் பிறந்தார். கல்வி கேள்விகளில் சிறந்து நின்ற இவரது நுண்மாண் நுழைபுலத்தைக் கண்ட பாண்டிய மன்னன் இவரைத் தன் முதலமைச்சராக்கிக் கொண்டான். மன்னன் வேண்டுகோளுக்கு இணங்கப் பெரும் பொருளுடன் குதிரைகள் வாங்கச் சென்றார். வழியில் திருப்பெருந்துறை (தற்போது ஆவுடையார் கோயில் என்று அழைக்கப் பெறும்) என்னும் ஊரில் இறைவன் குருந்த மரத்தடியில் குரு வடிவமாக எழுந்தருளி இவருக்கு ஞானோபதேசம் செய்தான். தான் கொணர்ந்த பொருள் அனைத்தையும் கொண்டு இவர் அந்த ஊரில் ஒரு சிவன் கோயில் கட்டினார். இதனை அறிந்த பாண்டிய அரசன் இவரை வரைவழைத்துச் சிறையில் இட்டுத் துன்புறுத்தினான். இதனால் இறைவன் இவருக்காக நரிகளைப் பரிகளாக்கி ( பரி - குதிரை) அரசனிடம் ஒப்புவித்து மீண்டான். அன்றிரவே பரிகள் நரிகளாயின. அது கண்டு அரசன் மறுபடியும் வாதவூர் அடிகளைத் தண்டித்தான். வைகை ஆற்றில் வெள்ளம் பெருகியது. வெள்ளத்தைத் தடுக்கக் கரை அமைக்கும் வேலையாளாக ஆண்டவன் வந்து பிட்டுக்கு மண் சுமந்து பிரம்படி பட்டான். அவன் பட்ட அடி அனைத்துயிரின் மீதும் விழுந்து அரசன் வாதவூர் அடிகளின் பெருமையை உணருமாறு செய்தது. பின்னர் வாதவூரர் அமைச்சுப் பதவியைத் துறந்து, திருஉத்திரகோசமங்கை, திருவாரூர், திருவண்ணாமலை முதலிய தலங்களில் உள்ள இறைவனை வணங்கிப் பதிகங்கள் பாடிக் கொண்டு

தில்லையை அடைந்து நடராசப் பெருமானை வழிபட்டார். ஒருநாள் இறைவன் அந்தணர் வடிவு கொண்டு இவர் இயற்றிய திருவாசகம், திருக்கோவையார் இரண்டையும் தாமே ஓலைச்சுவடியில் எழுதி, கைச் சாத்திட்டுக் கனகசபையில் வைத்து மறைந்தான். இதனைக் கண்ணுற்ற தில்லைவாழ் அந்தணர்கள் வாதவூரரை அணுகி இந்த இரண்டு நூல்களுக்கும் உரை கூற வேண்டினர். ஆனால் இவர் அனைத்திற்கும் பொருள் அம்பலவாணன் திருவடிகளே என்று சொல்லி இறைவனுடன் இரண்டறக் கலந்தார். இவர் காலம் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டு.

திருவாசகம் சிவபுராணம் முதலாக அச்சோப் பதிகம் ஈறாக ஐம்பத்தொரு பகுதிகளையும், அறநூற்றைம்பத்தாறு பாடல்களையும் கொண்டுள்ளது. பல திறப்பட்ட பா வகைகளும் இந்நூலில் உள்ளன. இந்நூல் எளிமை, இனிமை, தெளிவு முதலிய சிறப்பு இயல்புகளோடு கல்லைப் பிசைந்து கனியாக்க வல்ல உருக்கமும், நெகிழ்ச்சியும் கொண்டு ஒப்புயர்வில்லாத அன்புப் பெரு நூலாக ஒளிர்கின்றது. எனவேதான் “திருவாசகத்திற்கு உருகார் ஒருவாசகத்துக்கும் உருகார்’’ என்ற பழமொழியும் எழுந்தது. மகளிர் விளையாட்டுகளில் ஆண்டவன் பெருமையைப் பாடும் இயல்பும் இந்நூலில் உண்டு. மார்கழி மாதத்தில் சிவன் கோயில்களில் பாடப்படும் திருப்பள்ளியெழுச்சி, திருவெம்பாவை ஆகிய இரண்டும் இந்நூலில் உள்ள பகுதிகளே ஆகும். இறைவனைத் தேடி அலைந்து முயன்று கண்டு இறையருள் பெற்ற ஓர் உயிரின் பலதிறப்பட்ட உள்ளுணர்ச்சிகளின் வளர்ச்சிப் படிநிலைகளைத் தெளிவாக வடித்துக் காட்டும் தன்மையை இந்நூலில் காண முடியும். சுருங்கச் சொன்னால் அன்பால் அழுது அழுது அரனடி அடைந்த மாணிக்கவாசகர் பெற்ற இறையனுபவத்தின் படிப்படியான அனுபவ வெளிப்பாடே இந்நூல் எனக் கூறலாம். எனவே இது இறையருள் நூலாகவும், அனுபவ நூலாகவும் இலங்குகிறது. மேலை நாட்டுப் பெரும் புலவர் போப் அவர்களின் உள்ளத்தையும் கொள்ளை கொண்ட நூல் இது. அவர் இதனை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார்.

திருவாசகத்தில் திருச்சதகம் என்னும் பகுதியில் உள்ள அறிவுறுத்தல் என்னும் தலைப்பில் அடங்கிய பத்துப் பாடல்கள் இங்கு பாடப் பகுதியாக உள்ளன. சதம் - நூறு, சதகம் - நூறு பாட்டுக்களை அந்தாதி முறையில் (

ஒரு பாட்டின் இறுதி அசை , சீர், சொல், எழுத்து அடுத்த பாட்டின் முதலாவதாக அமைய வருவது ) தன்னகத்தே கொண்ட ஓர் இலக்கிய வகை. திரு என்பது தெய்வத் தன்மையை உணர்த்தும் . திருவாசகத்தில் வரும் இந்தத் திருச்சகதக்தின் உட்பொருள் பத்திவைராக்கிய விசித்திரம் என்பது. இறைவனிடத்துப் பற்றும் (பக்தி) உலகப் பொருள்களிடத்துள்ள பற்றை - ஆசையை நீக்கும் உறுதியும்( வைராக்கியம்) ஏற்படும் போது உண்டாகும் அழகு - வியப்புணர்வு ( விசித்திரம்) என்று இதனை விளக்குவர். இது பத்துப் பத்துப் பாடல்களைக் கொண்ட பத்துச் சிறு பிரிவுகளை உடையது. இங்கு வரும் அறிவுறுத்தல் என்பது அவற்றுள் இரண்டாம் பிரிவாகும். இதன்கண் மாணிக்கவாசகர் இறைவனிடம் விண்ணப்பிப்பது போலவும், நேரேயும் தன் நெஞ்சிற்கு அறிவுரை கூறுவது போலப் பாடுகின்ற காரணத்தால் இது “அறிவுறுத்தல்” என்னும் பெயர் பெற்றது.

(தமிழ்க்கவிக்கோவை HSC தமிழ்ப் பாடநூல் மலயாப்

பல்கலைக்கழக இந்திய ஆய்வியல் துறை வெளியீடு 1971)

# தேவாரம்
# ஐந்தாம் திருமுறை
# பதிகம் 90

## முன்னுரை.

சைவ சமயச் சான்றோர் நால்வருள் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் என்ற மூவரும் சிவபெருமானைப் பற்றிப் பாடிய பண் சுமந்த பக்திப் பாடல்கள் "தேவாரம்" என்று அழைக்கப் பெறும். சைவத் திருமுறை பன்னிரண்டில் முதல் ஏழு திருமுறைகளாக இவை வகுக்கப் பெற்றுள்ளன. திருஞானசம்பந்தர் பாடியவை முதல் மூன்று திருமுறைகளாகவும், திருநாவுக்கரசர் பாடியவை அடுத்த மூன்று திருமுறைகளாகவும், சுந்தரர் பாடியவை ஏழாம் திருமுறையாகவும் தொகுக்கப் பெற்றுள்ளன. இவ்வாறு வகுத்துத் தொகுத்தவர் திருநாரையூர் நம்பியாண்டார் நம்பி என்பவர் ஆவார்.

தேவாரம் என்னும் சொல்லுக்குத் தெய்வத்துக்குரிய பாமாலை என்றும், தெய்வத்தினிடத்து அன்பை விளைவிக்கும் தன்மையடையது என்றும், தெய்வத்தை வழிபடுவதற்குரிய இசைப்பாடல் என்றும் பலவாறாகப் பொருள் கூறுவர். ஒவ்வொரு தேவாரத் திருமுறையும் பத்து அல்லது பதினொரு பாடல்களைக் கொண்ட பல பதிகங்களைப் பெற்றிருக்கிறது. தேவாரப் .பதிகங்களைப் பண் அடிப்படையிலும் பாடப்பெற்ற தல அடிப்படையிலும் வரிசைப் படுத்துவார்கள்.

சிவபெருமானை முழுமுதற் பொருளாகக் கொண்ட சைவ சமயத்திற்கு அடிப்படையாக இருப்பது தேவாரம். தேவாரப் பாடல்களைப் படித்தாலும் படிக்கப் பக்கம் நின்று கேட்டாலும் சைவர்களின் மனம் பரவசப் பட்டுப் பக்தி உணர்வு அடையும். சைவ சித்தாந்தம் கூறும் இறை, உயிர், தளை, இலக்கணத்திற்கு இலக்கியம் தேவாரம் எனக் கருதப் பெறுகிறது. தேவாரப் பாடல்களை ஓதுவதாலும் கேட்பதாலும் வினை ஒழியும், துயர் நீங்கும்,

பிறவி அறும் எனச் சம்பந்தரும் சுந்தரரும் தங்கள் பதிகங்களின் இறுதியில் குறிப்பிடுகிறார்கள்.

திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரும் ‘‘சைவ சமயம் பெற்ற புண்ணியக்கண் இரண்டு) என்று போற்றப் பெறுகிறார்கள். அவர்களில் திருநாவுக்கரசர் தென்னார்க்காடு மாவட்டத்தில் உள்ள திருவாமூரில் வேளாளர் மரபில் பிறந்தார். இவர் தந்தையார் பெயர் புகழனார். தாயார் பெயர் மாதினியார். இவரது இயற்பெயர் மருள் நீக்கியார். இவர் பெற்றோரை இளமையில் இழந்தார். பின்னர், தம் தமக்கையார் திலகவதியார் ஆதரவில் இருந்தார். கல்வி, கேள்விகளில் சிறந்து நின்ற இவர் சமண சமயத்தில் புகுந்து தருமசேனர் என்னும் பெயர் பெற்றுத் திகழ்ந்தார். அது கண்ட திலகவதியார் வருந்தி ஆண்டவனிடம் முறையிட்டார். இறைவன் மருள்நீக்கியாருக்குச் சூலை நோயைக் கொடுத்து ஆட்கொண்டான். அப்போது இவர் பாடிய !”கூற்றாயினவாறு’’ என்ற பதிகத்தைக் கேட்டு மகிழ்ந்த இறைவன் இவருக்குத் திருநாவுக்கரசு என்ற பெயரையும் கொடுத்தான். இவ்வாறு சமண சமயத்திலிருந்து சைவ சமயத்திற்கு மீண்ட திருநாவுக்கரசரைப் பல்லவப் பேரரசன் (மகேந்திரவர்மன்) சமணர் தூண்டுதலால் நீற்றறையில் இட்டும், நஞ்சூட்டியும், களிறு இடறச் செய்தும் துன்புறுத்தினான். இவற்றை எல்லாம் இவர் ஆண்டவன் துணைகொண்டு அஞ்சா நெஞ்சுரத்துடனும், ‘‘நாமார்க்குங் குடியல்லோம் நமனை அஞ்சோம்) என்ற உறுதியுடனும் எதிர்த்து நின்றார். இறுதியில் இவரைக் கல்லில் கட்டிக் கடலில் செலுத்தினர். இவரோ அப்போதும் உறுதி குலையாது, ‘‘கற்றுணைப் பூட்டியொர் கடலில் பாய்ச்சினும் நற்றுணையாவது நமசிவாயவே’’ என்று பாடிக் கரையேறினார். இவரது அருளாற்றல் கண்டு பல்லவப் பேரரசனே சைவனானான். ‘‘சிந்தை இடையறா அன்பும் திருமேனி தன்னில் அசைவும் கந்தை மிகையாம் கருத்தும் கை உழவாரப் படையும்’’ கொண்டு தமிழகத்தில் உள்ள பல தலங்களுக்கும் சென்று இறைவன் கோயிற் புறத்தே உள்ள புல்லினைச் செதுக்கித் தூய்மை செய்து, அகத்தே போய் ஆண்டவனை இனிய தேவாரப் பாடல்கள் பாடி வழிபட்டார். இறைவனால் சூலக்குறி இடப்பக்குறி இடப் பெற்றார். அவன் திருவடி சூட்டப் பெற்றார். சீர்காழியில் திருஞானசம்பந்தரைச் சந்தித்தார். அப்போது இவரை அவர் ,‘‘அப்பா’’ என்று அழைத்தார். பிறகு அவருடன் பல தலங்களுக்குச் சென்று வணங்கினார்.

திருவீழிமிழலையில் இறைவன் தந்த படிக்காசு கொண்டு பஞ்சம் நீக்கியது, திருமறைக் காட்டில் கோயில் கதவு திறக்கப் பாடியது , திருக் கயிலைக் காட்சியைத் திருவையாற்றில் கண்டது, தம் பெயரையே ஓதி வந்த அப்பூதி அடிகளாரின் அரவு தீண்டிய மகனை உயிர்ப்பித்தது முதலியன இவர் வாழ்வில் நடைடிபற்ற அற்புதச் செயல்களாம். இறுதியில் தம் எண்பத்தோராவது ஆண்டில் திருப் புகலூரில் இறைவனடி சேர்ந்தார். “என் கடன் பணி செய்து கிடப்பதே, தன் கடன் அடியேனையும் தாங்குதல்’’ என்ற குறிக்கோளுடன் வாழ்வு நடாத்திய இவர் அஞ்சாமை, உறுதி, பணிவு, தொண்டுள்ளம் , ஆகியவை பண்பால் சிறந்து நின்ற பெரியார் ஆவார். இவர் காலம் கி.பி.ஏழாம் நூற்றாண்டு.

திருநாவுக்கரசர் பாடிய தேவாரப் பாடல்கள் 312 திருப்பதிகங்கள் ஆகும்.. நான்காம் திருமுறையில் திருநேரிசை, திருவிருத்தம் என்ற யாப்பும், ஐந்தாம் திருமுறையில் திருக்குறுந்தொகை என்ற யாப்பும், ஆறாந் திருமுறையில் திருத்தாண்டகம் என்ற யாப்பும் அமைந்துள்ளன. இறைவனை ஆண்டான் ஆகவும், தன்னை அடிமையாகவும் கருதி இவர் த பாடிய பாடல்களில் இவரது பழுத்த அனுபவம், கனிவு, தம் குறையை எண்ணி எண்ணி இரங்கும் தன்மை ஆகியவை வெளிப்படும். தன்னை ஆட்கொண்ட இறைவனின் பெருங்கருணையைப் போற்றிப் புகழ்ந்துள்ளார்.

(தமிழ்க்கவிக்கோவை HSC தமிழ்ப் பாடநூல் மலயாப்

பல்கலைக்கழக இந்திய ஆய்வியல் துறை வெளியீடு 1971)

# திருமந்திரம்

# 1 குரு லிங்க சங்கமம்.

**திருமந்திரம்**

திருமந்திரம் தோத்திரமும் சாத்திரமும் கலந்து தமிழில் தோன்றிய முதல்நூல். திருநெறிய தமிழைத் தோற்றுவித்த பெருமையும் அதற்குண்டு. என்னை நன்றாக இறைவன் படைத்தனன், தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே என்று தாம் தமிழ் மொழிக்குத் தெய்வத் தொண்டாற்றவே இறைவன் தன்னைப் படைத்ததாகத் திருமூலர் குறிப்பிடுகின்றார். மூலன் உரை செய்த மூவாயிரம் தமிழ் என்றே திருமந்திர நூல் பேசப் படுகின்றது. சேக்கிழாரும் திருமந்திரத்தைத் ‘தமிழ்மாலை’ என்றே கூறுகின்றார். தமிழ் இலக்கிய வரலாற்றில் சித்தர் நெறி என்னும் தனிநெறியைத் தோற்றுவித்த சிறப்பும் திருமந்திரத்திற்கு உண்டு. மனிதனின் உடல், உள்ளம், உயிர் என்னும் மூன்றும் மேம்பட - மாண்புடைய வழிகண்ட பெருந்தகை திருமூலர். தமிழர் கண்ட தனிப் பெருந் தத்துவமாகிய சைவ சித்தாந்தக் கோட்பாட்டிற்கு வித்திட்ட சால்பும் திருமந்திரத்திற்கு உண்டு. ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்று கூறி உலகளாவிய ஒருமைப் பாட்டிற்கும் வழிகண்ட பெருமானார் திருமூலர். இத்தகைய திருமந்திரத்தின் எழாம் தந்திரத்தையம் ஏனைய தந்திரங்களையும் மையமாகக் கொண்டு குருலிங்க சங்கமம் என்னும் பொருளை விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கம்.

**2. சொற்பொருள் விளக்கம்** -

2.1. - குரு என்றால் ஆசிரியன் என்பது பொருள். குரு என்பது சமஸ்திருதச் சொல். ஆசிரியன் என்பது தமிழ்ச் சொல். குரு என்னும் சொல்லில் உள்ள கு என்பது மலத்தையும் , ரு என்பது நீக்குபவர் என்பதையும் உணரத்தும். எனவே, குரு என்பவர் ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்களை நீக்குபவர் என்னும் பொருளுடைய ஒரு சொல். கு - ர்- உ என்று பிரித்து, கு என்பது சித்தியைக் கொடுப்பவர் என்றும் ர் என்பது பாவத்தைத் தகிக்கும் தீ என்றும் உ என்பது சிவன் என்றும் ஆகக் குரு என்பது இம்மூன்றும் நிறைந்தவர் எனப் பொருள்படும் என்பர் சிலர்.

ஆசிரியர் என்னும் தமிழ்ச் சொல் ஆசு- குற்றங்கள், இரியர் - ஓட்டுபவர், போக்குபவர் என்னும் பொருளைத் தரும். குரு, ஆசிரியர் என்னும் இரண்டு சொற்களில் குரு என்னும் சொல்லை ஆன்ம முன்னேற்றத்திற்கு வழி காட்டுகின்ற சமய உலகில் தீட்சை செய்து வழிகாட்டும் ஒளி விளக்காக இருப்பவரைக் குறிக்கத் திருமூலர் பயன்படுத்துகிறார். ஆசிரியர் என்பவர் உலகியல் அறிவை ஊட்டுபவரையே மிகுதியாகக் குறிக்கும் சொல் அல்லவா? எனவே , குரு என்பது ஒரு குறியீட்டுச் சொல்லாக - கலைச் சொல்லாக இங்கு பயன்படுத்தப் படுகிறது.

2.2. - லிங்கம் என்னும் சமஸ்கிருதச் சொல் குறி,அடையாளம் என்னும் பொருள் உடையது. காண முடியாத கடவுளைக் காண்பதற்குரிய ஓர் அடையாளமாகத் தமிழர்கள் லிங்கம் என்னும் உருவத்தைப் படைத்தனர். ‘காணாத அருவினுக்கும் உருவினுக்கும் காரணமாம், நீணாகம் அணிந்தார்கத நீள் குறியாம் சிவலிங்கம்’ என்று சேக்கிழார் சிவலிங்கம் குறியாக இருப்பதைச் சாக்கிய நாயனார் புராணத்தில் குறிப்பிடுகிறார். சிவபெருமான் எடுக்கும் திருமேனிகள் மூன்று. அருவம், உருவம், அருவுருவம். அருவம் என்பது வெட்டவெளி, கண்ணுக்குப் புலப்படாதது. உருவம் சோமாஸ்கந்தர் முதலிய திருவருவங்கள், கண்ணுக்குப் புலப்படுவன. இரண்டுக்கும் இடைப்பட்ட நிலையே , அருவருவத் திருமேனியே சிவலிங்கம். எனவேதான் இறைவனைக் குறிக்க - சிவபெருமானைச் சுட்ட, லிங்கம் என்னும் சொல்லைத் திருமூலர் கையாள்கிறார். மேலும் லிங்கம் என்னும் சொல் லிம் - கம் எனப் பிரிந்து லிம் என்பது உலக முடிவில் எல்லாச் சராசரங்களும் ஒடுங்குவதற்குரிய இடம் எனவும், கம் என்பது அவ்வாறு ஒடுங்கிய பொருள்கள் அனைத்தும் தோன்றி வெளிப் படுவதற்குரிய இடம் எனவும் பொருள் உணர்த்தும் இயல்புடையது.எனவே தோற்றம் ஒடுக்கம் உணர்த்தும் தோன்றாப் பொருளைக் குறிக்க லிங்கம் என்னும் சொல்லே பொருத்தம் எனக் கருதித் திருமூலர் பயன் படுத்துகிறார்.

2. 3 - சங்கமம் என்பதற்கு இயங்கும் போருள் என்பது அர்த்தம். தாவர சங்கமம் என்று சொத்துடைமைகளைப் பிரிக்கும்போது இயங்கா நிலையிலுள்ள வீடு, நிலம் போன்றவற்றைத் தாவரம் என்னும் சொல்லாலும், இயங்கும் நிலையிலுள்ள கார், பணம் முதலியவற்றைச் சங்கமம் என்னும் சொல்லாலும் குறிப்பர். திருமந்திரத்தில் சங்கமம் என்னும் சொல்லாட்சி அடியார்களைக் குறிக்கிறது. சங்கமம் என்னும் சொல்லும் சமஸ்கிருதச் சொல்தான். இருப்பினும், திருமூலர் அடியார் என்னும் சொல்லையே - தமிழ்ச் சொல்லையே அதிகம் கையாள்கிறார். காரணம்,அடியார் என்னும் சொல்லில் அவர் காணும் பொருளாழமே ஆகும். அடியார் என்னும் சொல்லுக்கு இரண்டு பொருள் உண்டு. இறைவனுக்கு என்றும் அடிமைப் பட்டவர்கள் என்பது ஒன்று. அதாவது நாமார்க்கும் குடியல்லோம், இறைவனாகிய கோமாற்கே ஆட்செய்வோம் என்னும் நிலை. இறைவனுடைய திருவடியைத் தங்கள் இதயத்தில் என்றும் தாங்கி இருப்பவர்கள் என்பது மற்றொரு பொருள். அதாவது இமைப் பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் என்னும் நிலை. இத்தகைய இருபொருள் உணர்த்தும் ஒரு சொல்லாக அடியார் இருப்பதால் அதனையே மிகுதியாகக் கையாள்கிறார் திருமூலர். இறைவனுடைய நடமாடும் கோயிலாக இருப்பவர்களே சங்கமம் எனப்படும் அடியார்கள் ஆவார்கள். அவர்களை மயேசுவரர் என்றும் திருமூலர் அழைப்பார்.

**<u>3.வரையறை -</u>**

3.1. குரு என்பவர்க்குத் திருமந்திரம் கூறும் வரையறையைப் பார்ப்போம். தாள் தந்து அளிக்கும் தலைவனே சற்குரு (2011) அதாவது இறைவனது திருவடியான சிவ உணர்வைச் சீடனுக்குத் தந்தருளும் தலைமைப் பேறுடையவனே குரு. தலைவன் என்னும் போது சீடனை விட அறிவாலும் ஆற்றலாலும் மேலோங்கி நிற்கும் இயல்பு தெரிகிறது. அளிக்கும் என்னும் போது குருவின் பெருங்கருணைத் திறன் விளங்கும். பிறவா நெறி

தந்த பேரருளாளன் மறவா அருள் தந்த மாதவன் (1972) என்று பிறிதோரிடத்து இதனை மூலர் வலியுறுத்துகிறார். தாள் தருதல் என்பது சிவபெருமான்திருவடியைக் காட்டும் தன்மை என்றும், தன் தாள் காட்டி ஆட்கொள்ளுதல் என்றும் கொள்ளலாம். ‘காட்டாதன எல்லாம் காட்டித் தாள் தாமரை காட்டி ‘என்று திருவாசகம் பேசுவதையும் இங்கு எண்ணிப் பார்க்கலாம்.

குரு என்பவர் உபதேசம் செய்கின்றவர். இதனை மந்திரம் ஓரெழுத்துரைத்த மாதவன் (516) , ஓரெழுத்து ஒரு பொருள் உணரக் கூறிய சீரெழுத்தாளரை (514) என்று இதனைக் கூறுவார் திருமூலர். மந்திரம்என்பதை உணருமாறு கூறுபவரே குரு. அறிதல் மட்டும் போதாது. உணர வேண்டும்.

குரு அறவாழி,அந்தணன் (1772) ஆக இருக்க வேண்டும். அறநெறி தவறாத பெருங் குணத்தாராகச் செந்தண்மை பூண்டொழுகும் சிறப்புடையவராகக் குரு திகழ்தல் வேண்டும். “குரு என்பவன் ஞானி’’. அதாவது அறிவோடு கூடிய அனுபவம். ஞான அனுபவமிக்கவராக இருத்தல் வேண்டும். குரு என்பவர் ஒரு வழிகாட்டி.

“வரும்வழி போம்வழி, மாயா வழியைக்

கருவழி கண்டவர் காணா வழியைப்

பெரும்வழி யாநந்தி பேசும் வழியைக்

குருவழி யேசென்று கூடலும் ஆமே ‘’ (2018)

என்னும் திருமந்திரம் குரு நமக்குக் காட்டும் வழிகளைப் பட்டியலிடுகிறது. மேலும் இறைவனை அடைய உதவும் வழிகளாகிய சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் சைவ சித்தாந்தம் உணர்த்தும் நெறிகளையும் காட்டுபவர் குரு.

“பத்தன் சரியை கிரியை பயில்வுற்றுச்

சுத்த அருளால் துரிசற்ற யோகத்தில்

உய்த்த நெறியுற்று உணர்கின்ற ஞானத்தால்

கடியப் பிறப்பறக் காட்டினன் நந்தியே’’

என்னும் திருமந்திரமே சான்று.

குரு தீட்சை செய்யும் முறையையும் திருமூலர் விளக்குகிறார்.

“உடல் பொருள் ஆவி உலகத்தால் கொண்டு

படர்வினை பற்றறப் பார்த்துக்கை வைத்து

நொடியின் அடிவைத்து நுண்ணுணர் வாக்கிக்

கடியப் பிறப்பறக் காட்டினன் நந்தியே. (1747)

குரு செய்யும் தீட்சைகள் ஸ்பரிச தீட்சை, நயன தீட்சை, மானத தீட்சை, வாசகதீட்சை, மந்திர தீட்சை, யோக தீட்சை, ஔத்திரி தீட்சை எனப் பலவகைப் படும். இப்பாடலில் இந்தத் தீட்சைகள பல இடம் பெற்றுள்ளன. "உடல், பொருள், ஆவி உலகத்தால் கொள்ளுதல்'' என்பது சீடன் ஞானம் பெறத் தடையாகவுள்ள பற்றுகளைத் தீட்சையின் போது குரு ஏற்றுக் கொள்ளுதலைக் குறிக்கும். 'அன்றே என்றன் ஆவியும் உடலும் உடைமை எல்லாமும் குன்றே அனையாய் என்னை ஆட்கொண்ட போதே கொண்டிலையோ 'என்னும் திருவாசக அடிகளையும் இங்கு ஒப்பு நோக்கலாம். இந்தத் தீட்சையால் சீடன் பெறும் பயன் என்ன என்பதைப்,

"பொட்டடித்து எங்கும் பிதற்றித் திரிவேனைப்

பொட்டடித்து உள்ளமர் மாசெலாம் வாங்கிப்பின்

தட்டொக்க மாறினன் தன்னையும் என்னையும்

வட்டம தொத்தது வாணிபம் வாய்த்ததே'' (1750)

என்னும் திருமந்திரம் விளக்குகிறது. முத்திநெறி அறியாது மூர்க்கரோடு விரும்பித் திரிகின்ற சீடனின் குற்றங்களை நீக்கித் தன்னொக்கச் செய்த தண்கருணையாளரே குரு. இராமகிருஷ்ணர் தம் சீடராகிய விவேகானந்தரிடம் தன் அருளாற்றல் முழுவதையும் தந்த நிகழ்ச்சி இங்கு நினைக்கத் தக்கது.

"குரு என்பவனே வேதாகமம் கூறும்

பர இன்பன் ஆகிச் சிவயோகம் பாவித்து

ஒரு சிந்தைஇன்றி உயர்பாசம் நீக்கி

வருதல் குசவன்பால் வைக்கலும் ஆமே'' (2019)

குரு என்பவர் சிவோகம் பாவித்துச் சீடனின் மலமறுத்துச் சிவத்துடன் சேர்ப்பவர் என்பதை, இப்பாடல் நமக்குக் காட்டுகிறது. இங்கு குரு காரிய குருவாகவும், நல்குரவன் - சிவன் காரண குருவாகவும் விளங்குவர்.

"குருவே சிவமெனக் கூறினன் நந்தி

குருவே சிவமென்பது குறித்து ஒரார்

குருவே சிவனுமாய்க் கோனுமாய் நிற்கும்

குருவே உரைஉணர் வற்றதோர் கோவே ''(1556)

என்னும் திருமந்திரப் பாடல் குருவே சிவம் என்னும் கோட்பாட்டினை நன்கு நினைவூட்டுகிறது. காரணம் என்ன என்பதை,

> “ஏறு நெறியே மலத்தை எரித்தலால்
>
> ஈறில் உரையால் இருளை அறுத்தலால்
>
> மாறில் பசுபாசம் வாட்டலால் வீடுக
>
> கூறு பரனே குருவாம் இயம்பிலே’’ (2028)

என்னும் திருமந்திரப் பாடல் பட்டியலிடுகிறது. ஆணவம்,கன்மம், மயையாகிய மும்மலம் எரித்தல், முடிவற்ற மந்திர முழக்கம், அறியாமையாகிய இருள் போக்கல், பாச நீக்கம், வீடு பேறு ஆகியன தருதலால் சிவமே குரு என்பது இதன் கருத்து. ‘பத்திப் பணித்து ‘ (1548) என்று தொடங்கும் திருமந்திரமும் இதனை வலியுறுத்தும்.

எனவே குருவே குறியாகவும் நெறியாகவும் விளங்குபவர் என உணர முடிகிறது. அவனருளாலே அவன்தாள் வணங்கும் இயல்பினை அறிய முடிகிறது. குருவே பிறவிக் கடலைக் கடக்க உதவும் பெருந்தோணி. நம்மை வீடுபேறு நிலைக்கு உயர்த்தும் ஒரு ஏணி என்பதையும் கருத்திற் கொள்ள வேண்டும்.

3.2. - லிங்க உருவில் சிவபெருமான் தோன்றிய வரலாற்றை அப்பர் பெருமான் தம் தேவாரத்தில்,

> “செங்க ணானும் பிரமனும் தம்முளே
>
> எங்கும் தேடித் திரிந்தவர் காண்கிலார்
>
> இங்குஉற் றேன்என்று இலிங்கத்தே தோன்றினான்
>
> பொங்கு செஞ்சடைப் புண்ணிய மூர்த்தியே’’

என்று பாடுகிறார். திருமாலும் பிரமனும் அடிமுடி தேடிய கதையும் , அதனால் சிவன் லிங்கமாகத் தோன்றிய நிலையும் திருமந்திரத்தில் அடிமுடி தேடல் (2ம் தந்திரம்) பகுதியில் பேசப் படுகின்றன. சிவனைக் குறிப்பதே சிவலிங்கத் திருவுருவம். ‘எரியலால் உருவம் இல்லை’, ஞானச் சுடர் விளக்காய் நின்றாய் நீயே’,’விண் நிறைந்து ஓர் வெவ்வழலின் உரு’,’ஆதியும் அந்தமுமில்லாத அரும் பெருஞ்சோதி’ முதலிய திருமுறைத் தொடர்கள் சிவனது வடிவமாகிய அக்கினியே, மேல் நோக்கி எழும் தீக்கொழுந்தே சிவலிங்க வடிவம் என்பதைச் செப்புகின்றன. சிவன் எனும் நாமம் தனக்கே உடைய செம்மேனி அம்மான் என நாவுக்கரசர் சிவன் என்னும் சொல் செம்மைத் தன்மையை, சிவப்பு நிறத்தின் பொருளை உணர்த்துவதாகக் கூறுகிறார். தீயின் நிறமும் சிவன் நிறந்தானே.

கோயிலிலுள்ள கருவறையின் மேலுள்ள விமானம் தூலலிங்கம். கருவறையிலுள்ள சிவலிங்கம் சூக்கும லிங்கம், பலிபீடம் பத்திரலிங்கம் என்று திருமந்திரம் கூறுகிறது. (1689)

சிவலிங்கத்தை அமைத்ததற்குரிய சாதனங்களாக முத்து, மாணிக்கம், பவளம், மரக்கொம்பு,கல், திருநீறு, மரகதம், சிவாகமம், சாதம், அரிசி, பூ, மணல், முதலியவற்றையும் (1690) திருமூலர் குறிப்பிடுகிறார். கட்டித் தயிர், நெய், பால், தூய்மையான பசுஞ்சாணம்,செம்பு, அக்கினி,பாதரசம், சலம், வெந்தசெங்கல்,அழகான வில்வம், பொன் ஆகியவற்றையும் லிங்கமாகக் கொள்ளுமாறு வேண்டுகிறார் திருமூலர்.(1691) பிரமன், திருமால், உருத்திரன், மகேசன், சதாசிவன், பரவிந்து, பரநாதம், சத்தி,சிவன் என ஒன்பது வடிவாகிப் பலன்களைக் கொடுப்பதே சிவலிங்கம் என்பது திருமூலர் கருத்து. (1734). சிவலிங்கத்தின் அடிப்பாகம் பிரமபாகம், நடுப்பாகம் விஷ்ணு பாகம், மேற்பாகம் ருத்ரபாகம். எனவே மும்மூர்த்தியின் வடிவமாகவும் சிவலிங்கம் விளங்குகிறது. ஓம் என்னும் மந்திரத்தின் வடிவமாகவும் சிவலிங்கத்தைக் கருதுவர்.

3.3. - சங்கமம் என்பது அடியார்களைக் குறிக்கும். இவர்கள் இயங்கும் இறை உருவங்களாக விளங்குபவர்கள். நடமாடுங் கோயில்கள் என்று திருமூலர் இவர்களை அழைப்பார். (1821) 'ஏறுடையாய் இறைவா எம்பிரான் என்று நீறு இடுவார் அடியார் நிகழ் தேவர்கள்' (1826) என்று அடியார்க்கு விளக்கம் தருகிறார் திருமூலர். இறைவன் பெயரைச் சொல்லித் திருநீறு இடும் பக்தர்களே அடியார். ஏன்? அவர்கள் பூசும் நீறு போல உள்ளும் புறமும் புனிதர்கள். அதாவது தூய்மையானவர்கள். இவர்களுக்கு என்றும் அழிவு என்பதே இல்லை. சித்தம் தெளிந்தவர்கள், தாழ்விலர், அருந்தவம் எப்போதும் செய்யும் இயல்பினர். (1830) தாங்கள் எடுத்த உடலிலேயே சிவனடி சேர்ந்து அருள் பெறம் சிறப்பாளர் (1832) அகண்ட அறிவினர் (1834) இயங்கும் உலகினில் ஈசன் அடியார் மயங்கா வழி செல்வர், வானுலகு ஆள்வர் (1836). அவன்பால் அணுகியே அன்பு செய்பவர்கள் (1843). அடியார் அருளால் அவனடி கூட, அடியான் இவன் என்று அடிமை கொண்டானே இறைவன். (2578)

"மந்திர மாவதும் மாமருந் தாவதும்

தந்திர மாவதும் தானங் களாவதும்

சுந்தர மாவதும் தூய்நெறி யாவதும்

எந்தை பிரான்தன் இணையடி தானே'' (1587)

என்று கூறி அவன் அடியினை உள்ளத்தால் தாங்கி உலவுபவர்களே உண்மை அடியார்கள்.

"என் தாயோடு என் அப்பன் ஏழேழ் பிறவியும்

அன்றே சிவனுக்கு எழுதிய ஆவணம் ' (1839)

என்று சிவனுக்கே என்றும் அடிமை செய்யும் இயல்பினரே அடியார்கள். சிவனை மட்டுமன்றிச் சிவனடியார்ககும் அடிமையாகும் இயல்பும் அடியார்க்கு உண்டு என்பதை.,

"அறியாப் பருவத்து அரனடி யாரைக்

குறியால் அறிந்து இன்பம் கொண்டது அடிமை'' (1842)

என்னும் திருமந்திரம் விளக்கும். திருவடி ஞானம் சிவமாக்குவிக்கும். அது சிவலோகம் சேர்க்கும், அது சிறைமலம் மீட்கும், முத்தி சித்திக்கு வழி வகுக்கும் (1572) என்னும் இலக்கணத்திற்கு இலக்கியமாக இலங்குபவர்களே ஈசன்அடியார்கள்.

**<u>4. வகை -</u>**

4.1. - குருவை இருவகைப் படுத்துகிறார் திருமூலர். சற்குரு, அசற்குரு என்பனவே இருவகை. உண்மையான நன்னெறியைக் காட்டும் குரு, அவ்வாறு காட்டாத போலிக்குரு என்று இருவகையினரை விளக்கலாம். முதலில் அசற்குரு என்போர் யார் எனத் திருமூலர் விளக்குகிறார். சிவ உணர்வு இல்லாதவர், உண்மைப் பொருளாராய்தல் இல்லாதவர், ஐயந்திரிபற வேதாகம நெறி கல்லாதவர், பணிவு இல்லாதவர், மற்றவரைப் பழிப்போர், ஆன்மபோதம் உடையவர், மந்திரம் தந்திரம் யோகம், ஞானம், பந்தம், வீடு அறிந்தாரைச் சிந்தித்து உண்மை ஞானம் பெற வழி காட்டாது, வயிற்றுப் பாட்டுக்காகக் குருவாக வாழ்வோர், அறிவில்லாத மூடர், காமம் முதலிய ஆறுவகைக் குற்றங்களுக்கு ஆட்பட்டவர்கள், பாவிகளுக்குப் பொய்யை உணர்த்துபவர் ஆகியவர்கள் அசற்குரு ஆவார்கள். இத்தகையவர்களை நம்பிச் செல்வது குருடன் குருடனுக்கு வழி காட்டிய நிலையில் கொண்டு போய் வீழ்த்தும் (2006-2010)

சற்குரு என்பவர் யார்? என்பதை,

"தாள் தந்து அளிக்கும் தலைவனே சற்குரு

தாள் தந்து தன்னை அறியத் தரவல்லோன்

தாள் தந்து தத்துவா தீதத்துச் சார்சீவன்

தாள் தந்து பாசம் தணிக்கும் அவன் சத்தே''(2011)

என்னும் பாடல் விளக்குகிறது. அதாவது,

"பாசத்தை நீக்கிப் பரனோடு தன்னையும்

நேசத்து நாடி மலமற நீக்குவோர்

ஆசற்ற சற்குரு ஆவார்''

என்பதே சற்குருவின் அடையாளம். இத்தகைய சற்குருவின் காட்சியும் உபதேசமும் திருவடி தீட்சையும் மும்மலம் போக்கும் ஆற்றலும், வீடுபேறு தரும் சிறப்புக் கொண்டவை. சற்குரு சத்து, அசத்து, சதசத்து ஆகிய முப்பொருள்களின் தன்மையைக் காட்டி மாயை நீங்கிச் சிவத்தைச் சேர அருளுபதேசம் செய்கின்றார்.. இத்தகையோர்களையே நாம் வழிகாட்டிகளாகக் கொள்ள வேண்டும்.

4.-2 - லிங்கத்தை அண்டலிங்கம்,பிண்டலிங்கம், சதாசிவலிங்கம்,ஆத்மலிங்கம், ஞானலிங்கம் என வகைப் படுத்துவார் திருமூலர்.

“இலிங்கமதாவது எண்டிசை எல்லாம்

இலிங்கமதாவது எண்ணெண் (64) கலையும்

இலிங்கமாக எடுத்தது உலகே ‘’ (1683)

என்றும், பூமியே சிவலிங்கத்தின் அடி என்றும் வானகமே முடி என்றும் (1605) அகில உலகம் அனைத்தையம் லிங்கமாகக் காண்பதே அண்டலிங்கம். மானிட ராக்கை வடிவு சிவலிங்கம். அதுவே சிதம்பரம், அதுவே சதாசிவம், அதுவே திருக்கூத்து (1696) என்று எண்ணுவதே பிண்டலிங்கம். உடம்பில் கால் முதல் அரைவரையில் பிரமபீடம், உடல் பகுதி சத்தி பீடம், தலை பாணம் என்ற வகையில் உடம்பு சிவலிங்கம் ஆகிறது. சிரசின் மேல் ஞானாகாயம் விளங்குவதால் அது சிதம்பரம் ஆகும். அருவும் உருவுமாகிய சதாசிவத்தை வணங்கி அறிவையும் ஆற்றலையம் பெற்ற போது மனிதன் சதாசிவம் ஆகக் கருதப் பெறுகிறான். அசைவு நிகழும் இடம் உடம்பு. எனவே அதுவே திருக் கூத்தாகிறது. இறைவன் இவ்வுடலைக் கோயில் கொண்டு எழுந்தருளிய காட்சியே பிண்டலிங்கம். அஞ்சு முகம், ஐம்மூன்று (15) கண்கள், பத்துக் கைகள், அவற்றில் பத்து வகைப் படைக் கருவிகள், இவையே சதாசிவ லிங்கத்தின் தோற்றம் (1706) ஐந்து முகமாவன ஈசானம், தத்புருடம், அகோரம், வாமதேவம், சத்தியோசாதம். ஈசானம் மேல் நோக்கியது. வித்தைகளைத் தருவது. தத்புருடம் என்பது கிழக்கு நோக்கியது. போகம் ஊட்டுவது. அகோரம் தெற்கு நோக்கிய, பாவங்களை அகற்றுவது. வாமதேவம் வடக்கு நோக்கியது. உலக இன்பங்களை அளிப்பது. சத்தியோசாதம் மேற்கு நோக்கியது, ஞானம் தருவது. சிவலிங்கத்தின் பீடம் ஓங்காரம். கண்டம் மகாரம் உள்வட்டம் உகாரம், பாணம் அகரம் விந்துநாதம். எனவே சிவலிங்கத் திருமேனி என்பது அகர உகர மகர விந்து நாதமாகிய பிரணவ வடிவமே. இதுவே சதாசிவ லிங்கம் (1722) ஆன்மாவே லிங்கம் எனக் காண்பதே ஆன்மலிங்கம். சத்தியம் சிவமுமாகக் காட்சி அளிக்கும் லிங்கமே ஆன்மலிங்கம். மராமரன் மன்னி மனத்துறைந்தானே (1730) என்றும், ஒன்றி என் உள்ளத்தின் உள் இருந்தானே (1732) என்றும், உள்ளமே ஆன்மாவே சிவலிங்கம் எனக் காட்டுகிறார் திருமூலர். உருவம், அருவம், அருவுருவம் ஆகிய மூன்று திருமேனிகளை உடைய இறைவன் குருவாய் வந்து கற்பக மரம்போல அருள் சுரக்கும் நிலையே ஞானலிங்கம்

ஆகும். (1733) ஞான வடிவமே ஞானலிங்கம், சிவமான ஞானம் தெளிய, சித்தியும் முத்தியும் சிவானந்தமும் கிடைக்கும். (1562)

4. 3 - குருவையும் லிங்கத்தையும் வகைப் படுத்திய திருமூலர் சங்கமமாகிய அடியார்களை வகைப் படுத்தாதது குறிப்பிடத தக்கது. அவர்களை மகேசுரர் என அழைக்கிறார். அவர்கள் அளவிலாத பெருமையர். அவர்களை வகைப் படுத்துவது முறையன்று எனக் கருதினர் போலும்.

**5. <u>வழிபாடு -</u>**

குரு லிங்க சங்கமம் ஆகிய மூன்றையம் வழிபடுவது எப்படி என்பது பற்றிச் சிவபூசை, குருபூசை, மகேசுவர பூசை ஆகிய மூன்று பகுதிகளும் விளக்குகின்றன.

"உள்ளம் பெருங்கோயில், ஊனுடம்பு ஆலயம்

வள்ளற் பிரானார்கது வாய்கோ புரவாசல்

தெளளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்

கள்ளப் புலன்ஐந்தும் காளா மணிவிளக்கே.'' (1792)

என்று சிவலிங்க வழிபாட்டினை விளக்குகிறார் திருமூலர். அகத்தே ஆண்டவனை வேண்டி வழிபடுவதே அவசியம் என்பதனை இப்பாடல் வலியுறுத்துகிறது. காலையும் மாலையும் சிவனுக்குப் படையல் - நிவேதனம் பாட்டே என்கிறார் திருமூலர். (1793)

"புண்ணியம் செய்வார்க்குப் பூவுண்டு நீருண்டு

அண்ணல் அதுகண்டு அருள்புரியா நிற்கும்.'' (1797)

இங்கு நீர் என்பது பக்தி உணர்வையும் மலர் என்பது நெஞ்சத்தையம் (சுவாதிட்டானம்) குறிக்கும் அடையாளங்கள். நினைவதும் வாய்மை மொழிவதும் சிவனைக் காணச் சிறந்த வழிகள் (1795) அன்பே சிவம் என்பது திருமந்திரத்தின் தாரக மந்திரம். அன்போடு உருகி அகங் குழைவார்க்கன்றி என்போன் மணியைக் காண ஒண்ணாது. எனவே சிவபூசைக்கு உயிர்நாடி அன்பே - அதாவது அகங் குழைதலே என்பதை வலியுறுத்துகிறார் திருமூலர்.

5-2 குருபூசை என்பது குருவின் திருவடியைப் பற்றி நின்று ஆதாரமாகிய 36 தத்துவங்களையும் கடந்து ஆன்மா விளங்கும் அழகைப் போற்றி நிற்பதே ஆகும். (1813)

"தெளிவு குருவின்திருமேனி காண்டல்

தெளிவு குருவின் திருநாமம் செப்பல்

தெளிவு குருவின்திரு வார்த்தை கேட்டல்

தெளிவு குருவுருச் சிந்தித்தல் தானே'' (183)

என்னும் திருமந்திரப் பாடல் குருபூசையைத் தெளிவு படுத்துகிறது. முதலில் குருவின் திருவுருவைக் கண்டு வழிபடுதல், பூசை செய்தல். இரண்டாவது குருவின் திருநாமம் செப்புதல். அப்பூதி அடிகளார், பெருமிழலைக் குறும்பர் வாழ்வியல் இதனை வலியுறுத்தும். குருவின் உபதேசத்தையும் அறிவுரைகளையும் கேட்பது அடுத்த நிலை. நான்காவது குருவின் திருவுருவத்தைத் தியானம் செய்தல். இப்பாடல் மனம் மொழி மெய்களால் குருபூசை செய்யும் மாண்பை நன்கு விளக்குகிறது.

5 - 3 சங்கம வழிபாடு என்பது மகேசுவர பூசை என்றே தலைப்பிட்டு அழைக்கப் படுகிறது. காரணம் என்ன? நடமாடும் நம்பர்களாகிய அடியார்ககு ஒன்று கொடுத்தால் அது படமாடும் பரமனுக்கு ஆகும். படமாடும் பரமனுக்குக் கொடுத்தால் அது நடமாடும் அடியார்ககு ஆகாது. (1821) மகேசுரர்களாகிய அடியார்களுக்குக் கொடுக்கும் பொருள் மும்மூர்த்திகளுக்கும் மூவேழ் சுற்றத்தார்கரும் கொடுத்ததாகும். (1823) சித்தம் தெளிந்த அடியார்களின் சேடம் பருகிடின் முத்தியாம்.

“அழிதகவு இல்லா அரனடி யானைத்

தொழுதகை ஞாலத்துத் தூங்கியிருள் நீங்கும் ‘’(1829)

கோடி அந்தணர்க்குக் கொடுப்பதை விட ஒரு பிடி அடியார்க்குக் கொடுப்பது மேல் ஆகும்.

“அகரம் ஆயிரம் அந்தணர்ககு ஈயில்என்?

சிகரம் ஆயிரம் செய்து முடிக்கில்என்?

பகரும் ஞானி பகலூண் பலத்துக்கு

நிகரிலை என்பது நிச்சயம் தானே’’(1824)

அதாவது அந்தணர்க்கு ஆயிரம் வீடு கட்டிக் கொடுப்பதை விட ஆயிரம்கோயில் கட்டுவதைவிட, அடியார் ஒருவர்க்கு ஒரு பகல் உணவ அளிப்பது சிறந்தது ஆகும். எனவே, அடியார்க்கு அமுது படைத்தலே மகேசவர பூசையாகும்.

அறுபத்து மூன்று அடியார்களில் ஞானசம்பந்தர், நாவுக்கரசர், சுந்தரர், அப்பூதி அடிகள் முதலானோர் குரு வழிபாடு செய்தும், கண்ணப்பர், சாக்கியர், சண்டேசுவரர் முதலானோர் லிங்க வழிபாடு செய்தும், காரைக்கால் அம்மையார், இளையான்குடிமாறர், மெய்ப்பொருள் நாயனார், முதலானோர் அடியார் வழிபாடு செய்தும் இறைவன் அருளைப் பெற்ற பெருமக்கள்.

ஆறுமுக நாவலர் தம் சைவ வினாவிடையில் “சிவபெருமான் , புறத்தே சிவலிங்கம் முதலிய திருமேனிகளும் குருவும் சங்கமமும் ஆதாரமாகக் கொண்டு நின்றும், ஆன்மாக்கள் செய்யம் வழிபாட்டைக் கொண்டருளுவார். ஆதலால் ஆன்மாக்கள் அவரை வழிபடும் இடங்கள் இவைகளே யாம்’’ என்று கூறுவதையும் நோக்க வேண்டும்.

**6. உறவு**

குரு லிங்க சங்கமம் என்பன ஒருமுக்கோணம் போல அமைவன. இவை ஒன்றோடொன்று உறவு உடையவை. குருவே சிவமெனக் கூறினன் நந்தி என்பார் திருமூலர். சிவத்தை தாங்கிய நிலையில் குருவே சங்கமம் ஆகிறார். குருவருளால் சிவனருளைப் பெறுகிறோம். சிவனருள் பெற்ற நிலையில் சங்கமம் ஆகும் நிலை நமக்குக் கிடைக்கிறது. குருவாய் வருவாய் அருள்வாய் குகனே என்பார் அருணகிரியார். இறைவனே குருவாக வந்து பக்குவமடைந்த ஆன்மாக்களுக்கு ஞானத்தை வாரி வழங்குகிறான். வீட்டின்பத்தைத் தருகிறான். வீட்டின்பம் பெற்ற உயிர்கள் அரனடியார்கள் தாமே. அவனருளாலே அவன்தாள் வணங்கும் அற்புதம் இது. எனவேதான் மூர்த்தி - தலம் - தீர்த்தம் முறையாய்த் தொடங்கினர்க்கு ஓர் வார்ததை சொலச் சற்குருவும் வாய்க்கும் என்கிறார் தாயமானவர். மாணிக்கவாசகரின் வாழ்க்கையும் வாக்காகிய திருவாசகமும் குருலிங்க சங்கமத் தொடர்பினைக் காட்டும் . குருவருளால் முத்தி பெற்ற நிலையிலும் திருவருள் பெற்ற நிலையிலும் அடியார் தொடர்பு இருக்க வேண்டும் என்பதைச் சிவஞான போதத்தின் பன்னிரண்டாம் சூத்திரம் வலியுறுத்துகிறது.

“உடையாள் உன்றன் நடுவிருக்கும்
உடையான் நடுவுள் நீயிருத்தி
அடியேன் நடுவுள் இருவீரும்
இருப்ப தானால் அடியேன்உன்
அடியார் நடுவுள் இருக்கும்
அருளைப் புரியாய் பொன்னம்பலத்தெம்
முடியா முதலே என்கருத்து
முடியும் வண்ணம் முன்னின்றே’’

என்று பொன்னம்பலத்தானிடம் மணிவாசகர் வேண்டி நிற்பதையும் இங்கு நினைத்துப் பார்க்க வேண்டும். இன்னொரு வகையில் சொல்லப் போனால் குருவருள் என்பதுநெறி,திருவருள் என்பது குறி. நிலைத்து நிற்க உதவும் நெறியே சங்கமம்

திருவாசகத்தின் முதல் மூன்று தொடர்களும் குருலிங்க சங்கமத்தின் உறவை நிலைநாட்டும் வகையில் வந்துள்ளதைப் பார்க்கலாம்.

“நமசிவாய வாழ்க ,நாதன்தாள் வாழ்க,
இமைப்பொழுதும் என் நெஞ்சில்
நீங்காதான் தாள் வாழ்க’’

எனவரும் மூன்று தொடர்களையும் நுணுகி நோக்கினால் இவ்வுண்மை புலனாகும். நமசிவாய என்பது குருவழியாகப பெறும் உபதேச மந்திரம். வேதம் நான்கினும் மெய்ப் பொருளாகிய நாதன நாமம் .இது காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி ஒதுவார்க்கு நன்னெறி ( வீட்டின்பம்) நல்குவது . நாதன்தாள் என்பது இறைவன் திருவடி. எனவே இது லிங்கத்தைக் குறிக்கும். பிறவிப் பெருங்கடல் நீந்தி நாம் சேர வேண்டிய இலக்கு இறைவனடி தானே. இறைவனடியாகிய பேரின்பம் மாசில் வீணையும் மாலை மதியமும் வீசு தென்றலும், வீங்கிள வேனிலும், மூசு வண்டறை பொய்கையும் போன்றதல்லவா? இப்பேரின்பமாகிய இறைவனடியை இதயத்தில் என்றும் நிலை நிறுத்திய பெருமக்கள் தாமே அடியார்கள் . இமைப் பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க என்னும் போது சங்கமமாகிய அடியார்களைக் குறிப்பதாகிறது. எனவே இம்மூன்று தொடர்களும் குறி, நெறி, தறி ஆகியவற்றைச் சுட்டுகின்றன.

இவ்வாறே திருமந்திரமாகிய நூ:லும் குருலிங்க சங்கமமாகக் காட்சி அளிப்பதை ஒரு பாடல் காட்டுகிறது.

“திருமந்திரமே சிவகதிக்கு வித்தாம்

திருமந்திரமே சிவமானம் - அருமந்த

புந்திக்குள்ளே நினைந்து போற்றுமடியார்தமக்குச்

சந்திக்கும் தற்பரமே தான்’’

என்னும் தனிப்பாடலைக் காண்க. சிவகதிக்கு வித்து என்னும் பெயரும், தொடரும் மந்திரம் என்னும் பெயரும் திருமந்திரம் குருவாக விளங்கும் நிலையை உணர்ததுகின்றன. திருமூலரே நமக்குக் குரு, அவர் திருவார்த்தையே திருமந்திரம். திருமந்திரமே சிவமாம் என்பது லிங்கமாகிய இறைவனைக் குறிக்கிறது. என்னை நன்றாக இறைவன் படைத்தனன், தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே என்பதால் திருமந்திரம் என்பது சிவனை, சிவாகமத்தைத் தமிழ் வழி கண்ட வடிவம் தானே. அதுவே ஞானலிங்கம். திருமந்திரத்தை நெஞ்சினுள் நினைந்து போற்றும் அடியார் தமக்கு என்னும் தொடர் சங்கமம் ஆகும். திருமந்திரமே குருவாகவம் லிங்கமாகவம் சங்கமமாகவம் திகழ்ந்து நமக்கு நன்னெறி காட்டுகின்றது எனலாம். எனவே, “திருமந்திரமாலை எனம் தெப்பத்தைப் பற்றிக் கருவேலையைக் கடப்போம் காண்’’ - சித்தாந்த தெரிசனம்.

(திருமந்திர மாநாட்டு மலர் கோலாலம்பூர்)

Thinnappan,SP. Guru, Lingam, Sangamam ( Teacher, God,Saints)
In Proceedings of the First Malaysian Thirumanthiram Conference

Malaysia Hindu Sangam, Kuala Lumpur,Malaysia. (2000) pp 79-87

(Tamil)

# 1. திருமந்திரம்
# துறவு

''துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்து
இறந்தாரை எண்ணிக் கொண்டற்று''

என்று திருவள்ளுவர் துறவிகளின் சிறப்பைப் பாராட்டுகிறார். உலகத்தில் இறந்தவர்களை எண்ணிக் கணக்கிட முடியுமா? முடியாதன்றோ! அதுபோலத் துறவிகளின் அளவில்லாத ஆற்றலைப் பேசமுடியாது என்று அணுவைத் துளைத்து ஏழ்கடலைக் குறுகத் தறித்த குறளில் அடக்கிய மேதை கூறுகிறார். காரணம் என்ன? திருமூலர் தம் திருமந்திரத்தின் ஆறாம் தந்திரத்தில் நான்காவது பகுதியாக வரும் 'துறவு'ப் பகுதியில் பத்து செய்யுள்களால் விடைதருகின்றார்.

துறவு என்பது என்ன? பற்றுகளிலிருந்து விடுபடுதல் என்று பனுவங்கள் பகரும். ஆனால் திருமூலரோ அன்பினால் இறைவனைப் பற்றி, இயல்பான முறையில் பாசங்களிலிருந்து - பற்றுகளிலிருந்து நீங்குதல் தான் துறவு என்கிறார். அதாவது பாசநீக்கம் ஒரு நெறி. குறி இறைவனை அடைவது தான். இந்தக் குறியை அடையவும் பாசநீக்கமாகிய நெறியில் செல்லவும் அவன் அருள்தான் துணை நிற்கும். அவனருளே கண்ணாகக் கொண்டு காணின் அல்லாது அவனைக் காணமுடியாது. பற்று விடுவதற்கு நாம் ஒருவனை முன்மாதிரியாகக் கொண்டு அவன் வழிகாட்டிட நாம் செல்ல வேண்டும். அவனோ பற்றுள்ளவனாக இருந்தால் பயனில்லை. அவனும் பற்றற்ற துறவியாக இருக்கவேண்டும் இல்லாவிடில் குருடன் குருடனுக்கு வழிகாட்டியாக அமையும் குருட்டாட்டமாகத் துறவு அமையும்

. எனவே பற்றற்றானாகிய பரம்பொருளைப் பற்றுகளினின்று நீங்கிப் பிறவாமையாகிய பேரின்பப்பேற்றை முத்தியைப் பெறவேண்டும் . எனவே இறைவன் துறவு நிலையில் நிற்பதையும் இதற்கு மாறாக ஆன்மாக்கள்

இருப்பதையும் கூறித் துறவு நிலை மேற்கொண்டு ஆன்மாக்கள் பேரின்பத்தை அடைவது எப்படி என்பதையும் திருமூலர் இப்பகுதியில் விளக்குகிறார்.

**இறைஇயல்பு (துறவன்)**

பிறவான் இறவான் பெம்மான் முருகன் என்னும் அருணகிரியார் கூற்றுப்படி இறைவன் பிறவா யாக்கைப் பெரியோன் ஆவான். "துறக்கும் தவம் கொண்ட சோதிப்பிரான்" இயல்பாகவே இன்பதுன்பங்களினின்று நீங்கி ஆதியும் அந்தமுமில்லாத ஒளிப்பிழம்பாக இருப்பவன். அமரர் (தேவர்களின்) பிரான் (தலைவன்)(1614)சுடரொளி (1815) அறவாழி. பிறப்பிலி, உறவு, பகை, யாரும் இல்லாதவன், சுடுகாட்டைத் தங்குமிடமாகக் கொண்டவன், பிச்சை எடுத்து உண்பவன் துறவன்(1616)" கோயில் சுடுகாடு கொல்புலித்தோல் நல்லாடை, தாயுமிலி தந்தையுமிலி தான் தனியன் காணேடி" "ஏதவன் பேர் யார் உற்றார் யாரயலார்" என்னும் திருவாசக அடிகளை ஒப்புநோக்குக. ஆடல்வல்லான். விடையூர்தி உடையவன். அண்ணல்(1818) வேண்டுதல் வேண்டாமை இல்லாதவன். கூற்றுவன் நாள் துறந்தார்க்கு (மார்க்கண்டேயர் போன்றோர்க்கு) நண்பன், ஆசையற்றவன் . துறந்தார்க்கு வழிமுதல்(வழிகாட்டி). ஆதிப்பிரான். இவன் என்று சுட்டியறியும் எளிமை உடையவன் அல்ல. (1622) . இவ்வாறு துறவிகளுக்கு வழிகாட்டும் ஒளிவிளக்காக விளங்கும் இறைவனைக் காட்டுகிறார் திருமூலர்.

**ஆன்மா இயல்பு**

ஆன்மாவோ பிறந்தும் இறந்தும் உழலும் பேதைமை கொண்டது. அறியாமை வயப்பட்டது. அதனால் தக்கன எவை, தகாதன எவை என்று அறியும் இயல்பற்றது. பாசங்களுக்கு ஆட்பட்டது. பந்தங்களால் பிணைக்கப்பட்டது. ஐம்பொறிகளின் வழிநின்று காமம், வெகுளி , மயக்கம் ஆகியவற்றால் அல்லல் உறுவது. வினைவழி செல்வது. ஆணவம், கன்மம், மாயை ஆகியவற்றால் கட்டுண்டிருந்தாலும் சிவனருள் இருக்குமானால் பேரின்பம் பெறும் தகுதியும் கொண்டது.

## துறவன் துணையாய் நிற்றல்

நினைப்பவர் மனம் கோயிலாக கொண்டவன் இறைவன். எனவே அவனை மறவாத நெஞ்சினராய் நாடோறும் ஏத்தித் துதிப்பார்களாகிய துறவிகளுக்கு இறைவன் தன் இருப்பிடத்தைக் காட்டுவான். அவனைக் காண அவன் அருள் வேண்டும். இத்தகைய அருள்சேர்க்கையைச் சத்திநிபாதம் என்பர் சான்றோர். அப்போது சுடரொளியாகத் துறவிகளுக்குத் தோன்றிக் காட்சி அளிப்பான். "விறகில் தீயினன் பாலிற்படுநெய் போல் மறைய நின்றுளன் மாமணிச் சோதியான், உறவுகோல் நட்டு உணர்வுக் கயிற்றினால் முறுக வாங்கிக் கடைய முன் நிற்குமே" என்னும் அப்பர் வாக்கும், ஞானசம்பந்தப் பெருமான் தம் திருமண நாளன்று சோதியிற் கலந்த வரலாறும் இதற்குச் சான்றாகும். துறந்தவர் தம்மைப் பிறவி அறுத்திடும் பித்தன் இறைவன். "பிறவிப்பெருங்கடல் நீந்துவர் நீத்தார் இறைவனடி சேராதார்" என்பது குறளல்லவா? எனவே பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னும் செம்பொருள் காண்பது தான் அறிவாகும். இப்பேதைமையிலிருந்து ஆன்மாக்கள் நீங்குவதற்காகவே இறைவன் அவை கடைபிடித்து ஒழுக வேண்டிய வழி முறைகளையும் (நெறிகளையும்) படைத்துள்ளான். கூடவே ஒதுக்கித் தள்ளவேண்டிய நெருஞ்சில் முள் போன்றவற்றையும் படைத்துள்ளான். வழி தவறி நடந்தால் நெருஞ்சில் முள் குத்தும். இறைவன் வகுத்த வழியில் சென்றால் நெருஞ்சி முள் துன்பம் இராது. எனவே இறைவன் வகுத்த வழியில் செல்லுதலே ஆன்மாக்கள் உய்யும் நெறியாகும். (1615) "பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க நெறி நின்றார் நீடுவாழ்வார்." என்று திருவள்ளுவரும் இதனை வலியுறுத்துகிறார். ஐம்பொறிகளை அடக்கிய -வென்ற துறவியாகிய இறைவன் வகுத்த வழியில் நின்றால் பிறவாப் பெருநெறி அடையலாம் என்பது தானே இதன் பொருள். அதனால் அறத்தால் வரும் நன்மையையும் அறனல்லாத மறத்தால் வரும் கேட்டையும் உணர்ந்து ஆன்மா ஐம்பொறிகளால் வரும் ஆசைக்கு ஆட்படாது இறைவன் திருவடி கூடும் தவம் மேற்கொள்ளவேண்டும். (1618) மேலும் ஆன்மா காம வயப்படாதிருக்க வேண்டும் . இதனை

உழவன் உழவுழ வானம் வழங்க
உழவன் உழவினிற் பூத்த குவளை
உழவன் உழத்தியர் கண் ஒக்கும் என்றிட்டு
உழவன் அதனை உழவொழிந்தானே

என்னும் செய்யுள் வழி ஓர் உருவகத்தால் திருமூலர் விளக்குகிறார். உழவன் நெல் விளைவிக்க நிலத்தை நன்கு உழுகின்றான். வானம் மழை வழங்குகிறது அவன்வயலில் குவளைப்பூக்கள் மலர்கின்றன. இவற்றைப் பார்த்து இக்குவளை மலர்கள் தன் மனைவியின் கண்களை ஒத்துள்ளன எனக்கருதி அந்நினைப்பின் வாயிலாகக் காமநோய் மேற்கொண்டு வியந்து நிற்க உழவுத்தொழில் நின்று போயிற்று. பேரின்ப பெறுவதற்குச் செய்யப்படும் முயற்சியே -தவமே உழவு என உருவகம் பெற்றுள்ளது. இதற்கு இறைவனின் அருள் மழையாய் இருந்து உதவும். நெல் விளைவித்தலே பேரின்பம் பெறுதல் . உழவன் மலரைப் பற்றி மனைவி கண்ணொடு ஒப்பிட்டு நோக்கி உவந்ததே தவமுயற்சிக்குத் தடையாய் உள்ள பெண் இன்பம் . மேனகை வயப்பட்டவிசுவாமித்திரர் தவமுயற்சி இதற்குச் சான்றாகும். "மெய்ம்மையாம் உழவைச் செய்து விருப்பெனும் வித்தை விதைத்துப் பொய்மையாம் களையை வாங்கிப் பொறை எனும் நீரைப் (பாய்ச்சிச்) செம்மையுள் நிற்பராகில் சிவகதி விளையுமன்றே" என்று திருநாவுக்கரசர் கூறும் நெறி இதற்கு மாறானது. இதனையும் இங்கு ஒப்பு நோக்கலாம்.

அறியாமையாகிய மயக்கம் அற்றார்க்கு-அஞ்ஞானம் நீங்கியவர்க்கு இறைவன் தன் நெற்றிக் கண்ணால் ஞான ஒளியைக் காட்டுவான். இச்சைகளைத் தரும் மண்ணுலக ஆசையைத் துறந்தவர்க்கு அவன் திருவடிகாட்டுவான்(1620)

நாகம் ஒன்று படம் ஐந்து நாலது
போகமும் உட்புற்றில் பொருந்தி நிறைந்தது
ஆகம் இரண்டும் படம் விரிந்து ஆட்டு ஒழிந்து
ஏகப்படம் செய்து உடம்பு இடம் ஆமே(1621)

என்னும் செய்யுளில் திருமூலர் நாகப்படம் ஒடுங்க நாதன் அருள் துலங்கும் எனக்காட்டுகிறார். இங்கு நாகம் - பாம்பு உயிரைக் குறித்தது என்றும் குண்டலினி சக்தியை குறித்தது என்றும் கூறுவர் . படம் ஐந்து என்பது மெய், வாய், கண், மூக்கு, காது ஆகிய ஐம்பொறிகளைக் குறிக்கும் நாலது போகம்-மனம், சித்தி, புத்தி, அகங்காரம் என்னும் நான்கு உட்கருவிகளை

உணர்த்தும் . உட்புற்றில் என்பது உள்ளுக்குள். ஆகம் என்பது உடம்பு- ஆக இரண்டு என்பது நுண்உடல், பரு உடல் ஆகிய இரண்டினை உணர்த்தும். இந்த இரண்டு உடலும் படம் விரித்து ஆட்டொழிந்து என்பது இவை தம் இச்சைப்படி தலைவிரித்து ஆடுவதை விட்டு நீங்குதலாகும். ஏகப்படம் எடுத்து என்பது ஒருமுகமாக ஒன்றித் தவநிலையில் இருத்தலைக் குறிக்கும். இந்த நிலையில் உடம்பை இடமாகக் கொண்டு வாழ்வதே துறவு ஆகும். உயிர் வெளிநாட்டத்தை விட்டொழிந்து அகநாட்டம் கொள்வதே துறவு எனப்படும். குண்டலினி சத்தி ஆற்றல் ஒழிந்து சிற்சத்தியோடு பொருந்தி ஊர்த்துவ முகமான போது சிதாகாயக் கூறு விளங்குவதில் இரு உடல் போய் ஓருடலாய் அமையும் நிலை ஏற்படும் என்பார் வரதராசனார்.

சுட்டி உணரமுடியாத சிவபெருமான் அவனைப் பணியும் துறவிகளின் மனப்பக்குவத்திற்கேற்ப அந்த அந்தச் சீவன்களோடு ஒன்றி இருப்பான். அவன் ஆன்மாக்களிடம் வந்து அருள்புரியும் வகையை நம்மால் அறிந்து கொள்ளமுடியாது இலயம், போகம், அதிகாரம் என்ற முத்திறத்தாலும் வேண்டுவார் வேண்டும் வண்ணம் இறைவன் ஆட்கொள்வான் ஆன்மாக்களின் பக்குவ நிலை அறிந்து ஆட்கொள்ளும் விதத்தை நாம் அறியமுடியாது(1622)

பத்தாவது செய்யுளில் துறவின் இறுதி நிலையைத் திருமூலர் கூறுகிறார். இந்த உடலாகிய வீட்டுக்கு ஒன்பது வாயில்களை மூக்குத்துளை இரண்டு, செவித்துளை இரண்டு, கண்இரண்டு, வாய் ஒன்று, மலவாய், கருவாய் ஆக ஒன்பது வாயில்களை இறைவன் வைத்துள்ளான். இவை வழி திறந்தன. ஆம்பல் கொடிபோல விளங்கும் மூலாதாரத்தின் குண்டலினி சக்தி இட வல மூக்கு வழியாக மாறிமாறி இயங்கிப் பின் பிராணயாமப் பயிற்சியால் நடுநாடி வழியாகச் சுழுமுனை மேலேறிச் செல்ல, தலைஉச்சியில் உடலாகிய கப்பலைச் செலுத்தும் மீகாமனாக விளங்கும் பரம்பொருள் அங்கே சிதாகாசததில் செந்தாமரை மலர்வது போல வெளிப்படும். குண்டலினி சத்தி உச்சித்தலையை அடையும்போது உலக இன்பங்கள் வேம்பு போலக் கசக்கும். (1623 கரும்பு கசப்பதாகவும் வேம்பு இனிப்பதாகவும் இந்நிலையில் ஞானிகள் உணர்வர். பட்டினத்தார் வாழ்வு இதற்கோர் சான்றாகும்.

இவ்வாறு துறவு பத்துச் செய்யுட்களால் திருமூலரால் உணர்த்தப்பெறுகிறது. பத்து என்பது பற்று என்பதன் பேச்சுவழக்கு என்பதைப் "பத்து உடையீர் ஈசன் பழ அடியீர்" என்பது பெயராகவும் வினையாகவும் அமைந்த ஒருசொல். பற்று (பாசம்) நீக்குதற்கு இறைவனைப் பற்றுக என்னும் உட்கருத்தை வலியுறுத்துவது போல இப்பகுதியில் பத்துச் செய்யுள்கள் உள்ளன. பற்று விடுவதற்கு இறைவனைப் பற்றி நிற்பதும் "பற்றிநின்று பரமன் அருள் பெறுவதும் தாம் துறவு என விளக்குகிறார் திருமூலர் எனலாம். இறை பக்தியே இனிய துறவாகும்.

துணை நின்ற நூல்கள்

1. திருமூலர் திருமந்திரம்-மூலமும் விளக்க உரையும் ஞா-மாணிக்கவாசகன்
2. திருமந்திர விரிவுரை தொகுதி 2 -ஜி. வரதராஜன்

திருமந்திர ஆய்வடங்கல் புதுகோட்டை திலகவதியார் ஆதீன வெளியீடு

# 2. திருமந்திரம்

## ஞாதுரு ஞான ஞேயம்

திருமந்திரம் தோத்திரமும், சாததிரமும் கலந்து தமிழில் தோன்றிய முதல் நூல், விஞ்ஞானமும், மெய்ஞ்ஞானமும் இணைந்து விளங்கும் நூல். இந்திய நாட்டின் தெற்கையும், வடக்கையும் இணைக்கும் நூல் . உடல் , உயிர், உள்ளம் என்னும் மூன்றின் நலம் மேம்பட வழிவகுக்கும் நூல் “என்னை நன்றாக இறைவன் படைத்தனன், தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே ” என்று கூறிப் படைப்பின் இரகசியத்தை உணர்ந்த பரம ஞானியான திருமூலரால் இயற்றப்பட்ட நூல். இந்நூலின் ஆறாம் தந்திரத்தில் இடம் பெற்ற -மூன்றாவது பகுதியாக இடம் பெற்ற ஞாதுரு, ஞான ஞேயம் என்பது பற்றி விளக்குவதே இக்கட்டுரை நோக்கமாகும்.

திருமந்திரத்துக்கும் மூன்றுக்கும் தொடர்பு மிகுதி. ஆன்மாவுக்குரிய நிலைகளை மூவகையாகவும், கேவலாதி நிலைகளை மும்மூன்றாகவும், ஆன்மாக்களையே மூவகையாகவும் மலங்களை முன்றாகவும், மாயையே மூன்றாகவும் குணத்தை முன்றாகவும், பதத்தை மூன்றாகவும், பதிபசுபாசம் எனப்பொருளை மூன்றாகவும் , குற்றத்தை முக்குற்றமாகவும், புரம் மூன்றாகவும், துரிய நிலையை மூன்றாகவும், முத்தியை மூன்றாகவும், சொரூப நிலையை மூன்றாகவும், கரணங்களை மூன்றாகவும், பகுத்துக்காணும் பண்பினைத் திருமந்திரத்தில் காணலாம் . இதற்கேற்ப ஞாதுரு ஞான ஞேயம் என்னும் இத்தலைப்புத் தொடரும் மூன்று பொருள்களைப்பற்றிப் பேசுகிறது. ஆறாம் தந்திரத்தின் மூன்றாம் பகுதியாகவும் அமைந்துள்ளது. இப்பகுதியில் 9 செய்யுகள் (1603-13) உள்ளன.

ஞாதுரு என்பது காண்பானையும், ஞானம் என்பது காணும் அறிவையும், ஞேயம் என்பது காணப்படும் பொருளையும் பொதுவாகக் குறிக்கும். இங்குத் தத்துவ நோக்கில் காண்பவன் ஆன்மாகவும், காண்பது சிவ ஞானமாகவும் காணப்படும் பொருள் சிவமாகவும் கருதப்படும். ஆன்மா சிவஞானத்தால் சிவனைக் காணுகின்ற நிலையை இப்பகுதி உணர்த்துகிறது. இதற்குச்

சிவகுரு தரிசனத்தால் - அதாவது உள்ளத்தில் உறையும் சிவனைக் குருவாகக் காண்பதால் சிரசின் மேல் திருவடிப் பேறு பெற்ற நிலையில் ஆன்மா பக்குவம் பெறவேண்டும் என்பதனை இப்பகுதிக்கு முன்னேயுள்ள சிவகுருதரிசனம், திருவடிப்பேறு என்னும் பகுதிகள் உணர்த்தும்.

ஆன்மா சிவானந்தமாகிய சிவனுடன் ஒன்றி நிற்கும்போது அதனை அநாதியே பற்றியுள்ள ஆணவமலம் அதனைப் பற்றியுள்ள அறிவை மறைக்காது. அதாவது ஆணவ மலம் அந்நிலையில் அதாவது முத்தி நிலையில் ஆற்றல் ஒடுங்கி நிற்கும். அப்போது பேரின்பமாகிய அமுத நிலையைப் பெறலாம். சைவ சித்தாந்தம் கூறும் முத்திநிலையை முதற் செய்யுள் சாற்றுகிறது. இறைவன்-சிவன் ஆனந்தமாகவும் அமுதாகவும் இருப்பவன். "அத்தன் , ஆனந்தன் , அமுதன், என்று அள்ளூறித் தித்திக்கப் பேசுவாய் " என்பது திருவெம்பாவைத் தொடர். அவன் ஆன்மாவுக்கு முத்தி நிலையில் அளிக்கும் ஆனந்தம் பேரானந்தம் என்றும் பெயர் பெறும். ஏனெனில் அது , என்றும் நிலைத்து இருப்பது . அதனைத் திருமூலர் 'நீங்காச் சிவானந்தம் எனக் குறிப்பிடுகிறார். அமுதம் என்பது சாவாமைக்கு காரணமாக இருப்பது அதாவது பிறவாமையைத் தருவது. இதனைத் தானே காரைக்கால் அம்மையார் இறைவனிடம் வேண்டுகின்றார். இத்தகைய முத்தி நிலையில் ஆன்மா இறைவனை விட்டு நீங்காத நிலை பெறுவதால் நீங்காச் சிவனாந்தம் எனத் திருமூலர் கூறுகிறார். சாயுக்சிய முத்தி எனச் சித்தாந்த சாத்திரம் கூறும் நிலையை முதற் செய்யுள் கூறுகிறது.

"நீங்காச் சிவனாந்த ஞேயத்தே நின்றிடப்
பாங்கான பாசம் படரா. படரினும்
ஆங்காரம் நீங்கி அதனிலை நிற்க (2)
நீங்கா அமுத நிலைபெற லாமே"(1605)

இது இப்பகுதிக்குப் பாயிரம் போல முன்னுரையாக அமைகின்றது. இறைவனுடன் இரண்டறக் கலக்கும் ஆன்மா பெறும் பேரின்ப நிலையை - பிறாவத நிலை எய்தும் தன்மையைத் திருமூலர் முதலில் விளக்குகின்றார். அந்நிலையிலும் "ஆணவமலம் ஆங்காரம் நீங்கி அதனிலை நிற்கவே"

என்பதால் பதிபசுபாசம் அநாதி என்ற கூற்றையும் மெய்ப்பிக்கின்றார். இதனைத்தான்

முத்திதனில் மூன்றும் முதலும் மொழியக் கேள்
சுத்த அனுபோகத்தைத் துய்த்தல் அணு- மெத்தவே
இன்பம் கொடுத்தல் இறை. இத்தை விளைவித்தல்(மலம்
அன்புடன் கண்டுகொள் அப்பா

என்று உண்மை விளக்கம் உரைக்கிறது.

ஞேயம் என்பது நேயம், அதாவது நேசம் -அன்பு "நேயமே நெய்யும் பாலா" என்பது அப்பர் வாக்கு அன்புதானே சிவம். "அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார். அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார், அன்பே சிவமாவது ஆரும் அறிந்தபின் , அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே"(270) எனவே ஞேயம் என்பது சிவத்தைக் குறிக்கிறது. எனவே ஆன்மா தான் அறிவதற்குரிய பொருள் சிவமே என அறிந்து அதன்வழி நின்றால் ஞானமாகிய ஈசனிடத்து வைக்கும் பேரன்பில் திளைத்து நிற்கும் . சிவனடியே சிந்திக்கும் சிவஞானம் பெற முடியும் " ஞானம் என்பது ஈசன்பால் பேரன்பே என்றனர் ஞான முண்டார்" என்பது சேக்கிழார் வாக்கு வீடு பேறு என்பது என்ன? பிறவியிலிருந்து விடுதலை பெற்று இறைவனுடன் இணைவதே வீடு எனப்படும். "ஞேயத்தின் ஞாதுரு ஞேயத்தில் வீடாகும்(1606) " என்கிறார் திருமூலர் வீடுபேறு பெறும் நிலையில் தாயாகிச் சக்தி உதவும் நிலை- உணர்த்தும் நிலையையும் திருமூலர் கூறுகிறார். ஞேயத்தின் ஞேயம்- அன்பின் அன்பு எனச் சக்தியைச் சுட்டுகிறார். தாயின் உதவியால் தாதையைக் கூடுகின்ற நிலை இதுவே ஆகும்.

"வீடுபேறு என்னும் முத்தி நிலையைப்பெறுவது எப்படி?" யான் எனது என்னும் செருக்கறுப்பான் வானோர்க்கு உயர்ந்த உலகம் புகும்' என்று விடை கூறுகிறார் வள்ளுவர். இந்தச் செருக்கை அறுப்பதற்குரிய வழியாகப் பற்றுக பற்றற்றான் தாளை " என்றும் அவர் கூறுகிறார். பற்றற்றான் தாளைப் பற்றுவது எப்படி? திருமூலர் விடை தருகிறார். தான் வேறு , சிவன்வேறு என்று இரண்டு பொருள்களாக எண்ணுகின்ற எண்ணத்தை மாற்றிக் கொண்டு

இரண்டும் ஒன்றனுள் ஒன்று எனக் கருதி உள்ளத்தில் உள்ள இறைவன் திருவடியில் தான் என்னும் பூவைச் சாத்தி வழிபட்டால் அவனுடன் இரண்டறக் கலத்தலாகிய வீடுபேறு பெறலாம் என்பது அவர் வாக்கு . பூவினால் செய்யப்படுவது தானே பூசெய்-பூசை என்பார். தம் பெயரை நன்னெறி முருகன் என மாற்றிக் கொண்ட வங்காள மொழிப்பேரறிஞர் சுனித்குமார் சாட்டர்ஜி . இங்கே உண்மையில் பூ என்பது என்ன? பூ என்பது நான் எனும் ஆணவ உணர்வே-அது இறுதி வரை அழியாத ஒன்று அன்றோ? பூ என்பது ஆணவத்தின் -நான் என்பதன் அறிகுறி அடையாளம் என்பது திருமூலர் கருத்து. "புண்ணியம் செய்வார்க்குப் பூவுண்டு நீருண்டு" என்றும் திருமூலர் கூறுகிறார் அல்லவா?

"நான்" நீங்க நாம் என்ன செய்யவேண்டும் ? சரியை , திரியை , யோகம், ஞானம் ஆகியவற்றால் வழிபாடு செய்யவேண்டும் . மூர்த்தி , தலம், தீர்த்தம் முறையாகத் தொழுத நிலையில் வார்த்தை சொலச் சற்குருவாகச் சிவன் வந்து வாய்ப்பான். அவன் பாசஞானம், பசு ஞானம் , பதிஞானம் ஆகியவற்றை நமக்கு உணர்த்துவான் , இவற்றை 1608,1609,1610ஆகிய செய்யுள்கள் சுட்டுகின்றன. 'வைச்சன ஆறாகும் மாற்றி' 'அச்சம் கொடுத்து'(1608) 'என்னை அறிவித்து இருந்தனன் நந்தியே"(1609) "நாதாந்த போதமும் காட்டினன் நந்தியே (1610) ஆகிய சொற்றொடர்கள் சான்றாகும்.

"முத்திநெறி அறியாத மூர்க்கரோடு முயல்வேனைப்
பத்திநெறி அறிவித்துப் பழவினைகள் பாறும் வண்ணம்
சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனை ஆண்ட
அத்தன் எனக்கருளியவாறு ஆர்பெறுவாய் அச்சோவே"

என்பது திருவாசகம். அருளிய தன்மை என்ன என்பதைத் திருமூலர் விவரிக்கிறார். கீழே காண்க.

காணாத கண்ணுடன் கேளாத கேள்வியும்
கோணாத போகமும் கூடாத கூட்டமும்
காணாத நாணமும் நாதாந்த போதமும்

காணாய் எனவந்து காட்டினன் நந்தியே(1610)

'காணாத கண் என்பது கண்ணால் காணமுடியாத காட்சியை அதாவது ஞானக் கண் கொண்டு-அவனருளே கண்ணாகக் கொண்டு காணும் காட்சியைக் குறிக்கும். கேளாத கேள்வி என்பது செவிப் பொறியால் கேளாத கேள்வியைக் குறிக்கும். அதாவது இவை இரண்டும் சுட்டியறியும் அறிவின்றி ஒரு சேராக்கண்டும் கேட்டும் இருத்தலைக் குறிப்பதாகக் கூறுகிறார். ஜி. வரதராசனார் கோணாத போகம் கூடிப் பிரியாத சேர்க்கையையும் நாணாத நாணம் நாணமிலாத பற்றையும் உணர்த்தும் நாதாந்தத்தில் விளங்கும் அறிவும் காணாய் எனக் காட்டுகிறான் சிவன். "காண்பார் யார் அவன் காட்டாக்காலே" என்பது அப்பர் வாக்கு. அவன் அருளாலே அவன் தாள் வணங்க வேண்டும் . அப்போது தான் அவன் "காட்டாதன எல்லாம் காட்டிக் கேளாதான எல்லாம் கேட்பித்துத் தாட்டாமரை காட்டுவான்" என்பது மணிவாசகர் துணிவு.

மோனம் என்பது ஞான வரம்பு என்பார் ஔவையார் ஞானத்தின் சிவமாக மோன நிலையை -மனம் சும்மா இருக்கும் சுக நிலையை -மௌனமாகப் பேசா அனுபூதி பெறும் நிலையை அவர் குறிக்கக் காரணம் என்ன? விடைதருகிறார் திருமூலர் கீழே காண்க

மோனம் கைவந்தோர்க்கு முத்தியும் கைகூடும்
மோனம் கைவந்தோர்க்குச் சித்தியும் கைகூடும்
மோனம் கைவந்து ஊமையாம் மொழி முற்றும் காண்
மோனம் கைவந்து ஐங்கருமமும் முன்னுமே(1611)

இங்கு "மோனம் கைவந்து ஐங்கருமமும் முன்னுமே" என்னும் தொடர் உணர்த்தும் கருத்து அதாவது மோனநிலை உற்று முத்தி நிலையில் நிற்கும் ஆன்மாவுக்குப் படைத்தல்,காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்தொழிலாற்றலும் வாய்க்கும் என்பது அருட்பிரகாச வள்ளலாராகிய இராமலிங்கர்க்கு உடன்பட்ட ஒன்றாகும். சைவசித்தாந்திகள் இதனை ஏற்கமாட்டார்கள்.

பிறந்து இறக்காமலிருப்பார் யார்? அதாவது மரணமிலாப் பெருவாழ்வு பெறுவார் யார்? காண்பவன், காட்சி, காணும் பொருள் ஆகிய மூன்றும் முடிந்து ஒன்றாக அமையும் நிலையில் அதாவது சமாதி நிலையில் இடகலை பிங்கலை , சுழுமுனை வழியாகச் செல்லும் பிராணனை (மூச்சினை)க் கால்மாத்திரை அளவாக மாற்றிச் சிவானந்த ஒளியாகிய குரு திருவடியில் செலுத்திப் பந்தபாசங்களை விட்டவரே பிறந்து இறவாத நிலை பெறுவார்(1612) , காண்பவன் , காட்சி, காணும் பொருள் , அதாவது ஆன்மா, காணும் அறிவு,சிவம் ஆகிய மூன்றும் ஒன்றாகத் தென்பட -அமைய அருள் பாலிப்பவள் சத்தி. இவளது அருட்குறிப்பை அறிபவனே பரம ஞானி ஆவான். இவனே ஒலிக்கின்ற நடனம் புரியும் அன்பு வடிவமான சிவத்துடன் கலந்து தன் நிலைகெட்ட தன்மையன்.ஆவான். இவனே பரமுத்தி அடைந்தவன் ஆவான்(1613)

இவ்வாறு ஞாதுறு (ஆன்மா) ஞானத்தைக் கொண்டு ஞேயத்தை அடையும் நிலையையும், ஞாதுறு(காண்பான்) ஞானம் (காட்சி) ஞேயம்(காணும் பொருள் ) மூன்று ஒன்றாகும் நிலையையும், ஆன்மா சிவமாகும் நிலையையும் (ஆன்மாவைகச் சிவமாக்கி இறைவன் ஆண்ட நிலையையும், அதனால் விளையும் விளைவையும், ஞாதுறு ஞான ஞேயம் என்னும் இப்பகுதி எடுத்து விளக்குகிறது. சைவ சித்தாந்தத் தத்துவம் ஆன்ம நேய ஒருமைப்பாடாக வளர்ந்து மலரும் நிலையை எடுத்துக் காட்டும் இயல்பையும் இங்கே உணரமுடிகிறது.

திருமந்திர ஆய்வடங்கல் புதுகோட்டை திலகவதியார் ஆதீன வெளியீடு

# கற்பகமும் காமாட்சியும்

இறைவன் ஆணல்லன் , பெண் அல்லன் , அலியும் அல்லன் , இருப்பினும் ஆணாகி, பெண்ணாகி , அலியுமாகி நிற்கும் இயல்புடையவன். அவன் ஒரு நாமம். ஒருருவம் ஒன்றும் இல்லாதவன் எனினும் அவனுக்கு ஆயிரம் திருநாமம் கூறி அடியவர் வழிபடுவர். இறைவனை அம்மையாகவும் , அப்பனாகவும் கருதி வழிபடும் நெறி சைவநெறியாகும்.

“அம்மையே அப்பா ஒப்பிலா மணியே” என்று திருவாசகமும் “ஈன்றாளுமாய் எந்தையுமாய்” என்று தேவாரமும் பாடும் இயல்பினைக் காண முடிகின்றது. அம்மையப்பனை ஒன்றாகக் காணும் திருவுருவமே அர்த்தநாரீசுவர வடிவமாகும். இறைவனை அப்பனாக நோக்கும் போது சிவன் என்றும் அம்மையாக நோக்கும் போது சக்தி என்றும் அழைக்கிறோம். சிவனின்றிச் சக்தி இல்லை, சக்தியின்றிச் சிவனில்லை.

சிவன் அன்பு வடிவினன்; “ அன்பே சிவம்” என்பது திருமந்திரம். சக்தி அருள் வடிவினள். ” அருளது சக்தியாகும்” என்பது சிவஞான சித்தியார். சிவனையும் நம் அடியார்கள் கற்பகமாகவும் , காமாட்சியாகவும் கண்டு இன்புற்றிருக்கிறார்கள்,.சக்தியையும் அவ்வாறு கண்டு அடிபணிந்துள்ளார்கள்.

கற்பகம் என்பது தேவலோகத்திலுள்ள ஒரு மரம் என்றும், அது எட்டுக்கிளைகளையுடையது என்றும் கூறுவர். கற்பகம் தேவர்கள் பாற்கடல் கடைந்த காலத்துத் தோன்றியதாகக் கருதுவர். இதில் படரும் கொடி காமவல்லி எனப்படும். கற்பக மரத்தின் நிழலிருந்து கேட்டது உடனே கிடைக்கும் என்பது நம்பிக்கை. எனவே விரும்பியதைத் தரும் வலிமையுள்ள தருவே கற்பகம். பிள்ளையார்பட்டி விநாயகரைக் கற்பக விநாயகர் என்று கூறுகின்றனர். காரணம் அவர் கற்பகம் போல வேண்டுவார் வேண்டுவதைத் தரும் இயல்பினர்.

காமாட்சி என்னும் சொல்லுக்கு விரும்பத் தகுந்த கண்ணுடையவள் என்று பெயர்.காமக்கணி என்னும் பெயர்கொண்ட ஒரு சங்கப் புலவரை நாம்

காண்கிறோம்.மதுரைக் காமக்கணிப் பசலையார் என்னும் சங்கப் பெண்பாற்புலவர் நற்றிணையில் ஒரு பாடலும் அகநானூற்றில் ஒரு பாடலும் பாடியுள்ளார். காமக்கண்ணி என்பது காமாட்சி என்னும் வடமொழித் சொல்லின் தமிழாக்கமாகும். இது மீனாட்சி என்பதற்கு அங்கயற்கண்ணி எனத் தமிழாக்கம் செய்ததை ஒத்ததாகும்.

சிவபெருமானை நம் திருநாவுக்கரசர் தம் தேவாரத்தில்

திருவே என் செல்வமே தேனே வானோர்

செழுஞ்சுடரே செழுஞ்சுடர் நற் சோதி மிக்க

உருவேஎன் உறவேஎன் ஊனே ஊனின்

உள்ளமே உள் ளத்தினுள்ளே நின்ற

கருவேஎன் **கற்பகமே கண்ணே** கண்ணிற்

கருமணியே மணியாடு பாவாய் காவாய்

அருவாய வல்வினை நோய் அடையா வண்ணம்

ஆவடுதண் துறையுறையும் அமரர் ஏறே" என்று பாடுகிறார்.

இப்பாடலில் "**கற்பகமே கண்ணே**" என்னும் இரு சொற்களும் இணைந்து நின்று சிவபெருமானை அடியார் அழைக்கும் தொடர்களாக அமைந்துள்ளன. ஆம் சிவன் கற்பகம் தானே " வேண்டத்தக்கது அறிவோய் நீ வேண்ட முழுதும் தருவோய் நீ" என்று மாணிக்கவாசகர் நாம் விரும்பும் பொருள்களைத் தருபவன் என்று கூறுகிறார் அல்லவா? இறைவன் கண்ணாகவும் இருக்கும் இயல்பினன். நமக்குக் கண்ணிருந்தாலும், நம் கண் எதிரே காணும் பொருள் இருந்தாலும் கதிரவனின் ஒளியோ, விளக்கொளியோ , திங்கள் ஒளியோ இல்லாமலிருந்தால் பொருளை நாம் காண முடியுமோ? முடியாதல்லவா? இந்த மூன்று ஒளியும் தானே சிவபெருமானின் முக்கண்கள்! எனவே இறைவன் தானே உலகத்துக்கு -உயிர்களுக்கெல்லாம் கண்ணாக இருக்கின்றான். மேலும் உயிர்களுக்கு உள்ளிருந்து இயக்கிப் பொருள்களைக் காணுமாறும் இறைவன் தான் செய்கிறான்.அதனோடு

மட்டுமின்றி நாம் காணும் பொருள்களில் அவன் மறைந்து நின்று அப்பொருள்களை அவற்றிற்குரிய இயல்புடன் இருக்குமாறு செய்து நம் கண்களுக்கு நன்கு புலப்படவும் வைக்கின்றான். இதனை " காணும் உபகாரம் " என்று சைவ சித்தாந்தம் கூறும். "காண்பார் யார் கண்ணுதலே நீ காட்டாக்காலே" என்று சான்றோர் கூறுவர். 'கற்பகமே கண்ணே' என விளித்து அப்பர் பெருமான் என்ன வேண்டுகிறார். நோய் அடையாதவாறு காக்குமாறு வேண்டுகிறார். உள்ளத்தைப் பிணிக்கும் உடல் நோயையும், உயிரைப் பிணிக்கும் வினைநோயையும் விலக்குமாறு வேண்டுகிறார் அவர்.

சக்தியாகிய உமையம்மையைச் சென்னை மயிலாப்பூரில் கற்பகமாகவும், காஞ்சிபுரத்தில் சிவனிடம் காதல் கொண்ட கண்களைப் பெற்ற காமாட்சியாகவும் கண்டு நாம் வழிபடுகிறோம். மயிலையில் கோயில் கொண்டெழுந்தருளிய சக்தியின் பெயர் கற்பகாம்பாள் அல்லவா விரும்புவனவற்றைத் தருமியல்பினதாகிய கற்பகத்தின் தன்மையை இறைவியின் கண்களுக்கு ஏற்றி அபிராமி பட்டர் " தனம் தரும் ; கல்வி தரும்;ஒரு நாளும் தளர்வு அறியா மனம் தரும் தெய்வவடிவும்தரும்; நல்லன எல்லாம் தரும் ; அன்பர் என்பவர்க்கே கனம்தரும் பூங்குழலாள் அபிராமி கடைக் கண்களே" என்று அழகுக்கு ஒருவரும் ஒவ்வாத வல்லியாகிய அபிராமியைப் பாடுகிறார். மேலும் அபிராமியின் அருளைப் பெற்றவர் 'தங்குவர் கற்பகத்தாருவின் நிழலில்" என்று கூறிக் கற்பகத்தின் நிழலில் நின்று விரும்பியதைப் பெறமுடியும் என்றும் கூறுகிறார்." தாயார் இன்றி மங்குவர் மண்ணில் வழுவாப் பிறவியை" என்னும் அபிராமி பட்டர் வாக்கால் அம்மையின் அருளால் பிறவி நீக்கமும் பெற்றுப் பேரின்பம் அடையலாம் என்பதையும் உணர்கிறோம்.

காஞ்சி மாநகரில் உமையம்மை சிவபெருமானிடம் ஆகமத்தின் பொருளைக் கேட்டு மகிழ்ந்து, ஆகமத்தின் படி இறைவன் விரும்புவது அருச்சனை என்பதை உணர்ந்து,இறைவனை அருச்சனை செய்ய வேண்டினாள்.அவனும் காஞ்சிபுரத்தில் மாமரத்தில் தோன்றி அவள் அருச்சனையை ஏற்று அருளினான். பிறகு மனையறம் பெருக்கும்

கருணையினால், நண்ணு மன்னுயிர் யாவையும் பல்கக் காஞ்சி காமகோட்டத்தில் முப்பத்திரண்டறங்களும் செய்யத் தொடங்கினாள்.இவ்வாறு காஞ்சியில் காமாட்சி முப்பத்திரண்டறங்களும் செய்யும் மாண்பினைச் சேக்கிழார் திருக்குறிப்புத் தொண்டர் புராணத்தில் விளக்குகிறார். காமாட்சிதான் முதன் முதலில் சிவபெருமானுக்கு அருச்சனை தொடங்கி வைத்தாள். இதனைச் சேக்கிழார்

'எண்ணில் ஆகமம் இயம்பிய இறைவர்தாம் விரும்பும்

உண்மையாவது பூசனை' என உரைத்தருள

அண்ணலார்தமை அர்ச்சனை புரிய ஆதரித்தாள்

பெண்ணின் நல்லவளாயின பெருந்தவக்கொழுந்து' என்று பாடுகிறார். எனவே காமாட்சி நமக்கு காட்டிய வழி அருச்சனை வழிபாடு. இந்த " அருச்சனையும் பாட்டேயாகும் சொற்றமிழ் பாடுக" என்று இறைவன் சுந்தரருக்குப் பணித்ததாகச் சேக்கிழார் கூறுகிறார். எனவே இறைவனைத் தமிழால் - தமிழ்ப்பாட்டால் அருச்சனை செய்வதே உண்மை வழிபாடாகும்.

மேலும் காமாட்சி இவ்வுலகில் நாம் முப்பத்திரண்டு அறஞ்செய்யவேண்டும் என்பதை நமக்குணர்த்த அவள் அறஞ் செய்கிறாள்

இரு நாழி நெல் அளித்தானாம். இதனை வைத்து உழவுத்தொழில் செய்து அதன் வழி அவள் அறஞ்செய்தாளாம். ஆதரவற்றவர்க்குப் உணவு , உடை, உறையுள் நல்குதல், தண்ணீர்ப்பந்தல் , மடம் , பூங்கா முதலியன அமைத்தல், பள்ளி , மருத்துவமனை அமைத்தல் முதலியவற்றை அறங்களாகக் கருதுகிறோம்.]

எனவே இறைவனையும், இறைவியையும் - சிவனையும், சக்தியையும்=,கற்பகமாகவும், காமாட்சியாகவும் கண்டு கற்பகக் காமாட்சி எனக் கருதி வழிபட்டு இம்மைப் பயனும் மறுமைப் பயனும் பெற்று இன்புறுவோமாக

# பிராட்டியின் பேரருள்

பிரான் என்னும் சொல்லுக்குத் தலைவன் என்று பொருள்." வம்பறா வரிவண்டு மனம் நாற மலரும் மதுமலர் நற்கொன்றையான் அடியலாற் பேணா எம்பிரான் சம்பந்தன் அடியார்க்கும் அடியேன் " , " நம்பிரான் திருமூலன் அடியார்க்கும் அடியேன் "என்னும் சுந்தரர் பாடிய திருத்தொண்டத்தொகைத் தொடர்களில் வரும் எம்பிரான், நம்பிரான் என்பன எம் தலைவன், நம் தலைவன் என்னும் பொருளைத்தரும் – அருவாகி உருவாகி அனைத்துமாய் நின்ற பிரான்(4163) என்னும் பெரிய புராணத் தொடரில் உருவாய் அருவாய் இருக்கும் ஒப்பிலாத் தலைவனாகிய இறைவனைப் பிரான் என்னும் தொடர் குறிக்கிறது. இவ்வாறே தம்பிரான் என்பது சிவபெருமானைக்குறிக்கும் தொடராகவும் திருமுறைகளில் கையாளப்படுகிறது. தம்பிரான் தோழர் என்று சுந்தரரைக் குறிக்கிறோம். " தம்பிரானைத் தன்னுள்ளம் தழீஇயவன், நம்பி ஆரூரன் நாம் தொழும் தன்மையான் " என்று உபமன்னிய முனி தம் சீடர்களிடம் கூறியதாகக் சேக்கிழார் சுட்டுவதையும் காணலாம்.

பிரான் என்னும் ஆண்பாற் சொல்லுக்கு ஏற்ற பெண்பாற் சொல்லே பிராட்டி என்பதாகும். பிராட்டி என்பது தலைவியைப் பொதுவாகக் குறித்தாலும் சிறப்பாகச் சைவத் திருமுறைகளில் உமையம்மையாரைக் குறிக்கக் காணலாம். எம்பிரான் , நம்பிரான் , தம்பிரான் என்னும் சொற்றொடர்களைப் போலவே எம்பிராட்டி , நம்பிராட்டி , தம்பிராட்டி என்னும் தொடர்களும் அமையும் வைணவப் பாடல்களில் உரை நூல்களில் பிராட்டியார் என்பது திருமாலின் துணைவியாராகிய திருமகளை - தாயாரைக் குறிக்கும் -பிராட்டி என்பது உமையம்மையைச் சுட்டினாலும் இறைவனருளை - சக்தியை - எடுத்து இயம்புவதாகும்.

அருளின் திருவுருவமாகிய உமையம்மையின் பேரருளைத் திருவாசகத்தில், மாணிக்கவாசகப் பெருமான் போற்றிப் பாடுகிறார். அதனைச் சிறிது காண்போம்.

திருவாசகத்தில் வரும் திருவெம்பாவை மார்கழி மாதத்தில் பாடப் பெறும் ஒரு பகுதி . கன்னிப் பெண்கள் அதி காலையில் எழுந்து மற்ற தோழிமார்களையும் எழுப்பிக்கொண்டு நீர் நிலைக்குச் சென்று நீராடி இறைவனைத் தொழுது நாடு செழிக்க மழை பெய்யவும் , வீடு செழிக்க நல்ல கணவனைப் பெறவும் வேண்டுவதையே உட்பொருளாகக் கொண்டது திருவெம்பாவை. இதன் தத்துவப்பொருள் சக்தியை வியந்தது என்று கூறுவர். இப்பகுதியில் மாணிக்கவாசகர் பிராட்டியின் பேரருளைப் பற்றிக் கூறுகிறார். கன்னிப் பெண்கள் நீராடும் மடு(நீர் நிலை) அவர்களுக்கு உமையம்மையைப் போலவும் சிவபெருமானைப் போலவும் காட்சி அளித்ததாம். பாடலைப் பாருங்கள்.

பைங்குவளைக் கார்மலரால் செங்கமலப் பைம்போதால் ,
அங்கங் குருகினத்தால் , பின்னும் அரவத்தால்,
தங்கண் மலங்கழுவுவார் வந்து சார்தலினால்,
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்து
பொங்கும் மடுவிற் புகப்பாய்ந்து பாய்ந்துநம்
சங்கம் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்
பங்கயப் பூம்புனல் பாய்ந்து பாய்ந்து ஆடேல் ஓர் எம்பாவாய்

பிராட்டியாராகிய உமையம்மையின் கண்களைப் போல இம்மடுவும் பசுமை தங்கிய குவளையாகிய கரிய மலர் பூத்து விளங்குகிறது.

இப்பொய்கையிலுள்ள தாமரை மலர்கள் அவள் திருமுகத்தை ஒத்து விளங்குகின்றன. குருகினங்கள் அவன் வளையல்களை நினைவூட்டுகின்றன. பாம்புகள் அவள் அணிகலன்களாகக் காட்சி

அளிக்கின்றன. பொய்கையில் வந்து பலர் குளித்து அழுக்கை அகற்றிக் கொள்ளும் செயல் உமையம்மையிடத்து வரும் பக்தர்கள் தம் ஆணவம் கன்மம்,மாயை, ஆகிய அழுக்குகளை நீக்கிக் கொள்வதை நினைவூட்டுகின்றது. பொதுவாகப் பொய்கையே - மடுவே தண்மையான நீரினைக் கொண்டது. எம்பிராட்டியின் இன்னருளும் தண்மையானது..

பொய்கை நீர் புறத்தே இருக்கும் வெம்மையைப் போக்கவல்லது. அம்மையின் தண்ணருளோ பிறவித்துன்பத்தால் வரும் வெம்மையை நீக்க வல்லது.அம்மையே அருள் வடிவினள் தானே! " அருளது சக்தியாகும் அரன் தனக்கு " என்றுதானே நம் சாத்திரங்கள் நவில்கின்றன.

மேலும் இப்பாட்டில் குவளை மலர்களை அம்மையின் அருளொழுகும் கண்களுக்கு ஒப்பிடுறார் மாணிக்கவாசகர். அம்மையின் அருளை நினைத்தவுடன் அடியார்களுக்கு முதலில் அவளது கண்கள் தாம் நினைவுக்கு வரும் கண்கள் அடிப்படையில் தான் அம்மைக்கு எத்தனை பேர்கள்? காமாட்சி,மீனாட்சி,விசாலாட்சி,கமலாட்சி ஆகிய பெயர்கள் முறையே காமக்கண்ணி, கயற்கண்ணி, அகல்நெடுங்கண்ணி, தாமரைக்கண்ணி என்னும் பெயருடையன அல்லவா? ஏன் ? கண்ணின் பெருங்கருணைத் திறத்தை அபிராமிபட்டர்

"தனந்தரும் கல்விதரும், ஒருநாளும் , தளர்வறியா
மனந்தரும்; தெய்வவடிவும் தரும்; நெஞ்சில் வஞ்சமிலா
இனந்தரும்; நல்லன எல்லாம் தரும் அன்பர் என்பவருக்கே
கனந்தரும் பூங்குழலாள் அபிராமி கடைக்கண்களே"

என்று பாடுகிறார். அம்மையின் அருட்கண்களுக்குத்தான் எத்துனை பேராற்றல்! எனவேதான் முதலில் அம்மையின் அருட் கண்ணையும் குவளை மலரையும் இணைத்துப் பேசுகிறார் மாணிக்கவாசகர்.

அடுத்து அம்மையின் அருள் வடியும் முகத்தைத் தாமரைக்கு ஒப்பிடுகிறார் மாணிக்கவாசகர். பூக்களில் சிறந்த பூ தாமரைப் பூ; அது தண்மையில் வேரூன்றித் தழைப்பது . அது போலத் தெய்வங்களில் சிறந்த அம்மை, அருள் வெள்ளத்தில் எப்போதும் குடிகொண்டிருப்பவள்.

பொய்கையை அம்மையோடு ஒப்பிட்டுப் பேசிய மாணிக்கவாசகப்பெருமான் இன்னொரு பாட்டில் பொய்கைக்கு நீர் சுரக்கும் மழை மேகத்தை நினைக்கும் போதும் அம்மையின் அருளை எண்ணிப் பார்க்கிறார். பாடலைப் பாருங்கள்

முன்னிக் கடலைச் சுருக்கி எழுந்துடையாள்
என்னத் திகழ்ந்து எம்மை ஆளுடையாள் இட்டிடையின்
மின்னிப் பொலிந்து எம்பிராட்டி திருவடிமேல்
பொன்னஞ் சிலம்பித் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நம் தம்மை ஆளுடையாள்
தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவள்நமக்கு முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழையேலோர் எம்பாவாய்

இந்தப் பாட்டில் கன்னிப் பெண்கள் மழைபெய்ய வேண்டி நிற்கிறார்கள்.

கடல் நீர் கதிரவன் வெப்பத்தால் மேகம்" ஆகின்றது. பிறகு கார்மேகம் ஆகி மின்னுகின்றது . பிறகு இடி இடிக்கிறது - மழை பொழிகிறது. இவையனைத்தும் அடியார்க்கு அம்மையை நினைவூட்டுகின்றன . அவள் கருப்பு நிறத்தை கார்மேகம் காட்டுகிறது. மின்னல் அவள் இடையை நினைவூட்டுகிறது. அவள் காற் சிலம்பொலியை இடி எடுத்துரைக்கிறது. மழைக் காலத்தில் தோன்றும் வானவில்லும் அவளது கரும்புருவத்தைக் காட்சிக்குக் கொணர்கிறது..அவள் இறைவனுடன் இணைந்து பொழியும் அருளைப் போல மழை பொழிய வேண்டுகிறார்.. மழை என்பதும் கடவுள் அருளின் மறு வடிவம்தானே..

எனவேதான் வள்ளுவர் கடவுள் வாழ்த்து கூறிய பின்னர் வான் சிறப்புக் கூறி மழையை வாழ்த்துகிறார்.

மேலும் இப்பாட்டில் உமையம்மையை' உடையாள், , எம்மையாளுடையாள்,, எம்பிராட்டி, , நந்தம்மை ஆளுடையாள், . அவள் என ஐ முறையாகப் பெண்கள் குறிப்பிட்டுள்ளனர். ஐந்து வகையாக இறைவி குறிக்கப்படுவது அவள் ஐந்து சக்திகளாக அமைந்து உயிர்களுக்குக் கருணை வழங்கிப் பேரின்பத்தைக் காட்டுதற் பொருட்டே என்பர். உலகின் நலம் கருதி மழை பொழிகிறது. அது போல உயிர்நலம் தழைக்க் அம்மையின் அருள்தேவைப்படுகிறது.அவள் அருளை வேண்டி வழிபட்டு நிற்போம்.

அருளே உலகெல்லாம் ஆள்விப்பது ; ஈசன்
அருளே பிறப்பறுப்ப தானால் - அருளாலே
மெய்ப்பொருளை நோக்கும் விதியுடையேன் எஞ்ஞான்றும்
எப்பொருளும் ஆவ தெனக்கு.
காரைக்கால் அம்மையார்.

# நடராஜ தத்துவம்

.

உலகெலாம் உணர்ந்து ஓதற்கு அரியனாகிய இறைவன் - நிலவுலாவிய நீர்மலி வேணியனாகிய சிவபெருமான் - உயிர்கள் தத்தம் கருமேனி கழித்து உய்தி பெறுவதற்காக எடுத்த உருவத் திருமேனிகள் பல. அவற்றுள் அனைத்துலக அறிஞர் பெருமக்களுக்குச் சிந்தனை விருந்தாய், அடியார்களுக்கு நினைத்தொறும் காணுந்தொறும் எப்போதும் அனைத்தெலும்பு உள்நெக ஆனந்தத் தேன் சொரியும் அமுதமாய், அரிய தத்துவங்களின் தாயகமாய், அறுபத்து நான்கு கலைகளுக்கும் நாயகமாய் விளங்குவது நடராசத்திருவுருவமாகும். இத்திருவுருவம் சைவர்களுக்குக் கோயிலாக விளங்கும் சிதம்பரத்தில் சிறப்புடன் விளங்குவதை அனைவரும் அறிவர். தெரிசிக்க முத்தி தரும் சிதம்பரத்தில் நடமாடும் அம்பலக்கூத்தனைப் பாடாத அடியார் சைவ உலகில் உண்டா ? குனித்த புருவமும், கொவ்வைச் செவ்வாயிற் குமிண் சிகிப்பும், பனித்த சடையும், பவளம் போல் மேனியிற் பால் வெண்ணீறும், இனித்தமுடைய எடுத்த பொற்பாதமும்" பெற்ற நடராசப் பெருமனைக் காண்பதற்காகவே மனிதப் பிறவி வேண்டும் என்று மன்றாடுகிறார் நாவுக்கரசர். பெரும்பற்றப் புலியூரானைப் பேசாத நாளெல்லாம் பிறவா நாளே" என்பது அவர் கருத்து. ஞானசம்பந்தப் பெருமானோ செல்வர்வாழ் தில்லைச் சிற்றம்பல மேய செல்வன் கழலேத்தும் செல்வம் செல்வமே" என்று செப்புகிறார். தருமனார் தமர் செக்கில் இடும்போது தடுத்தாட் கொள்வான் கடுத்தாடும் கரதலத்தில் தமருகமும் எரியகலும் கரிய பாம்பும் பிடித்தாடிப் புலியூர்ச் சிற்றம்பலத் தெம் பெருமானைப் பெற்றாமன்றே" என்று நடராசப் பெருமானை இறப்பினை நீக்கி என்றும் இன்பம் தழைக்க இருக்க உதவும்

நண்பராகக் காண்கிறார் சுந்தரர். திருவாசகத்தின் உட்பொருள் என்ன ?" என்று வினவிய தில்லை வாழ் அந்தணர்க்கு மணிவாசகனார் திருவாசகத்தின் உட்கிடை தில்லைக் கூத்தனே" என்று விடையிறுத்த செய்தியைச் சைவ உலகம் நன்கறியும். நால்வர் பெருமக்களும் இவ்வாறு நயமுறப் போற்றி வழிபட்ட நடராசப் பெருமானின் திருவுருவத்தில் காணக் கிடக்கும் தத்துவங்களில் இன்றியமையாதனவற்றை எடுத்துத் தொகுத்து இயம்புவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

நடராசப் பெருமான் திருவுருவம் பற்றிய செய்தி சங்க இலக்கியத்தில் கற்றறிந்தோர் ஏத்தும் கலித் தொகைக் கடவுள் வாழ்த்தில் முதலாவதாகக் குறிப்பிடப் பெறுகின்றது. சிலப்பதிகாரத்திலும் ஒரு சிறு குறிப்பு வருகிறது. பின்னே காரைக்கால் அம்மையார் பாடல்களிலும் நடராசப் பெருமான் பற்றிய செய்திகள் உள்ளன. திருமூலர் தம் திருமந்திரத்தில் ஒன்பதாம் தந்திரத்தில் திருக்கூத்துத் தரிசனம் என்னும் தலைப்பில் நாற்பத்து மூன்று பாடல்கள் வாயிலாக நடராசப் பெருமானின் திருவுருவத் தத்துவச் சிறப்பினைத் தெளிவாக விளக்குகின்றார். பின்னர் நாவுக்கரசர், ஞானசம்பந்தர், சுந்தரர் ஆகிய மூவரும் தேவாரத்திலும் மாணிக்கவாசகர் திருவாசகத்திலும் நடராசப் பெருமானை நாவாரப் பாடுகின்றனர். மணிவாசகர் இயற்றிய திருககோவையாரின் மறுபெயர் திருச்சிற்றம்பலக் கோவையாரன்றோ ? திருக்கோவையாரின் நாயகன் நடரசாப் பெருமானே ஆவான். திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, ஆகிய ஒன்பதாம் திருமுறை தில்லை நடராசப் பெருமானை மையமாகக் கொண்டு எழுந்துள்ளது. பதினோராம் திருமுறையில் சேரமான் பெருமாள் நாயனார், பட்டினத்தார், நம்பியாண்டார் நம்பி முதலியோர் பாடலிலும் நடராசப் பெருமானைப் பற்றிய குறிப்பு உண்டு. 12ம் திருமுறை ஆகிய சேக்கிழாரின் பெரிய புராணத்திற்கு அடியெடுத்து முதல்

வழங்கியவனே நடராசப் பெருமான் தானே. தோத்திர நூல்களை விடுத்துச் சாத்திர நூல்களைப் பார்த்தாலும் சிறப்பாக திருக்களிற்றுப்படியார், சிவஞான சித்தியார், உண்மை விளக்கம் முதலியவற்றில் நடராசப் பெருமானின் தத்துவம் சித்தாந்தச் செந்நெறியின் அடிப்படையில் விளக்கப்படுகின்றது. கந்தபுராணத்தில் தட்சகாண்டத்தில் நடராசப் பெருமான் நடனம் தோன்றிய வரலாறு பேசப்படுகின்றது. மேலும் உமாபதி சிவாச்சாரியாரின் கோயிற் புராணத்திலும் இவ்வரலாற்றுச் செய்தி விரித்துரைக்கப்படுகின்றது. அருணகிரியாரின் திருப்புகழிலும் நடராசர் பற்றிய குறிப்பு உண்டு. பின்னே தோன்றிய தாயுமானார், சிதம்பர ரகசியம், நடராசர் பற்றிய செய்திகளை எல்லாம் பாடுகிறார். குமரகுருபரரும் நடராசர் தத்துவத்தின் உண்மைகளை நவில்கிறார். வள்ளலார் இராமலிங்க அடிகளாரும் நடராசப் பெருமானை அருட்பெருஞ் சோதியாகக் கண்டு உத்தரஞான சிதம்பரம் அமைத்து அவர் ஆட்டத்தின் தத்துவத்தைத் திருவருட்பாவில் விளக்குகிறார். நடராசர் தத்துவம் பற்றிய செய்திகளைத் தாங்கி நிற்கும் வடமொழி நூல்களும் பலப்பல. அண்மைக் காலத்தில் நடராச தத்துவத்தின் சிறப்பினை அனைத்துலக நாடுகளும் அறியச் செய்த பெருமை ஆனந்த குமாரசாமி அவர்களுக்கே சாரும். சிவ நடனம் என்னும் தலைப்பில் அவர் ஆங்கிலத்தில் எழுதிய நூலின் வாயிலாக நடராசத் தத்துவத்தின் நுட்பங்களை அறிந்து இந்தியத் தத்துவக் கலையின் ஏற்றத்தை எல்லா நாடுகளும் போற்றத் தொடங்கின.

நடராசர் என்னும் சொல்லுக்கு நடனம் (நாட்டியம்) ஆடுவதில் மன்னர் என்பது பொருளாகும். ஆட வல்லான், கூத்துகந்தான், அம்பலக்கூத்தன் மன்றுள்ஆடி என்றெல்லாம் அவனை அழைப்பார்கள். நடனங்களுக்கெல்லாம் நாயகன், தலைவன் நடராசன். நடனக்கலை என்பது கலைகளுக்குள்ளே சிறந்த கவின்கலை. நடனக் கலையில் இயல் உண்டு, இசை உண்டு,

நாடகமாகிய நடிப்பு உண்டு. எனவே நடராசப் பெருமான் முத்தமிழ்க் கலைக்கும் முதல்வனாக விளங்குகிறான். இந்தியப் பண்பாட்டின் சின்னமாக இன்றும் விளங்குவது பரத நாட்டியம். பரதம் என்னும் சொல்லில் பாவம், ராகம், தாளம் ஆகிய மூன்று சொல்லின் முதலெழுத்துக்களின் கூட்டுக் கலப்பு இருப்பதைப் பார்க்கலாம். இம்மூன்றுக்கும் இறைவனாக இலங்குபவன் நடராசப் பெருமான். பரத சாஸ்திரத்தில் சிவபெருமான் ஒருவனுக்கே சிரங்குவித்து வணங்க வேண்டும் என்றும் ஏனோர்க்கு நெற்றிக்கு நேரே கரங்குவித்தல் மட்டுமே போதும் என்றும் விதிக்கப்பட்டுள்ளது. நாட்டியக் கலை உடலசைவு நிலை, கையமைப்பு, உடற்சுழற்சி முதலியவையெல்லாம் கூடியது. உடல் சடம், அது அசைய வேண்டுமானால் நரம்பு அசைய வேண்டும், நரம்பு அசைய மனம் அசைய வேண்டும், மனம் அசைய உணர்வு அவசியம். உணர்வோ உயிரின் தன்மை. உயிர் இறைவனுக்கு அடிமை. இறைவன் இசை வடிவினன். இறைவன் அசைகிறான். இசை இசைகிறது. இசைக்கு ஏற்ப ஜதியாகக் கால் அசைகிறது. முத்திரையுடன் கை அசைகிறது. நாதமும் நடிப்பும் சேர்ந்து நாட்டியம் அமைகிறது. எனவே உயிர்க்குள் உயிராக இருந்து இயக்கும் இயவுளாக இறைவன் இருப்பதை இது உணர்த்துகிறது. "ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரே".

சிவபெருமான் எப்போது ஏன் நடனமாடினார் என்பது கோயிற் புராணத்திலும், கந்தபுராணத்திலும் பின்வருமாறு சொல்லப் பெற்றுள்ளது. தாருகா வனத்து முனிவரின் அகந்தையை அடக்கி ஆளும் பொருட்டுச் சிவபெருமான் தாம் பிட்சாடன வடிவம் கொண்டபோது சிவபெருமானைக் கொல்லும் பொருட்டுத் தாருகாவனத்து முனிவர்கள் யாகம் ஒன்று செய்தனர். அந்த வேள்வியிலிருந்து வெளிவந்த புலி, பாம்பு, தீ, துடி ஆகியவற்றைச் சிவன் முறையே உடையாகவும், அணியாகவும், கைப் பொருளாகவும் கொண்டார். இறுதியில் முயலகனை

ஏவினார்கள். அவனைக் காலால் மிதித்து நடனம் செய்யத் தொடங்கினார். பின்னாளில் இந்நடனத்தைத் தில்லையில் காண விழைந்த பதஞ்சலி, வியாக்ர பாதர்க்காகச் சிவபெருமான் ஆடினான். சிலப்பதிகாரத்தில் காளியுடன் போட்டியிட்டு நடனமாடியதாகக் குறிப்பு வருகின்றது. தில்லைக்காளி எல்லைக்கப்பால் நடராசப் பெருமானிடம் தோற்றுச் சென்றதாகக் கூறுவர். தேன் புக்க தண்பனை சூழ் தில்லைச் சிற்றம்பலவன் தான் புக்கு நட்டம் பயிலும் அது ஏன், ஏடி" என்னும் வினாவை எழுப்பித் திருவாசகம் தான் புக்கு நட்டம் பயின்றிலனேல் தரணியெல்லாம் ஊன்புக்க வேற்காளிக் கூட்டாம் காண்சாழலோ" என்று விடை பகருகின்றது.

நடனம் நிகழும் இடம் சிதம்பரம். சித் என்றால் அறிவு, அம்பரம் என்றால் வெளி அல்லது ஆகாசம். அறிவு வெளியில் - ஞான ஆகாசத்தில் இந்நடனத்தைக் குறிக்கவே சிற்றம்பலம் என்றனர். எனவே தான் அருமறைச்சிரத்தின் மேலாம் சிற்பர வியோமமாகும் திருச்சிற்றம்பலத்துள்" என்றார் சேக்கிழார். எனவே இறைவன் மிக நுண்ணிய அறிவு வெளிக்குள் கலந்து நிற்கிறான் என்பதைச் சிதம்பரம் உணர்த்துகிறது.

ஏன் அவன் சிதம்பரத்தில் ஆடுகிறான் ? விராட புருடனுக்கு இருதயதானமாக இலங்குவது சிதம்பரம். எனவே சிதம்பரத்தில் அவன் ஆடுகிறான். அவன் ஆட்டம் நின்றால் உலக இயக்கம் இல்லை. உண்மையில் நம் உடலின் இருதயத்தில் உள்ள துடிப்பு அசைவே இந்த நடனத்தின் அறிகுறி. இதயத் துடிப்பு நின்றுவிட்டால் மனித இயக்கமும் இல்லை தானே ? எனவே இறைவனின் இந்த நடனம் உலக இயக்கத்துக்கும் உலகத்துயிர்களின் இயக்கத்துக்கும் உரிய உறுதுணை - அடிப்படை என்பதை நாம் மறக்கக் கூடாது. அவனன்றி ஓர் அணுவும் அசையாது என்னும் அசைப்புத் தத்துவத்தின்

அடையாளம் தான் இந்த அற்புதக் கூத்து ஆகும். அவன் ஆட்டத்தால் உலகம் ஆடுகிறது. உலகத்துப் பொருள்கள், உயிர்கள் நடமாடுகின்றன வேதங்கள் ஆட மிகு ஆகமம் ஆட கீதங்கள் ஆட கிளர் அண்டம் ஏழ் ஆடப் பூதங்கள் ஆடப் புவனம் முழுதாட நாதம் கொண்டாடினான் ஞானக் கூத்தே" என்று திருமந்திரம் சொல்லுகிறது.

அவன் நடனம் உலகம், உயிர்கள் ஆகியவற்றை மட்டும் தானா ஆட்டுகிறது. இல்லை, அண்டங்கள் அனைத்தும் ஆடச் செய்கிறது. கிளரண்டம் ஏழாட" என்கிறார் திருமூலர். இதனை அண்டத்திருக் கூத்து என்பார்கள். வானவெளியில் சுழலும் கோள்கள், விண்மீன்கள் யாவும் ஓர் ஒழுங்கில் இயங்க - அசைய இறைவன் தான் இயங்கி - அசைத்து யாவற்றையும் ஒருங்கே இயக்குவிக்கிறான். அடிபேரின் பாதாளம் பேரும்; அடிகள் முடிபேரின் மாமுகடு பேரும்; கடகம் மறித்தாடும் கை பேரின் வான் திசைகள் பேரும்; அறிந்தாடும் ஆற்றாது அரங்கு" - என்பார் காரைக்கால் அம்மையார். விண்ணுக்கும் மேல் வியன் பாலக்கீழ் விரிநீர் உடுத்த மண்ணுக்கு நாப்பண் நயந்து தென்தில்லை நின்றோன்" என்பது திருவாசகம்.

அண்டத்தில் மட்டுமா இறைவன் ஆடுகிறான். அவன் பிண்டத்திலும் அணுவுக்கு அணுவாய் இருந்து ஆடுகிறான். நமது உடம்பில் இருபத்தாறு எலும்புகளுக்கு இடையில் இதய கமலம் உள்ளது. அதன் நடுவே ஞானவெளி உள்ளது. அந்த ஞானவெளி மிகவும் சிறியது. அந்தத் தகராகாசத்தின் நடுவில் ஒரு ஞானவெளி இடையறாது அசைந்து கொண்டு இருக்கிறது. இதுதான் இறைவன் நடனம். இந்நடனத்தைச் சிவயோக நெறியில் உள்ளுக்குள் கண்டார் பிறவித் துன்பம் நீங்குவர். இந்தக் காட்சியைக் கண்டவர் பதஞ்சலி வியாக்ரபாதர். இதைப் புறத்தே காட்ட முயன்ற முயற்சி சிதம்பரத்தில் உள்ள நடனத்

திருவுருவம் என்று விளக்கம் தருவர். எனவே இறைவன் உள்ளும் புறமும் உலகெங்கும் அண்டத்திலும் பிண்டத்திலும் நடனம் ஆடுகிறான். எனவே தான் திருமூலர் எங்கும் சிதம்பரம் எங்கும் திருநட்டம்" என்கிறார். இதுவரை கூறிய கருத்துக்களையெல்லாம் தொகுத்து வள்ளலார் எளிய தமிழில் அம்பலத்திலாடுகின்றார் வெண்ணிலாவே - அவர் ஆடுகின்ற வண்ணமென்ன வெண்ணிலாவே - அந்தரத்திலாடுகின்றார் வெண்ணிலாவே - அவர் ஆடும் வகை எப்படியோ வெண்ணிலாவே - அணுவிலணு வாயிருந்தார் வெண்ணிலாவே - எங்கும் ஆடுகின்ற வண்ணமென்ன வெண்ணிலாவே - அண்டபகி ரண்டமெல்லாம் வெண்ணிலாவே - ஐயர் ஆட்டமென்று சொல்தென்ன வெண்ணிலாவே - அம்பரத்தி லாடுகின்றார் வெண்ணிலாவே - என்னை ஆட்டுகின்றார் சிதம்பரத்தே வெண்ணிலாவே" என்கிறார்.

நடராசப் பெருமான் தில்லையில் நடனமிடும் சபை பொற்சபையாகும். பொற்சபையிலுள்ள பொன் ஒடுகள் 21600, மனிதன் நாள் தோறும் விடும் மூச்சு எண்ணிக்கையையும், 72000 ஆணிகள் மனித நரம்பினையும் உணர்த்தும். அடுத்துள்ள சித்சபையுடன் கூடிய நிலையில் சபையிலுள்ள கற்கள் மந்திர அட்சரங்கள் என்றும், பிரம்மா, விஷ்ணு, ருத்திரன், மகேசன், சதாசிவன் ஆகியோரே நடனமிடுதற்குரிய பீடம் என்றும், ஐம்பூதம் அருவம் என்றும் நான்மறை, சாத்திரம், ஆகமம் அருவம் என்றும் நான்மறை, சாத்திரம், ஆகமம் ஆகியவை தூண்கள் என்றும், பஞ்சாட்சரப்படி 96 தத்துவங்கள் என்றும் கூறுவர்.

இறைவன் நமக்காக ஐந்தொழில் செய்கிறார். உலகத்தைப் படைக்கிறார், அவற்றைக் காப்பாற்றுகிறார், அழிக்கிறார், இளைப்பாற்றுகிறார், அருள் செய்கிறார். இந்தப் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்தொழிலும்

நடராசப் பெருமானின் அற்புதக் கூத்தில் அமைந்துள்ளதாகச் சித்தாந்த நூல்கள் கூறுகின்றன. நடராசப் பெருமானின் வலக்கையிலுள்ள துடி - உடுக்கை, டமருகம் ஒலியை உண்டாக்கும்; அதுவே நாதத்தைக் காட்டுகிறது. நாதமே உலகப் படைப்பிற்கு அடிப்படை. எனவே இந்த உடுக்கை படைப்புத் தொழிலைக் குறிக்கிறது. மற்றொரு வலக்கை பயப்படாதே" என்னும் குறிப்பினைத் தாங்கிய அபய கரம் ஆகும். இந்த அமைந்த திருக்கை காத்தல் தொழிலைக் காட்டும். தூக்கிய இடக்கையிலுள்ள நெருப்பு உலகை அழிக்கும் கருத்தை உணர்த்தும். முயலகன் மீது ஊன்றிய திருவடி மறைத்தல் தொழிலையும், எடுத்த திருப்பாதம் - தூக்கிய திருவடி - அருளல் ஆகிய தொழிலையும் உணர்த்துகின்றன. இக்குறிப்பினை முதன் முதல் உலகுக்கு எடுத்துக் காட்டிய பெருமை திருமூலரையே சாரும். அரன்துடி தோற்றம்; அமைத்தல் திதியாம்; அரன் அங்கிதன்னில் அறையிற் சங்காரம்; அரன் உற்றணைப்பில் அமரும் திரோதாயி; அரனடி என்னும் அனுக்கிரகம்மே" என்பது திருமந்திரம் (2753). இதனை உண்மை விளக்கம் என்னும் சித்தாந்த சாத்திரம் வெண்பா நடையில் தோற்றம் துடியதனில்; தோயுந் திதி அமைப்பில்; சாற்றிடும் அங்கியிலே சங்காரம்; ஊற்றமாய் ஊன்று மார்ப்பதத்தே உற்றதிரோ தம்முத்தி நான்ற மலர்ப்பதத்தே நாடு" என்கிறது.

சைவப் பெருமக்களுக்கு மந்திரமாகவும் பிறவிப் பிணிதீர்க்கும் மருந்தாகவும் திகழ்வது ஐந்தெழுத்து. நாதன் நாமமாகவும் பாசத்தை வெல்லும் படைக்கலமாகவும் விளங்குவது நமசிவாய என்னும் ஐந்தெழுத்து மந்திரம். அந்த ஐந்தெழுத்தின் வடிவமாக நடராசப் பெருமானின் உருவத்தைக் காட்டுவர். நற்றவத்தோர் தாம் காண நாதாந்தத்து அஞ்செழுத்தால் உற்று உருவாய் நின்றாடல்" என்பர் உண்மை விளக்க ஆசிரியர். இந்த ஐந்தெழுத்தினை நமசிவாய எனவும் சிவாயநம எனவும்

இருவகையாகக் காட்டுவர். சிவாயநம எனச் சொல்லும் முறையில் இடையில் - நடுவில் உள்ள யகரமாகிய ஆன்மாவிடத்திலே ஆன்மாவின் பிறப்பறுதற்காக ஐந்தெழுத்தினைத் திருமேனியாகக் கொண்டு அம்பலத்தில் ஆடுகிறான் அவன். நமசிவாய என்னும் போது அதிலுள்ள ந என்பது கூத்தப் பெருமானின் திருவடியிலும், ம என்பது அவனது உந்தியிலும், சி என்பது அவன் தோள்களிலும், வ என்பது திருமுகத்திலும், ய என்பது அவன் திருமுடியிலும் உள்ளன என்று உண்மை விளக்கம் உரைக்கிறது. சிவாயநம என்று சொல்லும் முறையில் நோக்கினால் சி என்பது உடுக்கை இருக்கும் திருக்கையிலும், வ என்பது வீசும் திருக்கையிலும், ய என்பது உயிர்களுக்குத் தஞ்சம் அளிக்கும் அபயகரத்திலும், ந என்பது நெருப்பேந்திய திருக்கையிலும், ம என்பது முயலகனை மிதித்து நிற்கும் திருவடியிலும் இருப்பதாக அந்நூல் எடுத்துக் காட்டுகின்றது. இவ்வாறு அஞ்செழுத்தை நெஞ்சமுழுத்தும் போது நமக்கு எப்போதும் ஆடல்வல்லானின் அற்புதக் கூத்து கண்முன்னே தோன்ற வேண்டும்.

ஓம் என்னும் பிரணவம் மந்திரங்களுக்கெல்லாம் அடிப்படையானது; வேதத்திற்கு வித்தாக இருப்பது. நடராசப் பெருமானின் நடனத்திருக் கோலத்தினைச் சுற்றி நிற்கும் திருவாசியே இந்த ஓங்காரம் ஆகும். அந்த ஓங்காரத்தினின்றும் நீங்காது நிற்கும் திருவைந்தெழுத்தே நிறைசுடராக விளங்கும் பெருமானின் திருவுருவாகும். இதனைத் தன்முனைப்பற்றவர்களே அறிவர். அறிந்த பின் பிறப்பற்றுப் பேரின்பம் அடைவர். திருமூலரும் பஞ்சாக்கரம் பற்றிய விளக்கங்களை அடுத்துத் திருக்கூத்துப் பற்றிப் பேசுவதன் நுட்பமும் இதைத் தான் விளக்குகிறது. ஐந்தெழுத்து அடையும் வழி; அடையும் குறி ஆடல் வல்லான். அவனருளாலே அவன்றாள் வணங்குவது

என்பது போல இரண்டும் ஒன்றாக நின்றநிலை உண்டு; இதுவே நடராச வடிவம்.

ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்களை நீக்கிய நிலையில் தான் ஆன்மா வீடு பேறு பெற முடியும். இவற்றுள் கட்டுப்பட்ட நிலையில் ஆன்மா விடுதலை அடைய வழி இல்லை. எனவே இவற்றிலிருந்து ஆன்மாவை நீங்கச் செய்து வீடுபேறளித்துப் பேரின்பத்துக்குள் ஆழ்த்துகிறான் இறைவன். அதுவே சைவசித்தாந்தம் காட்டும் ஆன்ம இலட்சியம். இதனையும் நடராசப் பெருமான் திருவுருவம் நவில்கிறது. நடராசப் பெருமான் உடுக்கை ஏந்திய கையினால் மாயையை நீக்கித், தீ ஏந்திய கையினால் கன்மமலத்தைச் சுட்டெரித்து, முயலகன் மீது ஊன்றிய திருவடியினால் ஆணவமலத்தின் ஆற்றலை ஒடுக்கி, தூக்கிய திருவடியினால் ஆன்மாக்கள் பிறவிப் பெருங்கடலிலிருந்து நீங்க அருள்புரிந்து, திருவடியைக் காட்டி நிற்கும் திருக்கரத்தினால் ஆன்மாவை ஆனந்த வெள்ளத்தில் அழுத்தித் திளைக்கச் செய்து அருள் புரிகிறான். ஏன் இவ்வாறு செய்கிறான் ? ஆன்மாக்களிடம் கொண்ட பெருங்கருணையால் தான். இது தான் எந்தையார் பரதம்" என உண்மை விளக்க ஆசிரியர் உரைப்பர். மும்மலமும் தன்முனைப்பும் அற்ற முனிவர்களுக்கே இத்திருக்கூத்தின் மெய்ம்மை நன்கு விளங்கும். அவர்கள் இறைவன் அருளும் பேரின்பத்தில் திளைக்குமாறு இத்திருக்கூத்து நிகழும்.

உரையுணர்வுக்கு எட்டாத ஒருவன் ஐந்தெழுத்தினால் கருணையே கொண்டு பராசக்தியே திருஅம்பல இடமாகக் கொண்டு அவ்வருட்சக்தி காணுமாறு ஆடுகின்றான்; நடராசப் பெருமானின் திருக்கூத்து நிகழும் போது அவன் முகம் சற்று திரும்பி அருகிலுள்ள அம்மையை நோக்கி இருக்கும். ஏன்? குமரகுருபரர் காரணம் கூறுகின்றார். நடராசப் பெருமானின் ஐந்தொழில்

கூத்தின் அற்புதத் தத்துவத்தைக் கூறியபின் அவர் இத்தொழிலைந்தும் நின்மெய்த் தொழிலாகப் பாலுண்குழவி பசுங்குடர் பொறாதென, நோயுண் மருந்து தாயுண்டாங்கு, மன்னுயிர்த் தொகுதிக் கின்னருள் கிடைப்ப வைய மீன் றளித்த தெய்வக் கற்பின் அருள்சூற் கொண்ட ஐயரித்தடங்கட் டிருமாண் சாயற் றிருந்திழை காணச், சிற்சபை பொலியத் திருநடம் புரியும் அற்புதக் கூத்து" என்று காரணத்தை விளக்குகிறார். நோயுண்ட குழந்தைக்குத் தாய் மருந்துண்டு காப்பது போல நமக்காக அம்மை அந்த நடனத்தின் வேக ஆற்றலைத் தாங்கிக் கொண்டு நம்மிடம் அன்பு செலுத்தும் வகையில் மாற்றிக் கொடுக்கிறாள்.

நடராசப் பெருமானின் பரந்த திருமுகமண்டலம் இறைவனின் தலைமைத் தன்மை, தண்ணளித்திறன், அழியா அழகு ஆகியவற்றை உணர்த்துகிறது; பனித்த சடை ஞானமாகும்; சடையிலுள்ள கங்கை அவனது பேராற்றலையும், வேகம் கெடுத்தாளும் வித்தகத்தினையும் காட்டும் அடையாளம்; பிறைச் சந்திரன் தன்னைச் சரணடைந்தார் தாழ்வு நீக்கித் தாங்கும் தன்மையைக் குறிக்கிறது; குனித்த புருவமோ தன்பாற் குறையிரக்கும் அடியார்களின் வேண்டுகோளைக் கூர்ந்து கேட்கும் கருணைத் திறமாகும்; குமிண் சிரிப்பு அடியார்க்கு வாழ்வளிப்பதைக் காட்டும். பவளமேனி - தீ வண்ணம் - அடியார் மாசுகளைச் சுட்டெரிக்கும் ஆற்றலைக் காட்டும். பால் வெண்ணீறு அழிவிலாத் தன்மைக்கும் தூய இயல்பினுக்கும் அறிகுறி. முயலகன் ஆணவ மலத்தின் அடையாளம். ஆணவமலம் என்றும் அழிவதில்லை. அது போலவே முயலகனும் இறைவன் திருவடிக்கீழ் விளங்குகிறான். இறைவனுக்குப் படி நிலையாய் அமைந்து உதவுவது போல முயலகன் காணப்படுகிறான். அதுபோல ஆணவமலமும் உயிர்களின் இறையின்ப நுகர்ச்சிக்கு ஓராற்றால் காரணமாகிறது. மாயாதே தன் சக்தி மாய்ந்து" முத்தி நிலையில் உயிர்களின் பால் ஆணவமலம் அடங்கிக் கிடப்பது

போல முயலகனும் இறைவனின் திருவடிக் கீழ் மாயாதே தன் சக்தி மாய்ந்து கிடக்கிறான்.
எல்லாத் திருக்கோயில்களிலும் நடராசப் பெருமான் திருவுருவம் தெற்கு நோக்கியே வைக்கப்பட்டிருக்கும். ஏன்? தெற்குத் திசை எமனுக்குரிய திசை. இறைவன் தன்னை வழிபடும் அடியார்க்குத் தெற்கே இருந்து வரும் எமபயம் நீக்கிடவே தெற்கு நோக்கி ஆடுகிறான் என்பர்.

மூலாதாரம் தொடங்கி ஆறாதாரங்களும், இடை, பிங்கலை, சுழுமுனை ஆகிய நாடிகளும் நடுவே நிலைபெறும் மேருதண்டமும் யோகம் பயிலும் நிலையில் உடலுக்கு எவ்வளவு முக்கியமோ, சமாதி நிலை பெற்று சீவன் சிவமாவதற்கு எவ்வளவு அந்த அமைப்பு அடிப்படையோ, அதுபோல் உலகுக்குத் தில்லை அமைந்துள்ளது என்கிறார் திருமூலர். இந்த யோக நுட்பத்தின் தத்துவத்தினை இவர் நன்கு விளக்குகிறார். யோகத்தின் மேல் எல்லையான நிராதார யோகம் என்பதை திருக்களிற்றுப்படியார் குறிப்பிடுகிறது. மேலும் யோகியர் இந்த யோகத்தின் விளைவால் தில்லைப் பெருமானின் திருவடிச் சிலம்போசை கேட்பர் என்றும் அது கூறுகிறது. சேரமான் பெருமாள் நாயனார் இந்தச் சிலம்போசை கேட்டதாகச் சேக்கிழார் பெரிய புராணம் செப்புகிறது.

நடராசப் பெருமானின் நடனத்தில் அறிவியல் நுட்பமும் உள்ளது. அணுக்கள் எல்லாம் ஏக தாளத்தில் ஆடிக் கொண்டிருக்கின்றன என்பதைக் கண்ட விஞ்ஞானிகள் அதற்கு உரிய காரணம் என்ன என்பதைக் காண முடியாது கலங்கினர். நடராசப் பெருமானின் நடனக் காட்சியைக் கண்ட பின் அவர்கள் அணுக்கள் இயங்க அண்டங்கள் இயங்குகின்றன. அண்டங்கள் இயங்க ஆண்டவனும் நடன மூர்த்தியாக இருக்க வேண்டும்" என்ற முடிவுக்கு வந்தனர். ஐன்ஸ்டீன் என்ற விஞ்ஞான மேதை நடராச வடிவத்தைக் கண்ட

பின்னர் உலக அமைப்புஇயக்கம் பற்றிய என் கருத்துக்கள் அனைத்தும் நடராச வடிவத்தில் நளினமாகவும் தெளிவாகவும் விளக்கப் பெற்றுள்ளன" என்று குறிப்பிடுகிறார்.

ஆனந்த குமாரசாமியும் நடராச வடிவத்தின் தத்துவத்தை மூன்று கூறுகளாகக் கொண்டு விளக்குகிறார். திருவாசியினை அடையாளமாகக் கொண்டு அண்டங்கள் அனைத்தும் இயங்கக் காரணமாக இருக்கும் லயத்துடன் கூடிய நடனமாகக் காண்பது ஒரு கூறாகும். இரண்டாவது கூறு இந்த நடனத்தின் நோக்கத்தைக் கூறுகிறது. எண்ணற்ற ஆன்மாக்களைப் பிறவி நோயிலிருந்து விடுவிப்பதே இதன் நோக்கம் என்பதாகும். மூன்றாவது இந்நடனம் நிகழுமிடமாகிய சிதம்பரம் என்பது அண்டத்தின் நடுவிடமாக இருந்தாலும் அது உண்மையில் பிண்டத்தின் நடுவிடமாகிய இதயக் கமலமே என்பதாகும். கலை, தத்துவம், அறிவியல், கடவுள் தன்மை ஆகியவற்றின் கூட்டுக் கலப்பாகக் கண்ட வடிவமே நடராச பெருமானின் வடிவம் என்பது அவரின் கோட்பாடாகும்.

இவ்வாறு எண்ணற்ற தத்துவங்களின் இருப்பிடமாய்த் திகழ்வது நடராச வடிவமாகும். இந்த நடராச வடிவம் சிற்பக் கலையின் அற்புதமாகவும் அமைந்துள்ளது. இதனைக் கண்ட சைவர்களின் மதி நுட்பம் தான் என்னே ! எனவே தான் இந்துவாழ் சடையான் ஆடும் எல்லையில் தனிப்பெருங் கூத்து" என்றும் சேக்கிழார் பெருமான் கூறுகிறார். திருக்களிற்றுப்படியார் இன்று இச்சமயத்தின் அல்லது மற்றேழையுடன் ஒன்று சொலி மன்றத்து நின்றவரார்?" என்ற கேள்வியைக் கேட்கிறது. நடராஜ வடிவம் சைவத்திற்கே உரிய தனிச் சிறப்பு; சைவம் உலகுக்கு வழங்கிய கொடைகளில் சாலச் சிறந்த ஒன்றுமாகும் !

கற்பனை கடந்த சோதி கருணையே உருவமாகி
அற்புதக் கோலம் நீடி அருமறைச் சிரத்தின் மேலாம்
சிற்பர வியோமமாகும் திருச்சிற்றம்பலத்துள் நின்று
பொற்புற நடஞ்செய்கின்ற பூங்கழல் போற்றி போற்றி

- சுபம் -

# இரதம் உணர்த்தும் தத்துவம்

சுப. திண்ணப்பன்
தேசிய கல்விக் கழகம், சிங்கப்பூர்

திருக்கோயில்களில் பத்து அல்லது பன்னிரண்டு நாட்கள் மிகச் சிறப்பாகப் பூசைகள் நடத்தி அங்குள்ள இறைத் திருவுருவங்களைப் பலவித வாகனங்களின் மேல் எழுந்தருளச் செய்து கோயில் பிரகாரங்களிலும் வீதிகளிலும் நடத்தும் விழாவுக்குத் திருவிழா என்று பெயர். சமஸ்கிருதத்தில் இதனை உத்சவம் என்று கூறுவர். உயிர்களாகிய நமக்காக இறைவன் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய ஐந்தொழில்களைச் செய்கிறான். இவற்றை விளக்குவது தான் திருவிழாவாகும். திருவிழாக்களில் கோயிலில் உள்ளிருக்கும் இறைவன் கோயிலுக்கு வெளியே வந்து கோயிலுக்கு வரவியலாதவர்களுக்கும் காட்சி அளித்து அருள் கொடுக்கும் பெருங்கருணைத் திறத்தையும் நாம் உணர்ந்து கொள்கிறோம். இத்தகைய திருவிழாக்களில் ஒன்று இரதத்தில் இறைத் திருவுருவம் எழுந்தருளி வருதலாகும்.

முன்பு ஒரு காலத்தில் தாரகாட்சன், வித்யுந்மாலி, கமலாட்சன் என்னும் மூன்று அசுரர்கள் சிவபூசை செய்து பொன், வெள்ளி, இரும்புக் கோட்டைகளைப் பெற்றனர். பின்பு செருக்கடைந்து அக்கோட்டைகளுடன் பறந்து சென்று தேவர்களுக்கும் மக்களுக்கும் தொல்லையும் துன்பங்களும் விளைத்தனர். தேவர்கள் தொல்லை தாங்க முடியாது இறைவன் - சிவபெருமானிடம் - சென்று முறையிட்டனர். அந்த அசுரர்களின் இறுமாப்பை அடக்குவதற்காகச் சிவபெருமான் இரதம் ஏறினான். அதாவது பூமியையே - நிலத்தையே - ஆண்டவன் இரதமாகக் கொண்டான். இந்தப் பூமியாகிய தேரில் நான்கு வேதங்களும்

நான்கு வெள்ளைக் குதிரைகளாகப் பூட்டப்பட்டன. இங்கு பூமியாகிய தேரில் நான்கு வேதங்களும் நான்கு வெள்ளைக் குதிரைகளாகப் பூட்டப்பட்டன. இங்கு வேதம் என்பது அறிவைக் குறிக்கும். இந்த இரதத்தைச் செலுத்துகின்ற சாரதி பிரமா எனப்படும் நான்முகன். இவனின் ஒவ்வொரு முகமும் ஒவ்வொரு திசையைக் குறிக்கும். இவன் வாயிலாக நில உலகெங்கும் அறிவு பரவுதல் வேண்டும். பூமியாகிய இரதத்தை வேதமாகிய குதிரைகளைப் பூட்டி ஒழுங்காக நடத்துபவன் பிரமா. இந்த இரதத்திற்குச் சக்கரங்களாக இருப்பவர் சூரியனும் சந்திரனும் ஆவர். நிலவுலகத்திற்கு ஒளியூட்டி இயக்குபவர்கள் இவர்கள் இருவர் தாமே. உயிர்களுக்கு வெம்மை தருபவன் சூரியன், தண்மை தருபவன் சந்திரன், வெம்மையும் தண்மையும் உயிரினை இயக்கும் இயல்பின அல்லவா ?

இரதத்தில் எழுந்தருளிவரும் இறைவன் கையில் ஒரு வில் உண்டு. மேரு மலையே இந்த வில்லாகும். இந்த வில்லுக்கு அம்பாக உள்ளவர் விஷ்ணு. அதன் நுனி அக்கினிதேவன் எதிரிகளை அக்கினி எரிக்கும் அல்லவா ? வில்லுக்கு நாணாக விளங்கியது வாசுகி எனும் பாம்பு. இந்த இரதத்தின் இறகுகளாக உள்ளவன் வாயு (காற்று). இறைவன் இத்தகைய போர்க் கோலத்துடன் திரிபுரங்களாகிய மூன்று அசுரர் கோட்டைகளையும் அம்பு எய்தித் தாக்கத் தொடங்கும் போது இரதத்தின் உறுப்புகளாக வந்தவர்கள் எல்லாரும் தம்மால் தான் இறைவன் திரிபுரம் அழிக்கப் போகிறான் என எண்ணத் தலைபட்டனர். இந்த நிலையினை உணர்ந்த இறைவன் இவர்களை எண்ணிச் சிரித்தான். இச்சிரிப்பின் ஆற்றலால் திரிபுரம் தீப்பட்டது. மேற்கூறிய மூன்று அசுரர்களும் அழிந்தனர். தேவர்கள் துன்பம் நீங்கி இன்பம் பெற்றனர். இங்கு கூறப்பட்ட மூன்று அசுரர்கள் என்பவர்கள் (கோட்டைகள் என்பன) உயிர்களாகிய நமக்கிருக்கும் ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்களைக் குறிப்பன.

இம்மலங்களை இறைவனின் திருவருட்சக்தி நிலவுலகமாகிய தேரில் எழுந்து வந்து எரித்தொழித்துப் பேரின்பத்தைத் தருவதையே இரதத்தில் இறை எழுந்தருளும் காட்சி நமக்கு உணர்த்துகிறது. முப்புரமாவது மும்மலகாரியம் என்பது திருமந்திரம், இரதத் திருவிழா தொடர்பாக இன்னொரு கதையும் உண்டு.

பகாக்ஷன் பொருட்டுச் சிவபெருமான் வேதங்கள் நான்கும் தேராகவும் உபநிடதங்கள் குதிரைகளாகவும், உமையவள் சாரதியாகவும், ஓம் என்னும் பிரணவன் சவுக்காகவும், காலச் சக்கரம் வில்லாகவும், மகாமாயை நாணாகவும் அமையப் பாசுபதாஸ்திரம் கொண்டு அந்த அசுரனது வலிமையை அடக்கியதாகவும் அந்தக் கதை கூறும்.

இரதத்திருவிழா யோகத்துடன் தொடர்புடைய ஒன்றாகவும் கருதப்படும். இரதத்தின் அமைப்பு அண்டத்தையும் பிண்டத்தையும் குறிக்கும். நம் உடலே இரதம், இந்த இரதத்தினை உள்ளிருந்து இயக்குபவன் இறைவன். தசவாயுக்களாகிய சக்கரங்களை நிறுத்தி அசைவற்ற மனத்தை உந்தி, குண்டலியிலிருந்து நாபிக்கும் அதிலிருந்து கழுத்திற்கும், பின் வாய்க்கும், ஏற்ற லயப்படுத்தி முறையே இரதக் குதிரையாம் மூக்கிற்கும் பின் புருவமத்திக்கும் ஏற்றி லயப்பட்டுச் சும்மா இருந்தபடியே இருக்கும் பேரின்ப நிலையையே யோகநிலையில் இரதத்திருவிழா குறிப்பதாகக் கொள்வர்.

ஐந்தொழில் நிலையில் இறைவனின் அழித்தல் தொழிலைக் குறிப்பது தான் இரதத் திருவிழா. அழித்தல் என்பது ஆண்டவன் இவ்வுலகில் பிறந்து பிறந்து துன்பப்படும் உயிர்களைச் சற்று இளைப்பாற்றும் பொருட்டுத் தன்னகத்தே இழுத்து ஒடுக்கி வைத்துக் கொள்ளும் அருள்நிலையைக் குறிப்பதாகும். மேலும்

யான், எனது என்னும் செருக்கினையும் இருவினைகளையும், உலகப் பற்றினையும் அழித்து நமக்குப் பேரின்பத்தையும் ஞானத்தையும் வீடுபேற்றையும் அளித்தலையே இரதத்தில் இறைவன் எழுந்தருளும் நிகழ்ச்சி நமக்கு உணர்த்துகிறது.

# நவராத்திரிக் கலைவிழா

## சிறப்பு விருந்தினர் பேராசிரியர் சுப.திண்ணப்பன் உரை.

‘சைவத்தையும் தமிழையும் இருகண்களாகக் கருதி இடையராது நற்பணியாற்றும் செண்பக விநாயகர் ஆலய சைவசமயப் பள்ளியின் நவராத்திரிக் கலைவிழா நிகழ்ச்சிக்கு சிறப்பு விருந்தினராக என்னை அழைத்த மேலாண்மைக் குழுவினர்க்கும், பள்ளியின் முதல்வர் தொண்டின் திருவுருவம் சிவசுப்பிரமணியம் அய்யா அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். கடவுட் பணியுடன் கல்விப்பணி, தமிழ்ப் பணி, சமயப்பணி, சமூகப்பணி, நாட்டுப் பணி முதலிய பலவகையிலும் சிறப்பாகச் செயலாற்றி முன் மாதிரிக் கோயிலாகத் திகழும் இக்கோயில் நிர்வாகத்தினருக்கு என் பாராட்டுக்கள்.

வளரும் பயிர்களான குழந்தைகளுக்குச் சமய அறிவையும் தமிழையும் ஊட்டுவதற்காக ஞாயிறு தோறும் பேருந்துகள் வைத்து சிங்கப்பூரின் பல வட்டாரங்களிலிருந்தும் குழந்தைகளை அழைத்து வருவது போற்றத்தக்கது. இளையர்களுக்குச் சைவசித்தாந்த வகுப்பு நடத்துவதும் நல்ல பணியாகும்.

நவராத்திரிக் கலைவிழா! நவராத்திரி என்றால் ஒன்பது இரவுகள் என்று பொருள். முதல் மூன்று இரவுகள் உடலுக்கு உரமூட்ட உதவும் - வீரத்தைத் தரும் சக்தியை – உமையம்மையாராகிய மலைமகளை வணங்குகிறோம். இரண்டாம் மூன்றாம் இரவுகள் செல்வத்தைத் தரும் இலக்குமியாகிய அலைமகளை வழிபடுகிறோம். அடுத்த மூன்று இரவுகள் கல்வியை வழங்கும் சரஸ்வதியாகிய கலைமகளை வணங்குகிறோம். இந்த மூவரின் அருளைப் பெற சைவத் திருமுறை ஆசிரியரான ஞானசம்மந்தப் பெருமான் ஒரு வழியைக் கூறுகிறார். திருவீதிமிழலை என்னும் ஊரிலுள்ள சிவபெருமானைப் பாடிய சீர்காழித் தலைவராகிய தமிழ்விரகர் ஞானசம்பந்தரின் பாடல்களை மனமகிழ்ச்சியுடன் பாடிப் பயில்கின்றவர் ‘எழில்மிக்க மலர்மகள், கலைமகள், செயமகள், புகழ்மகள் ஆகிய நால்வர் அருள்பெற்று இந்த உலகில் இனிது வாழ்வார்கள் என்று கூறுகிறார். இப்பாடலில் புகழ்மகள் அருளும் கூடுதலாகக்கிடைக்கும் என்று சொல்லப்படுகின்றது. எனவே சைவ வேதமாகிய திருமுறைகளைப் பயில்வதன் பயனை உணர்ந்து சைவப்பெருமக்கள் திருமுறைப் பாடல்களைப்பாடி இறை அருள்பெற வேண்டுகிறேன்.

கலைவிழா! உள்ளதை உள்ளபடி உரைப்பது அறிவியல், உள்ளதை உணர்ந்தபடி உரைப்பது கலை. கலைஞன் தன் அனுபவத்தைக் கற்பனை நயம் தோன்ற அழகுணர்ச்சியுடன் கல்லாலோ, மண்ணாலோ, வண்ணத்தாலோ, சொல்லாலோ வடித்துக் கலைவடிவம் தருகிறான். கல்லால் வடித்தால் அது சிற்பக்கலை, மண்ணால் வடித்தால் அது பொம்மை, வண்ணத்தால் அமைத்தால் அது ஓவியம், சொல்லால் செய்தால் அது பாடல்-இலக்கியம். இத்தகையக் கலையைக் கடவுளுடன் இணைத்துப் பார்த்தவர்கள் இந்தியர்கள். இந்திய நாட்டுக்கலையின் தனித்தன்மை இதுவாகும். மேல்நாட்டுக் கலையில் இந்த இயல்பு இல்லை.

கி.பி 6,7,8ஆம் நூற்றாண்டுகளில் சமணர்கள், கலை காமத்தை விளைவிக்கும் என்று சொல்லிக் கலையை வெறுத்து ஒதுக்கிய கால கட்டத்தில் நம் திருமுறை ஆசிரியர்கள் கடவுளைக் கலையின் வடிவமாகக் கண்டு போற்றினார்கள். 'கலையவன், மறையவன்' என்று ஞானசம்பந்தரும், இயல், இசை, நாடகமாகிய முத்தமிழும் ஆனான் கண்டாய்' என்று சுந்தரரும் சிவபொருமானைப் பாடியுள்ளனர். எல்லாக் கலைகளும் ஒன்றாக இணைந்தகலை பரதநாட்டியக்கலை. பரதநாட்டிய தெய்வமாக நடராசப் பெருமானைத் தமிழர்கள் சிற்பமாகக் கண்டனர். கலை, அறிவியல், தத்துவம் என மூன்றும் கலந்த கடவுள்சிலை நாடகவடிவம் என்று உலகிற்குக் காட்டிய பெருமை இலங்கைத் தமிழராகிய ஆனந்தகுமாரசாமி அவர்களையே சாரும். Dance of Siva என்னும் அவரது ஆங்கில நூலே நாடக வடிவத்தின் சிறப்பை உலகறியச் செய்தது. அந்த வடிவத்தை மேடையில் அமைத்து நால்வர் பெருமக்களையும் அடியில் அமரச்செய்து இந்தக் கலைவிழா நிகழ்ச்சிகளைச் சிறுவர்களைக்கொண்டு மிகச் சிறப்பாக நடத்தியது பாராட்டத் தக்கதாகும்.

குமரகுருபர் பாடிய சகலகலாவள்ளிமாலைப் பாடல்களைப் பாடி நிகழ்ச்சி தொடங்கியது நல்லது. மேலும் சிறுவர்களின் கலைநிகழ்ச்சிகள் அனைத்தும் காலம், இடம் கடந்த நிலையிலும், சமூக மாற்றத்தைச் சித்திரிக்கும் வகையிலும் அமைந்திருந்தன. எனவே, இதில் கலந்துகொண்ட குழந்தைகளுக்கும், இவர்களுக்குப் பயிற்சி கொடுத்த ஆசிரியர் பெருமக்களும், ஆதரவு நல்கிய பொற்றோர்களுக்கும் என் பாராட்டினையும் வாழ்த்தினையும் தெரிவித்துக் கொள்கிறேன். நன்றி.

# சிலப்பதிகாரத்தில் சிவகிருஷ்ணர்

பேராசிரியர் டாக்டர் சுப. திண்ணப்பன்
சிங்கப்பூர் தேசிய பல்கலைக் கழகம்
சிம் பல்கலைக்கழகம், சிங்கப்பூர்.

சிலப்பதிகாரம் செந்தமிழில் தோன்றிய முதல் காப்பியம். இளங்கோவடிகளால் கி.பி இரண்டாம் நூற்றாண்டில் இயற்றப் பெற்ற நூல். ஐம்பெருங்காப்பியங்களில் முதலாவதாக வைத்துப் போற்றப்படும் சிறப்புடையது. பூம்புகாரில் தோன்றிய கோவலன், கண்ணகி வாழ்க்கை வரலாற்றைப் பாடுபொருளாகக் கொண்டது. அறத்தின் வலிமை, ஊழின் ஆற்றல், கற்பின் பெருமை ஆகியவற்றை வலியுறுத்துவதே இந்நூலின் நோக்கமாகும். குடிமக்கள் காப்பியம், தமிழ்நாட்டின் தேசிய காப்பியம், வரலாற்றுக் காப்பியம், முத்தமிழ்க் காப்பியம், பெண்ணின் பெருமை பேசும் காப்பியம், சமயப் பொறையைக் கூறும் காப்பியம் என்றெல்லாம் போற்றப்படும் இந்நூலைப் பாரதியார் "நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் என்னும் மணியாரம் படைத்த தமிழ்நாடு" என்று பாராட்டிப் பாடுகிறார். இந்நூலில் இடம்பெறும் சிவகிருஷ்ணரைப் பற்றிச் சிறிது விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## பெரியோனும் நெடியோனும்

சிவன்/சிவம் என்பது தமிழர் கண்ட இருபெருஞ் சமய நெறிகளில் ஒன்றாகிய சைவ சமயம் போற்றும் முழுமுதற் கடவுளின் பெயர். "சிவனெனும் நாமம் தனக்கே உடைய செம்மேனி அம்மான்" என்று சைவ அடியார் திருநாவுக்கரசர் இதனைக் கூறுவார். கிருஷ்ணர் என்பதோ தமிழரின் மற்றொரு சமய நெறியாகிய வைஷ்ணவ சமயம் போற்றும் திருமாலின் பத்து அவதாரங்களில் ஒன்றாகும். சிலப்பதிகாரம், பூம்புகார் நகரக் கோயில்களை இந்திரவிழாக் கொண்டாடும் சூழ்நிலையில் பட்டியலிடுகிறது. அப்போது

"பிறவா யாக்கைப் பெரியோன் கோயிலும்
வால்வளை மேனி வாலியோன் கோயிலும்
நீலமேனி நெடியோன் கோயிலும்
மாலை வெண்குடை மன்னவன் கோயிலும்" (இந்திரவிழா 169-17)

எனக் கூறுகிறது. இங்கு பிறவா யாக்கைப் பெரியோன் என்பது உயிரியல்பாகிய, பிறப்பு இறப்பு இல்லாத சிவனை - தாய் வயிற்றிற் பிறவாத உடலை உடைய சிவனைக் குறிப்பிடுகிறது. இது சைவநெறி கூறும் சிவனின் சிறப்புத் தன்மையை - அதாவது "தாயுமிலி தந்தையுமிலி தான் தனியன்" என்று திருவாசகம் கூறும் கூற்றை - பிறவா இறவாத் தன்மையைப் புலப்படுத்துகிறது. அறுமுகச் செவ்வேள் கோயில் முருகன் கோயில். அடுத்து வால்வளை மேனி வாலியோன் என்பது வெண்சங்கு போன்ற நிறத்தை உடைய பலதேவன் கோயிலைக் குறிக்கிறது. பலதேவன் என்பவர் கிருஷ்ணனின் தமையனான பலராமன். இதுவும் திருமால் அவதாரங்களில் ஒன்று. அடுத்து வரும் "நீலமேனி நெடியோன் கோயில்" என்பது நீலமணி போலும் நிறத்தையுடைய நெடியமால் கோயில் என்பதைக் குறிக்கும். எனினும் இங்கு பலராமன் கோயிலை அடுத்துக் குறிப்பிடுவதால் இந்தக் கோயிலைக் கிருஷ்ணன் / கண்ணன் கோயில் எனவும் கருதலாம். எனவே சிலப்பதிகார காலத்தில் பலராமன், கண்ணன் போன்ற அவதார மூர்த்திகளுக்கும் கோயில்கள் இருந்ததை அறிய முடிகிறது. மேலும் திருமால், அறம் தாழ்ந்து மறம் ஓங்கி நிற்கும்போது அவ்வப்போது அறம் தழைக்க அவதாரம் எடுக்கும் எளிவந்த இயல்பினையும் இது காட்டுகிறது எனக் கூறலாம்.

## ஆடலில்

இந்திரவிழாவின் இறுதியில் கோவலன் காதற்கிழத்தியாகிய மாதவி என்னும் நாட்டிய நங்கை ஆடிய பதினோராடல்களில் சிவபெருமான் ஆடிய கொடுகொட்டி, பாண்டரங்கம் ஆகிய இரண்டும், கிருஷ்ணன் ஆடிய ஓராடலும் சிலப்பதிகாரத்தில் கடலாடுகாதையில் குறிக்கப்பெற்றுள்ளன. இந்த ஆடல்களை ஆடுமுன் மாதவி மாயோன் பாணியாகிய திருமால் பாடல் ஒன்றினைப் பாடியதாகவும் கூறப்படுகிறது. சிவபெருமான் ஆடிய ஆடல் குறிப்பு இதோ!

"பாரதி ஆடிய பாரதி அரங்கத்துத்
திரிபுரம் எரியத் தேவர் வேண்ட
எரிமுகப் பேரம்பு ஏவல் கேட்ப
இமையவன் ஆடிய கொடுகொட்டி ஆடல்" (கடலாடு காதை 39-43).

பைரவி ஆடிய சுடுகாட்டில் திரிபுரமாகிய மூன்று கோட்டைகளை எரித்திடுமாறு தேவர்கள் சிவபெருமானை வேண்ட, வடவைப் பெருந்தீயாகிய அம்பு அவன் கட்டளையை நிறைவேற்ற, உமை அம்மை ஒருபக்கமாக நிற்க, தேவர் யாவரிலும் உயர்ந்த சிவபெருமான் ஆடிய கொடுமை மிகு நடனமே கொடுகொட்டியாகும். இங்கு மூன்று கோட்டை என்பது உயிர் (ஆன்மா), வீடு பெறத் தடையாக உள்ள ஆணவம், கன்மம், மாயை என்பனவற்றைக் குறிப்பிடுவதாகத் திருமூலர் கூறுவார். சிவபெருமான் திரிபுரம் எரித்த கதையே சிவபெருமான் தேர் ஊர்வலமாகும். சிவபெருமான் தேரில் வரும்போது நான்கு வேதங்களாகிய குதிரைகளை ஓட்டும் ஓட்டுநராகப் பிரமன் - நான்முகன் காணும்படி சிவபெருமான் ஆடிய ஆடலே பாண்டரங்கமாகும். இதனைச் சிலப்பதிகாரம்

"தேர்முன் நின்ற திசைமுகன் காணப்
பாரதி ஆடிய வியன் பாண்டரங்கம்" (கடலாடு காதை 44-45)

எனக் குறிப்பிடுகிறது. பாரதி என்பது பாரதி வடிவாய - சக்தி வடிவாய சிவனைக் குறிப்பிடுகிறது.

கிருஷ்ணன் ஆடிய கூத்து அல்லியம் என்பது. இதனைக்

"கஞ்சன் வஞ்சம் கடத்தற்காக
அஞ்சன வண்ணன் ஆடிய ஆடலுள்
அல்லியத் தொகுதியும்" (கடலாடு காதை 47-49).

எனச் சிலப்பதிகாரம் கூறுகிறது. தன் மாமனாகிய கம்சனின் வஞ்சகத்தை வெல்வதற்காக மை நிறத்தானாகிய கண்ணன் ஆடிய ஆடலே அல்லியம் ஆகும். கிருஷ்ணாவதார நோக்கமே கம்சனைக் கொல்வதுதானே! எனவே இந்தக் கூத்து கிருஷ்ணன் கம்சன் செய்த பல சூழ்ச்சிகளைப் பற்றிய ஒன்றாக அமைந்திருக்கும். எனவே சிலப்பதிகாரம் கிருஷ்ணனின் வெற்றிகளைப் பற்றிப் பேசும் ஆடலைப் போற்றிய மக்கள் இருந்ததைக் கூறுகிறது அல்லவா?

## மந்திரத்தில்

மதுரைக்குச் செல்லும் கோவலன், கண்ணகி, கவுந்தி அடிகள் மூவரையும் சந்திக்கும் மாங்காட்டு மறையோன் என்பவன் திருவரங்கத்தில் திருமால் கிடந்த வண்ணத்தையும், திருப்பதியில் நின்ற வண்ணத்தையும் பாரட்டிப் பேசும் பேச்சினையும் சிலப்பதிகாரத்தில் கேட்க முடிகிறது. அவனே சிவபெருமானின் சூலத்தைப் "பிறைமுடிக்கண்ணிப் பெரியோன்

ஏந்திய அறைவாய்ச் சூலம்" எனக் கூறுவதாகச் சிலப்பதிகாரம் செப்புதலையும் அறிய முடிகிறது. பிறைச் சந்திரனைச் சூடிய சிவபெருமானை இங்கே காண முடிகிறது. மேலும் அவன் பேச்சில் "அருமறை மருங்கின் ஐந்தினும் எட்டினும் வருமுறை எழுத்தின் மந்திரம் இரண்டும்" எனச் சைவ சமயத்தினர் போற்றும் நமசிவாய என்னும் ஐந்தெழுத்து மந்திரம் பற்றிய செய்தியும், வைணவ சமயத்தினர் போற்றும் நாராயணாய நம என்னும் எட்டெழுத்து மந்திரம் பற்றிய செய்தியும் இடம் பெறக் காணலாம்.

**கொற்றவை வடிவில்**

கோவலன், கண்ணகி, கவுந்தி அடிகள் செல்லும் காட்டு வழியில் வேடர்கள் பாடிய வேட்டுவ வரிப்பாடலில் கொற்றவையைத் தொழுது பாடும்போது சிவன் பற்றிய குறிப்புகள் சில சிலப்பதிகாரத்தில் இடம் பெற்றுள்ளன. கொற்றவையைக் "கண்ணுதல் பாகம் ஆளுடையாள்" (சிவபெருமானின் இடப்பாகத்தினள்) என்றும், "திருமாற்கிளையோள்" (திருமாலின் தங்கை) என்றும், சங்கு சக்கரம் திருமால் ஆயுதம் எனவும், கங்கையை முடிமேல் அணிந்த சிவன் என்றும் குறிப்புகள் உள்ளன.

**கோயிலில்**

மதுரை வந்தடைந்த கோவலன் காலைப் பொழுதில் நெற்றிக்கண் கொண்ட சிவபெருமான் கோயிலையும், கருடச் சேவலைக் கொடியாகக் கொண்ட திருமால் கோயிலையும், கலப்பைப் படை ஏந்திய பலதேவன் கோயிலையும், முருகன் கோயிலையும் கண்டு சென்றதாகச் சிலப்பதிகாரம் கூறுகிறது.

**கோவலன் கண்ணகி கோலத்தில்**

கோவலன் மாதரி என்னும் இடைக்குல மடந்தையின் அடைக்கலமாகக் கண்ணகியுடன் இருந்தபோது கண்ணகி சமைத்த உணவைக் கோவலன் உண்ணும் காட்சியைக் கண்ட மாதரியும் அவள் மகள் ஐயை என்பவளும் அவர்களை முறையே அதாவது கோவலனைக் கண்ணனாகவும் கண்ணகியை நப்பின்னையாகவும் கண்டதாக இளங்கோ பாடும்போது கிருஷ்ண நப்பின்னையைப் பார்க்க முடிகிறது.

"ஆயர்பாடியின் அசோதை பெற்றெடுத்த
பூவைப் புதுமலர் வண்ணன் கொல்லோ
நல்லமுது உண்ணும் நம்பி ஈங்கும்
பல்வளைத் தோளியும் பண்டு நம்குலத்துத்
தொழுனையாற்றினுள் தூமணி வண்ணனை
விழுமம் தீர்த்த விளக்குக் கொல்லென
ஐயையும் தவ்வையும் விம்மிதம் எய்தி" (கொலைக்களக் காதை 46 - 52).

ஆயர்களாகிய இடையர்களின் சேரியில் அசோதை என்பாள் பெற்றெடுத்த காயாம்பூ மலர் போன்ற நிறத்தை உடைய கிருஷ்ணன் (கண்ணன்) போன்று கோவலன் காட்சி அளிக்கிறான். கண்ணகியோ கிருஷ்ணாவதாரத்தில் காளிந்தியாற்றில் துயரம் நீக்கிய நப்பின்னையைப் போலக் காட்சி அளிக்கிறாள். இங்கு கிருஷ்ணன் பற்றிய குறிப்பு நன்கு சிலப்பதிகாரத்தில் குறிப்பிடப் பெறுவதைக் காணலாம்.

**ஆய்ச்சியர் குரவையில்**

கோவலன் கொலையுண்டதால் விளைந்த தீநிமித்தங்களைக் கண்ட ஆய்ச்சியர் திருமாலை வேண்டிக் குரவைக் கூத்து ஆடுகின்றனர். இப்பகுதியில் கிருஷ்ணனைப் பற்றிய பல செய்திகள் (சிலப்பதிகாரத்தில்) இடம் பெற்றுள்ளன. ஆய்ச்சியர் குரவை என்பது ஆயர்பாடியில் எருமன்றத்தில் கிருஷ்ணன் தன் தமையன் பலராமனுடன் விளையாடிய பாலசரித நாடகம் ஆகும்.
"கன்று குணிலாக் கனி உதிர்த்த மாயவன்" என வஞ்சத்தால் வந்து நின்ற பசுவின் கன்றினைக் குறுந்தடியாகக் கொண்டு வஞ்சக விளவின் பழத்தை உதிர்த்த கண்ணனின் செயல் இங்கு பேசப்படுகிறது. குருந்த மரத்தை ஒடித்த கண்ணனின் பெருஞ்செயலும் இங்கு பேசப் படுகிறது.

"இறுமென் சாயல் நுடங்க நுடங்கி
அறுவை ஒளித்தான் வடிவு என்கோயாம்
அறுவை ஒளித்தான் அயர அயரும்
நறுமென் சாயல் முகம் என்கோயாம்"

என்று வரும் பாடலில் கோபிகாஸ்திரிகளின் - கன்னியரின் ஆடையை மறைத்து விளையாடிய கண்ணனின் அழகைப் பாடி மகிழும் பெண்களைப் பார்க்க முடிகிறது.
பின்னர் வரும் இரண்டு பாடல்களில் "சூரியனைச் சக்கரத்தால் மறைத்த கடல் நிறத்தவனாகிய கண்ணன் - மயில் கழுத்து போன்ற நிறத்தனாகிய கண்ணன் - தன் அன்னனாகிய பலதேவனோடும், காதலியாகிய நப்பின்னையோடும் காட்சி அளிப்பதையும், அங்கு நாரதர் வீணை இசைப்பதையும் அசோதை தொழுதேத்துவதையும் குறிப்பிடக் காண்கிறோம். பின்னர் மூவேந்தரையும் வாழ்த்திப் பாடும் பாடலில் பாண்டியனைப் பற்றிப் பேசும் பகுதியில் "செழுந்துவரைக் கோகுல மேய்த்துக் குருந்து ஒசித்தான் என்பரால்" எனப்படுகிறது. இங்கு வளமிக்க துவாரகை நகரில் பசுக்கூட்டத்தை மேய்த்துக் குருந்த மரத்தை முறித்த கிருஷ்ணனைப் பார்க்க முடிகிறது.

அடுத்து வரும் மூன்று பாடல்களிலும் (முன்னிலைத் துதியாக உல்ளன) கிருஷ்ணாவதாரக் குறிப்புகள் உள்ளன.

வடவரையை மத்தாக்கி வாசுகியை நாணாக்கிக்
கடல்வண்ணன் பண்டொருநாள் கடல்வயிறு கலக்கினையே
கலக்கியகை யசோதையார் கடைகயிற்றால் கட்டுண்கை
மலர்க்கமல உந்தியாய் மாயமோ மருட்கைத்தே

அறுபொருள் இவனென்றே அமரர்களும் தொழுதேத்த
உறுபசிஒன்றின்றியே உலகடைய உண்டனையே
உண்டவாய் களவினால் உறிவெண்ணெய் உண்டவாய்
வண்டுழாய் மாலையாய் மாயமோ மருட்கைத்தே

திரண்டமரர் தொழுதேத்த திருமால் நின் செங்கமல
இரண்டடியான் மூவுலகும் இருள்தீர நடந்தனையே
நடந்த அடி பஞ்சவர்க்கு தூதாக நடந்த அடி
மடங்கலாய் மாறட்டாய் மாயமோ மருட்கைத்தே (ஆய்ச்சியர் குரவை).

முதற்பாடலில் மந்தரமலையை மத்தாகவும், வாசுகி என்னும் பாம்பினை கயிற்றாகவும், கொண்டு பாற்கடலின் நடுவிடத்தைக் கலக்கியவன் கடல் நிறத்தவனாகிய கண்ணன் என்றும், அவன் கை அசோதையார் கயிற்றால் கட்டுண்ட கை என்றும், தாமரை மலர் போலும் உந்தியை உடையவன் கண்ணன் என்றும் கூறப்படும் செய்திகள் கண்ணனின் அருமையையும் பெருமையையும் ஒருங்கே உணர்த்துகின்றன.

இரண்டாவது பாடலில் வளமிக்க துளசி மாலையணிந்த கண்ணனை விளித்து அறுவகைச் சமயத்தாலும் அறுதியிட்டுத் துணிந்த பொருள் கண்ணனே என்று தேவர்கள் போற்றுவதாகக் கூறி, பசி ஒன்றுமில்லாத சூழலில் ஏழுலகையும் கண்ணன் உண்டதாகவும் பேசி, அவ்வாறு உண்டவாய் உறியிலுள்ள வெண்ணெய் திருடி உண்ட வாயன்றோ என்று வியக்கும் நிலையைக் காண்கிறோம்.

மூன்றாம் பாடலில் திருமால் வாமனாவதாரத்தில் மகாபலி சக்கரவர்த்தி கொடுத்த மூவுலகையும் இரண்டு அடிகளால் அளந்த திருவடிகள் மகாபாரதத்தில் பஞ்சபாண்டவர்களுக்காகத் துரியோதனனிடம் தூது சென்றபோது நடந்த திருவடிகள் அல்லவா? எனக் கூறுகிறது.
இம்மூன்று பாடல்களிலும், கண்ணனின் கை, வாய், அடி ஆகியன செய்த அருமையான செயல்களின் பெருமையும் அதே நேரத்தில் கிருஷ்ணாவதாரத்தில் அவற்றின் எளிவந்த நிலையும் (சௌலப்பியம்) பேசப்படக் காணலாம்.

ஆய்ச்சியர் குரவையின் இறுதிப்பகுதியாகிய படர்க்கைப் பரவலில் அதாவது சேய்மை நிலையில் வைத்துப் போற்றும் பாடலின் இறுதிப்பாடலில் கிருஷ்ணாவதாரத்தை இளங்கோவடிகள் மிக உயர்ந்த நிலையில் போற்றுகின்றார். அப்பாடல் வருமாறு:

மடந்தாழு நெஞ்சத்துக் கஞ்சனார் வஞ்சம்
கடந்தானை நூற்றுவர்பால் நாற்றிசையும் போற்றப்
படர்ந்து ஆரணம் முழங்கப் பஞ்சவர்க்குத் தூது
நடந்தானை ஏத்தாத நாவென்ன நாவே
நாரயணா என்னா நாவென்ன நாவே

"அறியாமை மிக்க உள்ளம் கொண்ட கம்சனின் வஞ்சகச் செயல்களை வென்றவன் கண்ணன்; நான்கு திசைகளும் போற்றவும் வேதங்கள் முழங்கி வழிபடவும் பாண்டவர்களுக்காகத் துரியோதனன் முதலிய நூறு பேரிடம் தூது சென்றவன் கண்ணன்; இவனைப் போற்றிப் பாடாத நாக்கு பயனற்ற நாக்காகும். நாராயணா என்று கூறாத நாக்கு என்ன நாக்கு?" என்று இப்பாடல் கேட்கிறது. இங்கே கண்ணனின் மறச்செயல் கம்சனை வென்றது. அறச்செயல் பாரதத்தில் தூது சென்றது. இவ்விரண்டையும் போற்றிப் புகழும் வண்ணம் "நடந்தானை ஏத்தாத நாவென்ன நாவே?" என்று இளங்கோவடிகள் முடித்திருக்கும் திறன் நீள நினைந்து போற்றுதற்குரிய ஒன்றாகும். திருவாய்மொழியில் நம்மாழ்வார்

"கண்ணன் கழலிணை நண்ணும் மனமுடையீர்!
எண்ணும் திருநாமம் திண்ணம் நாரணமே!"

என்று கூறுவதையும் இங்கு ஒப்பு நோக்கி மகிழலாம்.

**குன்றக் குரவையில்**

கொலயுண்ட கோவலன் திருச்செங்கோடு என்னும் குன்றத்தில் தேவனாய் மீண்டும் வந்து அங்கு நின்ற கண்ணகியை விமானத்தில் ஏற்றிச் சென்ற காட்சியைக் கண்ட

குன்றக்குறவர்கள் குரவை பாடி முருகனை வழிபடுகின்றனர். அப்போது முருகனை ஆலமரத்தில் அமர்ந்த சிவபெருமான் மகன் என்றும் கயிலை மலைவாழ் கடவுள் ஆகிய சிவபெருமான் என்றும் கூறுகின்றனர். இங்கே சிவபெருமான் "ஆலமர்செல்வன்" என்றும் "கயிலை நன்மலை இறை" என்றும் புகழப்படுகிறான். முன்னது தட்சிணாமூர்த்திக் கோலம் பற்றியது.

**சமரச நோக்கில்**

இறுதியாகக் கண்ணகிக்கு கல்லெடுக்க இமயம் நோக்கிச் செல்லும் சேரன் செங்குட்டுவன் தமிழரைப் பழித்த கனகவிசயர் மீது படைகொண்டு புறப்படுகிறான். அப்போது திருவனந்தபுரமாகிய ஆடகமாடத்தில் பள்ளிகொண்ட திருமாலின் பிரசாதம் (மலர்மாலை முதலியன) கொணர்ந்து சேரன் செங்குட்டுவன் முன் சிலர் நிற்கின்றனர். கங்கையைச் சடையில் அணிந்த செஞ்சடைக் கடவுளாகிய சிவபெருமானின் சேவடிப்பிரசாதத்தைச் செங்குட்டுவன் தன் தலையில் வைத்திருந்ததால் திருமாலின் மாலையை வாங்கித் தன் மார்பில் தாங்கிக் கொண்டான். இவ்வாறு இளங்கோவடிகள் கால்கோட்காதையில் குறிப்பிடுகிறார். சிவபெருமானின் மாலை சேரன் செங்குட்டுவன் தலையிலும், திருமாலின் மாலை அவன் மார்பிலும் அணியப்பட்ட காட்சி நாம் கடைப்பிடிக்க வேண்டிய சைவ வைணவ சமரச நோக்கினைப் புலப்படுத்துகிறது அல்லவா? தலையில் மூளை இருந்து அறிவாட்சி செய்கிறது. மார்பில் இதயம் இருந்து உணர்வாட்சி செலுத்துகிறது. மூளையும் இதயமும் போன்றவை அன்றோ சைவமும் வைணவமும்!

**முடிவுரை**

இவ்வாறு சிலப்பதிகாரம் சிவனையும் கிருஷ்ணனாகிய கண்ணனையும் தனித்தும் இணைத்தும் பேசும் செய்திகளை இக்கட்டுரையில் கண்டோம். சிவன் பிறவாயாக்கைப் பெரியோன். எனவே கடவுளின் அருமை - அனைத்தும் கடந்த நிலை உணர்த்தப்படுகிறது. கிருஷ்ணன் திருமாலின் அவதார நிலை. எல்லார்க்கும் இறங்கி வந்து எளிவந்த நிலை. உலகெலாம் உணர்ந்து ஓதற்கு அரியவனாக இருக்கும் இறைவன் பக்தர்களுக்காகத் தூது செல்வதும் திருவிளையாடல்கள் புரிவதும் அவனது எளிமையைக் காட்டுகின்றன. அருமையில் எளிமையும் எளிமையில் அருமையும் கொண்டதே சிவகிருஷ்ணர் வழிபாடு என்பதைச் சிலப்பதிகாரம் நமக்கு உணர்த்தும் செய்தியாகக் கொள்ளலாம்..

# அபிராமி அந்தாதி அழகு

பேராசிரியர் டாக்டர் சுப. திண்ணப்பன்

சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகம்

சிம் பல்கலைக்கழகம் சிங்கப்பூர்

அந்தாதி இலக்கியம் என்பது தமிழுக்கே உரிய இலக்கிய வகைகளில் ஒன்று. பிற மொழிகளில் இவ்வகை இலக்கியம் இருப்பதாகத் தெரியவில்லை. அந்தம் என்றால் முடிவு, இறுதி. ஆதி என்றால் முதல், தொடக்கம். அந்தாதி என்றால் ஒரு பாடலின் இறுதியிலுள்ள அடியோ, சீரோ, அசையோ, எழுத்தோ, அடுத்த பாடலுக்கு முதலாக வருமாறு அமைத்துப் பாடுவது. ஒரு நூலின் இறுதிப்பாடலின் முடிவு முதற்பாட்டின் தொடக்கமாக அமையுமாறு மாலை போலத் தொடுத்து முடிப்பது அந்தாதி. இம்முறையால் மனப்பாடம் செய்யவும், பாடவும், நினைவில் வைத்துக்கொள்ளவும் பாடல் வரிசை மாறாமல் அமையவும். நூலை மாலை போல இணைக்கவும் முடிகின்றது. அந்தாதி நூலாக அமையும் போது வெண்பா அல்லது கட்டளைக் கலித்துறை என்னும் பாவகையினால் அமைய வேண்டும்.

**அந்தாதி ஓர் இலக்கிய வகையாக வளர்ந்தது** கி.பி.ஐந்தாம் ஆறாம் நூற்றாண்டிற்குப் பிறகுதான். காரைக்கால் அம்மையார் பாடிய அற்புதத்திருவந்தாதி தான் முதன் முதலில் தோன்றிய அந்தாதி நூலாகும். இது சிவபெருமானைப் பற்றியது. இது பதினோராம் திருமுறைத் தொகுப்பில் உள்ளது. இதனைத் தவிர அத்தொகுப்பில் சேரமான் பெருமாள் நாயனார் பாடிய பொன்வண்ணத்தந்தாதி, நக்கீரர் பாடிய கயிலை பாதி காளத்தி பாதி அந்தாதி, நம்பியாண்டார் நம்பி பாடிய திருத்தொண்டர் திருவந்தாதி ஆகிய நூல்களும் உள்ளன. திருத்தொண்டர் திருவந்தாதி, பெரிய புராணத்திற்கு உறுதுணையாக இருந்த நூல். இது அடியார்களைப் பற்றியது. ஏனைய இரண்டும் சிவ பெருமானைப் பற்றியது. இவ்வாறே நாலாயிரத் திவ்யப்

பிரபந்தத்தில் முதலாழ்வார் மூவரும் பாடிய தனித்தனி அந்தாதிகள், திருமழிசையாழ்வார் பாடிய திருவந்தாதி முதலிய நூல்களும் உள்ளன. இவை திருமால் பற்றியவை. கம்பர் பாடிய சடகோபர் அந்தாதி, சரசுபதி அந்தாதி முதலிய நூல்களும் உள்ளன. மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை பாடிய அந்தாதி நூல்களும் உள்ளன. அருணகிரியார் முருகனைப் பற்றிக் கந்தரந்தாதி என்னும் நூல் இயற்றியுள்ளார். அபிராமி பட்டர் திருக்கடவூர் அபிராமி அம்மையைப் பற்றி (சக்தியைப் பற்றி)எழுதிய அபிராமி அந்தாதி புகழ்மிக்க அந்தாதிகளில் ஒன்று. அது 100 பாடல்களைக்கொண்ட நூல். முதல் பாட்டு உதிக்கின்ற செங்கதிர் என்று தொடங்குகிறது. கடைசிப்பாட்டு அம்மையின் திருவுருவ அடையாளங்கள் பட்டரின் நெஞ்சில் எப்போதும் உதிக்கின்றன என்று முடிகிறது. இவ்வாறு ஆதியும் அந்தமும்- பிறப்பும் இறப்பும்- இல்லாத இறைவிக்கு அந்தாதிமாலை சூட்டியவர் அபிராமிபட்டர்.

**அபிராமி என்னும் சொல்லுக்குப் பேரழகு வாய்ந்தவள் என்று பொருள்**..மனிதர்களாகிய நம் அழகு அழியும் அழகு. ஆனால் அம்மையின் அழகோ என்றும் அழியா அழகு. இதனை அபிராமி பட்டர் தம் அந்தாதியில் “அழகுக்கு ஒருவரும் ஒவ்வாத வல்லி” (71) என்று கூறுகிறார். அழகு வண்ணத்தாலும் வடிவத்தாலும் வருவது. இதனை “மண்களிக்கும் பச்சை வண்ணமும் ஆகி மதங்கர் குலப் பெண்களில் தோன்றிய எம்பெருமாட்டிதன் பேரழகே” (70) என்றும் “வானந்தமான வடிவுடையாள்” (11) “அதிசயமான வடிவுடையாள் அரவிந்தம்- தாமரை- எல்லாம் துதி சயவான சுந்தரவல்லி” (17) என்றும் சொல்கிறார். அணியும் அணிகளாலும் அழகு வரும். ஆனால் அம்மையின் அழகோ அழகு தரும் அணிக்கே அழகு சேர்ப்பது. இதனை பட்டர் “அணியும் அணிக்கழகே”(24) என்று அம்மையை நோக்கி அழைக்கிறார். ஆயிரம் மின்னல்கள் சேர்ந்தாலும் அவள் வடிவுக்கு ஈடில்லை என்கிறார். இத்தகைய பேரழகு வாய்ந்த பெருமாட்டியைக் கண்ணால் கண்டு களித்தவர் அபிராமி பட்டர். இதனை அவரே

“கண்களிக்கும்படி கண்டுகொண்டேன்” (70) என்று அந்தாதியில் அவரே கூறுகிறார். “மொழிக்கும்நினைவுக்கும் எட்டாதது அவள் திருவுரு “என்பது பட்டர் கருத்து. எனவே **அழகு வழிபாடே அபிராமி அந்தாதி ஆகும்.**

**அபிராமிபட்டர் அந்த அழகியை எங்கே கண்டார்.?** அவர் பிறந்த ஊராகிய திருக்கடவூரில் தான். அந்த ஊருக்குப் பல பெருமைகள் உண்டு. தேவாரம் பாடிய திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகிய மூவரும் பாடியுள்ள சிறப்பு அதற்கு உண்டு. சிவபெருமான் மார்க்க்ண்டேயருக்காக் எமனை வென்ற இடம்தான் இது. அதனால்தான் அறுபதாம் ஆண்டு எண்பதாம் ஆண்டு நிறைவு விழாக் காண்போர் இந்த ஊரை நாடி வருகிறார்கள். தேவர்கள் கடைந்த அமுதக் குடம் சிவலிங்கமாக மாறிக் காட்சி அளிக்கும் ஊர். 63 நாயன்மார்களில் குங்கிலியக் கல்ய நாயனார், காரி நாயனார் பிற்ந்து வழிபட்ட ஊர். இத்தகைய ஊரில் அருள்பாலிக்கும் அம்மைதான் அபிராமி.

**அபிராமிபட்டர் அந்த அழகியை எப்போது கண்டார்**? அவர் தஞ்சாவூரை ஆட்சிசெய்த சரபோஜி மன்னர் காலத்தவர். அதாவது 18ஆம் நூற்றண்டை ஒட்டி வாழ்ந்தவர். ஒரு நாள் அம்மையின் பக்தியில் ஆழ்ந்திருந்த பட்டரை நோக்கி “நாளை என்ன திதி” என்று கேட்டான். அதற்கு அவர் “பௌர்ணமி” என்று சொல்லிவிட்டார். இதனைக் கேட்ட மன்னன் “நாளை அமாவாசை அன்றோ? நாளை நிறை மதியைக் காட்டமுடியுமா?” என்று கேட்டான். அதற்கு பட்டர் “அம்மையின் அருளால் முடியும்” என்றார். உடனே அரசன் கடும்தண்டனைக்கு ஆளாக்கினான், அப்போது பட்டர் அபிராமி அந்தாதி பாடி “விழிக்கே அருளுண்டு” என்று தொடங்கும் 71ஆம் பாடலைப் பாடியதும் அம்மை தோன்றித் தம் தோட்டினை வானத்தில் விட்டெறிந்தார். அது முழு நிலவாகக் காட்சி அளித்தது. அரசன் அபிராமி பட்டரின் அருளாற்றலை உணர்ந்து அடிபணிந்தான்.

அபிராமி அந்தாதி ஒரு வித்தியா தத்துவ நூல் . பட்டார் இந்நூலில் அம்மையை மனோன்மணியாகவும் திரிபுரசுந்தரியாகவும் பார்வதியாகவும் புவனேஸ்வரியாகவும் கண்டு வருணிக்கிறார்.. படைத்தல், காத்தல், மறைத்தல் முதலிய தொழிலைச் செய்பவள் சக்தியே என்பது அவர்பார்வை.

“பூத்த்தவளே புவனம் பதிநானகையும் பூத்தவண்ணம்

காத்தவளே பின் கரந்தவளே” (13) என்னும் வரிகள் சான்றாகும். மனிதர், தேவர், மாயா வரம் பெற்ற முனிவர் முதலிய பலரும் வணங்கும் தெய்வம் அபிராமி என்றும் அவர் பாடுகிறார். பயிரவி, காளி, சண்டி, சூலி , வராகி முதலிய பல பேர்களைத் தாங்கி நிற்பவள் அந்த அம்மை என்பதும் அவர் கருத்தாகும்.

**அபிராமி அம்மையின் கடைக் கண் பார்வையின் ஆற்றலை**

“தனம் தரும் கல்வி தரும் ஒருநாளும் தளர்வறியா

மனம் தரும் தெய்வ வடிவும் தரும்நெஞ்சில் வஞ்சம் இல்லா

இனம் தரும் ந்ல்லன் எல்லாம் தரும் அன்பர் என்பவர்க்கே

கனம் தரும் பூங்குழலாள் அபிராமி கடைக்கண்களே” (69)

என்னும் பாடல்வழி பட்டர் வெளிப்படுத்துகிறார். இப்பாட்ல்வழி நாமும் அம்மையை வழிபட்டு அவள் அருளைப் பெறுவோமாக.

ஆத்தாளை எங்கள் அபிராமவல்லியை அண்டமெல்லாம்

பூத்தாளை மாதுளம்பூ நிறத்தாளைப் புவிஅடங்கக்

காத்தாளை அங்கையில் பாசாங்குசமும் கருப்பு வில்லும்

சேர்த் தாளை முக்கண்ணியைத் தொழுவார்க்கொரு தீங்கில்லையே

# ஓங்காரம்

டாக்டர் சுப. திண்ணப்பன்
சிங்கப்பூர் தேசிய பல்கலைக் கழகம்
சிங்கப்பூர்

இந்து சமய அடிப்படையில் இறையின் திருவருளைப் பெற உதவுவது இறை வழிபாடு. இந்த இறை வழிபாடு என்பது இறை உருவத்தை மனத்தால் நினைத்து, வாயினால் இறையின் புகழை ஓதி, உடம்பினால் இறைபணி செய்வதே ஆகும். மனத்தால் நினைப்பது பாவனை எனப்படும். வாயினால் ஓதுதற்கு உறுதுணையாக இருப்பது மந்திரம், உடலால் செய்யும் பணி கிரியையாகும். மந்திரம் என்பது மனத்தின் விளைவாகிய எண்ணத்திற்கும், உடலின் பயனாகிய செயலுக்கும் நடுவே இருப்பது. மந்திரம் என்னும் சொல்லுக்குப் பொருள் இடையூறு வராமல் காப்பது என்று கூறுவர். தமிழ் நூல்களில் தொன்மையான தொல்காப்பியம் மந்திரம் என்பதற்கு வரையறை கூறுகிறது.

'நிறைமொழி மாந்தர் ஆணையில் கிளந்த
மறைமொழி தானே மந்திரம் என்ப'

சொல்லிய சொல்லின் பயனை விளைவிக்கும் அருளாளர்கள், ஆணையிட்டுச் சொல்வது, பொருள் பல மறைந்து இருப்பது தான் மந்திரம் என்பது தான் மேலே கண்ட தொல்காப்பிய நூற்பாவின் கருத்தாகும். இத்தகைய மந்திரங்களில் தலைமையானதாகவும், அடிப்படையானதாகவும் அமைந்த ஒன்று தான் ஓங்காரம் எனப்படும் ஓம் என்பதாகும்.

ஓங்காரம் ஆகிய இந்த மந்திரத்தைத் தாரக மந்திரம் என்றும், பிரணவ மந்திரம் என்றும் பெயரிட்டு அழைப்பார்கள். தாரகம் என்றால் தாண்டச் செய்வது என்று பொருள். அதாவது நமக்குப் பிறவிக் கடலைத் தாண்ட - கடக்க - உதவும் பெரிய தோணியாக இருப்பது ஓம் எனும் மந்திரமே. எனவே தான் இதற்குத் தாரகம் என்று பெயர் வந்தது. பிரணவம் என்னும் சொல்லில் **பிர** என்பது **அதிகம், விசேஷம், சிறப்பு** என்னும் பொருளையும், **நவம்** என்பது **புதுமை, துதிக்கப்படுவது** என்னும் பொருளையும் உணர்த்தும். சொல்லிச் சொல்லி - அனுபவிக்க அனுபவிக்க - சிறப்பான உண்மைகளை உணர்த்துவது ஓங்காரம். மேலும் வாடாமல் எப்போதும் புதுமையாக இருப்பது ஓங்காரம் எனவும் பிரணவம் என்னும் பெயரால் உணர முடிகிறது.

**ஓம்** என்பது **அ, உ, ம்** என்னும் மூன்று ஒலிகளால் உருவான ஒன்று. உயிரொலிகளில் **அ, இ, உ** மூன்றுமே அடிப்படை ஒலிகள் என்பதையும், **அ** ஒலியின் பாதிக் கூறும் **உ** ஒலியின் பாதிக் கூறும் இணைவதால் தான் ஒ ஒலி பிறக்கும் என்பதையும் இக்கால மொழியியல் உணர்த்தும். இது ஓர் ஒலியியல் செய்தியாகும். வாயைத் திறந்தவுடன் ஒலிக்கும் ஒலி **அ** . இதுவே எல்லா ஒலிகளுக்கும் அடிப்படை ஒலி. எனவே தான் திருவள்ளுவரும் தம் முதற்குறளிலே 'அகர முதல எழுத்தெல்லாம்' என்று கூறி உலகிற்குக் கடவுளே முதன்மை என்பதை உறுதிப்படுத்துகிறார். உ என்பது இதழ் - உதடு குவிவதாலும் ம் என்பது இரண்டு உதடுகள் இணைவதாலும் பிறக்கும் ஒலிகளாகும். வாயைத் திறந்தும், இதழ்குவித்தும், உதடு இணைத்தும் உருவாக்கும் ஒலியே **ஓம்** என்பதாகும்.

ஓம் என்னும் உருவாக்கத்திற்கு உதவும் **அ, உ, ம்** ஆகிய மூன்றும் இறைவனின் படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் முத்தொழிலையும் குறிக்கும் எனவும், முக்காலங்களை (இறப்பு, நிகழ்வு, எதிர்) உணர்த்தும் எனவும், மனம், புத்தி, அகங்காரம் ஆகிய மூன்றினைக் காட்டும் எனவும் தத்துவ உலகில் பல்வேறு கருத்துகளைக் கூறுவர்.

ஓம் என்பதை ஓரெழுத்து மந்திரம் என்றும், ஐந்தெழுத்து மந்திரம் என்றும் கூறுபவர்கள் உண்டு. ஓம் என்பதிலுள்ள ம் என்பது முழுமையான மூக்கொலி அன்று என்பதால் இதனை ஓரெழுத்தாகக் கொள்வர். ஐந்தெழுத்து என்பவர்கள் அ, இ, உ ஆகியவற்றுடன் விந்து நாதம் என்பதையும் சேர்த்துக் கொள்வர். அ, இ, உ என மூன்றாகக் காண்பதை வியஷ்டிப் பிரணவம் என்றும், அ, இ, உ, விந்து, நாதம் என்னும்போது சமஷ்டி பிரணவம் என்றும் பெயர் கொடுத்துப் பேசுவர். சமஷ்டி என்னும் போது இறைவனின் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்தொழிலையும் ஓம் உணர்த்துவதாக உரைப்பர்.

'ஓங்காரமாம் ஐந்தெழுத்தால் புவனத்தை உண்டு பண்ணிப்
பாங்காய் நடத்தும் பரம்பொருளே' என்பார் தாயுமானவர்.

சிவபெருமானின் மந்திரமாகச் சைவர்கள் கருதும் நமசிவாய என்னும் ஐந்தெழுத்து மந்திரத்துடன் ஓம் என்பதை ஒப்பிட்டுக் காண்பர். இதைப் போலவே வைணவ சமயத்தினரும் தங்களுக்குரிய **நாராயணாய நம** என்னும் எட்டு எழுத்து மந்திரத்துக்கும் ஓம் என்பதை அடிப்படையாகக் கருதுவர். முருகனை வணங்கும் கௌளமார மதத்தினரும் **சரவணபவ** என்னும் ஆறெழுத்து மந்திரத்துடன் ஓம்-ஐ இணைப்பர். சக்தியை வணங்கும் சாக்த மதத்தினரும் 'ஓம் சக்தி ஓம் சக்தி' என்று இணைத்து ஒலித்து வழிபடுவர். தமிழில் உள்ள வரிவடிவமாகிய ஓம் என்பதன் வடிவமாகவே விநாயகர் இருப்பதால் 'பிரணவ சொருபி' என்று அவருக்குப் பெயர். முருகப் பெருமானின் வாகனமாகிய - தோகைவிரித்துத்

தோன்றும்- மயிலும் ஓம் எனும் நாத தத்துவத்தின் அடையாளமே. எனவே ஓம் எனும் ஓங்காரம் இந்து சமயம் கூறும் எல்லா உட்பிரிவுகளுக்கும் உயிரோட்டமாக விளங்கும் ஒரு மந்திரமாக உள்ளது.

இந்து சமயத்தினர் எந்த மந்திரம் சொன்னாலும் முதலிலும் முடிவிலும் ஓம் என்பதைச் சேர்த்துச் சொல்ல வேண்டும். அதனால் அதற்கு அடிப்படை - பீஜ - மந்திரம் என்று பெயர். 'தூமறைக்கெல்லாம் ஆதியும் அந்தமும் சொல்லும் ஓமெனப்படும் ஓர் எழுத்து' என்று கந்தபுராணம் வேதத்தின் முதலிலும் முடிவுமாகத் திகழ்வது '**ஓம்**' - ஓங்காரமே என்கிறது. **ஓம்** எனும் மந்திரத்தின் உட்பொருளை அறியாத காரணத்தால் படைப்புத் தெய்வமாகிய பிரமனை முருகப் பெருமான் தண்டித்தார் என்று கந்தபுராணம் கூறும். இந்த மந்திரத்தின் உட்பொருளை - உள் ஒளி அறிவை - தேவரில் சிறந்த சிவபெருமானுக்கும், முனிவரில் சிறந்த அகத்தியருக்கும், மனிதரில் சிறந்த அருணகிரியாருக்கும் முருகன் உபதேசித்தான் என உரைப்பர். எனவே தான் பரம்பொருளை அடைய விதிக்கப்படும் உபாசனைகளில் பிரணவ உபாசனை மிகவும் முக்கியமானது என்று கூறுகிறார்கள்.

தமிழ் வேதமாகக் கருதப்படும் திருமுறைகளில் ஓம் எனப்படும் ஓங்காரம் மிகச் சிறப்பாகப் பேசப்படுகிறது. திருமுறை தந்த பெருமக்கள் அனைவரும் கடவுளைக் கண்டு அருள் பெற்ற அருளாளர்கள் - நிறைமொழி மாந்தர்கள். அவர்கள் ஆணையில் கிளந்த - சொல்லிய மறைமொழிகளாகிய மந்திரங்களே திருமுறை வாக்குகளாகும். இந்தத் திருமுறை பன்னிரெண்டு முதல் ஏழு திருமுறைகள் தேவாரம் எனப்படும். திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் கிய மூவரும் அருளிச் செய்த பாடல்கள் இவை. எட்டாம் திருமுறை மாணிக்கவாசகர் அருளிய திருவாசகம். ஒன்பதாம் திருமுறை திருவிசைப்பா, திருப்பல்லாண்டு என்பன. பத்தாம் திருமுறை திருமூலர் அருளிய திருமந்திரம். பதினோராம் திருமுறை காரைக்கால் அம்மையார் உள்ளிட்ட // பேர் பாடிய பாடல்கள். பன்னிரண்டாம் திருமுறை சேக்கிழார் பாடிய திருத்தொண்டர் புராணம் எனப்படும் பெரியபுராணம். இத்தொகுப்பின் முதற்பாடல் - தேவாரத்தின் முதற்பாடல் 'தோடுடைய செவியன்' என ஓகாரத்தில் தொடங்குகிறது. /2ம் திருமுறையின் கடைசிப் பாடல் 'உலகெலாம்' என்னும் சொல்லால் 'ம்' என முடிகிறது. எனவே பன்னிரு திருமுறையின் உள்ளடக்கமே ஓங்காரம் ஆகிய ஓம் எனும் மந்திரமே என உணரலாம்.

கடவுளின் அருளைத் தம் மூன்றாம் வயதிலேயே பெற்று உமையம்மை ஊட்டிய ஞானப்பால் உண்டு தேவாரம் பாடிய திருஞானசம்பந்தர் 'ஓங்காரத்து உட்பொருளாய் நின்றான்' சிவன் என்று பாடுகிறார். 'கண்ணால் யானும் கண்டேன், காண்க' என்று கூறும் மாணிக்கவாசகர் தம் திருவாசகப் பாடலாகிய சிவபுராணத்தில்

'எம்பெருமான்
மெய்யே உன் பொன்னடிகள் கண்டு இன்று வீடுற்றேன்
உய்ய என் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா என ஓங்கி ழ்ந்து அகன்ற நுண்ணியனே!'

என்று தாம் உய்தி பெறும் பொருட்டுத் தம் மனத்தகத்தே இறைவன் ஓங்காரமாகிய 'ஓம்' என எழுந்தருளி உண்மைப் பொருளாய் விளங்குகிறான் என்று கூறுகிறார். எனவே பிறவிப் பெருங்கடலைக் கடக்க உதவும் இறைவன் திருவடி - இறைவன் ஓங்காரமாகவே உள்ளான் என்பதை உணரமுடிகிறது. 'போற்றியோ நமச்சிவாய' என்னும் திருவாசகத் தொடரில் **ஓம்** என்பது **ஓ** ஆகச் சுருங்கி ஒன்றி நிற்பதையும் நாம் காணலாம். திருவாசகத்தின் உட்பொருளாகத் திகழும் நடராசப் பெருமானின் திருவாசியே ஓங்காரம் என உண்மை விளக்கம் எனும் தத்துவ நூல் உரைக்கிறது.

திருமுறைகளில் திருமூலர் அருளிய திருமந்திரமே ஓங்காரம் பற்றி மிகுதியாகப் பேசும் தமிழ் நூலாகும்.

' ஓம் எனும் ஓங்காரத்து உள்ளே ஒருமொழி
ஓம் எனும் ஓங்காரத்து உள்ளே உருஅரு
ஓம் எனும் ஓங்காரத்து உள்ளே பலபேதம்
ஓம் எனும் ஓங்காரம் ஒண்முத்தி சித்தியே.' *(2676)*

என்னும் திருமந்திரப் பாடல் ஓங்காரமே மறைமொழி - மகாவாத்தியம் என்றும், அதுவே உருவாகவும் உருவமற்ற அருவமாகவும் திகழ்வது என்றும், அதில் மக்கள், தேவர், ஞானிகள், யோகிகள் எனப் பல்வேறுபாடான கூறுகள் உண்டு என்றும், அதுவே முத்தி தருவது என்றும் கூறுகிறது.

' ஓங்காரத்து உள்ளே உதித்த ஐம்பூதங்கள்
ஓங்காரத்து உள்ளே உதித்த சராசரம்
ஓங்கார அதீதத்து உயிர் மூன்றும் உற்றன
ஓங்கார சீவ பரசிவ ரூபமே.' *(2677)*

ஓங்காரமே **நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம்** தோன்றக் காரணமாக இருக்கிறது என்றும், உலகிலுள்ள அசையும் பொருள், அசையாப் பொருள் அனைத்துக்கும் ஓங்காரமே மூலம் என்றும், ஒரு மலம் (ஆணவம்) உடைய உயிர்கள், இருமலம் (ஆணவம், கன்மம்) உடைய உயிர்கள், மும்மலம் உடைய (ஆணவம், கன்மம், மாயை) உடைய உயிர்கள் என மூவகை உயிர்களும் ஓங்கார வழியே வந்தன என்றும், ஓங்காரமே (சீவனாகவும்) உயிராகவும்,

உயிர்க்குயிராகவும் திகழும் இறையாகவும் உள்ளது என்றும், இந்தத் திருமந்திரப் பாடல் கூறுகிறது. இத்தகைய சிறப்புடைய

'ஓங்காரத்து உள்ஒளி உள்ளே உதயமுற்று
ஆங்கார மற்ற அனுபவம் கைகூடார்
சாங்காலம் உன்னார் பிறவாமை சார்வுறார்
நீங்கார் சமயத்து நின்று ஒழிந்தார்களே.' (1556)

என்று கூறி நமக்காக வருந்துகிறார் திருமூலர். 'ஓங்காரத்து ஆன்ம ஒளியாகவுள்ள இறைவனை ஆணவமாகிய ஆங்காரத்தை ஒழித்துக் கண்ட அனுபவம் பெறாமல் வீணே சாகிறார்களே! பிறவாமையாகிய பேரின்பத்தைக் கைவிட்டு அலைகிறார்களே' என்னும் திருமூலரின் ஏக்கத்தை - நமக்காகக் கொள்ளும் கழிவிரதத்தை இங்கே காணமுடிகிறது.

இந்த ஓங்கார அனுபவம் சிறுவயதிலே - குழந்தைப் பருவத்திலேயே பெறத் தொடங்கப் பயிற்சி பெற வேண்டும் என்பதற்காகவே இந்து சமயத்தினர் காதணிவிழா செய்கின்றனர். தமிழ் வரிவடிவமான ஓகாரம் போலத் திகழ்கிறது நம் காது. இந்தக் காதில் துளையிடுவது, குத்துவது **ம்** என்னும் புள்ளியினை ஏற்படுத்துவதைக் குறிக்கும். எனவே ஓம் எனும் ஓங்கார மந்திரத்தை ஆச்சாரியன் வாயிலாகக் குழந்தையாக இருக்கும்போதே உபதேசம் செய்வதை இந்தக் காதணிவிழாச் சடங்கு காட்டுகிறது. இந்தக் குரு உபதேசம் பின்னர் நிகழும் வேத உபதேசம், வித்யா உபதேசம் (கல்வி கற்றல்) ஆகியவற்றுக்கெல்லாம் அடிப்படையாகும். மனிதனைப் புனிதமாக்க இந்த ஓம் உபதேசம் உறுதுணையாகிறது. அதனால்தான் இறந்த பச்சிளங்குழந்தைக்குக் கூடக் காது குத்திப் புதைக்கும் வழக்கம் ஏற்பட்டது. **ஓ** என்னும் காது வடிவில் **ம்** என்னும் புள்ளி குத்தப் பெறுவதால் இயக்கம் - புனிதத் தன்மை கிடைக்கிறது என்பதை உணர்த்தவே இந்தக் காது குத்தல் சடங்கு இந்து சமயத்தவரிடையே உள்ளது என்பதையும் உணரலாம்.

'ஓங்காரத்தின் பெருமையைப்
பாங்காய் அறிந்து பாரினில்
ஆங்காரம் தவிர்த்து அகிலத்தில்
நீங்கா இன்பம் பெறுவோமே!'

- - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - -

# வேலை வணங்குவதே வேலை
# டாக்டர் சுப. திண்ணப்பன்

வேல் என்னும் சொல் வெல் என்னும் அடிச் சொல்லிலிருந்து தோன்றியது. வெல் என்றால் வெற்றி பெறு என்பது பொருள். எனவே வேல் என்றால் வெற்றி (Success). வாழ்க்கையில் எந்தத் துறையில் வெற்றி பெற வேண்டுமானாலும் வேலை வணங்க வேண்டும். இதனால் மனித உள்ளத்தில் தோல்வி மனப்பான்மை அகலும். உள்ளுவதெல்லாம் உயர்வு உள்ளல் என்னும் உணர்வு தோன்றும். தன்னம்பிக்கை கூடும்.

முருகன் தமிழ்க் கடவுள். சேயோன். வேலன், செவ்வேள் என அவனுக்குப் பல பெயர்கள் உண்டு. அவன் சூரபன்மன் (சூரன்) என்னும் அரக்கனை வெல்வதற்குச் சிவபெருமானின் நெற்றிக் கண்ணிலிருந்து தோன்றியவன் என்றும், அவன் சூரனுடன் போரிடுவதற்காகச் சிவபெருமான் ஆயுதங்களை அளிக்கும்போது எப்படைக்கும் நாயகமான வேலினைக் கொடுத்தார் என்றும் கந்தபுராணம் கூறுகிறது. "நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் ஆகிய ஐம்பூதங்களையும் வெல்லும் ஆற்றல் வேலுக்கு உண்டு. அது பல உயிர்களையும் ஒன்றாக முடிப்பது, அரக்கர்களின் ஆற்றலை ஒடுக்குவது" என்று வேலின் இயல்பைச் சிவன் விளக்குகிறார். சூரன் என்பது தீமையைக் குறிக்கும். தீமையை வென்று நன்மை மேலோங்க முருகன் கைவேலை வணங்க வேண்டும். சூரன் என்பது நம்மிடம் உள்ள ஆணவத்தை- நான் எனது என்னும் செருக்கை-(ego) குறிக்கும். ஆணவம் அகன்றால் இறையருள் கிட்டும். எனவே இறையருள் பெற்றுப் பேரின்பம் அடைய வேலை வணங்குவதே வேலை ஆகும்.

வேல் என்பது அறிவின் அடையாளம். அறிவுக்கு ஆழம், அகலம், கூர்மை ஆகிய பண்புகள் உண்டு. அது போல வேலுக்கும் அம்மூன்று பண்புகள் உண்டு. வேலின் வடிவம் தலையில் இலையும் அடிப்பாகம் நீண்ட காம்புமாக இருக்கும். இலையின் நுனி கூர்மையாக இருக்கும். இலையின் நடுப்பாகம் அகலமாக இருக்கும். அடிப்பாகம் காம்பு ஆழமாக இருக்கும். அறிவு என்பதும் எதனையும் நுணுகி நோக்கும் கூர்மை( sharpness) கொண்டதாக இருக்க வேண்டும். அதே சமயம் பரந்த( width) தன்மை உடையதாகவும் அமைய வேண்டும், எதனையும் ஆழமாக( depth) அறியும் இயல்பும் வேண்டும். எனவே வேல் அறிவின் வடிவம். இறைவனும் அறிவின் வடிவமாக இருப்பதை வாலறிவன் என வள்ளுவரும், ஆழ்ந்தகன்ற நுண்ணியன் என மாணிக்கவசகரும் குறிப்பிடுகிறார்கள். ஆகையால் வேலை வணங்குவது அறிவு வழிபாடு ஆகும் "அறிவுடையார் எல்லாம் உடையார்; அறி¢விலார் என்னுடையரேனும் இலர்" என்பது குறள். எனவே பொருட்செல்வம் முதலிய எல்லாச் செல்வம் பெறுவதற்கும் அறிவுதான் முதலாகும். அம்முதலைப் பெற வேலை வணங்க வேண்டும். இவ்வழிபாடு நாம் பெற வேண்டிய அறிவின் மூன்று இயல்புகளையும் நமக்கு நினைவூட்டிக் கொண்டே இருக்கும்.

வேல் என்பது ஞானத்தின் அறிகுறி. ஞானம் பெறுவதே இறைவன் திருவடி பெற வழி. ஞானம் என்பது ஈசன்பால் அன்பே என்றனர் ஞானசம்பந்தர். இது சேக்கிழார் வாக்கு. ஞானசம்பந்தரோ தம் மூன்றாம் வயதில் உமை அம்மையார் பாலூட்ட சிவஞானம்,

கலைஞானம், மெய்ஞ்ஞானம் முதலிய எல்லா ஞானங்களையும் உணர்ந்தவர். இறைவனைக் கண்டவர். தோடுடைய செவியன் எனச் சைவத் திருமுறையைத் தொடங்குவித்தவர். இத்தகைய ஞானம் பெற வேலை வணங்குவதே முறையாகும்.

முருகனை அடைய ஞானசக்தியாகிய வேலை வணங்குவதே வழி. வள்ளி இச்சா சக்தி(விருப்பம்), தெய்வயானை கிரியா சக்தி ( செயல்). ஒரு காரியத்தில் ஈடுபட முதலில் அதில் விருப்பம் (attitude)வேண்டும். பிறகு அதைப் பற்றி அறிய(knowledge) வேண்டும். பிறகு செயலில்(action) இறங்க வேண்டும். செயலாற்றும் திறனையும் வள்ளி தெய்வயானையுடன் கூடிய வேல் வழிபாடு உணர்த்துகிறது.

வேல் என்பது சக்தியின் - ஆற்றலின் அடையாளம். மக்கள் சக்தி பெற வேலை வணங்க வேண்டும் எனவே தான் சக்திவேல் என்று அழைக்கிறார்கள். இந்த வேலைச் சக்தியாகிய உமைஅம்மை முருகப் பெருமானுக்குக் கொடுத்தார் என்ற செய்தி அபிதான சிந்தாமணி என்னும் நூலில் உள்ளது,. சூரபன்மன் மகன் பானுகோபனால் வீரபாகு முதலிய தேவர்க்கு நேர்ந்த துன்பத்தை முருகப்பெருமான் கட்டளைப்படி நீக்கியது வேல் என்று கந்தபுராணம் கூறும். அடியவர்களாகிய மக்களின் துன்பம் நீங்க- மனக்கவலை மாற்ற வேலை வணங்குவதே முதல் வேலையாக இருக்கவேண்டும். வேலுண்டு பயமில்லை, கந்தனுண்டு கவலை இல்லை. இன்ப துன்பத்துக்குக் காரணமான வினையை நீக்கும் ஆற்றலும் வேலுக்கு உண்டு. வேலுண்டு வினை இல்லை அல்லவா?

வேல் வணக்கம் இன்று நேற்றுத் தோன்றியது அன்று, முருகப் பெருமான் திருவுருவ வழிபாட்டுக்கு முன் தோன்றியது வேல்வழிபாடு. வேலை மட்டும் வைத்து வழிபடும் கோயில்கள் (வேல் கோட்டம்) பூம்புகார் நகரில் இருந்ததாகச் சிலப்பதிகாரம் கூறுகிறது. இன்றும் வேலை மட்டும் வைத்து வழிபடும் திருக்கோயில்கள் தமிழகத்திலும் இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளிலும் உள்ளன. சிங்கப்பூரில் தேங்க் ரோட்டில் உள்ள தண்டாயுதபாணி கோயில் மூலவர் முருகப் பெருமான் திருக்கை வேல் என்பது உணரத்தக்கது.

முருகன் திருக்கை வேலின் பெருமையை நக்கீரர், இளங்கோ அடிகள், அருணகிரிநாதர் முதலியோர் கூறியுள்ளனர். நக்கீரர் திருமுருகாற்றுப்படையில் “ பார் முதிர் பனிக்கடல் கலங்க உள்புக்குச் சூர்முதல் தடிந்த சுடரிலை நெடுவேல்” என்று (கடலில் ஒளிந்துகொண்ட சூரபன்மனை வென்ற வேல்) கூறுகிறார். மேலும் அவர்

வீரவேல் தாரைவேல் விண்ணோர் சிறைமீட்ட
தீரவேல் செவ்வேள் திருக்கைவேல்- வாரி
குளித்தவேல் கொற்றவேல் சூர்மாவும் குன்றும்
துளைத்தவேல் உண்டே துணை

குன்றம் எறிந்ததுவும் குன்றப்போர் செய்ததுவும்
அன்றுஅங்கு அமரர் இடர் தீர்த்ததுவும்- இன்று எனக்குக்
கைவிடா நின்றதுவும் கற்பொதும்பில் காத்ததுவும்
மெய்விடா வீரன்கை வேல்

என்னும் இரண்டு வெண்பாக்களில் வேலின் பெருமையை விளக்குகிறார். பூதம் நக்கீரரைச் சிறையில் அடைத்தபோது வேல் விடுவித்தது என்றும், சூரபன்மனைக் கொன்று தேவர்களைச் சிறையிலிருந்து விடுவித்ததும் வேல்தான் என்றும், கிரவுஞ்சன் என்ற அரக்கன் மலையாய் நின்றபோது அம்மலையைப் பிளந்ததுவும் முருகன் வேல் என்றும் வெற்றி வேல், வீரவேல் என்றும் நக்கீரர் கூறுகிறார். கிரவுஞ்ச மலையைப் பிளந்தது என்பது நம் நெஞ்சமாகிய பெருங்கல்லை உருக்கும் ஆற்றல் வேலுக்கு உண்டு என்பதையே உணர்த்துகிறது. நெஞ்சக் கன கல்லும் நெகிழ்ந்துருகச் செய்பவன் முருகன் என்பது அருணகிரியார் வாக்கு.

சிலப்பதிகாரத்தில் குன்றக்குரவை என்னும் பகுதியில் குறவர்கள் முருகன் திருக்கை வேலைப் போற்றிப் பாடுவதை இளங்கோ அடிகள் குறிப்பிட்டுள்ளார்,

முருகப் பெருமான் திருவருளி£ல் திளைத்து நின்ற அருணகிரியாரோ வேல்விருத்தம், வேல்வகுப்பு என இரண்டு நூல்கள் வேலின் பெருமையை விளக்க இயற்றியுள்ளார். வேல் வகுப்பில் அவர் “ முருகன் கைவேல் வள்ளியின் விழிக்கு ஒப்பாகும். நக்கீரனை மலைக் குகையிலிருந்து மீட்கும். தேவர்கள், முனிவர்கள், மனிதர்கள் எல்லாருடைய துன்பங்களையும் களையும். சூரிய ஒளி, சந்திர ஒளி, வடவாக்கினி ஒளி எல்லாவற்றையும் ஒடுங்கும்படி பேரொளியுடன் வீசும். முருகன் அடியார்களுக்குக் கெடுதல் நினைப்பவர்களைப் பூண்டோடு ஒழிக்கும். திருப்புகழ் பாடுவார் பகை அறுக்கும். அறத்தை நிலைநாட்டும். எமன் வரும்போது அவனைக் காலால் உதைத்த சிவன் திருவடிக்கு ஒப்பாகும். எல்லா உயிர்களுக்கும் உணவு அளிக்கும்.” என்கிறார். கந்தர் அலங்காரத்தில் “ பயந்த தனி வழிக்குத் துணை வடிவேலும் செங்கோடன் மயூரமுமே” என்று பாடுகிறார்.

கந்த ஷஷ்டி கவசம் முழுதும் நம்மைக் காக்க முருகன் வேலை வேண்டுவதாகத் தானே உள்ளது. ‘காக்கக் காக்க கனவேல் காக்க’ என்று அதில் ஓரடி உண்டு. கனக வேல் என்பது தங்க வேலைக் குறிக்கும். இப்போது முருகப் பெருமானுக்குச் சாத்தப்படும் தங்கவேலை நோக்கி நாமும் காக்கக் காக்க கனக வேல் காக்க என வேண்டித் தொழுது துன்பம் நீக்கி இன்பம் பெறுவோமாக.

- - - - - - - -

# திருமுறைகளில் அம்மை

**சுப.திண்ணப்பன்**

சிவபெருமானை மூல முதல்வனாகக் கொண்டு செந்தமிழில் பாடப்பெற்ற பக்திப் பாடல்களின் தொகுப்பே திருமுறைகளாகும். சைவ சமயத்தவர்கள் நாள்தோறும் காதலாகிக் கசிந்துருகி வேதம்போல ஓதத் தக்கவை திருமுறைகளாகும். இவை எண்ணிக்கையால் பன்னிரண்டு. இவற்றைப் பாடியவர்கள் 27 அருளாளர்கள்.திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர். சுந்தரர் ஆகிய மூவர் பாடிய தேவாரப்பாடல்கள் முதல் ஏழு திருமுறைகளாகும். மாணிக்கவாசகர் பாடிய திருவாசகமும், திருக்கோவையாரும் எட்டாம் திருமுறையாகும். திருமாளிகைத்தேவர், சேந்தனார் முதலிய ஒன்பது ஆசிரியர்களால் இயற்றப்பட்ட திருவிசைப்பா, திருப்பல்லாண்டு ஆகியவை ஒன்பதாம் திருமுறையாகும். திருமூலர் பாடிய திருமந்திரம் பத்தாம் திருமுறையாகும். காரைக்கால் அம்மையார், பட்டினத்தார், சேரமான் பெருமாள் நாயனார் முதலிய பதினோரு பேர் பாடிய பாடல்களின் தொகுப்பு பதினோராம் திருமுறையாகும். சேக்கிழார் பாடிய பெரியபுராணம் பன்னிரண்டாம் திருமுறை. இந்தத் திருமுறைகளிலுள்ள மொத்தப் பாடல்கள் 18402. திருமுறை ஆசிரியர்கள்
இறைவன் திருவருளைப் பெற்றுப் பேரின்பம் அடைந்தார்கள். இவர்கள் தாம் பெற்ற இன்பம் இவ்வையகமும் பெறவேண்டும் என்னும் பெரு நோக்கத்துடன் மற்றவர்களும் இறைவன் திருவருளைப் பெற வழிகாட்டினார்கள். அவர்கள் காட்டிய வழிமுறைகளே திருமுறைப்பாடல்களாக் மலர்ந்துள்ளன.

"ஒன்றே குலமும் ஒருவனே தேவனும் நன்றே நினைமின் நமனில்லை" என்று கூறினார் திருமூலர். எனவே இறைவன் ஒருவனே என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. அவன் ஓருருவம், ஒரு நாமம் இல்லாதவன். அவன் ஆணல்லன், பெண்ணல்லன், அலியுமல்லன். எனினும் அவனை அம்மையாகவும் அப்பனாகவும் கருதி வழிபடுதல் நம் சைவ மரபாகும்.
" அம்மை நீ அப்பன் நீ" என்றும் "ஈன்றாளுமாய் எந்தையுமாய்" என்றும் நாவுக்கரசர் பெருமான் தம் தேவாரத்தில் இறைவனை வர்ணிக்கிறார். திருவாசகமும் " அம்மையே அப்பா ஒப்பிலா மணியே" என்று இறைவனை அழைக்கிறது.

இறைவனாகிய சிவபெருமான் அன்பின் மறுவடிவம். "அன்பே சிவம்" "அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்" என்பன திருமந்திர மொழிகள். இறைவியாகிய உமை அம்மையாரோ அருளின் திருவுருவம்.. " அருளது சக்தியாகும் அரன் தனக்கு" என்பது சிவஞான சித்தியார் வாக்கு. அருள் என்பது அன்புத்தாய் பெற்றெடுத்த குழந்தை என்பதை " அருளென்னும் அன்பீன் குழவி" என்னும் வள்ளுவர் வாக்கு வலியுறுத்தும்.

அருள் என்பதைக் கருணை என்றும் அழைப்பர். கருணை அறக்கருணை, மறக்கருணை என இரு வகைப்படும். கருணையின் வடிவமாகிய அம்மை அறக் கருணையாகவும் தோன்றுவாள். மறக் கருணையாகவும் காட்சி அளிப்பாள். " அறத்திற்கே அன்பு சார்பென்ப அறியார் மறத்திற்கும் அஃதே துணை" என்னும் குறள் இக்கருத்துக்கு அரண் சேர்க்கும்.
அறத்திற்கு ஆதரவு தருவதும் மறத்திற்கு அழிவு தருவதும் சக்தியின் - அம்மையின் இயல்புகளாகும். அதாவது உலகில் நல்லனவற்றை வாழவைப்பதும் அல்லனவற்றை

வீழவைப்பதும் அவளது செயல்களாகும். நல்லார்க்கு அருள்செய்து காப்பதும். அல்லாரை அடியோடு அழிப்பதும் அவளது பணிகளாகும் இதனை " துஷ்ட நிக்கிரக சிஷ்ட பரிபாலன" என்று வடமொழியாளர் கூறுவர்.அறக் கருணை வடிவமே உமை அம்மை, மறக்கருணை வடிவமே உருத்திர காளி. அம்மையின் இவ்விரு
வடிவங்களும் திருமுறைகளில் இடம்பெறும் இயல்பை இக்கட்டுரையில்
காண்போம்.

**திருமுறையில் உமை அம்மை**

திருமுறையின் தொடக்கப் பாடல் " தோடுடைய செவியன்" எனத் தொ டங்கும் திருஞான சம்பந்தர் தேவாரம் ஆகும். இப்பாடல் எழுந்த சூழ்நிலையைப் பார்ப்போம். சீகாழியில் தந்தையாருடன் நீராடச்சென்ற ஞானசம்பந்தக் குழந்தை தன் தந்தை நீராடும்போது அவரைக் காணாது கலங்கிக் கோயிலைப் பார்த்து" அம்மே அப்பா" என்று அழுதது, இதனைக் கேட்ட சிவபெருமான் உமை அம்மையோடு அங்கு எழுந்தருளி உமை அம்மையைப் பார்த்து "துணைமுலைகள் பொழிகின்ற பாலடிசில் பொன் கிண்ணத்து ஊட்டு" எனப் பணித்தருளினார். அதற்கேற்ப உமை அம்மை " எண்ணரிய சிவஞானத்து இன்னமுதம் குழைத்தருளி "உண் அடிசில்" எனச் சம்பந்தர்க்கு ஊட்டினார். அந்நிலையில் சம்பந்தர் சிவஞானம், கலைஞானம், மெய்ஞ்ஞானம் முதலியன உணர்ந்து ஞான சம்பந்தர் ஆனார். நீராடிவிட்டுக் கரையேறிய ஞானசம்பந்தரின் தந்தையார்' யார் அளித்த பாலடிசில் உண்டது நீ" என அரட்டிக் கேட்க அதற்குப் பதில் கூறும் வகையில் எழுந்ததுதான்" தோடுடைய செவியன்" எனத் தொ டங்கும் பாடல். எனவே திருமுறையின் தொடக்கத்திற்கே உமை அம்மையார்தான் காரணம் என்பதனை இதன் வழி உணரலாம்.

" தோடுடைய செவியன்" என்னும் தொடரில் தோடு என்பது பெண்கள் காதில் அணியும் ஓர் அணிகலன். செவியன் என்பது ஆண்பாலை உணர்த்துவது. எனவே " தோடுடைய செவியன்" என்பது உமாதேவியாரைத் த ன் உடம்பில் ஒரு பாதியாகக் கொண்ட உமையொரு பாகனை உணர்த்தும். உமை அம்மை அருளால் உருவான திருமுறை வாக்கை நினைத்துத்தான் உமையம்மையாரைக் குறிக்கத் தோடு எனத் தொடங்கிப் பாடினார் ஞானசம்பந்தர். எனவே சிவபெருமானையே பாடும் திருமுறையின் தொடக்கம் அவனருட்சக்தியாகிய அம்மையே நோக்கியே அமைந்துள்ளது என்லாம்.

உமையம்மையாரைத் தலைவியாகக் கொண்டு பாடும் தனி நூல்களோ தனிப் பாடல்களோ திருமுறைத் தொகுப்பில் இல்லை. எனினும் சிவபெருமானுடன் சார்த்தியே பல இடங்களில் உமை அம்மை பற்றிய செய்திகள் வந்துள்ளன. உமை அம்மையாரின் சிறப்பு தேவாரப் பாடல்களில் இலைமறை காயென ஆங்காங்கே ஓதப்பெறுகின்றது.
" தோடுடைய செவியன்" என உமையொரு பாகனை ஞானசம்பந்தர்.கூறியது போலவே "நின்கழல்கள் காணப் பாதியோர் பெண்ணை வைத்தாய்" "உமையோடு உடனாகி இருந்தான் தன்னை" என்று நாவுக்கரசரும் கூறுவார். இறைவனின் திருவடி திருவருள் தொழிற்படும் இடம் என்பதையும், அத்திருவடியே அடியவர்க்கு அருள்புரியும் என்பதையும், திருவடியே சக்தியாக உருவகிக்கப்பட்டுள்ளது என்பதையும் இவ்வடிகள் உணர்த்தும். மேலும் சுந்தரர் தம் தேவாரத்திலும் " ஒரு பாகம் பெண்ணாவார்" என்றும்,

“வண்டாடும் குழலாள் உமைபாகம் மகிழ்ந்தவனே” என்றும் பாடுகிறார்.

சிவபெருமான் பல்வேறு நிலையில் கோயில்கொண்டு விளங்கினாலும் உமைஅம்மையோடு எழுந்தருளியிருக்கும்போதே இன்புறுவான் என்னும் கருத்தை ஞானசம்பந்தர் ‘சுத்தமார் பளிங்கின் பெருமலையுடனே சுடர் மரகதம் அடுத்தாற்போல், அத்தனார் உமையோடு இன்புறுகின்ற ஆலவாயாவதும் இதுவே” “ அண்ணலார் உமையோடு இன்புறுகின்ற ஆலவாயாவது இதுவே” என்னும் பாடல் அடிகளால் குறிப்பிடுவர். இதன் விளைவாகத்தான் பிற்காலத்தில் உமையம்மையார்க்குத் தனிக் கோயில்கள் எழுப்பபட்டன.
தேவி வழிபாடு தோற்றம் கண்டது.

சிவபெருமான் பெண்ணின் நல்லாளாகிய உமை அம்மையுடன் பெருந்தகையாக வீற்றிருப்பது நாம் அனைவரும் மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம், வைகலும் எண்ணில் நல்ல கதிக்கு யாதும் ஓர் குறைவிலை என்பதை உணர்த்தத்தான் என உரைக்கிறார் ஞானசம்பந்தர். இல்லற வாழ்வின் ஏற்றத்தையும், வையத்து வாழ்வாங்கு வாழவேண்டியதன் தேவையையும் வலியுறுத்தவே இப்பாடல் எழுந்தது என்பதை நாம் உணர வேண்டும். இறைவன் இறைவியுடன் கூடியிருப்பது ஆண் பெண் இணைந்த இல்லற வாழ்வின் பெருமையை உலகத்தார்க்கு உணர்த்தவே ஆகும். இல்லற வாழ்வில் ஈடுபடுவது வீடு பேற்றுக்கு வழிவகுக்காது என்னும் கருத்தை மறுக்கவே இப்பாடல் எழுந்தது என்பதையும் நாம் நோக்க வேண்டும். ஐயாறு அடைந்த நாவுக்கரசர் மாதர்பிறைக்கண்ணியானை மலையான் மகளொடும் பாடிக் கண்டறியாதன காணும் காட்சியில் இறைவனும் இறைவியுமாகத் தோன்றும் தோற்றமும் இதனை வலியுறுத்தும். திருவாசகத்தில் மாணிக்கவாசகர் "குவளைக்கண்ணிக் கூறன் காண்க, அவளும் தானே உடனே காண்க" என்று கூறுவதையும் நோக்கவேண்டும்.

திருவாசகத்தில் வரும் திருவெம்பாவையின் உட்கருத்து " சக்தியை வியந்தது" என்பர். கன்னிப் பெண்கள் நாடு செழிக்க மழை பெய்யவும், வீடு செழிக்க நல்ல கணவனைப் பெறவுமே திருவெம்பாவை எழுந்தது. உமாதேவியின் அருளையே மழையாக உருவகித்துப் போற்றும் திருவெம்பாவைப் பாடல் இதோ:

முன்னிக் கடலைச் சுருக்கி எழுந்துடையாள்
என்னத் திகழ்ந்து எம்மை ஆளுடையாள் இட்டிடையின்
மின்னிப் பொலிந்து எம்பிராட்டி திருவடிமேல்
பொன்னஞ் சிலம்பில் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நந்தம்மை ஆளுடையாள்
தன்னில் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
முன்னியவள் நமக்கு முன் சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழையேலோர் எம்பாவாய்.

மேகம் உமையம்மையின் நீலநிறம்போல நிறம் பெற்றுத் திகழ்கிறது; உமையம்மையின் இடை போல மின்னுகிறது; அவள் திருவடியில் இருக்கும் சிலம்பொலி போல் இடிமுழக்கம் செய்கிறது; அவளுடைய அழகிய புருவம் போல வான வில்லுடன் திகழ்கிறது. அவளைப் பிரிந்திராத இறைவன் அன்பர்க்கு அருள்பாலிப்பதற்கு முன்னரே அவள் அருள் சுரக்கின்றாள். அந்த அருளைப் போல மழை பொழியவேண்டும்

என்பது இந்தப் பாடலின் கருத்து. உமை அம்மையின் அருளே மழை என்பது இங்கு தெளிவாக விளக்கப்படுகின்றது. உமை அம்மையை "உடையாள்" என இப்பாடல் குறிப்பதன் பொருள் எல்லாவற்றிற்கும் உடையவள்- உரிமையானவள் சக்தி என்பதையும் காட்டுகிறது. திருவெம்பாவை சக்தியை வியக்கும் வண்ணத்தை இப்பாடல் நன்கு படம் பிடிக்கிறது.

இறைவன் திருவடியே சத்தி எனச் சாத்திரங்கள் கூறும். அத்திருவடியின் ஐந்தொழில் ஆற்றலைப் போற்றித் துதிப்பதுதான் திருவெம்பாவையின் இறுதிப்பாடல். படைப்பைத் "தோற்றமாம் பொற்பாதம்" என்றும், காப்பைப் "போகமாம் பூங்கழல்கள்" என்றும், அழிப்பை "ஈறாம் இணையடிகள்" என்றும், மறைப்பை "மால் நான்முகனும் காணாத புண்டரிகம்" என்றும், அருளலை "அருளும் பொன்மலர்கள்" என்றும் இப்பாடலில் மாணிக்கவாசகர் கூறிப் போற்றுகிறார். இத்திருவடிகளே அனைத்தின் தோற்றத்திற்கும் ஒடுக்கத்திற்கும் காரணமாக இருப்பவை என்றும் கூறுகிறார். ஐந்தொழில் இல்லையென்றால் உயிர்கள் பாசம் நீங்கி வீடு பெறுமாறு இல்லை அல்லவா?

அம்மை அப்பரின் திருக்கோலத்தைத்

தோலும் துகிலும் குழையும் சுருள்தோடும்
பால்வெள்ளை நீறும் பசுஞ்சாந்தும் பைங்கிளியும்
சூலமும் தொக்க வளையும் உடைத்தொன்மைக்
கோலமே நோக்கிக் குளிர்ந்து ஊதாய் கோத்தும்பி

எனவும் திருவாசகம் விவரிக்கிறது.

"உடையாள் உன்றன் நடுவிருக்கும், உடையாள் நடுவுள் நீ இருத்தி, அடியேன் நடுவுள் இருவீரும் இருப்பதானால் அடியேன் உன் அடியார் நடுவுள் இருக்கும் அருளைப் புரியாய்" என்னும் திருவாசகப்பாடல் அம்மை அனைத்தும் உடையவள் என்பதையும், அவள் இறைவனுடன் கலந்திருப்பாள் என்பதையும்,அந்நிலையில் அவர்கள் இருவரும் மணிவாசகர் அகத்தில் இருப்பர் என்பதையும் சுட்டுகிறது.

ஒன்பதாம் திருமுறையில் திருவிசைப்பா ஒன்று 'அரிவையோர் கூறுகந்தான்' என்று அம்மையப்பரைப் போற்றுகிறது. திருப்பல்லாண்டில் ' அன்ன நடைமடவாள் உமைகோன்' என்னும் தொடர் அம்மையின் நடை அழகைச் சுட்டுகிறது.

பத்தாம் திருமுறையாகிய திருமந்திரத்தில் திருமூலர் தம் வரலாறு கூறுமிடத்துச்

" சேர்ந்திருந்தேன் சிவமங்கைதன் பங்கனை" என்றும்,
"நேரிழையாள் நிரதிசயானந்தப்
பேருடையாள் என் பிறப்பறுத்து ஆண்டவள்
சீருடையாள் சிவன் ஆவடுதண்துறை
சீருடையாள் பதம் சேர்ந்து இருந்தேனே"

என்றும் அம்மை தம்மை ஆண்டருளிய செய்தியைக் குறிப்பிடுகிறார். மேலும் திருமூலர் திருமந்திரத்தில் சக்திபேதம், சக்தியின் பல்வேறு வடிவங்கள், சக்தி எந்திரம், சக்தியை வழிபடும் எந்திர வழிபாட்டு முறை இவை பற்றி எல்லாம் விரிவாகக் கூறுகிறார். திருமூலர் கூறும் சக்தி சிவ சக்தியே ஆகும்.

"தான் எங்குளன் அங்குளள் தையல் மாதேவி" (1031)
" மணங்கமழ் பூங்குழல் மங்கையும் தானும்
புணர்ந்துடனே நிற்கும்" (1019)
"நின்றாள் அவன்றன் உடலும் உயிருமாய்ச்
சென்றாள் சிவகதி சேரும் பராசத்தி "(1042)
"இருளது சத்தி, ஒளியதுஎம் அண்ணல்" (1095)

என்னும் திருமந்திரத்தொடர்கள் இதனை வலியுறுத்தும்

திருமந்திரத்தில் நான்காம் தந்திரத்திலுள்ள சத்திபேதம்- திரிபுரை சக்கரம் என்னும் பகுதியிலுள்ள முப்பது திருமந்திரப் பாடல்களும் அம்மன் பெருமையை விரித்துரைக்கின்றன. கலைமகள் சிவசக்தி என்பதை

ஏடங்கை நங்கை இறைஎங்கள் முக்கண்ணி
வேடம் படிகம் விரும்பும் வெண்டாமரை
பாடும் திருமுறை பார்ப்பதி பாதங்கள்
சூடுமின் சென்னிவாய்த் தோத்திரமே (1068)

என்னும் பாடல் வாயிலாகக் கூறுகிறார் திருமூலர். மேலும் சத்தியின் வடிவம் சிவவடிவமே என்பதைச் " சூடும் இளம்பிறை, சூலி, கபாலினி" என்றும், சக்தியின் மந்திரம் சிவமந்திரமே என்பதை "நாம நமசிவ "(1189) என்றும் கூறுவர். மேலும்

அவளை அறியா அமரரும் இல்லை
அவளன்றிச் செய்யும் அருந்தவம் இல்லை
அவளன்றி ஐவரால் ஆவதொன்றில்லை
அவளன்றி ஊர்புகும் ஆறு அறியேனே (1029)

என்றும் அம்மையின் பெருமையை அவர் கூறுகிறார்.

சத்தி என்பாள் ஒருசாதகப் பெண்பிள்ளை
முத்திக்கு நாயகி என்பது அறிகிலர்.

என்னும் அடிகள் முத்தி அளிக்கும் தன்மை சக்திக்கு உண்டு என்பதைக் கூறும். திருமுறைகளீல் திருமந்திரத்தில் தான் சிவசக்தியின் சிறப்பு பலவாறாகக் கூறப்பட்டுள்ளது.

பதினோராம் திருமுறையில் திருமுருகாற்றுப்படையில் முருகன் உமையவள் மைந்தனாகக் குறிப்பிடப்படுகிறான். சேரமான் பெருமாள் நாயனார் பொன்வண்ணத்தந்தாதியில் அம்மையப்பர் திருவுருவம் பேசப்படுகின்றது. இவரைப் பின்பற்றிப் பட்டினத்தார் திருக்கழுமல மும்மணிக்கோவையில் அம்மையப்பர் வடிவை 61 அடிகளில் விரிவாக விளக்குகிறார். இவரே கோயில் நான்மணிமாலையில் அம்மையப்பர் திருவுருவம் பற்றி

"ஒருபால் தோடும் ஒருபால் குழையும்
இருபாற்பட்ட மேனி எந்தை"

என்னும் அடிகளீல் சுருக்கமாகவும் குறிப்பிடுகிறார். திருவிடைமருதூர் மும்மணிக் கோவையில்(16)

'வருமுலை தாங்கும் திருமார்பு வல்லி
வையம் ஏழும் பன்முறை ஈன்ற
ஐய திருவயிற்றம்மைப் பிராட்டி
மறப்பருஞ் செய்கை அறப்பெருஞ் செல்வி
எமையாளுடைய உமையாள் நங்கை
கடவுட் கற்பின் மடவரல் கொழுந'

என்று ஏழு உலகும் ஈன்ற தாயாகவும், அறம் வளர்த்த நாயகியாகவும் உமை அம்மையைப் பட்டினத்தார் குறிப்பிடுகிறார். மேலும் காஞ்சியில் உமையம்மையார் இறைவனைப் பூசித்தபோது, ஆற்றில் வெள்ளம் மிகுந்து வர, உமைஅம்மையார் துடித்துச் சிவலிங்கத் திருமேனியைத் தழுவ, அதில் நகில் சுவடும், வளைச் சுவடும் பதிந்தன என்று திருவேகம்பமுடையார் திருவந்தாதியில் அவர் கூறுகிறார். காஞ்சியில் அம்மை 32 அறங்களை வளர்த்தது பற்றியும் பேசுகிறார். சக்தி வேலைத் தடக்கையில் உடையவன் முருகன் என்னும் குறிப்பு ந்ம்பியாண்டார் நம்பியின் பாடல் ஒன்றில் வருகிறது. காரைக்கால் அம்மையாரும் அம்மையப்பர் திருக்கோலம் பற்றிப் பேசுகிறார்.

பன்னிரண்டாம் திருமுறையாகிய சேக்கிழாரின் பெரிய புராண்த்தில் உமை அம்மையாரின் சிறப்பு பல இடங்களில் குறிக்கபடுகின்றது. நாயன்மார்களாகிய அடியார்களுக்குக் காட்சி கொடுக்கும்போது உமை அம்மையுடன் சிவபெருமான் தோன்றி அருளியதாகச் சேக்கிழார் பல இடங்களில் சுட்டுகிறார். சிறுத்தொண்ட நாயனார்க்கு இறைவன், இறைவி, முருகனுடன் காட்சி கொடுத்ததைச் சான்றாகக் கூறலாம். தென்னாட்டின் சிறப்பைக் கூறும் சேக்கிழார்

எம்பிராட்டி இவ்வேழுலகு ஈன்றவள்
தம்பிரானைத் தனித்தவத்தால் எய்திக்
கம்பையாற்றில் வழிபடு காஞ்சி என்று
உம்பர் போற்றும் பதியும் உடையது

என்று காஞ்சி காமாட்சி அம்மையைச் சிற்ப்பித்துப் போற்றுகிறார். இறைவனை வழிபட்டுக் கம்பையாற்றில் வெள்ளம் வரத் தழுவிடக் குழைந்த இறைவன் வரலாற்றைத் திருக்குறிப்புத் தொண்டர் புராணத்தில் சேக்கிழார் விரித்துப்பாடும் திறமும் போற்றுதற்குரியது.

"எண்ணில் ஆகமம் இயம்பிய இறைவர் தாம் விரும்பும்
உண்மையாவது பூசனை என உரைத்தருள
அண்ணலார்தமை அர்ச்சனை புரிய ஆதரித்தாள்
பெண்ணின் நல்லவளாயின பெருந்தவக்கொழுந்து"

என்று இறைவி சிவனைப் பூசை செய்த சிறப்பை அவர் பாடுகிறார். மேலும்

கரந்தரும் பயன் இது என உணர்ந்து கம்பன் மேவிய உம்பர்பால்
நிரந்த காதல் செய் உள்ளத்தளாகி நீடு நன்மைகள் யாவையும் பெருக
வரந்தரும் பொருளாம் மலைவல்லி மாறிலாவகை மலர்ந்த பேரன்பால்
சிரம்பணிந்து எழுபூசை நாள்தோறும் திருவுளம் கொளப்பெருகியதன்றே.

என்றும் அவர் விவரிக்கிறார். உமைஅம்மைதான் இறைவனுக்கு முதலில் பூசை செய்தவர் என்பதை இங்கு உணர முடிகிறது.

காவிரி யாற்றின் பெருமையைக் கூறும் சேக்கிழார்

வண்ண நீள்வரை தரவந்த மேன்மையால்
எண்ணில் பேரறங்களும் வளர்க்கும் ஈகையால்
அண்ணல் பாகத்தை ஆளுடைய நாயகி
உண்ணெகிழ்க் கருணையின் ஒழுக்கம் போன்றது

என்கிறார். காவிரியும் குடகு மலை தந்த ஆறு, உமை அம்மையும் இமவான் மலை தந்த செல்வி; காவிரியும் உமை அம்மையும் உலகில் பல அறங்கள் தழைக்க உதவும் பான்மையும் ஒப்புவமையாக வருகின்றது. அம்மை அருள் சக்தி என்பதை இறுதி அடி எடுத்து இயம்புகிறது.

சிதம்பரத்தில் நடராசப்பெருமான் சிவகாமி அம்மையை நோக்கிக் கூத்தாடும் திறத்தினை
"மாதொரு பாகம் நோக்கி மன்னு சிற்றம்பலத்தே
ஆதியும் முடிவும் இல்லா அற்புதக் கூத்தாடும்
நாதனார்"
என்று திருநீலகண்ட நாயனார் புராணத்தில் சேக்கிழார் கூறுகிறார்.
எனவே தான் அது ஆனந்தக்கூத்தாக அமைந்தது போலும்.

திருநாவுக்கரசர் திருவையாற்றில் கண்ட கயிலைக் காட்சியைச் சேக்கிழார்

வெள்ளி வெற்பின்மேல் மரகதக்கொடியுடன் விளங்கும்
தெள்ளு பேரொளிப்பவளவெற்பென இடப்பாகம்
கொள்ளும் மலையாளுடன் கூட வீற்றிருந்த
வள்ளலாரை முன்கண்டனர் வாக்கின் மன்னனார்

என்று மரகதவல்லியாக உமைஅம்மையார் சிவனுடன் கயிலை மலைமேல் இருப்பதாகக் குறிப்பிடுகிறார்.

இதுகாறும் கூறிய செய்திகளால் அறக்கருணை வடிவாகிய உமைஅம்மையார் திருமுறையின் தொடக்கப் பாடல் தோன்றுவதற்குத் துணையாக இருந்ததையும், திருமுறைப்பாடல்களில் சிவபெருமானுடன் சார்த்தியே உமையொருபாகன் என்ற நிலையில் பல இடங்களில் கூறப்பட்டிருப்பதையும், நாம் மண்ணில் நல்ல வண்ணம் வாழப் பெண்ணின் நல்லாராகச் சிவனுடன்கூடி இருப்பது பற்றிய குறிப்பினையும்,
திருவாசகத்தில் திருவெம்பாவை வாயிலாகச் சக்தியாய் நின்று வியக்கப்படுவது பற்றியும்,
திருமந்திரத்தில் சக்தி பேதம், சக்தியின் பல்வேறு வடிவங்கள், சக்தி எந்திரம், சக்தியை வழிபடும் எந்திர வழிபாட்டுமுறை இவை விரிவாக விளக்கம் பெற்றிருப்பதையும்,
பதினோராம், பன்னிரண்டாம் திருமுறைகளில் காஞ்சியில் சிவபூசை செய்து அறம்

வளர்த்த நாயகியாக அமைந்த வரலாறு விரிவாகக் கூறப்பட்டிருப்பதையும் தெரிந்துகொண்டோம்.

**திருமுறையில் உருத்திரகாளி**

அம்மை உலக நன்மைக்காக நல்லோரை வாழ வைக்கும்போது உவகை கொள்ளுகிறாள். தீயோரை அழிக்கும்போது கடுஞ்சினம் கொள்ளுகிறாள்.
இவ்வாறு சினம்கொண்ட அம்மையின் கோலத்தைத்தான் நாம் உருத்திர காளி என்கிறோம். உருத்திரம் என்றால் கோபம், சினம், வெகுளி என்று பொருள். காளி என்ற சொல் கருமை என்ற பொருளையுடைய காளம் என்ற சொல்லிலிருந்து தோன்றியதாகும். கருமை நிறமுடையவள் காளி என்று அழைக்கப்பட்டாள்.

தாருகாசுரனால் துன்பமடைந்த தேவர்கள், பெண்களுருக்கொண்டு சிவபெருமானை அடைந்து தமது குறைகளைக் கூறினர். பெண்ணாலன்றி வேறு எவராலும் இறவாத வரம் பெற்றிருந்தான் தாருகன். அவனை வென்று வருமாறு சிவபெருமான் சக்திக்குக் கட்டளை இட்டார். அப்போது தேவியின் ஒருகலை சிவனின் விஷக்கறை படிந்து கனற்கண்ணில் பிறந்து வெளிப்பட்டது. அவ்வுரு காளமாகிய விஷக்கறை படிந்து வந்ததால் காளி எனப் பெயர் பெற்றது. இவ்வகையில் தோன்றிய காளி தன் கோபத் தீயால் தாருகனை

# மொழிக்குத் துணை

பேராசிரியர் டாக்டர் சுப. திண்ணப்பன்
(சிங்கப்பூர் தேசிய பல்கலைக் கழகம், சிம் பல்கலைக் கழகம், சிங்கப்பூர்)

விழிக்குத் துணை திருமென் மலர்ப் பாதங்கள், மெய்ம்மை குன்றா
மொழிக்குத் துணை முருகா எனும் நாமங்கள், முன்பு செய்த
பழிக்குத் துணை அவன் பன்னிரு தோளும், பயந்த தனி
வழிக்குத் துணை வடிவேலும் செங்கோடன் மயூரமுமே (71)

என்னும் அரணகிரிநாதரின் கந்தரலங்காரப் பாடலில் இடம்பெறும் '**மொழிக்குத் துணை முருகா எனும் நாமங்கள்'** என்பது பற்றிச் சிறிது விளக்குவதே இந்தக் கட்டுரையின் நோக்கமாகும்.

மொழி என்றால் என்ன? மொழி என்பது கருத்துப் பரிமாற்றத்துக்கு உதவும் ஒரு கருவியே ஆகும். கருத்துப் பரிமாற்றம் என்பது ஒலி வடிவத்தாலும் வரி வடிவத்தாலும் நிகழ்கிறது. மனிதனுக்கு மட்டுமே மாபெரும் உடைமையாகத் திகழ்வது மொழியே. மனிதனையும் மற்ற உயிரினத்தையும் வேறுபடுத்திக் காட்டுவதும் மொழியே. மொழி இல்லாவிட்டால் மனித நாகரிகமே இல்லை. நமது முன்னோர்கள் விட்டுச் சென்ற அறிவுக் கருவூலத்தை நாம் இன்று கண்டு துய்ப்பதற்கும், நாம் இன்று பெற்றுள்ள அறிவுச் செல்வத்தை நமது வழித்தோன்றல்களுக்கு வழங்குவதற்கும் மொழியே துணையாக உள்ளது. மக்கள் வாழ்வில் பிறந்து மக்களால் வளர்க்கப்பட்டு மக்களின் வாழ்வை நாகரிகமுடையதாக உயர்த்திவரும் அரிய கலையே மொழி.

இத்தகைய மொழிகளில் நம் தாய்மொழியாம் தமிழ் மொழி பழமைக்கும் பழமையாகவும் புதுமைக்கும் புதுமையாகவும் திகழும் சிறப்புடையது. இலக்கண இலக்கிய வளம் மிக்க ஒன்றாகவும் இலங்குகிறது. திராவிட மொழிக் குடும்பத்தில் தொன்மையான மொழி தமிழ், கன்னடமும் தெலுங்கும் கவின் மலையாளமும் கிளைத்தெழக் காரணமாக இருந்தும் சீரிளமைத் திறம் குன்றாத மொழி செம்மொழியாகிய நம் செந்தமிழ் மொழி. எனவே **மெய்ம்மை குன்றா மொழி** நம் மேன்மைத் தமிழே ஆகும்.

தமிழில் மொழி என்னும் சொல் பெயர்ச் சொல்லாகவும் வினைச் சொல்லாகவும் இருக்கும் இயல்பினது. பெயர்ச் சொல்லாக இருந்தால் பேசும் மொழியை (Language) குறிக்கும். வினைச் சொல்லாக இருந்தால் மொழிதல் - பேசுதல் (Speaking) என்னும் பொருள் தரும். எனவே மொழி என்பது பெயர், வினைப் பாகுபாடு தோன்றுவதற்கு முன்னே தோன்றிய பழமை வாய்ந்த சொல்லாகும். இத்தகைய மொழிக்குத் துணையாக முருகா எனும் நாமங்கள் இருப்பதைப் பார்ப்போம்.

மொழிக்கு அடிப்படை ஒலி. 'மொழி முதற் காரணமாம். அணுத்திரள் ஒலி எழுத்து' என்று நன்னூல் இலக்கணமும் கூறுகிறது. ஒலியே மொழியாகிறது. மண்ணே குடமாவது போல என்பது கருத்து. மொழியைப் பேச வேண்டுமானால் ஒருவர் வாயைத் திறக்க வேண்டும். வாயைத் திறந்தவுடன் வருவது அகர ஒலியே. எனவேதான் திருவள்ளுவர் கடவுள் உண்மையை 'அகர முதல எழுத்தெல்லாம் ஆதி பகவன் முதற்றே உலகு' என்னும் முதற்

குறள் வாயிலாகக் கூறுகிறார். உலகத்திலுள்ள எல்லா மொழிக்கும் அடிப்படை அகர ஒலியே. அருணகிரிப் பெருமான் திருப்புகழில் பழமுதிர்சோலையைப் பாடும்போது 'அகரமுமாகி அதிபனுமாகி' முருகன் இருப்பதைக் குறிப்பிடுகிறார். மொழிக்குத் துணையாக முருகன் இருப்பதை நாம் பொது நிலையில் உணர முடிகிறது.

ஒலிகளை உயிரொலிகள் என்றும் மெய்யொலிகள் என்றும் பாகுபடுத்திப் பார்ப்பது உலக மொழிகளுக்கெல்லாம் ஒரு பொதுமைப் பண்பாகும். அந்த அடிப்படையில் தமிழில் உயிரெழுத்துகள் 12 என்றும், மெய்யெழுத்துகள் 18 என்றும், ஆய்த எழுத்து ஒன்று என்றும் கூறுகிறோம். அந்த நோக்கில் முருகப் பெருமானின் 12 கைகளும் தமிழின் 12 உயிர் எழுத்து களாகவும்' 18 கண்களும் 18 மெய் எழுத்துகளாகவும், ஆய்தம் அவனது வேலாகவும் கருதப்படுகின்றன. இந்த வகையிலும் தமிழ் மொழியின் இயக்கத்துக்கு உறுதுணையாக முருகப் பெருமான் அமைகிறான் எனலாம்.

முருகா என்னும் சொல்லைப் பார்ப்போம். எழுத்துகள் தனித்தும் தொடர்ந்தும் பொருள் தரும்போது சொல்லாகிறது. 'எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே' என்பது தொல்காப்பியம். முதலில் முருகா என்னும் சொல்லுக்கு அடிப்படையாக உள்ள முருகு என்னும் சொல்லமைப்பைப் பாருங்கள்.

ம்உ+ர்உ+க்உ இந்த ஆறு எழுத்துகளின் கூட்டமைப்பே முருகு என்பது. முருகப் பெருமானின் ஆறு முகங்களையும் ஆறு படை வீடுகளையும் ஆறெழுத்து மந்திரங்களையும் இச்சொல்லமைப்பு ஆறு எழுத்துகளின் எண்ணிக்கை உணர்த்தவில்லையா?

மேலும் தமிழில் மெய்யெழுத்தை வல்லினம், மெல்லினம், இடையினம் எனப் பகுப்பர்.
க், ச், ட், த், ப், ற் - வல்லினம், ங், ஞ், ண், ந், ம், ன் - மெல்லினம், ய், ர், ல், வ், ழ், ள் - இடையினம். ம் என்பது மெல்லினம், ர் என்பது இடையினம், க் என்பது வல்லினம். இம்மூன்றுடன் உ என்பது சேர முருகு என்பது உருவாகியுள்ளது. ஓம் என்னும் பிரணவ மந்திரம் அஉம் என்னும் மூன்றெழுத்தின் கூட்டமைப்பு என்றும் இதிலுள்ள உ காக்கும் மொழிலைக் காட்டுவது என்றும் கிருபானந்த வாரியார் கூறுவார்.

முருகு என்னும் சொல்லுக்குரிய பொருளைத் திருமுருகாற்றுப் படையில் நக்கீரர் 'மணங்கமழ் தெய்வத்து இளநலம் காட்டி' என்னும் தொடர் வழி விளக்குகிறார். அதாவது மாறா மணம், இளமைத் தன்மை, என்றும் நிற்கும் இறைமை, அழியா அழகு என்பது முருகு என்பதன் பொருள் எனத் திரு. வி. கல்யாண சுந்தரனார் 'முருகன் அல்லது அழகு' என்னும் நூலில் விளக்குகிறார். திவாகரம், பிங்கலந்தை, நாமதீப நிகண்டு முதலியவைகளைப் புரட்டினால் முருகு என்னும் சொல்லுக்கு அழகு, பூந்தட்டு, கள், தேன், எலுமிச்சை, எழுச்சி, அகில், முருகு என்னும் வாத்தியம் எனப் பல பொருள் கிடைக்கும். 'கண்ணுக்கு அழகாக, காதிற்கு நாதமாக, நாவிற்கு அமுதமாக, மூக்கிற்கு மணமாக, உடலுக்கு இனிய பரிசமாக, கருத்திற்கு விருந்தாக, உயிருக்கு உணர்வாக, இப்படி எல்லாமாக இருந்து துணைபுரிபவன் முருகன்' என்று அறிஞர் கூறுவர்.

தமிழ் மொழியில் தேர்ந்த புலமை பெற்றோரைப் புலவர் என அழைத்துப் போற்றுவர். திருமுருகாற்றுப் படை முருகனைப் 'பலர் புகழ் நன்மொழிப் புலவர் ஏறே' என்று

அழைக்கிறது. முருகப் பெருமான் புலவர் தலைவனாய்ச் சங்கமிருந்து தமிழாராய்ந்ததாக இறையனார் களவியல் உரை கூறுகிறது. மேலும் இறையனார் களவியலுக்கு உரை பகர்ந்தவன் முருகன் என்பதும் அந்நூல் கருத்து. திருமுருகாற்றுப் படையைப் புலவராற்றுப் படை என்றும் அழைப்பர். பத்துப் பாட்டிலுள்ள நூல்களைப் பட்டியலிடும் பழைய பாட்டு திருமுருகாற்றுப் படையை 'முருகு' என்றே பெயரிட்டு அழைக்கிறது.

தமிழ் மொழியின் தொன்மை இலக்கியங்கள் சங்க இலக்கியங்கள். சங்க இலக்கியங்கள் பத்துப் பாட்டும் எட்டுத் தொகையும் ஆகும். பத்துப் பாட்டின் முதற்பாட்டு திருமுருகாற்றுப் படை. இதனை இயற்றியவர் தமிழ்ச் சங்கத் தலைவர் நக்கீரர். முருகனிடத்தில் அடியார்களைச் சென்று அருள்பெற வழிகாட்டுவதே முருகாற்றுப் படை. எட்டுத் தொகை நூலாகிய பரிபாடலில் முருகனைப் பற்றிப் பாடல்கள் உள்ளன. பரிபாடல் என்பது பண்ணுடன் பாடக் கூடிய இசைப் பாடலாகும்.

சங்க இலக்கியத்தின் பாடுபொருளை அகம், புறம் எனப் பாகுபடுத்துவர். அகம் என்பது காதலையும் புறம் என்பது போர், வீரம், கொடை முதலியவற்றையும் பற்றிப் பேசும். அகம் புறம் பாகுபாடு தமிழின் சிறப்பு என்பர். அக நூலாகிய நற்றிணையில் 'முருகொடு புணர்ந்த வள்ளி போல' என்னும் தொடர் வருகின்றது. புறநூலாகிய புறநானூற்றில் 'முருகு ஒத்தியே முன்னியது முடித்தலின்' என்று கருதியதை நிறைவேற்றும் கந்தப் பெருமானின் இயல்பைப் பேசுகிறது. இவை அனைத்தும் முருகு என்னும் நாமம் தமிழ் இலக்கியத்துக்கு துணையாவதைக் காட்டும் சான்றுகளாகும்.

முருகன் என்னும் சொல் விளி வேற்றுமைப் பொருளில் அவனை அழைக்கும் நிலையில் முருகா என வரும் சோழன் - சோழா, பாண்டியன் - பாண்டியா என்பது போல இது அமையும். இது முருகா என்று மந்திரச் சொல்லாக மாறும்.

'அஞ்சும் முகம் தோன்றில் ஆறுமுகம் தோன்றும்
வெஞ்சமரில் அஞ்சல்எனவேல் தோன்றும் – நெஞ்சில்
ஒருகால் நினைக்கின் இருகாலும் தோன்றும்
முருகா என்று ஓதுவார் முன்'

என்னும் திருமுருகாற்றுப் படையிலுள்ள வெண்பா வழி முருகா என்று காதலாகிக் கசிந்து ஓதுவார் பெறும் நன்மைகளை நாம் அறிய முடிகிறது. இது கருதியே அருணகிரிப் பெருமானும் தம் கந்தரனுபூதியில்

'முருகன் குமரன் குகன் என்று மொழிந்து
உருகும் செயல் தந்து உணர்வு என்று அருள்வாய்'

எனக் கேட்கிறார். கந்தரலங்காரத்தில் (76) 'நெஞ்சமே! முருகா என்கிலே! தஞ்சம் ஏது நமக்கு' என்கிறார்.

முருகா முருகா என்று பலமுறை கூறி உருகினால் முருகன் அருள் கிடைக்கும் என்பதைத்தான் 'முருகா எனும் நாமங்கள்' எனும் பன்மைச் சொல் உணர்த்துகிறது. மேலும்

‘ஒரு நாமம் ஓருருவம் ஒன்றுமில்லார்க்கு ஆயிரம் திருநாமம் பாடி நாம் தெள்ளேணம் கொட்டாமோ’ என்னும் திருவாசகத் தொடருக்கு ஏற்ப முருகப் பெருமானுக்குரிய பல திருப் பெயர்களைச் சொல்லி உருகும் செயலையும் ‘நாமங்கள்’ என்னும் பன்மைச் சொல் உணர்த்துவதாகக் கொள்ளலாம்.

முருகப் பெருமான் குருவாய் வந்து அருள்புரியும் தன்மையுடன் அருணகிரியார்க்கு அவன் குருவாய் வந்து ‘சும்மா இரு’ எனச் சொல்லிச் சென்றான். இச்செய்தியைச் சொல்லுமிடத்தில் அருணகிரியார் முருகன் எனும் திருப்பெயரைக் குறிப்பிடுகிறார். இதற்குப் பின்வரும் கந்தரனுபூதிப் பாடல் சான்று.

‘செம்மான் மகளைத் திருடும் திருடன்
பெம்மான் முருகன் பிறவான் இறவான்
சும்மா இரு சொல் அற என்றலுமே
சும்மா பொருள் ஒன்றும் அறிந்திலனே’

நம்மை இறையருள் பெறக் கடைத்தேற்றும் நிலையிலும் அவன்- முருகன் துணையாயிருப்பதை இது சுட்டுகிறது.

மொழியைக் கடந்து நிற்பது மௌனம். அதாவது பேசா நிலை. அதற்கும் முருகா எனும் நாமம் துணையாவதைக் கீழ்வரும் கந்தரனுபூதிப் பாடலில் கூறுவதைக் காண்க:

‘தூசா மணியும் துகிலும் புனைவாள்
நேசா முருகா நினது அன்பு அருளால்
ஆசா நிகளம் துகளாயின, பின்
பேசா அனுபூதி பிறந்ததுவே.

எனவே மொழிக்கும், மொழி கடந்த நிலைக்கும் முருகா எனும் நாமங்களே துணை எனக் கொண்டு அவனைத் தொழுது, அவன் அருள் பெற்றுய்வோமாக.

*　*　*　*　*　*

# இராமலிங்கேசுவரர்

டாக்டர் சுப. திண்ணப்பன்
தெற்கு ஆசிய இயல் துறை
சிங்கப்பூர் தேசிய பல்கலைக் கழகம்
சிங்கப்பூர்

பழந்தமிழர் கண்ட சமயங்கள் இரண்டு. ஒன்று சைவம்; மற்றொன்று வைணவம். சைவம் சிவபெருமானை வழிபடுவது; வைணவமோ திருமால் எனப்படும் விஷ்ணுவை வழிபடுவது. இவ்விரண்டின் இணைப்பாக இருப்பதே **இராமலிங்கேசுவரர் வழிபாடு.** இதன் சிறப்பை இக்கட்டுரையில் காண்போம்.

## இராமலிங்கேசுவரர் என்னும் தொடர் விளக்கம்

இராமலிங்கேசுவரர் என்னும் தொடர் இராமன், லிங்கம், ஈசுவரர் என்னும் மூன்று சொற்கள் இணைந்த ஒரு தொடர். இராமன் திருமாலின் அவதாரம். அயோத்தி அரசன் தசரதனுக்கு மகனாகப் பிறந்து, ஜனகன் மகள் சீதையை மணந்து, தாய் கைகேயி விருப்பத்திற்கேற்பக் காடு சென்று, தேவர்களுக்குக் கொடுமை செய்ததுடன் தன் மனைவியையும் விரும்பிக் கவர்ந்து சென்ற இலங்கை அரசன் இராவணனைப் போரில் கொன்றவன் இராமன். இதனை விளக்குவது இராமாயணம். லிங்கம் என்பது சிவபெருமானின் அருவுருவ வடிவமாகும். ஒரு நாமம் ஓர் உருவம் ஒன்றுமில்லாத இறைவன் வழிபடுவோர் வசதிக்காக (கண்ணால் பார்க்கக்கூடிய)உருவமாகவும், (கண்ணால் பார்க்க முடியாத)அருவமாகவும், அருவுருவமாகவும் வருகிறான். சிவலிங்கத்தில் உருவம் என ஒன்று இருந்தாலும்அதன் வடிவத்தை ஆண் பெண் எனப் பகுக்க முடியாது. எனவே அது அருவுருவம் எனப்படுகிறது. ஈசுவரர் என்பது தலைவன், கடவுள், சிவன் ஆகியவற்றை உணர்த்தும். ஆக இராமலிங்கேசுவரர் என்னும் தொடர் திருமாலின் அவதாரம் ஆகிய இராமன் கடவுளாகக் கருதி வழிபட்ட சிவலிங்கம் என்பதைக் காட்டுகிறது. இந்தச் சிவலிங்கம்தான் இன்று தமிழகத்தில் இராமேச்சுரம் என்னும் திருத்தலத்தில் எழுந்தருளியுள்ள இறைவனாகும். இவர்க்கு இராமநாதர் என்னும் பெயரும் உண்டு.

## இராமேச்சுரப் பெருமை

இராமேச்சுரம் மூர்த்தி தலம் தீர்த்தம் என்னும் மூவகையாலும் சிறப்புடையது. தென் நாட்டிலுள்ள இந்துக்கள் வடநாட்டிலுள்ள காசியைப் புண்ணியத் தலமாகக் கருதி வழிபடுவார்கள். அதுபோல் வட நாட்டிலுள்ள இந்துக்கள் தென் நாட்டிலுள்ள இராமேச்சுரத்தைப் புண்ணியத் தலமாகக் கருதி வழிபடுவார்கள். எனவேதான் காசி இராமேஸ்வரம் என்று இணைத்துப் பேசுவது மரபாயிற்று. காசி சிவனுடன் தொடர்புடையது. இராமேஸ்வரம் இராமனுடன் தொடர்புடையது. இராமபிரான் இராமநாதரைப் பிரதிஷ்டை செய்து வழிபட்ட தலம் இராமேஸ்வரம். காசியில் விசுவநாதர் என்னும் திருப்பெயருடன் கோயில்கொண்டுள்ள சிவபெருமான், அந்தத் தலத்தில் இறப்பவர்களி£ன் காதுகளில் ‘ராமா’ என்று சொல்லி அவர்களுக்குச் சிவபதவி வழங்குவதாகக் கூறுவார்கள். காசியில் கங்கை, இராமேஸ்வரத்தில் சேதுப் பெருங்கடல். இரண்டிலும் நீராடுவது சிறப்பு. காசியில் விசுவநாதர்,

இராமேஸ்வரத்தில் இராமநாதர். இந்தியாவில் உள்ள பன்னிரண்டு ஜோதி லிங்கங்களில் இவை இரண்டும் அடங்கும். ஜோதி என்பது தீப்பிழம்பு. தீப்பிழம்பின் வடிவமே சிவலிங்கம். ஆதியும் அந்தமுமில்லாத சோதியாக- நெருப்பாகச் சிவன் திரு அண்ணாமலையில் கார்த்திகை நாளன்று
தோன்றிய வடிவமே சிவலிங்கம். தீ என்பது ஒளி. அது அறிவின் அடையாளம், இறைவனை வாலறிவன் (தூய்மையான அறிவினன்) என்று தானே திருவள்ளுவர் கூறுகிறார். அவனை அருட்பெருஞ்சோதி என்று அழைக்கிறார் வள்ளலார் எனப்படும் இராமலிங்க அடிகளார். தேவாரம் பாடிய திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகிய மூவரும் இராமேஸ்வரம் வந்து இராமலிங்கேசுவரரை வழிபட்டுப் பாடல்கள் பாடியுள்ளனர். இவற்றில் சுந்தரர் பாடல்கள் நமக்குக் கிடைக்கவில்லை.

**திருஞானசம்பந்தர் தேவாரத்தில்**

திருஞானசம்பந்தர் தம் தேவாரத்தில் மூன்றாம் திருமுறையில் இரண்டு பதிகங்களில் இராமலிங்கேசுவரரைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார் இராமேஸ்வரத்தில் வில்வீரனாகிய இராமபிரான்தன் தேவியாகிய சீதையை மாயம் செய்து வஞ்சனையால் வலிதின் கவர்ந்துசென்ற இலங்கை வேந்தன் பத்துத்தலை இராவணனைக் கொன்ற கொலைப் பாவமாகிய பிரமஹத்திக் குற்றம் நீங்கச் சிவலிங்கம் அமைத்து வழிபட்ட செய்தியை

“தேவியை வவ்விய தென்னிலங்கைத் தசமாமுகன்
பூவியலும் முடிபொன்றுவித்த பழிபோயற
ஏவியலும் சிலைவண்ணன் செய்த இராமேச்சுரம்
மேவிய சிந்தையினார்கள் தம் மேல்வினை விடுமே”

என்னும் பாடலில் கூறுகிறார். மேலும் தேவர்களுக்குக் கொடுமைகள் செய்த இராவணனைக் கொன்ற இராமனை “மெய்ம்மை ஏவலனார் ( சத்தியத்தில் வழுவாதவன்)” என்றும் “அணையலை சூழ்கடல் அன்றுஅடைத்து வழிசெய்தவன்” என்றும் போற்றிப் புகழ்கிறார்

“சனிபுதன் ஞாயிறு வெள்ளி திங்கள் பலதீயன
முனிவது செய்து உகந்தானை வென்ற வினைமூடிட
இனி அருள் நல்கிடு என்று அண்ணல் செய்த இராமேச்சுரம்
பனி மதி சூடி நின்றாட வல்ல பரமேட்டியே”

என்னும் ஞானசம்பந்தர் பாடலும் வலியுறுத்தும். இராமலிங்கேசுவரரை வழிபடுவோர் மேல்வினை நீக்கம் பெறுவர் என்றும் சான்றுடன் அவர் கூறுகிறார்.

**திருநாவுக்கரசர் தேவாரத்தில்**

திருநாவுக்கரசர் தேவாரத்தில் நாலாம் திருமுறையில் ‘பாசமும் கழிக்ககில்லா’ என்று தொடங்கும் திருநேரிசைப் பதிகம் இராமேச்சுரம் பற்றியது. கைலை மலை எடுத்த இராவணனுக்குச் சிவபெருமான் அருள்செய்த திறத்தை ஒவ்வொரு பதிகத்திலும் பாடும் இயல்பினராகிய நாவுக்கரசர்.இந்தப் பதிகப்பாடல்களில் இராவணனைக் கொன்ற பழிதீர

திருமாலின் அவதாரமாகிய இராமன் இராமேச்சுரத்தில் இராமலிங்கேஸ்வரரை அமைத்து மலரால் வழிபட்ட வரலாற்றைக் கூறுகிறார். பாடல் அடிகள் வருமாறு;

"பாசமும் கழிக்க கில்லா அரக்கரைப் படுத்துத் தக்க
வாசமிக் கலர்கள்கொண்டு மதியினால் மால் செய்தகோயில்
நேசமிக் கன்பினாலே நினைமின்நீர் நின்றுநாளும்
தேசமிக்கான் இருந்த திருவிராமேச் சுரமே."

"வரைகள் ஒத்தே உயர்ந்த மணிமுடை அரக்கர் கோனை
விரையமுற்றற ஒடுக்கி மீண்டுமால் செய்தகோயில்"

மேலும் இராமலிங்கேஸ்வரரை வணங்குவோர் தவமுடையோர் எனவும், இறைவன் திருவடி நீழலில் தங்கிப் பேரின்பம் பெறுவர் எனவும், துன்பங்களும் வினைகளும் நீங்கப்பெறுவர் எனவும்
கூறுகிறார். "நோக்கினால் வணங்குவார்கள் நோய்வினை நுண்ணுகுமன்றே" என்பது அவர் கூற்று

**சேக்கிழார் பெரிய புராணத்தில்**

சேக்கிழார் பெரிய புராணத்தில் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் வரலாறுகளைக் கூறும்போது அவர்களின் இராமேச்சுரவழிபாட்டைக் கூறத் தவறவில்லை. திருஞானசம்பந்தர், புராணத்தில் சேக்கிழார்

"விண்ணவரைச் செற்றுகந்தான் இலங்கை செற்ற மிக்க பெரும்பாதகத்தைவேண்டித்
திண்ணிய பொற்சிலைத் தடக்கை இராமன் செய்த திருவிராமேச்சுரத்தைச்
சென்றுசேர்ந்தார்"

என்று கூறுகிறார். இவ்வாறே திருநாவுக்கரசர் புராணத்தில் சேக்கிழார்

"தென்னிலங்கை இராவணன் தன் சிரம் ஈரைந்தும் துணித்த
மன்னவனாம் இராமனுக்கு வரும்பெரும் பாதகந்தீர்த்த
பிஞ்ஞகனைத் தொழுவதற்கு நினைந்துபோய்ப் பெருமகிழ்ச்சி
துன்னிமனங் கரைந்துருகத் தொழுதெழுந்தார் சொல்லரசர்"

"தேவர்தொழும் தனிமுதலைத் திருவிராமீச் சுரத்து
மேவிய சங்கரனை எதிர்நின்று விருப்புறு மொழியால்
பாவுதிரு நேரிசைகள் முதலான தமிழ்பாடி
நாவரசர் திருத்தொண்டு நலம்பெருகச் செய்தமர்ந்தார்"

என்னும் பாடல்கள்வழி விளக்குகிறார். இப்பாடல்களில் இராமன் இராவணனைக் கொன்றதால் விளைந்த பெரும்பாதகம் தீர்த்தவர் இராமலிங்கேஸ்வரர் என்பதைக் கூறி, அவரைப் பிஞ்ஞகன் என்றும் சங்கரன் என்றும் போற்றிப் பேசுகிறார் சேக்கிழார்.

**பாதகம் தீர்த்த பரமன்**

இராமன் இராவணனைக் கொன்றது ஏன் பெரும் பாதகமாகக் கருதப்பட்டது? பொதுவாகக் கொல்லாமை பேரறமாகத் திருவள்ளுவரால் பேசப்படுவதை ‘அறவினை யாதெனில் கொல்லாமை கோறல் பிறவினை எல்லாம் தரும்” “ஒன்றாக நல்லது கொல்லாமை மற்றது பின்சாரப் பொய்யாமை நன்று” “நல்லாறு எனப்படுவது யாதெனின் யாதொன்றும் கொல்லாமை சூழும் நெறி” (குறள் 321, 323, 324) ஆகிய குறள்களால் உணரலாம். மேலும் இராவணன் சிறந்த சிவபக்தன் என்பதையும் திருமுறைகள் பரக்கப் பேசுகின்றன.எனவேதான் இராமன் இராவணனைக் கொன்றதைப் பெரும்பாதகமாகக் கருதி இராமேச்சுரத்தில் சிவலிங்கம் அமைத்து வழிபட்டான் எனலாம். அவரே இராமலிங்கேஸ்வரர் ஆவார். சூரபன்மனைக் கொன்ற

முருகன் திருச்செந்தூரில் சிவலிங்க வழிபாடு செய்ததையும் இங்கு ஒப்புநோக்கலாம். அறம் திறம்பிய அரக்கர்களைக் கொன்றாலும் அது குற்றம் தான்/ பாதகம்தான் என்பதை உணர்த்தவே இவ்வழிபாடுகள் என்பதையும் அறியவேண்டும். “நடையில் நின்றுயர் நாயகன்” “காசில்(குற்றமில்லாத) கொற்றத்து இராமன்” என்பன கம்பன் வாக்குகள் அல்லவா?

**கம்பனும் வால்மீகியும்**

வடமொழியாகிய சமஸ்கிருதத்தில் இராமாயணம் இயற்றிய ஆதிகவியாகிய வால்மீகி முனிவர் இராவணனுடன் நடத்திய போருக்கு முன்னாலேயே இராமபிரான் இராமேஸ்வரத்தில் சிவபூஜை

செய்ததாகக் கூறுகிறார். ஆனால் தமிழில் இராமாயணம் இயற்றிய கவிச்சக்கர்வர்த்தி கம்பனோ இராவண வதத்திற்குப் பிறகே இராமன் இராமேஸ்வரத்தில் சிவலிங்கத்தை நிலைநாட்டியதாகக் கூறுகிறான். இந்தியில் இராமாயணம் இயற்றிய துளசிதாசரும் இவ்வாறே கூறுகிறார். இதற்குக் காரணம் கம்பனுக்கு முன்னர் இக்கருத்தே தமிழகத்தில் நிலவி இருந்ததைத் திருமுறைகள் காட்டுகின்றன. மேலும் இராமேச்சுரம் என்பதே கடலில் மலைகளையும் பெரும்கற்களையும் இராமன் கொண்டுவந்து போட்டு அதனைத் தீவாக்கிக் (Reclamation Land) கோயில் அமைத்ததாக நாவுக்கரசர் கூறுகிறார்.

“கடலிடை மலைகள்தம்மால் அடைத்து மால் கருமமுற்றித்
திடலிடைச் செய்த கோயில்திருவிராமேச் சுரம்”

என்பது அப்பர் வாக்கு.மேலும் மீட்சிப்படலத்தில் சேதுக் கடலின் புண்ணியப் பெருமையை இராமன் சீதையிடம் சொல்வதாகவும் கம்பன் கூறுகிறான்.

**அடியார் வழிபாடும் ஆண்டவன் வழிபாடும்**

அடியார் வழிபாடும் ஆண்டவன் வழிபாடும் இந்துசமயத்தின் இருகண்கள். இராமலிங்கேஸ்வரர் வழிபாட்டில் இராமனாகிய அடியாரையும் லிங்கமாகிய ஆண்டவனையும் ஒருசேர நினைக்கும் வாய்ப்பு கிடைப்பதால் இருவழிபாடும் ஒருசேர அமைகின்றன என்று கூறலாம்.

**முடிவுரை**

இராமலிங்கேஸ்வரர் வழிபாடு சைவ வைணவ ஒற்றுமை, கொல்லாமை அறத்தின் பெருமை, சிவபூசைச் சிறப்பு, அடியார் வழிபாடு,ஆண்டவன் வழிபாடு, இராமேச்சுரத்தின் ஏற்றம், சிவலிங்கத்தீன் சீர்மை, இராமபிரானின் எடுத்துக்காட்டு, திருமுறை ஆசிரியர்களீன் தெய்வத்தமிழ் ஆகியவற்றைச் சிந்தித்துச் செயலாற்ற வழிவகுப்பதாக அமையட்டும்.

முற்றும்

# அரச கேசரி சிவன் -சில சிந்தனைகள்

**டாக்டர் சுப. திண்ணப்பன்**
**சிங்கப்பூர் தேசிய பல்கலைக் கழகம்**

அரச கேசரி சிவன் என்னும் தொடர் அரசு, கேசரி, சிவன் என்னும் மூன்று சொற்களால் உருவான ஒன்று. அரசு என்பது அரசன், அரச மரம் என்னும் இரண்டு பொருளைக் குறிக்கும். கேசரி என்பது சிங்கத்தைக் குறிக்கும். இந்த இரண்டு சொற்களும் சிவன் என்னும் சொல்லுக்கு அடைமொழிகளாக இந்தத் தொடரில் இடம் பெற்றுள்ளன. எனவே இந்தத் தொடரின் பொருளாழத்தை அரசு சிவன், கேசரி சிவன், அரச கேசரி சிவன் என்னும் மூன்று வகையாக நோக்கலாம்.

**அரசு சிவன்**

நாட்டை ஆளும் அரசனைக் கடவுளாகக் கருதும் மரபு தமிழில் உண்டு. எனவேதான் அரசன், கடவுள் இருவரையும் குறிக்க ஆண்டவன், இறைவன் என்ற சொற்கள் பயன்பாட்டில் இருந்தன.இவ்வாறே கோயில் என்னும் சொல் அரசன் வாழும் அரண்மனையயும், கடவுள் இருக்கும் ஆலயத்தையும் குறித்தது."முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு இறைஎன்று வைக்கப் படும்" என்னும் திருக்குறள் (388) இதற்குரிய காரணத்தைக் கூறுகிறது. அறநூலும் நீதி நூலும் சொல்லும் நெறியில் நின்று அரசன் மக்களைக் காப்பாற்றுகிறான். எனவே அவன் பிறப்பால் மனிதனே ஆனாலும் அவன் மக்களால் கடவுளாகக் கருதப்படுகிறான். இக்குறள் இடம்பெறும் இறைமாட்சி என்னும் அதிகாரத்துக்குப் பொருள் கூறும் பரிமேலழகர் அரசன் நற்குண நற்செய்கைகளால் உலகபாலர் உருவாய் நின்று உலகம் காத்தலின் இறை என்று அழைக்கப்பட்டதாகக் கூறுகிறார். அரசச் சின்னங்கள் முடி,குடை, கொடி, கவரி, தொட்டி, முரசு, யானை, முதலியவை ஆண்டவனுக்கும் உரியனவாக உள்ளன.

"திருவுடை மன்னனைக் காணில் திருமாலைக் கண்டேனே" என்று நம்மாழ்வார் அரசனை விஷ்ணுவாகப் பார்க்கிறார்.இவ்வாறே சிவபெருமானையும் அரசனாகக் காணும் மரபுண்டு. "உத்தரகோச மங்கைக்கு அரசே" என்றும் உம்பர்கட்கு அரசே

என்றும் “ஆடக மதுரை அரசே போற்ற “¢ என்றும், “திருப்பெருந்துறை மன்னா” என்றும் திருவாசகத்தில் மாணிக்கவாசகர் சிவபெருமானைஅழைக்கிறார். மேலும் திருத்தசாங்கம் என்னும் தலைப்பில்சிவபெருமானை அரசனாகக் கருதி அவனுக்குரிய பேர், நாடு, ஊர். ஆறு, மலை, ஊர்தி, படை, முரசு, மாலை, கொடி ஆகிய பத்து உறுப்புகளை அவரே சுட்டிப் பாடுகிறார்.

திருவிளையாடல் புராணம் சிவபெருமான் அரசனாக வந்த வரலாற்றை மீனாட்சி திருமணப் படலத்தில் நன்கு விளக்குகிறது. மதுரையைத் தலைநகராகக் கொண்டு அரசுபுரிந்த மலயத்துவச பாண்டியனின் மகளாக உமாதேவியார் அவதரித்துத் தடாதகை என்னும் பெயர் தாங்கி நின்றார். கலைமுழுதும் கற்றுத் தேர்ந்தார். அரசர்க்குரிய போர்ப் பயிற்சி பெற்றார். தந்தை அவரைப் பாண்டிய நாட்டரசியாக முடி சூட்டினான். அவரை மணந்து எல்லாம் வல்ல சிவபெருமான் சோமசுந்தரப் பாண்டியனாக முடிசூடிப் பாண்டிய நாட்டை ஆளும் மன்னரானார். இதனைத் திருவிளையாடல் புராணம்

“அதிர்விடைக் கொடிஅங் கயற்கொடி யாக
அராக்கலன் பொற்கலன் ஆக
பொதியவிழ் கடுக்கை வேம்பலர் ஆகப்
புலியதள் பொலந்துகில் ஆக
மதிமுடி வைர மணிமுடி ஆக
மறைகிடந்து அலம்புமா மதுரைப்
பதியுறை சோம சுந்தரக் கடவுள்
பாண்டிய னாகிவீற் றிருந்தான்”

எனக் கூறுகிறது. சிவபெருமானின் இடபக் கொடி பாண்டியனின்மீன் கொடியாக் மாறியது. அவன் அணியும் பாம்புகள் பொன் அணிகலன்களாகின. அவனது கொன்றை மாலை வேம்பு மாலையாகிற்று. புலித் தோலாடை பொன்னாடை ஆயிற்று.பிறை சூடிய சடைமுடி வைர முடியாயிற்று. இவ்வாறு மதுரை சோமசுந்தரக் கடவுள் பாண்டியனாகி அரசாட்சி செய்தார்.தேவர்கள் எல்லாரும் வடிவம் மாறிப் பணி செய்ய வந்தனர்.

பிறகு பாண்டிய மன்னர்கள் வேண்டும்போதெல்லாம் உதவிகள் பல செய்து திருவிளையாடல்கள் சிவன் நிகழ்த்தினார். “உலகியல் நிறுத்துவான் வந்து ஒரு பரஞ்சுடர் வான் திங்கள் குலமணி விளக்கை வேட்டுக் கோமுடி கவித்துப் பார் ஆண்ட”தாக அந்தப் புராணம் பேசுகிறது.

தென்கிழக்கு ஆசிய நாடுகளில் குறிப்பாக கம்போடியா, தாய்லாந்து ஆகிய நாடுகளில் சிவலிங்க வழிபாடு ஆளும் அரசனை வணங்கும் வழிபாடாகவும் அமைந்தது. இதற்குத் தேவராஜ வழிபாடு என்று பெயர். நாட்டை ஆளும் அரசரின் ஆற்றல் சிவனிடமிருந்து சிவலிங்கத்தின் மூலமாகப் பெறப்படுவது என்றும், அந்த இலிங்கம் மலையுச்சியில் வைத்துக் காக்கப்படல் வேண்டும் என்றும் கருதப்பட்டது. கம்போடியாவில் பிற்காலத்தில் தோன்றிய சிற்பங்கள் சிவன், விஷ்ணு முதலிய தெய்வங்களைப் பிரதிநிதித்ததுடன் அச்சிற்பங்களை நிறுவிய அரசர்களையும் குறித்தன. அச்சிற்பங்கள் அரசர்களின் வடிவமாகவே அமைந்தன.தாய்லாந்து நாட்டில் சிவபெருமானைப்

போற்றும் தேவாரப் பதிகங்களும், திருவெம்பாவைப் பாடல்களும் அரசர் முடிசூட்டுவிழாவின்போது முக்கிய அம்சமாக இன்றும் இடம்பெற்றுள்ளன. இது அரசனைச் சிவனாகக் கருதுவதைக் காட்டும். மேலும் அங்கு தை மாதத்தில் கொண்டாடப்படும் 'லோஜின்ஜா' எனப்படும் ஊஞ்சல் திருவிழாவின்போது சிவன் பூவுலகிற்கு வருகை தருவதைத் தாய்லாந்து அரசரே அவ்விழாவிற்கு வருகை தந்து விழாக்களத்தில் சிவனாகக் காட்சி தருவதன்மூலம் உணர்த்தினர். அப்போது பாவைப் பாடல்களைப் பாடி அரசனைச் சிவனாக மக்கள் வழிபட்டனர். அரசன் அப்போது மக்களுக்கு அளிக்கும் பரிசுகள் சிவன் தந்ததாகக் கருதப்பட்டன. அங்கு பாவைப் பாடல்கள் தெய்வபக்திப் பாடல்களாகப் பயன்பட்டதோடன்றி அரசரின் இறைத்தன்மையை உணர்த்தவும் பயன்பட்டதாகக் கொள்ளாலாம். மக்களுக்கு அரசர் தேவராஜாவாக- சிவனாகக் காட்சி அளித்ததை இது காட்டுகிறது.

அரசு என்பது அரச மரத்தைக் குறிக்கும் நிலையிலும் அது சிவனுடன் தொடர்புடையதாக இருப்பதை இனிப் பார்ப்போம். அரசு எல்லா மரங்களுக்கும் தலைமையானது.ஆகையால் தான் அரசு எனப் பட்டது. அதுபோல் எல்லாத் தெய்வங்களுக்கும் தலைமையான சிவனும் அரசு தானே? திருமணத்தின்போது அரசாணிக்கால் நடுவதும் அரசன் ஆணை முன்னர்- சிவன் ஆணை முன்னர் நடைபெறுவது என்பதை உணர்த்தத்தானே? மேலும் அரச மரத்துக்கும் வேப்ப மரத்துக்கும் திருமணம் செய்து வைக்கும் வழக்கம் எதனை உணர்த்துகிறது? வேம்பு சக்தியின் வடிவம் என்றால் அரசு சிவனின் வடிவம் என்பதனைத் தானே உணர்த்துகிறது.

அரசு தல விருட்சமாகப் பல திருக்கோயில்களில் இடம்பெற்று இருப்பதையும் நாம் பார்க்கிறோம். எனவே அரச மரத்தின் அடியில் வீற்றிருந்த சிவபெருமான் அரச கேசரி ஆகிறார்.

அரச மரத்துக்குப் போதிமரம் என்றொரு பெயர் உண்டு. புத்தர் பிரான் ஞானம் பெற்ற இடம் போதிமர நிழலே. எனவே அரச மரம் ஞானத்தின் அடையாளம், அதுபோலச் சிவபெருமானும் ஞானத்தின் சொருபம். " ஞானத்திரளாய் நின்ற பெருமான் நல்ல அடியார், ஊனத்திரளை நீக்கும் அதுவும் உண்மைப் பொருள் போலும்" என்பது திருஞான சம்பந்தர் தேவாரம். மேலும் திருஞான சம்பந்தருக்குச் சிவபெருமானும் சிவஞானம், கலைஞானம், மெய்ஞ்ஞானம் முதலிய பலவகை ஞானங்களைப் பாலொடு ஊட்டியதை நாம் அறிவோம். ஞானம் என்பது ஈசன்பால் அன்பே என்றனர் ஞானம் உண்டார் என்பது சேக்கிழார் வாக்கு.

**கேசரி சிவன்**

சிவபெருமானைச் சிங்கமாக அதாவது கேசரியாகத் திருநாவுக்கரசர் "எண்ணுகேன் என் சொல்லி எண்ணுகேனோ' என்னும் தம் திருப்புகலூர்த் தேவாரப் பதிகத்தில் அழைக்கிறார். "சங்கை ஒன்று இன்றியே தேவர் வேண்டச் சமுத்திரத்தின் நஞ்சு உண்டு சாவா மூவாச் **சிங்கமே** உன்னடிக்கே போதுகின்றேன் திருப்புகலூர் மேவிய தேவ தேவே" என்னும் அடிகள் இப்

பதிகத்தின் இரண்டாம் பாடலில் இடம்பெறுகின்றன. இப் பதிகம் திருநாவுக்கரசர் திருவடி முத்தி அடைந்தபோது பாடியது. அவர் பாடிய கடைசிப் பதிகம். எனவே திருப்புகலூரில் இவ்விழாவின்போது முன்பு சிவலிங்கத்திற்குச் சிங்க வடிவில் அலங்காரம் செய்வார்களாம்.

விஷ்ணு எடுத்த பத்து அவதாரங்களில் ஒன்று நரசிம்மாவதாரம். அப்போது இரண்யனைக் கொன்ற நரசிம்ம மூர்த்தி தருக்கி அட்டகாசம் செய்யக் கண்ட பிரமன் சிவபெருமானைத் துதிக்கச் சிவன் சரப மூர்த்தி உருக்கொண்டு நரசிங்கத்தின் தோலை உரித்து உடுத்திக் கொண்டதாக ஒரு புராணச் செய்தி உண்டு. சரப மூர்த்தி உரு எட்டுக் கால்களையும். இரு தலைகளையும் கொண்ட மிருகப் பறவை உருவம் என்றும் இதற்கு இரண்டு சிங்க முகங்களும் இரண்டு பக்கச் சிறகுகளும் உண்டு என்றும் கூறுவர். சிங்கத்தின் உடலுடனும் எட்டுக் கால்களுடனும் கூடிய பறவை என்று காஞ்சிப் புராணம் கூறுகிறது..சரப மூர்த்தி உருவும் சிவனைச் சிங்கமாகக் காட்டுகிறது.

**அரசகேசரி சிவன்**

அரசர்களில் சிங்கம் போன்றவன் அதாவது தலைமையானவன், சிறந்தவன், இனியவன், ஏற்றம் மிக்கவன் சிவபெருமான் என்பதை அரசகேசரி என்னும் தொடர் உணர்த்தும்.

'தனிமுடி கவித்தாளும் அரசினும் இனியன் தன்னடைந்தார்க்கு இடை மருதனே' என்று திருநாவுக்கரசர் திருவிடைமருதூர் இறைவனைப் பாடுகிறார். முடிசூடி உலகாளும் அரசனை விடச் சிவன் அடியவர்களுக்கு இனியவனாக இருப்பதை இத்தொடர் குறிக்கிறது.

அரசன் நில உலகின் ஒரு பகுதியை மட்டும் ஆளுகிறான். ஆனால் சிவனோ நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம், சூரியன், சந்திரன், ஆன்மா ஆகிய அனைத்தும் கொண்ட அண்டங்களை எல்லாம் கட்டி ஆளுபவன் அல்லவா? அதனால் அவன் அரசர்களுக்கெல்லாம் அதிபதி தானே?

அரசன் குடிமக்களைக் காத்தல் தொழில் மட்டுமே செய்கிறான். ஆனால் சிவனோ அண்ட சராசரங்களையும் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய ஐந்து தொழில்களையும் செய்கிற பேரருளாளன் . எனவே அவன் அரசரினும் எத்துணை பெரியவன் என்பது விளங்கும்.

திருவிளையாடல் புராணத்தில் மனிதர்க்கு அரசாகித் தெவ்வேந்தர்க்கு மடங்கலாகி, மங்கையர்க்கு மன்மதனாகி, நிலமகளுக்குத் திருமாலாகிச் சிவன் இருந்தான் என்று அந்நூலாசிரியர் பரஞ்சோதியார் திருமணப் படலத்தை முடிக்கிறார். மனிதர்க்குச் சிவபெருமான் அரசன். பகை வேந்தர்க்கு அவன் ஒரு சிங்கம் (மடங்கல் - கேசரி). எனவே சிவன் அரசகேசரி ஆகிறான்.

" விண் ஆளும் தேவர்க்கு மேல் ஆய வேதியனை,

மண் ஆளும் மன்னவர்க்கு மாண்பு ஆகி நின்றானைத்,
தண்ணார் தமிழ் அளிக்கும் தண்பாண்டி நாட்டானை,
பெண் ஆளும் பாகனைப் பேணு பெருந்துறையில்,
கண்ஆர் கழல்காட்டி நாயேனை ஆட்கொண்ட
அண்ணாமலையானைப் பாடுதும் காண் அம்மானாய் "

என்னும் திருவாசகப் பாடலில் மாணிக்கவாசகர் சிவபெருமானை வான் உலகத்தை ஆளுகின்ற இந்திரன் முதலிய தேவர்களுக்கும் மேலான அறிஞனாகவும், நில உலகத்தை ஆளுகின்ற அரசர்களுக்கு எல்லாம் தலைமைப் பண்புகள் கொண்டவனாகவும் காண்கிறார்.

அரசன் என்பவன் பிரமன், இந்திரன், வாயு, இயமன், சூரியன், அக்னி, வருணன், சந்திரன், குபேரன் ஆகிய இவர்களின் கூறுகளினால் படைக்கப்பட்டவன் என்று சுக்கிர நீதி என்னும் சமஸ்கிருத நூல் கூறுகிறது. இவர்களுக்கெல்லாம் தலைவனாகிய சிவபெருமான் அரசர்க்கெல்லாம் தலைவர் தானே? அரசகேசரி தானே?

அரசனை ஆண்டவன் பிரதிநிதியாகக் கருதுகிறோம். “திருவுடை மன்னனைக் காணில் திருமாலைக் கண்டேனே” என்று நம்மாழ்வார் கூறுகிறார். இத்தகைய திருமாலும் காண இயலாத திருவடியைக் கொண்டவன் சிவன் எனில் சிவன் அரசர்க்கு அரச கேசரி தானே?

அரச மரம் பிர்மா, விஷ்ணு, சிவன் என்னும் திரி மூர்த்தி ஸ்வ்ரூபம் என்றும் இதனை நாள்தோறும் வலம் வருபவர் மூவரையும் வலம் வந்தவர் ஆவர். என்றும் புண்ணியம் மிக்கவர் என்றும் சொல்வர். மால் அயன் காண முடியாத அடி முடி கொண்ட சிவன் அரச கேசரி தானே?

சரப மூர்த்தி வரலாறும் சிவன் அரச கேசரி என்பதை உணர்த்துகிறது.

அரசகேசரி என்னும் தொடர் இருவரைக் குறிப்பதாக அபிதான சிந்தாமணி என்னும் தமிழ்க் கலைக்களஞ்சியம் கூறுகிறது.1 தனதத்தன் பெருமை உணர்ந்து சிவபூசை கடைப்பிடித்து நாகபட்டினத்தில் சிவன்கோயிலைப் புதுப்பித்தவன். இங்கே தனதத்தன் என்பவன் காரைக்கால் அம்மையாரின் தந்தையாக இருக்கலாம். அல்லது விண்டுதத்தன் மகன், வாமதேவமுனிவரிடம் உபதேசம் பெற்றுச் சிவபூசை செய்து யமபுரம் சென்று மீண்டும் உயிர் பெற்று முத்தி பெற்றவனாகவும் இருக்கலாம்.

2 யாழ்ப்பாணத்து நல்லூரைச் சார்ந்த ஒருவர், பரராசசேகரி மகாராஜாவின் மருகர், பாண்டிய நாட்டு ஆழ்வார் திரு நகரியிலிருந்த அஷ்டாவதானி இராமனுஜக் கவிராயரிடம் கல்வி பயின்றவர். இவர்காலம் சற்றேறக்குறைய 3300 ஆண்டுகளுக்கு முன்புஎன்பர். இவர் வடநூல் இரகுவம்ச காவியத்தைத் தமிழில் இயற்றியவர்.சிங்கப்பூரில் யாழ்ப்பாணத்தவர் இக்கோயிலில் கொண்ட தொடர்பினால் இக்கோயில் அரச கேசரி சிவன் கோயில் எனவும் அழைக்கப்பட்டிருக்கலாம்.

அரச கேசரி என்னும் சொல்லுக்கு ஏற்ற மாற்று வடிவம் இராச சிங்கம் என்பது. இத்தொடராலேயே திருநாவுக்கரசர் தம் தேவாரத்தில் பாவநாசப் பதிகத்தில் சிவபெருமானை அழைக்கும் பாடல் வருமாறு:

எழிலார் **இராசசிங்கத்தை,** இராமேச்சுரத்துஎம் எழிலேற்றைக்,
குழலார் கோதை வரை மார்பின் குற்றாலத்து எம் கூத்தனை,
நிழலார் சோலை நெடுங்களத்து நிலாய நித்த மணாளனை,
அழலார் வண்ணத்து அம்மானை, அன்பில் அணைத்து
வைத்தேனே.

**இராச சிங்கமாகிய அரச கேசரிச் சிவபெருமானை வணங்கி நாம் நம் பாவங்களைப் போக்கிக் கொள்வோம்** முற்றும்

# திருமுறையில் உமை அம்மை

அறக்கருணை வடிவமே உமை அம்மை. திருமுறையில் உமை அம்மை பெறுமிடம் பற்றி ஒரு சிறிது பார்ப்போம். திருமுறையின் தொடக்கப் பாடல் " தோடுடைய செவியன்" எனத் தொ டங்கும் திருஞான சம்பந்தர் தேவாரம் ஆகும். இப்பாடல் எழுந்த சூழ்நிலையைப் பார்ப்போம். சீகாழியில் தந்தையாருடன் நீராடச்சென்ற ஞானசம்பந்தக் குழந்தை தன் தந்தை நீராடும்போது அவரைக் காணாது கலங்கிக் கோயிலைப் பார்த்து"அம்மே அப்பா" என்று அழுதது, இதனைக் கேட்ட சிவபெருமான் உமை அம்மையோடு அங்கு எழுந்தருளி உமை அம்மையைப் பார்த்து "துணைமுலைகள் பொழிகின்ற பாலடிசில் பொன் கிண்ணத்து ஊட்டு" எனப் பணித்தருளினார். அதற்கேற்ப உமை அம்மை " எண்ணரிய சிவஞானத்து இன்னமுதம் குழைத்தருளி "உண் அடிசில்" எனச் சம்பந்தர்க்கு ஊட்டினார். அந்நிலையில் சம்பந்தர் சிவஞானம், கலைஞானம், மெய்ஞ்ஞானம் முதலியன உணர்ந்து ஞான சம்பந்தர் ஆனார். நீராடிவிட்டுக் கரையேறிய ஞானசம்பந்தரின் தந்தையார்' யார் அளித்த பாலடிசில் உண்டது நீ"
என அரட்டிக் கேட்க அதற்குப் பதில் கூறும் வகையில் எழுந்ததுதான்" தோடுடைய செவியன்" எனத் தொ டங்கும் பாடல். எனவே திருமுரையின் தொடக்கத்திற்கே உமை அம்மையார்தான் காரணம் என்பதனை இதன் வழி உணரலாம்.

" தோடுடைய செவியன்" என்னும் தொடரில் தோடு என்பது பெண்கள் காதில் அணியும் ஓர் அணிகலன். செவியன் என்பது ஆண்பாலை உணர்த்துவது. எனவே " தோடுடைய செவியன்" என்பது உமாதேவியாரைத் த ன் உடம்பில் ஒரு பாதியாகக் கொண்ட உமையொரு பாகனை உணர்த்தும். உமை அம்மை அருளால் உருவான திருமுறை வாக்கை நினைத்துத்தான் உமையம்மையாரைக் குறிக்கத் தோடு எனத் தொடங்கிப் பாடினார் ஞானசம்பந்தர். எனவே சிவபெருமானையே பாடும் திருமுறையின் தொடக்கம் அவனருட்சக்தியாகிய அம்மையே நோக்கியே அமைந்துள்ளது என்லாம்.

உமையம்மையாரைத் தலைவியாகக் கொண்டு பாடும் தனி நூல்களோ தனிப் பாடல்களோ திருமுறைத் தொகுப்பில் இல்லை. எனினும் சிவபெருமானுடன் சார்த்தியே பல இடங்களில் உமை அம்மை பற்றிய செய்திகள் வந்துள்ளன. உமை அம்மையாரின் சிறப்பு தேவாரப் பாடல்களில் இலைமறை காயென ஆங்காங்கே ஓதப்பெறுகின்றது.
“ தோடுடைய செவியன்” என உமையொரு பாகனை ஞானசம்பந்தர்.கூறியது போலவே “நின்கழல்கள் காணப் பாதியோர் பெண்ணை வைத்தாய்” “உமையோடு உடனாகி இருந்தான் தன்னை” என்று நாவுக்கரசரும் கூறுவார். இறைவனின் திருவடி திருவருள் தொழிற்படும் இடம் என்பதையும், அத்திருவடியே அடியவர்க்கு அருள்புரியும் என்பதையும், திருவடியே சக்தியாக உருவகிக்கப்பட்டுள்ளது என்பதையும் இவ்வடிகள் உணர்த்தும். மேலும் சுந்தரர் தம் தேவாரத்திலும் “ ஒரு பாகம் பெண்ணாவார்” என்றும்,
“வண்டாடும் குழலாள் உமைபாகம் மகிழ்ந்தவனே” என்றும் பாடுகிறார்.

சிவபெருமான் பல்வேறு நிலையில் கோயில்கொண்டு விளங்கினாலும் உமைஅம்மையோடு எழுந்தருளியிருக்கும்போதே இன்புறுவான் என்னும் கருத்தை ஞானசம்பந்தர் ‘சுத்தமார் பளிங்கின் பெருமலையுடனே சுடர் மரகதம் அடுத்தாற்போல், அத்தனார் உமையோடு இன்புறுகின்ற ஆலவாயாவதும் இதுவே” “ அண்ணலார் உமையோடு இன்புறுகின்ற ஆலவாயாவது இதுவே” என்னும் பாடல் அடிகளால் குறிப்பிடுவர். இதன் விளைவாகத்தான் பிற்காலத்தில் உமையம்மையார்க்குத் தனிக் கோயில்கள் எழுப்பபட்டன.
தேவி வழிபாடு தோற்றம் கண்டது.

சிவபெருமான் பெண்ணின் நல்லாளாகிய உமை அம்மையுடன் பெருந்தகையாக வீற்றிருப்பது நாம் அனைவரும் மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம், வைகலும் எண்ணில் நல்ல கதிக்கு யாதும் ஓர் குறைவிலை என்பதை உணர்த்தத்தான் என உரைக்கிறார் ஞானசம்பந்தர். இல்லற வாழ்வின் ஏற்றத்தையும், வையத்து வாழ்வாங்கு வாழவேண்டியதன் தேவையையும் வலியுறுத்தவே இப்பாடல் எழுந்தது என்பதை நாம் உணர வேண்டும். இறைவன் இறைவியுடன் கூடியிருப்பது ஆண் பெண் இணைந்த இல்லற வாழ்வின் பெருமையை உலகத்தார்க்கு உணர்த்தவே ஆகும். இல்லற வாழ்வில் ஈடுபடுவது வீடு பேற்றுக்கு வழிவகுக்காது என்னும் கருத்தை மறுக்கவே இப்பாடல் எழுந்தது என்பதையும் நாம் நோக்க வேண்டும். ஐயாறு அடைந்த நாவுக்கரசர் மாதர்பிறைக்கண்ணியானை மலையான் மகளொடும் பாடிக் கண்டறியாதன காணும் காட்சியில் இறைவனும் இறைவியுமாகத் தோன்றும் தோற்றமும் இதனை வலியுறுத்தும். திருவாசகத்தில் மாணிக்கவாசகர் "குவளைக்கண்ணிக் கூறன் காண்க, அவளும் தானே உடனே காண்க" என்று கூறுவதையும் நோக்கவேண்டும்.

திருவாசகத்தில் வரும் திருவெம்பாவையின் உட்கருத்து " சக்தியை வியந்தது" என்பர். கன்னிப் பெண்கள் நாடு செழிக்க மழை பெய்யவும், வீடு செழிக்க நல்ல கணவனைப் பெறவுமே திருவெம்பாவை எழுந்தது. உமாதேவியின் அருளையே மழையாக உருவகித்துப் போற்றும் திருவெம்பாவைப் பாடல் இதோ:

முன்னிக் கடலைச் சுருக்கி எழுந்துடையாள்
என்னத் திகழ்ந்து எம்மை ஆளுடையாள் இட்டிடையின்
மின்னிப் பொலிந்து எம்பிராட்டி திருவடிமேல்
பொன்னஞ் சிலம்பில் சிலம்பித் திருப்புருவம்

என்னச் சிலைகுலவி நந்தம்மை ஆளுடையாள்
தன்னில் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
முன்னியவள் நமக்கு முன் சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழையேலோர் எம்பாவாய்.

மேகம் உமையம்மையின் நீலநிறம்போல நிறம் பெற்றுத் திகழ்கிறது; உமையம்மையின் இடை போல மின்னுகிறது; அவள் திருவடியில் இருக்கும் சிலம்பொலி போல் இடிமுழக்கம் செய்கிறது; அவளுடைய அழகிய புருவம் போல வான வில்லுடன் திகழ்கிறது. அவளைப் பிரிந்திராத இறைவன் அன்பர்க்கு அருள்பாலிப்பதற்கு முன்னரே அவள் அருள் சுரக்கின்றாள். அந்த அருளைப் போல மழை பொழியவேண்டும்
என்பது இந்தப் பாடலின் கருத்து. உமை அம்மையின் அருளே மழை என்பது இங்கு தெளிவாக விளக்கப்படுகின்றது. உமை அம்மையை "உடையாள்" என இப்பாடல் குறிப்பதன் பொருள் எல்லாவற்றிற்கும் உடையவள்- உரிமையானவள் சக்தி என்பதையும் காட்டுகிறது. திருவெம்பாவை சக்தியை வியக்கும் வண்ணத்தை இப்பாடல் நன்கு படம் பிடிக்கிறது.

இறைவன் திருவடியே சத்தி எனச் சாத்திரங்கள் கூறும். அத்திருவடியின் ஐந்தொழில் ஆற்றலைப் போற்றித் துதிப்பதுதான் திருவெம்பாவையின் இறுதிப்பாடல். படைப்பைத் "தோற்றமாம் பொற்பாதம்" என்றும், காப்பைப் "போகமாம் பூங்கழல்கள்" என்றும், அழிப்பை "ஈறாம் இணையடிகள்" என்றும், மறைப்பை "மால் நான்முகனும் காணாத புண்டரிகம்" என்றும், அருளலை "அருளும் பொன்மலர்கள்" என்றும் இப்பாடலில் மாணிக்கவாசகர் கூறிப் போற்றுகிறார். இத்திருவடிகளே அனைத்தின் தோற்றத்திற்கும் ஒடுக்கத்திற்கும் காரணமாக இருப்பவை என்றும் கூறுகிறார். ஐந்தொழில் இல்லையென்றால் உயிர்கள் பாசம் நீங்கி வீடு பெறுமாறு இல்லை அல்லவா?

அம்மை அப்பரின் திருக்கோலத்தைத்

தோலும் துகிலும் குழையும் சுருள்தோடும்
பால்வெள்ளை நீறும் பசுஞ்சாந்தும் பைங்கிளியும்
சூலமும் தொக்க வளையும் உடைத்தொன்மைக்
கோலமே நோக்கிக் குளிர்ந்து ஊதாய் கோத்தும்பி

எனவும் திருவாசகம் விவரிக்கிறது.

"உடையாள் உன்றன் நடுவிருக்கும், உடையாள் நடுவுள் நீ இருத்தி, அடியேன் நடுவுள் இருவீரும் இருப்பதானால் அடியேன் உன் அடியார் நடுவுள் இருக்கும் அருளைப் புரியாய்" என்னும் திருவாசகப்பாடல் அம்மை அனைத்தும் உடையவள்
என்பதையும், அவள் இறைவனுடன் கலந்திருப்பாள் என்பதையும்,அந்நிலையில் அவர்கள் இருவரும் மணிவாசகர் அகத்தில் இருப்பர் என்பதையும் சுட்டுகிறது.

ஒன்பதாம் திருமுறையில் திருவிசைப்பா ஒன்று 'அரிவையோர் கூறுகந்தான்' என்று அம்மையப்பரைப் போற்றுகிறது. திருப்பல்லாண்டில் ' அன்ன நடைமடவாள் உமைகோன்' என்னும் தொடர் அம்மையின் நடை அழகைச் சுட்டுகிறது.

பத்தாம் திருமுறையாகிய திருமந்திரத்தில் திருமூலர் தம் வரலாறு கூறுமிடத்துச்

" சேர்ந்திருந்தேன் சிவமங்கைதன் பங்கனை" என்றும்,
"நேரிழையாள் நிரதிசயானந்தப்
பேருடையாள் என் பிறப்பறுத்து ஆண்டவள்
சீருடையாள் சிவன் ஆவடுதண்துறை
சீருடையாள் பதம் சேர்ந்து இருந்தேனே"

என்றும் அம்மை தம்மை ஆண்டருளிய செய்தியைக் குறிப்பிடுகிறார். மேலும் திருமூலர் திருமந்திரத்தில் சக்திபேதம், சக்தியின் பல்வேறு வடிவங்கள், சக்தி எந்திரம், சக்தியை வழிபடும் எந்திர வழிபாட்டு முறை இவை பற்றி எல்லாம் விரிவாகக் கூறுகிறார். திருமூலர் கூறும் சக்தி சிவ சக்தியே ஆகும்.

"தான் எங்குளன் அங்குளள் தையல் மாதேவி" (1031)
" மணங்கமழ் பூங்குழல் மங்கையும் தானும்
புணர்ந்துடனே நிற்கும்" (1019)
"நின்றாள் அவன்றன் உடலும் உயிருமாய்ச்
சென்றாள் சிவகதி சேரும் பராசத்தி "(1042)
"இருளது சத்தி, ஒளியதுஎம் அண்ணல்" (1095)

என்னும் திருமந்திரத்தொடர்கள் இதனை வலியுறுத்தும்

திருமந்திரத்தில் நான்காம் தந்திரத்திலுள்ள சத்திபேதம்- திரிபுரை சக்கரம் என்னும் பகுதியிலுள்ள முப்பது திருமந்திரப் பாடல்களும் அம்மன் பெருமையை விரித்துரைக்கின்றன. கலைமகள் சிவசக்தி என்பதை

ஏடங்கை நங்கை இறைஎங்கள் முக்கண்ணி
வேடம் படிகம் விரும்பும் வெண்டாமரை
பாடும் திருமுறை பார்ப்பதி பாதங்கள்
சூடுமின் சென்னிவாய்த் தோத்திரமே (1068)

என்னும் பாடல் வாயிலாகக் கூறுகிறார் திருமூலர். மேலும் சத்தியின் வடிவம் சிவவடிவமே என்பதைச் " சூடும் இளம்பிறை, சூலி, கபாலினி" என்றும், சக்தியின் மந்திரம் சிவமந்திரமே என்பதை "நாம நமசிவ "(1189) என்றும் கூறுவர். மேலும்

அவளை அறியா அமரரும் இல்லை
அவளன்றிச் செய்யும் அருந்தவம் இல்லை

அவளன்றி ஐவரால் ஆவதொன்றில்லை
அவளன்றி ஊர்புகும் ஆறு அறியேனே (1029)

என்றும் அம்மையின் பெருமையை அவர் கூறுகிறார்.

சத்தி என்பாள் ஒருசாதகப் பெண்பிள்ளை
முத்திக்கு நாயகி என்பது அறிகிலர்.

என்னும் அடிகள் முத்தி அளிக்கும் தன்மை சக்திக்கு உண்டு என்பதைக் கூறும். திருமுறைகளீல் திருமந்திரத்தில் தான் சிவசக்தியின் சிறப்பு பலவாறாகக் கூறப்பட்டுள்ளது.

பதினோராம் திருமுறையில் திருமுருகாற்றுப்படையில் முருகன் உமையவள் மைந்தனாகக் குறிப்பிடப்படுகிறான். சேரமான் பெருமாள் நாயனார் பொன்வண்ணத்தந்தாதியில் அம்மையப்பர் திருவுருவம் பேசப்படுகின்றது. இவரைப் பின்பற்றிப் பட்டினத்தார் திருக்கழுமல மும்மணிக்கோவையில் அம்மையப்பர் வடிவை 61 அடிகளில் விரிவாக விளக்குகிறார். இவரே கோயில் நான்மணிமாலையில் அம்மையப்பர் திருவுருவம் பற்றி

"ஒருபால் தோடும் ஒருபால் குழையும்
இருபாற்பட்ட மேனி எந்தை"

என்னும் அடிகளீல் சுருக்கமாகவும் குறிப்பிடுகிறார். திருவிடைமருதூர் மும்மணிக் கோவையில்(16)

'வருமுலை தாங்கும் திருமார்பு வல்லி
வையம் ஏழும் பன்முறை ஈன்ற
ஐய திருவயிற்றம்மைப் பிராட்டி
மறப்பருஞ் செய்கை அறப்பெருஞ் செல்வி
எமையாளுடைய உமையாள் நங்கை
கடவுட் கற்பின் மடவரல் கொழுந'

என்று ஏழு உலகும் ஈன்ற தாயாகவும், அறம் வளர்த்த நாயகியாகவும் உமை அம்மையைப் பட்டினத்தார் குறிப்பிடுகிறார். மேலும் காஞ்சியில் உமையம்மையார் இறைவனைப் பூசித்தபோது, ஆற்றில் வெள்ளம் மிகுந்து வர, உமைஅம்மையார் துடித்துச் சிவலிங்கத் திருமேனியைத் தழுவ, அதில் நகில் சுவடும், வளைச் சுவடும் பதிந்தன என்று திருவேகம்பமுடையார் திருவந்தாதியில் அவர் கூறுகிறார். காஞ்சியில் அம்மை 32 அறங்களை வளர்த்தது பற்றியும் பேசுகிறார். சக்தி வேலைத் தடக்கையில் உடையவன் முருகன் என்னும் குறிப்பு ந்ம்பியாண்டார் நம்பியின் பாடல் ஒன்றில் வருகிறது. காரைக்கால் அம்மையாரும் அம்மையப்பர் திருக்கோலம் பற்றிப் பேசுகிறார்.

பன்னிரண்டாம் திருமுறையாகிய சேக்கிழாரின் பெரிய புராண்த்தில் உமை அம்மையாரின் சிறப்பு பல இடங்களில் குறிக்கபடுகின்றது. நாயன்மார்களாகிய அடியார்களுக்குக் காட்சி கொடுக்கும்போது

உமை அம்மையுடன் சிவபெருமான் தோன்றி அருளியதாகச் சேக்கிழார் பல இடங்களில் சுட்டுகிறார். சிறுத்தொண்ட நாயனார்க்கு இறைவன், இறைவி, முருகனுடன் காட்சி கொடுத்ததைச் சான்றாகக் கூறலாம். தென்னாட்டின் சிறப்பைக் கூறும் சேக்கிழார்

எம்பிராட்டி இவ்வேழுலகு ஈன்றவள்
தம்பிரானைத் தனித்தவத்தால் எய்திக்
கம்பையாற்றில் வழிபடு காஞ்சி என்று
உம்பர் போற்றும் பதியும் உடையது

என்று காஞ்சி காமாட்சி அம்மையைச் சிற்ப்பித்துப் போற்றுகிறார். இறைவனை வழிபட்டுக் கம்பையாற்றில் வெள்ளம் வரத் தழுவிடக் குழைந்த இறைவன் வரலாற்றைத் திருக்குறிப்புத் தொண்டர் புராணத்தில் சேக்கிழார் விரித்துப்பாடும் திறமும் போற்றுதற்குரியது.

"எண்ணில் ஆகமம் இயம்பிய இறைவர் தாம் விரும்பும்
உண்மையாவது பூசனை என உரைத்தருள
அண்ணலார்தமை அர்ச்சனை புரிய ஆதரித்தாள்
பெண்ணின் நல்லவளாயின பெருந்தவக்கொழுந்து"

என்று இறைவி சிவனைப் பூசை செய்த சிறப்பை அவர் பாடுகிறார். மேலும்

கரந்தரும் பயன் இது என உணர்ந்து கம்பன் மேவிய உம்பர்பால்
நிரந்த காதல் செய் உள்ளத்தளாகி நீடு நன்மைகள் யாவையும் பெருக
வரந்தரும் பொருளாம் மலைவல்லி மாறிலாவகை மலர்ந்த பேரன்பால்
சிரம்பணிந்து எழுபூசை நாள்தோறும் திருவுளம் கொளப்பெருகியதன்றே.

என்றும் அவர் விவரிக்கிறார். உமைஅம்மைதான் இறைவனுக்கு முதலில் பூசை செய்தவர் என்பதை இங்கு உணர முடிகிறது.

காவிரி யாற்றின் பெருமையைக் கூறும் சேக்கிழார்

வண்ண நீள்வரை தரவந்த மேன்மையால்
எண்ணில் பேரறங்களும் வளர்க்கும் ஈகையால்
அண்ணல் பாகத்தை ஆளுடைய நாயகி
உண்ணெகிழ்க் கருணையின் ஒழுக்கம் போன்றது

என்கிறார். காவிரியும் குடகு மலை தந்த ஆறு, உமை அம்மையும் இமவான் மலை தந்த செல்வி; காவிரியும் உமை அம்மையும் உலகில் பல அறங்கள் தழைக்க உதவும் பான்மையும்

ஒப்புவமையாக வருகின்றது. அம்மை அருள் சக்தி என்பதை இறுதி அடி எடுத்து இயம்புகிறது.

சிதம்பரத்தில் நடராசப்பெருமான் சிவகாமி அம்மையை நோக்கிக் கூத்தாடும் திறத்தினை
"மாதொரு பாகம் நோக்கி மன்னு சிற்றம்பலத்தே
ஆதியும் முடிவும் இல்லா அற்புதக் கூத்தாடும்
நாதனார்"
என்று திருநீலகண்ட நாயனார் புராணத்தில் சேக்கிழார் கூறுகிறார்.
எனவே தான் அது ஆனந்தக்கூத்தாக அமைந்தது போலும்.

திருநாவுக்கரசர் திருவையாற்றில் கண்ட கயிலைக் காட்சியைச் சேக்கிழார்
வெள்ளி வெற்பின்மேல் மரகதக்கொடியுடன் விளங்கும்
தெள்ளு பேரொளிப்பவளவெற்பென இடப்பாகம்
கொள்ளும் மலையாளுடன் கூட வீற்றிருந்த
வள்ளலாரை முன்கண்டனர் வாக்கின் மன்னனார்

என்று மரகதவல்லியாக உமைஅம்மையார் சிவனுடன் கயிலை மலைமேல் இருப்பதாகக் குறிப்பிடுகிறார்.

இதுகாறும் கூறிய செய்திகளால் அறக்கருணை வடிவாகிய உமைஅம்மையார் திருமுறையின் தொடக்கப் பாடல் தோன்றுவதற்குத் துணையாக இருந்ததையும், திருமுறைப்பாடல்களில் சிவபெருமானுடன் சார்த்தியே உமையொருபாகன் என்ற நிலையில் பல இடங்களில் கூறப்பட்டிருப்பதையும், நாம் மண்ணில் நல்ல வண்ணம் வாழப் பெண்ணின் நல்லாராகச் சிவனுடன்கூடி இருப்பது பற்றிய குறிப்பினையும்,
திருவாசகத்தில் திருவெம்பாவை வாயிலாகச் சக்தியாய் நின்று வியக்கப்படுவது பற்றியும்,
திருமந்திரத்தில் சக்தி பேதம், சக்தியின் பல்வேறு வடிவங்கள், சக்தி எந்திரம், சக்தியை வழிபடும் எந்திர வழிபாட்டுமுறை இவை விரிவாக விளக்கம் பெற்றிருப்பதையும்,
பதினோராம், பன்னிரண்டாம் திருமுறைகளில் காஞ்சியில் சிவபூசை செய்து அறம் வளர்த்த நாயகியாக அமைந்த வரலாறு விரிவாகக் கூறப்பட்டிருப்பதையும் தெரிந்துகொண்டோம்

-